
ஊஞ்சலாடும்
உள்ளம்
முத்துலட்சுமி ராகவன்
ஊஞ்சலாடும் உள்ளம் ★ முத்துலட்சுமி ராகவன்
ஊஞ்சலாடும்
உள்ளம்
முத்துலட்சுமி ராகவன்

# ஊஞ்சலாடும் உள்ளம்

## 1



மணி ஒன்று அடித்தது. அதற்காகவே காத்திருந்தது போல் ஆண்களில் பெரும்பாலோர் ஆபிஸ் கேண்டின் பக்கம் செல்ல மீதமிருந்தோர் டைனிங் ஹால் பக்கம் கேரியருடன் சென்றனர். பெண்கள் அனைவரும் தங்கள் முன்னிருந்த கம்ப்யூட்டரை அணைத்து விட்டுத் தங்கள் உணவு டப்பாக்களை எடுத்துக் கொண்டு டைனிங் ஹால் பக்கம் செல்ல ஆரம்பித்தார்கள்.

பவித்ரா கம்ப்யூட்டர் திரையைப் பார்த்தாள். அவள் செய்து கொண்டிருந்த வேலை முடிவடையும் தருவாயில் இருந்தது. இன்னும் பத்து நிமிடங்கள் செலவழித்தால் போதும். வேலை பூர்த்தியடைந்து விடும். எனவே மதிய உணவிற்கு உடனே எழுந்து போகாமல் தன் வேலையில் ஆழ்ந்தாள். கண்கள் கம்ப்யூட்டரையும் முன்னாலிருந்த பேப்பர்களையும் மாறி மாறிப் பார்க்க கைகள் இயந்திர கதியில் கீ போர்டில் அடித்துக் கொண்டிருந்தன.

முன்னால் யாரோ வந்து நிற்பதை உணர்ந்தவள் நிமிர்ந்தாள். சுகுமாரன் நின்று கொண்டிருந்தான். ஆச்சரியமாய் விழி உயர்த்திப் பார்த்தாள்.

'இவன் ஏன் இங்கு வந்து நிற்கிறான்?'

சுகுமாரன் அவள் வேலை பார்க்கின்ற மாநில அரசு அலுவலகத்தில் உடன் பணிபுரிபவன். ஒரே செக்சனில் வேலை பார்ப்பவன். வேலை சம்பந்தமாய் ஏதும் கேட்க வந்திருக்கிறானோ என்ற எண்ணத்தில்,

''என்ன சார் வேண்டும்?'' என்று வினவினாள் பவித்ரா.

அவன் தயங்கினான். சுற்று முற்றும் ஓர் தடவை பார்த்துக் கொண்டான். மிக நீண்ட அளவில் பெரிய ஹால் போன்ற அந்த செக்சனில் ஒவ்வொரு இருக்கைக்குப் பக்கத்தில் மரத்தடுப்புக்கள் இருக்க பெரும்பாலோர் மதிய உணவு உண்ணச் சென்றிருந்தனர். ஆங்காங்கே உட்கார்ந்திருந்த ஓரிருவரும் வேலையில் மூழ்கி இருந்தனர். மிகவும் தள்ளி அமர்ந்திருந்தனர்.

பவித்ராவிற்கு அவன் சுற்றிலும் பார்த்துக் கொண்டது வியப்பை அளித்தது.

''சுற்று முற்றும் பார்க்கறீங்களே..? என்ன பார்க்கறீங்க?'' இயல்பாய் வினவினாள் அவள்.



அவளது இயல்பிற்கு மாறாக அவன் படபடத்திருந்தான். முகத்தில் பொடிப் பொடியாய் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளைத் தன் கைக்குட்டையால் ஒற்றி எடுத்துக் கொண்டவன் தடுமாற்றத்துடன் அவளைப் பார்த்தான்.

''வந்து.. வந்து..'' வார்த்தை தேடித் தவித்தவனாய் எச்சில் விழுங்கினான் சுகுமாரன்.

பவித்ராவோ வினோதமாய் அவனைப் பார்த்தாள். அவனுடன் அவள் அதிகம் பேசினதில்லை. அரசாங்க வேலை கிடைத்து இந்த அலுவலகத்தில் அவள் வேலைக்குச் சேர்ந்து ஒரு வருடம் தான் ஆகிறது. அவனோ ஐந்து வருடங்களாய் அந்த அலுவலகத்தில் பணி புரிகின்றவன். 'அவளிடம் அவன் வந்து தடுமாறி நிற்கக் காரணம் என்ன?'

பவித்ரா கைக்கடிகாரத்தைத் திருப்பி மணி பார்த்தாள். மணி ஒன்று பத்து. இனி வேலையில் கவனம் ஓடாது என்று தோன்ற கம்ப்யூட்டரை அணைத்தாள். தன் மேஜையில் இருந்த பேப்பர்களை ஒழுங்காய் அடுக்கி மேஜை டிராயரில் வைத்து மூடினாள். சுகுமாரனை நிமிர்ந்து பார்த்தாள்.

''சார்.. நான் சாப்பிடப் போக வேண்டும். என்ன விஷயம்னு சீக்கிரம் நீங்கள் சொன்னால் தேவலை..'' மீண்டும் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள்.

''நான்..' நான்.. பவித்ரா.. நான் உங்களை..'' அவன் வார்த்தைகளில் தந்தி அடித்தான்.

பவித்ரா எழுந்து கொண்டாள். உணவு டப்பாவை கையில் எடுத்துக் கொண்டு டைனிங் ஹாலை நோக்கிச் செல்ல காலடி எடுத்து வைத்தாள்.

சரேலென சுகுமாரன் அவள் வழியை மறித்தாற்போல் நின்றான். பவித்ரா அதிர்ந்து போனாள்.

'இவன் என்ன இப்படி விழிக்கிறான்?' பார்வையைச் சுழலவிட்டாள். வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் இவர்களைக் கவனிக்கவில்லையென்றாலும் கூப்பிட்டால் வரும் தொலைவில்தான் இருந்தார்கள்.

நிம்மதிப் பெருமூச்சு விட்டவள் கோபத்துடன் சுகுமாரனை முறைத்தாள்.

''என்ன சார் நினைத்துக்கிட்டு இருக்கீங்க? ஏதோ சொல்ல வந்தீங்க. என்னன்னு கேட்டால் பதில் சொல்லாமல் மென்று விழுங்கினீங்க.. இப்போ என்னவென்றால் வழியை மறிக்கிறீர்கள்.. யாராவது பார்த்தால் என்ன நினைத்துக் கொள்வார்கள்? வழியை விடுங்கள் சார்.. எனக்குப் பசி வயிற்றைக் கிள்ளுகிறது. நான் சாப்பிடப் போக வேண்டும்..'' படபடப்புடன் கூறினாள்.

''ப்ளீஸ்.. நீங்கள் தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள்.. நான்.. நான்..'' மீண்டும் சுகுமாரன் தடுமாறினான்.

''ச்சு.. இது என்ன சார் மதிய நேரம் வந்து பிரச்சனை பண்ணுகிறீர்கள்.. என்னவென்று சீக்கிரம் சொல்லுங்கள். இல்லாவிட்டால் வழியை விடுங்கள். சாப்பாட்டு நேரம் முடியப்போகிறது'' எரிச்சலாய் பேசினாள் பவித்ரா.

''தயவு செய்து என்னைப் புரிந்து கொள்ளுங்கள்..'' சுகுமாரன் பதட்டத்துடன் பேசினான். அவன் கண்கள் இலக்கில்லாமல் அலை பாய்ந்தது.

பவித்ரா கோபத்துடன் பல்லைக் கடித்தாள். எதிரே வழி மறித்து நின்று கொண்டிருந்தவனை நேருக்கு நேர் பார்த்தாள். அவனோ அவளது துளைக்கும் நேர் பார்வையை



சந்திக்க இயலாமல் பார்வையை வேறு திசையில் ஓட விட்டான். கால் மாற்றி நின்றான்.

பவித்ரா மேஜை மேலிருந்த செல்போனை எடுத்தாள்.

''இப்போது நீங்கள் வழியை விடவில்லையென்றால் நான் செக்சன் ஆபிசருக்குப் போன் பண்ணுவேன். என் வழியை மறித்துக் கொண்டு நீங்கள் நிற்பதைச் சொல்லுவேன். எப்படி வசதி?''

சுகுமாரன் எதையோ சொல்லத் துடிக்கும் தவிப்புடன் அவளைப் பார்த்தான். பின் கண்கள் கலங்கினாற் போல் கண்ணிமைகளைக் கொட்டினான். மூக்கை வேறு உறிஞ்சிக் கொண்டான். வெகு சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு வழியை விட்டு விலகினான்.

'அப்பாடி' என்று ஆசுவாசத்துடன் நிம்மதிப் பெருமூச்சு விட்ட பவித்ரா டைனிங் ஹாலை நோக்கி விரைந்தாள்.

''ஏண்டி லேட்...'' என்றவாறு உணவு பகிர்ந்து வைத்திருந்த டிபன் டப்பா மூடியை பவித்ராவின் பக்கம் தள்ளி வைத்தாள் சாந்தி.

அவளருகில் இருந்த சேரில் அமர்ந்து கொண்டு தன் டிபன் டப்பாவைத் திறந்து அதன் மூடியில் தனது உணவை பகிர்ந்து வைத்து சாந்தியின் பக்கம் தள்ளிய பவித்ரா,

''அதையேன் கேட்கிற. ஐந்து நிமிடத்தில் மன்த்லி டோட்டலை டேலி பண்ணிவிடலாம்ன்னு உட்கார்ந்தேன். மாட்டிக் கொண்டேன்.'' என்றாள்.

''ஏன்..? வேலை முடியாமல் கணக்கில் குளறுபடியாகி விட்டதா? நீ அன்றைய கணக்கை அன்றே டேலி

பண்ணும் ரகமாயிற்றே. பின்னே ஏன் கணக்கை முடிக்க முடியவில்லை?" தன் சாப்பாட்டை முடித்துவிட்டு சிநேகிதியின் உணவை ருசிபார்த்துக் கொண்டே வினவினாள் சாந்தி.

"இல்லைப்பா.. கணக்கெல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. என் வேலையை என்னைப் பார்க்கவிட்டால்தானே பார்க்க முடியும்?" சலித்துக் கொண்டாள் பவித்ரா.

"யார் பார்க்க விடவில்லை?" தோழியை நிமிர்ந்து பார்த்துக் கேட்டாள் சாந்தி.

பவித்ரா சுற்று முற்றும் பார்த்தாள். மற்றவர்கள் சாப்பிட்டு முடித்துக் கை கழுவ, பாத்திரம் கழுவ என்று எழுந்து போயிருந்தனர். சாந்திக்கு மட்டும் கேட்கும்படி குரலை தாழ்த்திக் கொண்டு பவித்ரா பேசினாள்.

"சாந்தி.. நம் செக்சனில் சுகுமாரன்னு ஒருவர் இருக்கிறாரே.."

"ஆமாம்.. அவருக்கென்ன?"

"அவர்.. ஆள் டைப் எப்படி?"

"எந்த டைப்பை கேட்கிறாய்? கம்யூட்டர் கீ போர்டில் அடிக்கும் அந்த டைப்பா?" உண்மையிலேயே புரியாமல் சாந்தி கேட்டாள்.

"ச்சு.. அதில்லைப்பா.. குணம் எப்படி?"

"ஓ.. நீ இந்த டைப்பைக் கேட்கிறாயா? ஏன் என்னாச்சு?"

"முதலில் நான் கேட்டதற்குப் பதில் சொல். நீ என்னை விட மூன்று வருடம் *சீனியர்*. அதனால்தான் உன்னிடம் கேட்கிறேன்."



"*சீனியர்* என்றால் வயதில் சொல்கிறாயா? இல்லை சர்வீஸில் சொல்கிறாயா?" சாந்தி கருட பார்வை பார்த்தாள்.

சாந்தி பவித்ராவை விட மூன்று வயது மூத்தவள்.

"கடவுளே.. ஏன்ப்பா நான் என்ன கேட்கிறேன். நீ என்ன சொல்கிறாய்? வயதில் இளமையாய் இருந்தால் அது பெரிய கிரெடிட்டா? என்னை விட பத்து வயது மூத்தவளாக நீ இருந்தாலும் எனக்குப் பிரச்சனையில்லை. உன்னை வா, போ என்றுதான் கூப்பிடுவேன். பிரண்டாகத்தான் இருப்பேன். இந்த அக்கா, சொக்காய் போட்டுக் கூப்பிடவெல்லாம் மாட்டேன். அதே போல் என்னை விட இளையவர்களிடமும் பிரண்டாகத்தான் இருப்பேன். அவர்கள் எனக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்று நினைக்க மாட்டேன். உன் சந்தேகம் தீர்ந்ததா? இப்போது பதில் சொல்லு." தண்ணீர் பாட்டிலை எடுத்தவாறு கூறினாள் பவித்ரா.

"ஆள் நல்ல டைப்தான் பவித்ரா. தானுண்டு, தன் வேலையுண்டுன்னு இருப்பார். அநாவசியமாய் யாரிடமும் பேச மாட்டார். நாமாய் போய் பேச்சுக் கொடுத்தாலும் ஒதுங்கிப் போய் விடுவார். ஏன் இதையெல்லாம் கேட்கிறாய்?"

"ஐ.. லி.. அப்புறம் ஏன் அப்படி நடந்து கொண்டார்?" யோசனையுடன் வினவினாள் பவித்ரா.

"எப்படி நடந்து கொண்டார்?" ஆவலுடன் வினவினாள் சாந்தி. அவள் முகத்தில் ஏதோ ஓர் பதற்றம் தெரிந்தது.

"இல்லை சாந்தி.. மதியம் நான் வேலையை முடித்து விட்டுச் சாப்பிடலாம்ன்னு வேலை பார்த்துக் கொண்டு

இருந்தபோது இவர் வந்தார். ஏதோ பேசணும்னு சொன்னார். என்ன சார் பேசுங்கன்னு சொன்னால் பேசவும் மாட்டேன் என்கிறார். சரி வேலையை முடிக்க இவர் விடமாட்டார்ன்னு எழுந்து சாப்பிடலாம்னு கிளம்பினா.. வழியை விட மாட்டேன்னு வழியை மறிச்சுட்டார்..!" பவித்ரா கோபத்துடன் கூறினாள்.

சாந்தியின் முகத்தில் நிழல் படிந்தது. அடிபட்ட குழந்தை போல் அவள் முகம் மாறியது. விட்டாள் அழுது விடுவாள் போல் தோன்றினாள்.

"என்ன சொல்ற பவித்ரா... சுகுமாரனா உன் வழியை மறித்தார்?" நம்ப முடியாதவளாய் அவள் கேட்டாள்.

"அட... ஆமாம்பான்கிறேன். அவர்தான் என் வழியை மறித்தார்?" பவித்ரா முகம் ஜிவுஜிவுக்கப் பல்லைக் கடித்தாள்.

"நீ என்ன செய்தாய் பவித்ரா?" குரல் நடுநடுங்க சாந்தி கேட்டாள்.

"என்னத்தை செய்ய? இவரானால் வழிவிட மாட்டேன் என்கிறார். நல்ல வேளையாய் செக்சனில் எல்லோரும் சாப்பிடப் போயிருந்தார்கள். இருந்த ஒன்றிரண்டு பேரும் மும்முரமாய் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். யாரும் பார்க்கவில்லையோ.. நான் பிழைத்தேனோ.. இல்லாவிட்டால் இப்படி இவர் வழி மறித்துக் கொண்டிருப்பதைக் கண்டால் கதை கட்டிவிட மாட்டார்களா? அந்த மனிதர் முகத்தைக் கூட நான் சரிவரப் பார்த்தது இல்லை. எப்போதோ ஓரிரண்டு சமயம் பேசியிருக்கிறேன். அதுவும் என் சீட் கவர் இரண்டு அவருடைய பையில் மாட்டியிருந்தது. அதைக் கேட்கத்தான் பேசினேன். என்னிடம் போய் இப்படி 'பேக்கு' மாதிரி நடந்து கொள்கிறாரேன்னு இருக்கு சாந்தி.." என்று நிறுத்தாமல் பேசிக் கொண்டிருந்தவள் தோழியிடமிருந்து பதில் வராமல் போகவே அவசரமாய் அவள் முகம் பார்த்தாள்.



சாந்தி முகம் திருப்பிக் கொண்டிருந்தாள். சாப்பிட்டுக் கொண்டிருந்த பவித்ரா இடது கையால் அவள் முகத்தைத் தன்புறம் திருப்பினாள். சாந்தியின் முகம் கணப்பொழுதில் கல் போல் இறுகினது. உணர்ச்சிகளைத் துடைத்த முகத்துடன் சிரிக்க முயன்று தோற்றாள்.

"ம்ம்.. அப்புறம்..? அந்த பேக்கை எப்படி சமாளித்தாய்?" உடைந்த குரலில் பவித்ராவை விவரம் கூறத் தூண்டினாள்.

பவித்ராவோ பதில் கூறாமல் சிநேகிதியை உற்றுப் பார்த்தாள். துளைக்கும் அவள் பார்வையிலிருந்து தப்ப முயல்பவள் போல் சாந்தி தலை குனிந்தாள்.

"என்ன சாந்தி.. நீயும் அந்த சுகுமாரன் போல் தலை குனிகிறாய்?"

பவித்ராவின் கேள்வியில் சந்தேகம் தொனித்தது. சாந்தி அவசரமாய் பதில் கூறினாள்.

"சேச்சே.. ஏன் அவர் அப்படி நடந்து கொண்டார்ன்னு யோசிச்சேன். வேறு ஒன்னுமில்லை பவித்ரா. நீ வேறு அவரை முறைப்பது போல் என்னை முறைக்காதே.."

"ஓகோ... நீ சொல்லும் விளக்கத்தை நம்ப முயற்சி செய்கிறேன்.."

"அப்புறம் எப்படித்தான் நீ சாப்பிட வந்தாய்ன்னு கேட்டால் அதற்குப் பதில் சொல்ல மாட்டேன் என்கிறாயே.."

"செல்போனை எடுத்துக் கொண்டு செக்சன் ஆபிசருக்குப் போன் போடவான்னு மிரட்டினேன்.. விர்ருன்னு மனிதன் ஓடியே போய்விட்டார்.."

பவித்ரா கலகலவென்று தன் பெருமையை தானே மெச்சிக் கொண்டவளாய் சிரித்தாள். சாந்தி அவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

"சாந்தி.. சாந்தி.." பவித்ரா உலுக்கவும் சுய உணர்விற்கு வந்தவள் அவசரமாய்.

"வெல்டன் பவித்ரா. உன் புத்திசாலித்தனத்தால் அவரை விரட்டிவிட்டாய்" என்று ஒப்புக்கு 'ஏதோ பேச வேண்டும்' என்பது போல் பேசினாள்.

அவளை விசித்திரமாய் பார்த்த பவித்ரா.

"என்னவோ போ.. நீ ஒன்றும் சரியாகவே இல்லை. உன் மனதில் என்னவோ இருக்கிறது. என்னவென்றுதான் எனக்குத் தெரியமாட்டேன்கிறது. உன் பெர்ஸனலை சொல்ல வேண்டுமென்றால் சொல்லு. இல்லாவிட்டால் விட்டுவிடு.. தனியாய் மறுகினாலும் உன் பெர்ஸனலில் நான் ஓரளவிற்குத்தான் தலையிட முடியும். என்னதான் திக் பிரண்ட்டாக இருந்தாலும் எனக்கும் ஓர் லிமிட் இருக்கிறது இல்லையா. நான் அதைத் தாண்ட முடியாது."

பவித்ரா சாப்பிட்டு முடித்து பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கை கழுவ எழுந்தாள். சாந்தி சாப்பிட்ட கை காய்ந்து போனதைக் கூடக் கவனிக்காமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்ததைக் கண்ட பவித்ரா ஓர் அதட்டல் போட்டாள்.

"சாந்தி.. கை கழுவிட்டு சீட்டுக்கு வரும் உத்தேசமில்லையா? மணி என்னன்னு பார்த்தாயா? இரண்டு. எழுந்திரு."



அவசரமாய் எழுந்து பவித்ராவுடன் கை கழுவி விட்டு வந்தவள் சீட்டில் வந்து அமர்ந்த பின்னும் ஏதும் பேசாமல் கம்யூட்டரையே வெறித்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

"சாந்தி.. என்னப்பா..? உடம்பு சரியில்லையா?"

"அதெல்லாம் இல்லை பவித்ரா.. தலை வலிக்கிறது.."

"அடடா.. வா போய் ஓர் காபி சாப்பிட்டு விட்டு வரலாம்."

"வேண்டாம். நான் அரை நாள் லீவ் போட்டுவிட்டு வீட்டுக்குப் போகிறேன்."

சோர்வாய் கைப்பையை எடுத்துக் கொண்டு தளர்வாய் நடந்து ஹெட்கிளார்க்கிடம் சென்றவளைப் பார்த்த பவித்ராவின் மனதில் கேள்வி எழுந்தது.

'காலையில் நன்றாகத்தானே இருந்தாள்?'

கம்யூட்டர் திரையில் கவனத்தைத் திருப்பியவளுக்கு மற்றைய நினைவுகள் மறந்து போனது. வேலையில் மூழ்கினாள். அன்றைய வேலைகளை முடித்து விட்ட திருப்தியுடன் அவள் நிமிர்ந்தபோது அலுவலக சுவர் கடிகாரம் 'ஐந்து' என்று அடித்தது. கல் விழுந்த பறவைகள் கூட்டம் போல அலுவலர்கள் தம்தம் இல்லங்களுக்கு சிறகடித்தனர்.

பவித்ராவும் எழுந்து அலுவலகத்தை விட்டு வெளியே வந்து பஸ் ஸ்டாப் நோக்கி நடந்தாள். அவளது ஹாஸ்டல் செல்ல பஸ் பிடித்தாள். அறைக்குச் சென்று முகம் அலம்பி நைட்டிக்கு மாறியபோது ஜலஜா வந்து சேர்ந்தாள்.

"என்ன பவித்ரா.. சீக்கிரம் வந்துவிட்டாய் போல.."

"யெஸ்.. வேலை முடிந்தவுடன் பஸ் கிடைத்து விட்டது. உடனே வந்துவிட்டேன்.."

கைப்பையை அறையில் இருந்த அலமாரியில் வைத்த ஜூலி என்ற ஜூலியட் கை உயர்த்தி சோம்பல் முறித்தாள். அலுப்புடன் கட்டிலில் சாய்ந்தாள்.

"என்னப்பா.. டிரஸ் சேன்ஜ் பண்ணவில்லையா?"

"உனக்கென்ன.. இந்த தஞ்சை மாநகரின் கலெக்ட்ரேட்டில் வொர்க் பண்ணுகிறாய். டெஸ்க் வொர்க் தான். என்னை மாதிரி ஸ்டேட் பேங்கில் வொர்க் பண்ணினால் தெரியும். பப்ளிக்கை பேஸ் பண்ணிக் கொண்டே வொர்க் பண்ணுவது எவ்வளவு கஷ்டமான வேலையென்று..."

"போதும்பா.. இதையே எத்தனை தடவை சொல்லுவாய்.. ஜூலி.. நான் உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன். இன்றைக்கு மதியம் ஆபிஸில் ஒர் இன்ஸிடெண்ட் நடந்தது. அதைப்பற்றி உன்கிட்ட ஷேர் பண்ணிக்கலாம்ன்னு உனக்காக வெயிட் பண்ணிக் கொண்டிருந்தேன். நீயானால் லேட்டாக வந்தது மட்டுமில்லாமல் என்னை வம்புக்கு இழுக்கிறாய்..."

ஜூலியட் எழுந்து படுக்கையில் சாய்வாய் தலையணையில் ஒரு கையை ஊன்றி தலைக்கு முட்டுக் கொடுத்து ஒரு பக்கமாய் படுத்தவாறு பவித்ராவைப் பார்த்துக் கேட்டாள்.

"இஸிட்..?அப்படி என்ன இன்ஸிடெண்ட் நடந்தது?"

பவித்ரா வாகாய் அமர்ந்து கொண்டு, "இன்றைக்கு மதியம் சாப்பிடக் கிளம்பினோனா.." என்று ஆரம்பித்து சொல்லி முடித்தாள்.



"பார்க்க அழகாய் இருக்கிறாய். ஜொள் விடலாம் என்று வந்திருப்பான். அதுதான் நீ செக்சன் ஆபிஸர் கிட்ட சொல்வேன்னு சொன்னதும் ஓடிட்டான் என்கிறாயே... அதுசரி.. ஆள் எப்படி? அழகாய் இருப்பானா?" கண் சிமிட்டியவாறு கேட்டாள் ஜூலியட்.

"அதை யார் கவனித்தார்களாம். ஆபிஸிற்கு போவேன். வேலையைப் பார்ப்பேன். திரும்பி வருவேன். இந்த ஆள் என் செக்சனில் வேலை பார்க்கிறார். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்.."

"ஆனால்.. உன்னைப் பற்றி அவனுக்கு எவ்வளவு தெரியுமோ?"

"யார் கண்டது? தெரிந்து வைத்திருந்தால் எனக்கென்ன வந்தது?"

அலட்சியமாய் தோள் குலுக்கினாள் பவித்ரா. அப்படி அலட்சியமாய் அவள் இருக்க முடியாது என்பது அடுத்த நாள் காலையில் அவள் அலுவலகம் சென்றபோது தெரிந்தது.

பவித்ராவின் டேபிளின் மேல் அழகான வேலைப்பாடுகள் செய்யப்பட்ட கவர் ஒன்று வைக்கப்பட்டு அதன் மேல் காம்பு நீண்ட சிவப்பு ரோஜா ஒன்று வைக்கப் பட்டிருந்தது.

2



பவித்ரா திகைத்து விழித்தாள். சுற்று முற்றும் பார்த்தாள். எல்லோரும் அவரவர் சீட்டில் வந்து அமர்ந்து

கொண்டு இருந்தார்கள். யோசனையுடன் அந்த ரோஜாவையும், கவரையும் பார்த்துக் கொண்டு நின்றாள். பவித்ராவைக் கடந்து அவளது சீட்டிற்கு போய் கொண்டு இருந்த சாந்தி.. பவித்ரா நிற்கும் நிலையைக் கண்டு அவள் அருகில் வந்தாள்.

''என்ன பவித்ரா?'' சாந்தி வினவ பதில் சொல்லாமல் பூவையும், கவரையும் காண்பித்தாள் பவித்ரா.

சாந்தி கண்களில் கேள்விக் குறியுடன் அந்தச் சிவப்பு ரோஜாவையும் கவரையும் எடுத்தாள்.

''யார் வைத்தது பவித்ரா?''

''தெரியவில்லை சாந்தி. நான் வரும்போதே என் டேபிளில் இருந்தது.''

சாந்தி ரோஜாவை வைத்துவிட்டு கவரைப் பிரித்தாள். உள்ளே ரோஜா இதழ்களுடன் ஒரு கடிதம் இருந்தது.

''கடிதம் போல் இருக்கு பவித்ரா.''

''பிரித்துப் பார்.. யார் இந்த வேலையைச் செய்திருப்பது?''

''உனக்கு வந்திருக்கும் கடிதத்தை நான் பிரித்துப் படிப்பதா?''

''போப்பா.. நீ வேற.. வந்திருக்கும் கடிதமா? யாரோ வைத்திருக்கும் கடிதம்.''

''எதுவாக இருந்தாலும்.. உனக்கு எழுதப்பட்ட கடிதம்தானே..''

''இருந்தால் என்ன? பிரித்துப் படி சாந்தி..''



சாந்தி கடிதத்தைப் பிரித்தாள். உள்ளிருந்து ரோஜா இதழ்கள் உதிர்ந்தன. கடிதத்தாளின் மீது 'ஜம்'மென்ற ரோஜா வாசனை வந்தது.

''ரசனையான ஆள் போல இருக்கு. பூவிதழ்கள் உதிர்கின்றன..''என்றாள் சாந்தி ரசனையுடன்.

''ரசனையாவது.. மண்ணாவது.. என் டேபிள் குப்பையாகிவிட்டதுன்னு நான் கவலைப்பட்டுக் கொண்டு நிற்கிறேன். நீ ரசிக்கிற.. சரி சரி கடிதத்தைப் படி. எந்த மகராஜன் இந்த வேலையைச் செய்திருக்கிறான்னு பார்ப்போம்,'' என்றபடி டேபிளில் இருந்த ரோஜா இதழ்களை ஒன்று சேர்த்து குப்பைக் கூடையில் அள்ளிப் போட்டாள் பவித்ரா.

சாந்தி கடிதத்தின் மீது பார்வையை படிய விட்டாள். கண நேரத்தில் சிவந்த அவள் முகம் கருத்துவிட்டது. உதடு கடித்தாள்.

''அந்த மகராஜன் வேறு யாருமில்லை பவித்ரா. சுகுமாரன் தான்'' என்றாள்.

''நினைத்தேன். நேற்று அந்த ஆள் நடந்து கொண்ட சீரே சரியில்லை. இன்றைக்கு இந்த வேலையை பண்ணியிருக்கானா? என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் அவன்?''

''அவன், இவன்னு.. ஏக வசனத்தில் ஏன் பேச வேண்டும் பவித்ரா?''

''ச்சு.. நேற்று வரை.. அவர், இவர்ன்னு மரியாதை கொடுத்தவள்தான் நான்.. இன்றைக்கு இந்த வேலையை செய்தால் வேறு எப்படிப் பேசுவது?''

"அப்படி என்ன வேலையைச் செய்து விட்டார் பவித்ரா? அவர் விருப்பத்தைச் சொல்லியிருக்கிறார்.. அதற்கு யெஸ் ஆர் நோன்னு சொல்லிட்டுப் போக வேண்டியதுதானே? எதற்காகத் திட்ட வேண்டும்?" சாந்தியின் கண்கள் கலங்கின.

பவித்ரா அவளை விசித்திரமாய் பார்த்தாள். அவனைத் திட்டினால் இவள் ஏன் கலங்குகிறாள்?

"இதில் 'யெஸ்' சொல்ல அவசியமென்ன இருக்கிறது சாந்தி. நான் 'நோ'என்றுதான் சொல்லுவேன்னு நேற்றே அந்த ஆளுக்குத் தெரிந்திருக்க வேண்டும் சாந்தி. அதன் பின்னும் லெட்டர் வைத்து அதன்மேல் ரோட்டோர ரோமியோ போல் ரோஜா வைத்தால்.. இதை என்னவென்று சொல்வது? இது என்னைத் தொந்தரவு செய்யும் செயலில்லையா?"

"இல்லையென்றுதான் இந்தக் கடித்தில் சொல்கிறார்.."

"என்ன பிதற்றல் இது சாந்தி.."

"காதல் வந்துவிட்டால் பிதற்றலும் வரும்தானே.."

"காதலா.. அவன்மீதா.. உளராதே.."

"இந்தக் கடிதத்தைப் படித்த பின் அதைச் சொல்.."

வேண்டா வெறுப்பாய் அவன் நீட்டிய கடிதத்தை வாங்கிப் பிரித்துப் படித்துப் பார்த்தாள் பவித்ரா.

*'பவித்ரமானவளே..!*

*இருள் படர்ந்த என் வாழ்க்கையில் உனைப் பார்த்த பின்னால்தான் வெளிச்சம் வந்தது. கண்ணீர் சுரந்த என் விழிகளில் உன்னைப் பார்த்த பின்னால்தான் ஒளி பிறந்தது. காலமெல்லாம் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்க ஆசைப்படுகிறேன்.*

*என் ஆசை நிறைவேறுமா?*

*உன் கடைக்கண் பார்வைக்காக ஏங்கும்*

*சுகுமாரன்.'*



படித்து முடித்ததும் கடிதத்தை சுக்கு நூறாகக் கிழித்துப் போட்டாள் பவித்ரா. சாந்தி பதறிப் போனாள்.

"என்ன காரியம் செய்கிறாய் பவித்ரா?"

"பார்த்தால் தெரியவில்லை..?"

"அவருடைய உணர்வுகளை அவமதிக்காதே பவித்ரா.."

"முட்டாள் தனமாய் பேசாதே சாந்தி. இப்போது நான் என்ன செய்ய வேண்டும் என்கிறாய்? அவனுடைய உணர்வுகளை நான் மதிப்பதாக இருந்தால் அவன் சொன்னபடி அவனை நான் கடைக்கண் பார்வை பார்க்க வேண்டும். அதாவது 'சைட்' அடிக்க வேண்டும்? அதற்காகவா நான் சேலத்திலிருந்து தஞ்சாவூர் வந்து வேலை பார்க்கிறேன்? என் பேரன்ட்ஸுக்கும், அண்ணனுக்கும் இது தெரிந்தால் அவனை அடித்தே கொன்று விடுவார்கள் தெரியுமா... போ.. போய் வேலையைப் பார்.. நானும் வேலையை ஆரம்பிக்கணும்.."

பவித்ரா எடுத்தெறிந்து பேச சாந்தி அவளை நிஷ்டூரமாய் பார்த்தாள். அவள் விழிகளில் குரோதம் தென்பட்டது.

"ஏன்.. காதல் கொலை பண்ற அளவுக்கு குற்றமா?"

"ஏய்.. இப்போ அதைப் பற்றிய சர்ச்சை நமக்கு எதற்கு? எனக்கு அவன் மேல் காதலெல்லாம் வரவில்லையப்பா. காதலித்தால் தானே அது குற்றமா, இல்லையான்னு ஆராய்ச்சி பண்ணணும்?"

"அவர் உன்னைக் காதலிக்கிறாரே.."

"நீ என்ன லூஸா.. அவன் காதலித்தால் அது அவன் பிரச்சனை.. என் பிரச்சனையில்லை.. புரியுதா? இனி ஒரு தடவை இதைப் பற்றி பேசாதே."

"பேசினால்..?"

"கொன்று விடுவேன்.."

சாந்தி வாய்க்குள் எதையோ முணுமுணுத்துக் கொண்டே அவளது சீட்டுக்கு நகர பவித்ரா தலையைப் பிடித்துக் கொண்டாள். அவளுக்கு தலைவலி வந்திருந் தது. சாந்தியின் நடவடிக்கை இரண்டு நாளாய் வித்தி யாசமாய் இருந்தது அவளது புத்தியில் உறைத்தது.

'இவளுக்கு என்ன வந்தது? ஏன் இப்படி நடந்து கொள் கிறாள்?'

"ஏன் அப்படி நடந்து கொள்கிறாள்ன்னு உனக்கு ஏதா வது ஐடியா தோணுதா?" ஜூலியட் காபியை உறிஞ் சியவாறு கேட்டாள்.

"இல்லை... ஜூலி. இன்றைக்கு முழுவதும் அவள் என்னுடன் சரியாகவே பேசவில்லை. நான் சாப்பிட லேட் டாகப் போனாலும் காத்திருப்பாள். எங்கள் சாப்பாட்டை ஷேர் பண்ணிக்குவோம். நான் போகலைன்னாலும் எடுத்து வைத்திருப்பாள்.."

"இன்றைக்கு உன்கூட சாப்பிடவில்லையா?"



"ஆமாம். நான் போகும் முன்னால் சாப்பிட்டு விட்டு வந்துவிட்டாள்."

"போகிறாள் விடு. அவள் சாப்பாட்டை நீ ஷேர் பண்ணிக்கிட்டால் நீ நம்ம ஹாஸ்டல் சாப்பாட்டை அவளை ஷேர் பண்ணிக்கச் சொல்லுவாய்.. அதிலிருந்து தப்பிக்க நினைச்சிருப்பாள்.. விட்டுவிடு பாவம்.."

"உன்னை... நீயும் உன் யூகமும்.."

செல்லமாய் ஜூலியட்டின் முதுகில் அறைந்தாள் பவித்ரா.

அவர்கள் ஹாஸ்டலின் வராண்டா படிகளில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். மாலைக் காபியை ரசித்துக் குடித்துக் கொண்டிருந்தார்கள்.

"அந்த சுகுமாரன் வேறு எதுவும் பேச முயற்சி பண்ணி னானா?"

"ம்ம்.. ரோமியோ போல் லுக் விட்டுக்கிட்டு வந்தான். நான் முறைத்தேன்."

"கடிதம் பற்றிப் பேசினானா?"

"யெஸ்.. 'என் இதயத்தைத் திறந்து காட்டியிருந்தேன்' னான். போய் ஹார்ட் ஸ்பெசலிஸ்ட் கிட்ட காட்டுன் னேன்.."

"ஹா.. ஹா.. அவன் மூஞ்சி இஞ்சி தின்ன குரங்கு மாதிரி ஆகியிருக்குமே.. ஆம் ஐ ரைட்..?"

"யெஸ்.. யு ஆர் ரைட் பட் அவனிடம் நான் அப்படிப் பேசினதும் பக்கத்தில் வேலையிருப்பது போல் வந்து நின் றிருந்த சாந்தி என்னை முறைத்தாள். அவனை அவ்வளவு பரிவாய் பார்த்தாள்..."

"ஏன் பவித்ரா.. இந்த சாந்தி அந்த சுகுமாரனுக்கு சொந்தமோ?"

"ஹூஹூம்.. இரண்டு பேரும் ஒரே செக்சனில் வேலை பார்ப்பவர்கள் என்ற சொந்தம் மட்டும்தான்."

"ஓகே.. பவித்ரா.. நான் ஒன்று கேட்பேன்.. தவறாய் நினைக்கக் கூடாது.. கோபித்துக் கொள்ளக்கூடாது.."

"என்ன கேட்கப் போகிறாய்ன்னு எனக்குத் தெரியும். எனக்கு அந்த சுகுமாரன் மேல் எந்த விதமான இன்ட்ரஸ்ட்டும் கிடையாது ஜூலி. அதுவும் இந்த இரண்டு நாளாய் அவன் பண்ணுகிற டார்ச்சருக்கு அவன் மேல் வெறுப்பாய் இருக்கிறது.."

"ஓகே.. ஓகே... லீவ் திஸ் மேட்டர்.. வா ரூமுக்குப் போகலாம்."

மறுநாள் பவித்ரா அலுவலகம் நுழையும் போதே எதிரே பதற்றமான முகத்துடன் வந்தாள் சாந்தி.

"இப்போ நிம்மதிதானே... இதற்காகத்தானே காத்திருந் தாய்?" படபடப்பாய் அவள் பேச பவித்ராவுக்கு தலையும் புரியவில்லை காலும் புரியவில்லை.

"என்ன சொல்கிறாய் சாந்தி.. எதற்காக காத்திருந்தேன்?"

"அப்போதே சொன்னேன்.. படித்துப் படித்துச் சொன் னேன்.."

"என்ன சொன்னாய்?"

"காதல் தவறில்லைன்னு.."

"அதற்கு என்ன இப்போது?"

"சுகுமாரன் நல்லவர்ன்னு சொன்னேன்.."



"சரி.. அவன் நல்லவனாகவே இருக்கட்டும்.."

"இது.. இது.. இந்தத் திமிரினால்தான் அவரை இந்த நிலைமைக்கு ஆளாக்கிவிட்டாய்.. உன்னால்தான்.. உன்னால்தான்.."

"என்னால் என்னப்பா ஆனது?"

"அவர் விசம் குடித்துவிட்டு உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறார்."

# 3



பவித்ராவுக்கு ஒரு வினாடி ஒன்றும் புரியவில்லை. 'விசம் குடித்து விட்டானா? ஏன்..? அதை விட அவன் விசம் குடித்தால் இவள் ஏன் தன்னைத் திட்டுகிறாள்? இவளுக்கு இதே வேலையாகப்போய்விட்டது..' என்று கோபத்துடன் எண்ணியவள்,

"சாந்தி.. பொறுமையாய் பேசு.. யார் விசம் குடித்தது?" என்று கேட்டாள்.

"அவர்தான்.. சுகுமார்.. விசம் குடித்துவிட்டார்.."

"அதற்கு என்னை ஏன் குற்றம் சொல்கிறாய்?"

"பாவி.. இந்த நிலைமையிலும் இப்படிப் பேச உனக்கு எப்படி மனம் வருகின்றது? எனக்கு மனம் துடிக்கின்றது. உன் மனம் என்ன இரும்பால் செய்திருக்கிறதா?"

"உனக்கு ஒரு நாள் 'ஸ்கேன்' பண்ணிக் காட்டுகிறேன்.. இங்கே பார் சாந்தி.. எனக்கு ஆயிரம் பிரச்சனைகள் வேலைகள் இருக்கிறது. நம்முடன் வேலை பார்க்கிறவர் உடம்பு சரியில்லைன்னு சொன்னால் கவலைப்பட வேண்டியதுதான். அதற்காக என்னைக் குற்றம் சாட்டும் வேலையை எல்லாம் வைத்துக் கொள்ளாதே. இதுவே கடைசித் தடவையாக இருக்கட்டும். இன்னொரு முறை இப்படிப் பேசிக்கிட்டு வந்தாயானால் நான் நானாக இருக்க மாட்டேன்.. மைண்ட் இட்..."

பவித்ரா தன் இருக்கையில் அமர்ந்து கம்ப்யூட்டரை உயிர்ப்பித்தாள். சாந்தி என்ற ஒருத்தி அங்கே நிற்காதது போல் பாவித்து தன் வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

சாந்தி உதடு துடிக்க அவளை உற்றுப் பார்த்துவிட்டு அலுவலகத்திற்கு லீவ் சொல்லிவிட்டு சென்றுவிட்டாள்.

பவித்ராவிற்கு மனம் கனத்தது. இந்த சுகுமாரன் ஏன் இப்படிச் செய்கிறான்? அவனை விரும்பவில்லை என்ற உண்மையைச் சொன்னால் விசம் குடிப்பதா? இது ஒரு வகையான 'பிளாக் மெயில்' இல்லையா? 'பிடிக்காது' என்று சொல்பவளை வற்புறுத்துவது எந்த ஊர் நியாயம்?

'பேசாமல் அண்ணனிடம் சொல்லிவிடலாமா?' என்று யோசித்தாள். பவித்ராவின் அண்ணன் ராம்குமார். சேலத்தில் சொந்தமாக டிபார்ட்மெண்டல் ஸ்டோர் நடத்தி வருகிறான். கோபக்காரன். அவனிடம் சொன்னால் கோபத்தில் அந்த சுகுமாரனை அடித்தே கொன்றுவிடுவான். அவன் வேறு விசத்தைக் குடித்துவிட்டுக் கிடக்கிறான்.



அப்பாவிடம் சொல்லலாமா? ஓய்வு பெற்ற ரயில்வே ஸ்டேசன் மாஸ்டர். பிளட் பிரஷர், சுகர் என்று உடல் உபாதைகளால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார். மருந்து, மாத்திரைகள் என்று நிம்மதியாய் இருக்கும் அவர் மனதை இந்த விசயம் பாதிக்காதா? அவரிடம் சொல்வதால் என்ன தீர்வு கிடைத்து விடப்போகிறது? வீணாக அவர் மனநிம்மதியைக் கெடுப்பதா?

அம்மாவிடம் சொல்வதால் இந்த உளைச்சலில் இருந்து ஓர் விடுதலை கிடைக்கலாம். மாறாக தன் மகள் பாது காப்பில்லாமல் இருக்கிறாளோ என்று தாய் மனம் கிடந்து தவிக்கும்.

'வேண்டாம். வீட்டில் யாரிடமும் சொல்ல வேண்டாம்' என்று முடிவெடுத்தவள் ஒரு வழியாய் அன்றைய பொழுதை ஓட்டி விட்டு ஹாஸ்டலுக்கு ஓடியே வந்தாள். உடை கூட மாற்றாமல் கட்டிலில் சாய்ந்தவள் அப்படியே கண்களை மூடிப் படுத்துவிட்டாள்.

ஜூலியட் வந்தபோது தன் நினைவு இல்லாமல் கிடந்தவளைப் பார்த்து பதறிவிட்டாள்.

"பவித்ரா.. என்னம்மா.. என்ன செய்யுது..?" பவித்ராவின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். கொதித்தது.

"காய்ச்சல் நெருப்பாய் கொதிக்குதே... பவித்ரா எழுந்திரு.. டாக்டரிடம் போகலாம்," தோழியை எழுப்பி கைத் தாங்கலாய் கூட்டி வந்த ஜூலியட் ஹாஸ்டல் வாட்ச்மேனிடம் ஆட்டோ பிடித்து வரச் சொன்னாள்.

ஆட்டோ வந்ததும் பவித்ராவுடன் ஆட்டோவில் ஏறியவள், பக்கத்திலிருந்த பெரிய மருத்துவமனைக்குப் போகச் சொன்னாள். மருத்துவமனைக்குள் சென்றதும்

ஆட்டோவை அனுப்பிவிட்டு பவித்ராவை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

டாக்டருக்காக நீண்ட கியு காத்திருந்தது. இப் போதைக்கு இவர்கள் முறை வராதுபோல் தோன்ற எழுந்து ரிசப்சனுக்குச் சென்றாள்.

''டாக்டர் மாலதி டியுட்டியில் இருக்காங்களா?'' என்று கேட்டாள்.

''யெஸ் மேம்.. மாடியில் இன்பேஷன்டை பார்த்துக் கொண்டு இருக்காங்க..'' என்றாள் ரிசப்ஷனில் இருந்த பெண்.

''ஒரு நிமிடம் இரு பவித்ரா வந்துவிடுகிறேன்..'' என்ற ஜூலியட் மாடிப் படியேறி சென்றாள்.

காய்ச்சலின் வேகத்தில் கண் மூடிச் சேரில் தலை சாய்ந்திருந்த பவித்ரா யாரோ உலுக்கவும் கண் திறந்து பார்த்தாள். சாந்தி நின்று கொண்டிருந்தாள்.

''பவித்ரா.. வந்துவிட்டாயா.. வா வந்து சுகுமாரைப் பார்..''

பவித்ரா மறுக்க சக்தியில்லாமல் தொய்ந்திருக்க சாந்தி அவள் கைபிடித்து இழுத்துச் சென்றாள். அதே மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சுகுமாரனின் அறைக் குள் பவித்ராவை கொண்டு போய் நிறுத்தினாள்.

அங்கே அமர்ந்திருந்த வயதான பெண்மணி பவித் ராவைப் பார்த்ததும் யாரென்று தெரியாமல் விழித்தாள்.

''யாரும்மா... இது..'' என்று சாந்தியிடம் வினவினாள்.

''இவள்தாளம்மா உங்கள் மகன் விசம் குடிக்க காரண மானவள்..''



பவித்ரா இல்லையென்று மறுக்க நினைத்தாள். முடிய வில்லை. சுகுமாரனின் தாய் பவித்ராவை கை எடுத்துக் கும்பிட்டாள்.

''அம்மா.. என் மகனுக்கு உயிர் பிச்சை கொடும்மா..''

சுகுமாரனிடம் அசைவு தெரிந்தது. சாந்தி அவசரமாய் அவன் அருகே சென்று குனிந்தாள்.

''சுகுமார்.. இதோ பவித்ரா வந்திருக்கிறாள். கண் திறந்து பாருங்க.''

சுகுமார் கண்திறந்தான். பவித்ராவைப் பார்த்தான். உதடு துடிக்கப் பேசினான். பவித்ரா அங்கிருந்து ஓடி விட வேண்டுமென்று நினைத்தாள் முடியவில்லை. நிற்க முடியாமல் சுவரைப் பிடித்துக் கொண்டாள்.

''பவித்ரா.. என்னைக் கைவிட்டு விடாதே..'' சுகுமாரன் இறைஞ்சினான்.

''பதில் சொல்லு பவித்ரா. கை விட மாட்டேன்னு சொல்லு.'' சாந்தி பதறினாள். பவித்ராவைத் திரும்பிப் பார்த்தாள்.

அவளோ நிற்க முடியாமல் தள்ளாடினாள். கைகள் எதையாவது பற்றுக்கோலாய் பற்றிக் கொள்ளத் துழாவின. நடுங்கும் கால்களை கஷ்டப்பட்டு பிரயத்தனத்துடன் தரையில் ஊன்றிக் கொண்டிருந்தாள். 'உட்கார்ந்தால் தேவலை' என்றிருந்தது அவளுக்கு. சுகுமாரனையோ அவன் பேசிய வார்த்தைகளையோ கவனிக்கும் நிலையில் அவளில்லை.

சுகுமாரனோ தன் போக்கில் பேசிக் கொண்டிருந்தான்.

''வாக்குக் கொடு பவித்ரா.. என்னைக் கைவிட மாட் டாய்ன்னு வாக்குக்கொடு.. நீ வாக்குக் கொடுத்தால்தான்

வாழ எனக்கு ஆசை வரும், வாழ்க்கையில் எனக்குப் பிடிப்பு வரும். வாக்குக் கொடு.." அவனது கைகள் பவித்ராவை நோக்கி நீண்டன.

நிற்க இயலாமல் துவண்டு கொண்டிருந்த பவித்ரா தன்னை நோக்கி நீண்ட கையை பற்றுக் கோலாய் தன் உணர்வு இல்லாமல் இறுக்கிப் பிடித்தாள்.

சுகுமாரனின் விழிகள் பிரகாசித்தன. சாந்தியின் முகம் நிம்மதியுடன் வாடியது. சுகுமாரனின் தாய் நம்ப முடியாமல் பார்த்தாள்.

அதே நேரம் தான் உட்கார வைத்துவிட்டுப் போன இடத்தில் தோழியைக் காணாமல் ஒவ்வொரு அறையாய் தேடிக் கொண்டு வந்த ஜூலியட் அந்த அறைக்குள் நுழைந்தாள்.

"பவித்ரா இங்கேயா இருக்கிறாய்? வா.. எனக்குத் தெரிந்த டாக்டர் இங்கு இருக்கிறார்கள். அவர்களிடம் பேசிவிட்டு வந்திருக்கிறேன். அவர்களைப் பார்க்கலாம்.." என்றவாறு தோழியை அழைத்தபடி அருகே வந்தவள் தோழியின் நிலையைக் கண்டதும்,

"என்ன பவித்ரா.. யாரிவர்? இவர் கையை ஏன் பிடித்திருக்கிறாய்? உனக்குத் தெரிந்தவரா..?" என்று வினவினாள்.

பவித்ரா தன் கையை விடுவிக்க முயன்றபடி 'இல்லை' யென்பதாய் தலை ஆட்டினாள்.

தன் கையை காய்ச்சலின் வேகத்தில் பற்றியிருந்த பவித்ராவின் கையை விடாமல் இறுக்கிப் பிடித்துக் கொண்டான் சுகுமாரன்.



"விடுங்கள் மிஸ்டர்.. அவளுக்கு ஃபீவர்.." ஜூலியட் அதட்டினாள். அவன் விடவில்லை. சிரமப்பட்டு தோழியின் கையை விடுவித்தவள் அவளை அழைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினாள்.

டாக்டர் மாலதியிடம் பவித்ராவை பரிசோதிக்க விட்டு மாத்திரைகள் வாங்கிக் கொண்டு ஹாஸ்டலுக்குத் திரும்பியவள் பவித்ராவை மாத்திரைகளை சாப்பிட வைத்து தூங்க வைத்தாள்.

மறுநாள் பவித்ரா அலுவலகத்திற்கு லீவ் போட்டாள். இரண்டு நாள்கள் கழித்து அவள் அலுவலகம் சென்ற போது வாசலில் எதிர்பட்ட சுகுமாரன் தன் முப்பத்தி இரண்டு பற்களையும் காட்டிச் சிரித்தான்.

'இவன் விசம் குடித்தானே.. உயிர் பிழைத்து வந்து விட்டானா? எப்போது வந்தான்? ஏன் இவளைப் பார்த்து இப்படி ஓர் சிரிப்பை சிரித்துத் தொலைக்கிறான்..? அதுவும் வழியவும் செய்கிறானே..'

அவனது சிரிப்பைக் கண்டும் காணாமல் தன் இருக்கைக்குச் சென்றாள். இரண்டு நாள் வேலைகள் தேங்கிக் கிடக்கவும் அதைக் கவனிக்க ஆரம்பித்தாள். மதிய உணவு நேரத்தின் போது சாந்தி அருகே வந்து பேச முயல அவளைத் தவிர்த்து தனியே அமர்ந்து சாப்பிட்டு முடித்தாள். சாந்தியின் முகம் சுணங்கியதை லட்சியமே பண்ணவில்லை.

'நினைத்தால் நட்புக் கொண்டாடுவது.. இல்லாவிட்டால் வெட்டிக் கொள்வது. தேவையில்லாமல் பேசுவது.. சொந்த விசயங்களில் அநாவசியமாய் மூக்கை நுழைப்பது.. இவள் போன்றவர்களின் சிநேகிதமே தேவையில்லை..'

தனக்குள் எண்ணமிட்டபடி சாப்பிட்டு முடித்தவள் அருகில் வந்து பேச முயன்ற சாந்தியைத் தவிர்த்து தன் இருக்கைக்குச் சென்றாள்.

செல்போன் ஒலிக்க எடுத்து எண்ணைப் பார்த்தாள். அவளது அண்ணன் ரமநாதனின் செல்போன் நம்பர். அவசரமாய் பேசினாள்.

"அண்ணா.."

"பவித்ரா இந்த வாரக் கடைசியில் ஊருக்கு வரம்மா.."

"என்ன விசயம் அண்ணா.."

"நேரில் சொல்கிறேன்..."

அந்த வாரக் கடைசியில் வெள்ளிக்கிழமை இரவு பஸ் ஏறி வீட்டிற்குச் சென்றபோது அவளது அண்ணன் ராம் குமார் நேரில் அதைக் கூறினான்.

"பவித்ரா.. உன்னை ஞாயிறன்று பெண் பார்க்க வருகிறார்கள்."

4



திடீரென்று ராம்குமார் அவ்வாறு கூறியதும் பவித்ராவிற்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை.

'அவளைப் பெண் பார்க்க வருகிறார்களா.. யார் மாப்பிள்ளை..?'



"மாப்பிள்ளை பெரிய ஐ.ஏ.எஸ் ஆபிஸர்..." அம்மா மரகதம் பெருமையுடன் மகளின் கன்னம் தொட்டுக் கூறினாள்.

'ஐ.ஏ.எஸ் ஆபிஸர் சாதாரண கலெக்டர் ஆபிஸ் கிளார்க்கை பெண் கேட்டு வருகிறாரா...?'

"அதையேன் கேட்கிறாய்.. கட்டினால் உங்கள் பெண்ணைத்தான் கட்டுவேன்னு என் மகன் சொல்கிறான்னு மாப்பிள்ளையோட அப்பா சொல்கிறார். ஒரு ரிட்டயர்டு எஸ்.எம்மின் மாப்பிள்ளை கலெக்டர். சொல்லவே எனக்குப் பெருமையாய் இருக்கிறது..." அப்பா நாராயணசாமி பெருமையுடன் சொன்னார்.

'கட்டினால் உங்கள் பெண்ணைத்தான் கட்டுவேன் என்றால்.. என்னை அவருக்குத் தெரியுமா..? என்னை ஏற்கனவே பார்த்திருக்கிறாரா?'

"மாப்பிள்ளை தஞ்சாவூருக்கு வந்திருந்தபோது உங்கள் கலெக்டரைப் பார்க்க வந்திருந்தாராம்.. அப்போது நீ வேலை முடிந்து திரும்பிக் கொண்டு இருந்தாயாம்.. தெரியாமல் அவர் மேல் மோதி விட்டாயாம்.. உன் ஹேண்ட் பேக் கீழே விழுந்து விட்டதாம்.. நீ ஸாரி சொல்லி விட்டு அதைக் குனிந்து எடுத்துக் கொண்டு போய்விட்டாயாம்.."அண்ணன் ராம்குமார் விவரித்தான்.

'அப்படி ஒன்று நடந்ததா என்ன..?' அவளுக்கு சுத்தமாக நினைவேயில்லை.

"உனக்கு நினைவிருக்காதுதான்.. சாதாரணமாக நடந்த யதேச்சையான சம்பவம்.. பத்தோடு பதினொன்று அத்தோடு இது ஒன்றுன்னு நினைத்துக் கொண்டு போயிருப்பாய்.. ஆனால் மாப்பிள்ளை தான் உன் ஓர் பார்வையில்

மயங்கி விட்டாராமே.. அவருக்கு அது மறக்கவில்லை..'' அண்ணி சுதாகரி சிரித்தாள்.

அவளது எண்ணவோட்டத்தைப் புரிந்து கொண்டு அவளது குடும்பத்தார் பதில் சொன்னார்கள். அப்படியிருந்தும் பவித்ராவின் முகம் தெளியவில்லை.

''என்னம்மா... கல்யாணம் பேசினால் பெண்கள் கலகலப்பாய் ஆவார்கள். நீ களை இழந்தது போல் விழிக்கிறாய்.. என்ன விசயம்..?'' என்றார் அப்பா நாராயணசாமி ஆதரவாக.

''அப்பா.. இப்போதே கல்யாணம் எதற்கு? நான் இன்னும் கொஞ்சம் நாள் வேலை பார்க்கிறேனே.. இப்போது தானே வேலையில் சேர்ந்தேன்..'' பவித்ராவின் கண்களில் ஏனோ நீர் துளிர்த்தது. அதன் காரணம் விளங்காமல் அவள் மனம் கலங்கியது.

''போடி.. மக்கு.. கனவிலும் நினைக்காத வாழ்க்கை உன்னைத் தேடி வருகிறது. கலெக்டர் மாப்பிள்ளையே உன்னை விரும்பிப் பெண் கேட்டு வருகிறார்.. இனிமேல் போய் வேலை பார்க்கப் போகிறாளாம்..'' அம்மா கடிந்து கொண்டாள்.

''அத்தை.. நீ.. கல்யாணப் பொண்ணா..?'' நான்கு வயது சுஜிதா அவள் சுடிதார் துப்பட்டாவை இழுத்துக் கேட்க.. அண்ணன் மகளைத் தூக்கி மடியில் வைத்து இறுக்கி அணைத்துக் கொண்டாள். அந்த மழலையின் அருகாமை மன இதத்தைத் தர மனதை அமைதிப்படுத்தி கொள்ள முயன்றாள்.

ஞாயிறு காலையிலிருந்தே வீடு திமிலோகப்பட்டது. முதல்நாளே பெயிண்ட் அடித்து கழுவி விட்ட வீட்டில்



புதிய ஜன்னல் திரைகள் தொங்கவிடப்பட்டன. சோபா குஷன்களுக்கு புதிய உறை போடப்பட்டன. சுவரில் புதிதாய் வாங்கப்பட்ட ஓவியங்கள் தொங்க விடப்பட்டன. காபி கொடுக்கும் கோப்பைகளும் டிரேயும் கூட புதிதாய் வாங்கப்பட்டன.

''எதற்கு அண்ணி இத்தனை தடபுடல் பண்ணுகிறார்கள்..? கல்யாணம் பேசத்தானே அவர்கள் வருகிறார்கள்.. கல்யாண வீடு போல் இத்தனை அமர்க்களம் பண்ண வேண்டுமா?'' அண்ணியிடம் முறையிட்டாள் பவித்ரா.

''எல்லோரும் இப்படி ஓர் யோகம் அடிக்காதான்னு அடிச்சுக்குவாங்க. நீ என்னவென்றால் ஏனிந்த தடபுடல் என்கிறாய்.. ம்ம்.. நான் கூட உனக்கு இப்படி ஓர் அதிர்ஷ்டம் அடிக்கும் என்று நினைக்கவேயில்லை..''

சுதாகரியின் வார்த்தைகளில் கொஞ்சம் பொறாமை தொனித்ததோ.. என்று தோன்றவும் கேள்விகளை நிறுத்தி மௌனமானாள் பவித்ரா.

''ம்ம்.. நான் கூட அழகுதான். ஆனால் உன்னைப் போல் உயரமில்லை. கொஞ்சம் குட்டை. உனக்குப் போல் எனக்கு ஒல்லியான உடல்வாகில்லை. பூசினாற் போல் இருப்பதால் குண்டாகத் தெரிகிறேன். உன் முடி காலளவு நீண்டு தொங்குகிறது. எனக்கோ இடுப்பைத் தொட்டால் அதிசயம். நிறம் இருவருக்கும் ஒன்றுதான் என்றாலும் உனது நிறம் எலுமிச்சை பழத்தின் நிறம்.. அப்புறம் கண்கள் உனக்குப் பிளஸ் பாயிண்ட். அதனால் தான் கலெக்டர் மாப்பிள்ளை தேடி வந்து உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறார்.''

அந்தத் 'தேடி வந்த மாப்பிள்ளை' மாலை ஆறு மணிக்கு தாய், தந்தை, அண்ணன், தங்கை என்று பெரிய

பட்டாளத்துடன் பவித்ராவைப் பெண் பார்க்கவென்று நான்கைந்து கார்கள் தெருவை அடைத்து நிற்க வந்து இறங்கினான்.

வீடு பரபரப்புடன் இயங்கியது. நாராயணசாமியும் மரகதவள்ளியும் வாசலுக்கு வந்தவர்களை வரவேற்க ஓடினர். ராம்குமார் சுதாகரியை அதட்டினான்.

"ஸ்வீட், காரமெல்லாம் ரெடியா...?"

"அப்போதே ரெடி..." சுதாகரி பல்லைக் கடித்துக் கொண்டு பதில் கூறினாள்.

"எல்லாவற்றையும் அழகாய் பிளேட்களில் பரிமாறி டிரேயில் அடுக்கு.. காபிக்கு பாலை கூட வைத்து ரெடியாக வைத்திடு.."

"எல்லாம் எங்களுக்குத் தெரியும். நீங்கள் இங்கே நின்று இப்படி சத்தம் போட்டால்தான் எதுவும் ரெடியாகாது.."

"ஏன்..?"

"ஏனா...? நீங்கள் போடுகிற சத்தத்தில் கை தவறி பாத்திரத்தை கீழே போட்டு விடப் போகிறேன்.. அப்புறம் அது வேறு..."

"போதும் போதும்.. வாயை மூடு.. நான் ஹாலுக்குப் போகிறேன்.."

ராம்குமார் அவசரமாய் சமையலறையை விட்டு அகன்றான். கணவனை விரட்டி விட்ட பெருமையுடன் சுதாகரி பிளேட்களை எடுத்துத் துடைத்து சமையல் மேடையில் பரப்பினாள். மரகதவள்ளி அவசரமாய் உள்ளே வந்தாள்.



"சுதா.. என்ன செய்துகிட்டு இருக்கிறாய்?"

"ஸ்வீட், காரம் பரிமாற பிளேட்களை எடுத்துக் கொண்டிருக்கிறேன்."

"அவர்கள் நிறைய பேர் வந்திருக்கிறார்கள். நான் எவ்வளவு பேர் என்று கணக்குப் பார்த்து அளவாய் பரிமாறி வைக்கிறேன். நீ ஒரு எட்டு உள்ளறைக்குப் போய் உன் நாத்தனார் ரெடியாகி விட்டாளான்னு பார்.." மரகதம் உத்தரவிட்டாள்.

'தாய்க்கும், மகளுக்கும் ரெடியாவதை கண்காணிப்பதில் தான் குறி' என்று எரிச்சலடைந்தவள் பவித்ராவின் அறையினுள் சென்றாள்.

"பவித்ரா தயாராயிட்டியா?"

"இதோ அண்ணி.." என்றவாறு பவித்ரா திரும்ப அவள் அழகில் சுதாகரியே சொக்கிப் போனாள்.

பிங்க் கலர் உடலும் நேவி புளு பார்டரும் கொண்ட பட்டுச் சேலை உடுத்தியிருந்தாள். கெட்டி ஜரிகை பார்டரில் தங்கக் காசுகள் பிணைந்திருந்தன. நேவி புளு கலரில் ஜாக்கெட் கையில் அதே தங்கக்காசுகள் கெட்டி ஜரிகை பார்டரில் அமைந்திருந்தன. காதுகளில் வெள்ளைக் கல் பதித்த முத்து ஜிமிக்கி அணிந்து மாட்டல் கொண்டு தலையின் ஓரம் மாட்டியிருந்தாள். கழுத்தில் வெள்ளைக் கல் பதித்த நெக்லஸில் புளு கல் பதித்த டாலர். காசு மாலை டிசைனில் நீண்ட ஒரு செயின். கைகளில் கல் வளையல்கள். தளர்வாய் பின்னப்பட்ட நீண்ட பின்னல்.

"என்ன அண்ணி அப்படிப் பார்க்கறீங்க..? பூ மட்டும் வைத்துக் கொள்ளணும்.." பூவை எடுத்தவாறு பவித்ரா கூறினாள்.

"திரும்பு.. நான் வைத்து விடுகிறேன்.." நாத்தனாரின் அருகே வந்து பூவை வாங்கிய சுதாகரி அழகுற அதை தலையில் வைத்து பின் குத்திவிட்டாள்.

''எனக்கும் பூ..'' சுஜிதா சிணுங்க குனிந்து மகளைப் பார்த்தாள். பட்டுப்பாவாடை சட்டை போட்டு தலையில் சவுரி வைத்துப் பின்னி ஜடை பின்னல் முனையில் குஞ்சலம் வைத்துக் கட்டியிருந்தாள்.

''எப்போதடி இந்த அலங்காரமெல்லாம் பண்ணினாய்..? யார் பண்ணிவிட்டது?'' சுதாகரி ஆச்சர்யத்துடன் வினவினாள்.

''அத்தை..''என்று கை காட்டினாள் சுஜிதா.

"நான்தான் அண்ணி பண்ணி விட்டேன். திரும்பு சுஜிக்குட்டி.. பூவைக்கலாம்..'' அண்ணன் மகளின் தலை நிறைய பூவை வைத்துப் பின் குத்திவிட்டாள் பவித்ரா.

ஒரு நொடியில் சுதாகரியின் மனதில் இருந்த குமைச்சல் பறந்து ஓடி விட்டது. பவித்ராவின் அன்பின் முன் அவளது பொறாமை பனித்துளிபோல் மறைந்தே விட்டது. ஆசையுடன் மகளைத் தூக்கிக் கொண்டாள்.

''என்டி... உன் அத்தையை பெண் பார்க்க வருகிறார்களா? இல்லை உன்னைப் பெண் பார்க்க வருகிறார்களா?" மகளின் கன்னத்தில் முத்தமிட்டுக் கொஞ்சினாள்.

"இரண்டு பேரையும் தான்னு சொல்லு சுஜிக்குட்டி.." பவித்ரா சொல்லிக் கொடுத்தாள்.

அதற்குள் மரகதவள்ளி அழைக்கும் குரல் கேட்டு சுதாகரி மகளை இறக்கி விட்டுவிட்டு சமையலறைக்கு விரைந்தாள்.



''பவித்ரா ரெடிதானேம்மா...'' மாமியார் வினவ.

''ரெடியாகிட்டாள் அத்தை...'' என்று மறுமொழி கொடுத்தாள்.

"சரி.. பலகார டிரேயை எடுத்துக் கொண்டு ஹாலுக்குப் போய் எல்லோரிடமும் சிரித்த முகமாய் வாங்கன்னு சொல்லிட்டு எல்லோருக்கும் பலகாரப் பிளேட்களை கொடுத்து விட்டு வா. ஜாக்கிரதை.."

என்னவோ அவள்தான் கல்யாணப் பெண் போல் மாமியார் எச்சரிக்க மனதிற்குள் சிரித்தவாறு டிரேயை எடுத்துக் கொண்டு சென்றாள் சுதாகரி.

மாப்பிள்ளை வீட்டாரிடம் பேசிக் கொண்டு இருந்த நாராயணசாமி மருமகளைப் பார்த்ததும்,

''இதுதான் என் மருமகள் சுதாகரி..'' என்று மாப்பிள்ளையின் தந்தை வைரவமூர்த்தியிடம் கூறினார்.

"அப்படியா.. வாம்மா.. இது என் மனைவி பத்மாவதி.. இவன் என் பெரிய மகன் விஜய்... இது என் பெரிய மருமகள் சாரதா. இது என் மகள் லாவண்யா.. இவர் என் மாப்பிள்ளை கருணாகரன். இவன்தான்.. உங்கள் வீட்டில் பெண் பார்க்க வந்திருக்கும் அஜய்.. கன்னியாகுமரி மாவட்டக் கலெக்டர்..."

மாப்பிள்ளையைப் பார்த்த சுதாகரிக்கு பவித்ராவின் அதிர்ஷ்டத்தை வியக்காமல் இருக்க முடியவில்லை.

ஆறடிக்கு குறையாத உயரத்தில் அளவான உடற்கட்டுடன் கம்பீரமான தோற்றத்துடன் இருந்த அஜய் அவளைப் பார்த்துக் கரம் குவித்து "வணக்கம்," என்றான்.

# 5



அஜய் அழகாய், சும்பீரமாய், ஆண்மை ததும்பும் தோற்றத்துடன் உத்தியோகம் தந்த கௌரவத்துடன் இருந்தான். இவை அனைத்துடன் பண்பும், மரியாதையும் தெரிந்தவனாகவும் இருந்ததுதான் ஆச்சர்யம்.

சுதாகரியின் பாட்டி அடிக்கடி ஒரு பழமொழியைச் சொல்வாள். 'துரும்பைக் கிள்ளிப்போட்டு மாப்பிள்ளை என்றாலும் அது பந்தா காட்டும்'

இங்கோ பதவியில் உயர்ந்தவன் பண்பாடாய் அவளுக்கு வணக்கம் சொன்னான். பதிலுக்கு கரம் குவிக்க முடியாமல் கையில் பலகாரத் தட்டுக்கள் நிறைந்த டிரே இருக்க, அதை அவன் முன் நீட்டி மரியாதையான முறுவலுடன், "வணக்கம்.." என்றாள் சுதாகரி.

மற்றவர்களுக்கு அவள் பலகாரத் தட்டுக்களை கொடுத்துக் கொண்டே வர அஜய்யின் தந்தை வைரவ மூர்த்தி கலகலப்பாய் பேசிக் கொண்டிருந்தார்.

"என் மூத்த மகன் விஜய் ஐ.பி.எஸ் போலீஸ் ஆபிஸர் ஆன போதே அஜய்யை ஐ.ஏ.எஸ் ஆக்கணும்னு முடிவு பண்ணிட்டேன். அவனும் என் மனது போலவே கலெக்டர் ஆயிட்டான். என் பெரிய மருமகள் சாரதா காலேஜ் லெக்சரர். கல்யாணத்துக்குப் பின்னால் குடும்பத்தைக்



கவனிக்கணும்னு வேலையை விட்டு விட்டாள். விஜய், அஜய் இரண்டு பேருக்கும் தங்கை லாவண்யா. எங்கள் வீட்டு கடைக்குட்டி... இவளும் சும்மா இல்லை. பேங்க் ஆபிஸர்.. ஆனால் வடக்கே வேலை. மாப்பிள்ளை கஸ்டம்ஸ் ஆபிஸர். ஸோ.. என் மகளும் கல்யாணத்துக்கு பின்னால் வேலையை விட வேண்டியதாகிவிட்டது.."

மரகதவள்ளி காபி கோப்பைகளை டிரேயில் ஏந்தி வந்தாள். சுதாகரி அதை வாங்கி எல்லோருக்கும் கொடுத்தாள். ஒரு குட்டிப் பையனும், சுஜிதா வயதில் குட்டிப் பெண்ணும் வைரவ மூர்த்தியின் மடியிலும், பத்மாவதியின் மடியிலும் அமர்ந்து இருந்தார்கள். அவர்களுக்கு பால் நிரம்பிய கோப்பையைக் கொடுத்தாள் சுதாகரி.

"தேவலையே.. குழந்தைகளுக்கு எது கொடுக்க வேண்டும் என்று யோசித்து கொண்டு வந்திருக்கிறீர்கள்," என்று வைரவமூர்த்தி பாராட்ட நாராயணசாமி மகிழ்ந்து போய்,

"குழந்தைகள் உங்கள் பேரன், பேத்திகளா?" என்று விசாரித்தார்.

"ஆமாம்.. இவன் லாவண்யாவின் மகன் கிருஷ்.. மூன்று வயதாகிறது. இது விஜய்யின் மகள் ஆஷா. நான்கு வயது ஆகிறது." என்றாள் பத்மாவதி பெருமையுடன்.

"காபி பலகாரம் ஆயாச்சு.. நாமும் ஒருவருக்கொருவர் அறிமுகம் ஆயாச்சு.. இனிப் பெண்ணை பார்த்து விடலாமே.." என்றார் வைரவமூர்த்தி சிரித்துக் கொண்டே.

அஜய்யின் பார்வை ஆவலுடன் உள்ளே பாய்ந்தது. சாரதா அதை கணவனின் கையைக் கிள்ளி ஜாடையாய் சுட்டிக் காட்ட அவன் தங்கைக்கு சைகை செய்து அதைக் காட்டினான்.

''அண்ணா.. பெண்ணை நீ ஏற்கனவே பார்த்து விட்டாய்.. நாங்கள்தான் பார்க்கணும்..'' லாவண்யா கிண்டலடித்தாள்.

'அதற்காக உன் அண்ணன் கண்ணை மூடிக் கொள்ளணும்னு சொல்கிறாயா?'' கருணாகரன் மனைவியைத் தூண்டினான்.

''கண்ணை மூடுவது இருக்கட்டும்.. கண்ணை கொட்ட கொட்ட இப்படி வழி மேல் விழி வைத்து விழிக்காமல் இருந்தால் சரி..'' லாவண்யா அஜய் போலவே பார்த்துக் காட்ட அஜய்யின் முகத்தில் வெட்கம் கலந்த இளநகை அரும்பியது.

''ஏய்.. வாலு.. உன்னைப் பெண் பார்க்க வரும்போது கருணாவும் இப்படித்தான் விழித்தார்,'' என்று சமாளித்தான் அஜய்.

''ஐ.. ஐ.. ஏற்கனவே என்னைப் பார்த்துவிட்டு கட்டினா இவளைத்தான் கட்டுவேன்னு வந்து உட்கார்ந்துக்கிட்டா பார்த்தார்? முன்னே பின்னே என்னைப் பார்க்காமல் பெண் பார்க்க வந்தவர் அப்படித்தான் பார்ப்பார். உன் கதையே வேறு ஆயிற்றே..'' லாவண்யா விட்டுக் கொடுக்கவில்லை.

சுதாகரி பவித்ராவை அழைத்துக் கொண்டு வரவும் அனைவரின் பேச்சும் நின்றது. எல்லோரின் பார்வையும் பவித்ராவின் மேல் படிய அவள் சங்கடமாய் உணர்ந்தாள். அவள் கரத்தைப் பிடித்துக் கொண்டு உடன் வந்திருந்த சுஜிதாவின் கையை இறுகப் பிடித்துக் கொண்டாள். முகத்தில் பொடிப் பொடியாய் வியர்வை துளிர்க்க தலையைக் குனிந்து கொண்டாள்.



'ஷோ கேஸ் பொம்மை ஒன்று நிற்பது போலவே இருக்கு' பவித்ரா மனதில் நினைத்துக் கொண்டாள்.

'பெண் பார்க்கும் படலம்தான் காலம் காலமாக இந்தியாவில் நடைபெறுகிறது. மாப்பிள்ளை பார்க்கும் படலம் எங்காவது நடந்திருக்குமா?' அவளின் நிலையை உணர்ந்தவனாய் அஜய் கூறினான்.

''உட்காரலாமே..''

''ஏன்னா.. நீங்கள் நின்றால் என் அண்ணனுக்கு கால் வலிக்கிறதாம்..'' லாவண்யா கலகலவென்று நகைத்தாள்.

''உட்காரம்மா..'' என்றாள் பத்மாவதி பரிவாக.

'உட்கார்.. உட்கார்.. என்றால் எங்கே உட்காருவது..'

எல்லோரும் சோபாக்களில் அமர்ந்திருக்க எரிச்சலுடன் நினைத்துக் கொண்டாள் பவித்ரா.

மரகதவள்ளி தரையில் புது ஜமுக்காளம் ஒன்றை விரித்தாள். பவித்ரா அதில் அமர்ந்து கொண்டு மறக்காமல் சுஜிதாவை அருகே அமர வைத்துக் கொண்டாள்.

அஜய் ஆர்வத்துடன் தன் முன்னே அமர்ந்திருந்தவளைப் பார்த்தான். அவன் தன்னையே பார்ப்பதை உணர்ந்த பவித்ரா பார்வையை நிமிர்த்தவே இல்லை. தரையைப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

''பெண் அழகாய்த்தான் இருக்கிறாள்..'' விஜய்க்கு மட்டும் கேட்கும்படி முணுமுணுத்தாள் சாரதா.

''உன் அண்ணன் விழுந்து விட்டதில் ஆச்சரியமில்லை. ரியலி ஷி இஸ் வெரி பியூட்டி..'' கருணாகரன் மனைவியின் காதைக் கடித்தான்.

வைரவமூர்த்தி மனைவியைப் பார்க்க பத்மாவதியின் முகத்தில் திருப்தி தெரிந்தது.

"என்ன படிச்சிருக்கேம்மா.." பத்மாவதி வினவ,

"பி.எஸ்ஸி மேத்ஸ்.." என்று தலைநிமிர்ந்து கூறினாள் பவித்ரா.

நிமிர்ந்தவளின் பார்வை நடுநாயகமாய் அமர்ந்திருந்த அஜய்யின் மேல் விழுக அவள் உடலில் சிலிர்ப்பு ஓடியது.

இவனா..? இவனா அவளைப் பெண் பார்க்க வந்திருப்பவன்? கல்யாணம் பண்ணிக் கொண்டால் இவளைத்தான் பண்ணிக் கொள்வேன் என்று இவனா கூறினான்? கம்பீரமாய், களை ததும்பும் முகத்துடன் அரச தோரணையுடன் அவன் அமர்ந்திருந்த விதம் அவளை வசீகரித்தது.

பவித்ராவின் பார்வை தன்மேல் பதிந்ததும் அவள் பார்வையை அஜய்யின் பார்வை சந்தித்தது. அவள் வெட்கத்துடன் தன் பார்வையை விலக்கிக் கொண்டு தலை கவிழ்ந்தாள். அவளது கன்னத்து சிவப்பு அவனுக்கு உண்மையை உணர்த்த அவனது உள்ளம் சிறகடித்தது.

"நான் பவித்ராவிடம் கொஞ்சம் பேச வேண்டும்.." அஜய்யின் குரல் கணீரென்று ஒலித்தது.

நாராயணசாமியும், ராம்குமாரும் மரகதவள்ளியை பார்த்தனர். அவள் மருமகளைப் பார்த்தாள்.

"அதனால் என்ன அத்தை..? இப்போது இது மாதிரிப் பேசுவது சகஜம். பேசட்டும்." என்று முணுமுணுத்தாள் சுதாகரி.

"பவித்ரா.. மாப்பிள்ளைக்கு நம் வீட்டுத் தோட்டத்தைக் காண்பிம்மா," என்றார் நாராயணசாமி.



பவித்ரா தவிப்புடன் சுதாகரியைப் பார்க்க அவள் அருகில் வந்து "வா பவித்ரா.." என்று அழைத்துக் கொண்டு போனாள்.

தோட்டத்தில் இரண்டு பிளாஸ்டிக் சேர்கள் போடப்பட்டு இருக்க அதில் ஒன்றில் அஜய் அமர்ந்து இவளுக்காக காத்துக் கொண்டு இருந்தான்.

பவித்ரா தயக்கத்துடன் நடந்து அவனருகில் சென்று நின்றாள். நிமிர்ந்து அவளைப் பார்த்தவன் எதிரேயிருந்த சேரைக் காட்டி,

"உட்கார் பவித்ரா.." என்றான். பவித்ரா அமர்ந்தாள்.

"என்னை இதற்கு முன் பார்த்திருக்கிறாயா?"

'இல்லை' என்பதுபோல் அவள் தலை அசைத்தாள்.

"நான் பார்த்திருக்கிறேன்.."

"வீட்டில் சொன்னார்கள்..."

"அன்றைக்கு உன்னைப் பார்த்ததுமே மயங்கி விட்டேன்.."

அவள் லஜ்ஜையுடன் உதடு கடித்தாள். அவன் பார்வை அவள் இதழ்களில் படிய இன்னும் முகம் சிவந்தாள்.

"உனக்கு என்னைப் பிடித்திருக்கிறதா..?" அவன் மென்மையாக வினவினான்.

அவள் திணறிப் போனாள். அவளுக்கு அவனைப் பிடித்திருந்தது. ஆனால் அதை எப்படிச் சொல்வது?

"எங்கள் வீட்டாருக்கு உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு..."

"நான் உனக்கு என்னைப் பிடித்திருக்கிறதான்னு கேட்டேன்."

அவள் சம்பந்தமில்லாமல், "என் அண்ணன் மகள் சுஜிக்குட்டிக்கும் உங்களைப் பிடித்திருக்கிறது," என்றாள்.

"இன்னும் உங்கள் வீட்டு நாய்க்குட்டி.. பூனைக் குட்டின்னு எல்லோருக்கும் என்னைப் பிடித்திருக்குன்னு சொல்வாய்.. இப்போது என்னை உனக்குப் பிடிக்க வில்லையென்று நான் எடுத்துக் கொள்வதா?"

"ஐயோ.. அப்படியில்லை..." அவள் பதற்றமாய் நிமிர அவன் பரவசமாய் உணர்ந்தான். அவன் கண்களில் கிறக்கம் வந்தது.

"வேறு எப்படி.. ம்ம்?" அவன் புருவம் உயர்த்தினான்.

"பிடித்திருக்கிறது.." அவள் மெல்லிய குரலில் முணு முணுத்தாள்.

"என்ன.. என் காதுகளில் விழவில்லை... சத்தமாய் சொல்லு.." அவன் காதருகே கை விரித்துக் கேட்க அவள் முகம் சிவக்க,

"பிடித்திருக்கிறது.." என்றாள்.

"ஊஹூம்... இப்போதும் கேட்கவில்லை.. இன்னும் சத்தமாய் சொல்லு.." அவன் முகத்தில் குறும்பு மின்னியது.

"பிடித்திருக்கிறது.." என்று கூறியபடி எழுந்த பவித்ரா ஒரே ஓட்டமாய் உள்ளே ஓடிப் போனாள்.

கால்களில் கொலுசு சத்தம் ஒலிக்க நீண்ட பின்னல் சுழன்று ஆட அவள் எழுந்து ஓடிய போது விசிறிய



முந்தானை அஜய்யின் முகம் வருடிச் செல்ல அவன் மெய் மறந்தான்.

'பிடித்திருக்கிறது' என்று சொல்லி ஓடியவள் 'விட்டு விடு' என்று சொல்லப் போகிறாள் என்பதை அப்போது அவன் அறியவில்லை.

## 6



அஜய்யின் மனம் பூவாய் மலர்ந்தது. மனதுக்குப் பிடித்தவளின் வாயால் தன்னைப் பிடித்திருக்கிறது என்று சொல்லக் கேட்டதால் எழுந்த சந்தோசத் தென்றல் அவனைத் தாலாட்டியது.

அவளை முதன் முதலாய் சந்தித்த நாள் அவன் நினைவில் தோன்றியது. அஜய்யின் நண்பன் ஆதவன் தஞ்சாவூர் மாவட்டக் கலெக்டராக இருந்தான். இருவரும் ஒன்றாக டிரெயினிங் எடுத்தவர்கள். அஜய்யின் சொந்த ஊர் சென்னை. அவன் கன்னியாகுமரி மாவட்டக் கலெக்டராக பதவி ஏற்ற பின் தஞ்சாவூருக்கு ஒரு விசாரணை சம்பந்தமாக வர வேண்டி இருந்தது.

அப்படி அவன் வந்திருந்த போது தான் பவித்ராவை அங்கே பார்த்தான். அஜய்யைக் கண்டதும் ஆதவன் மகிழ்ந்துவிட்டான். இருவருமே தங்களது 'மாவட்ட ஆட்சித் தலைவர்' என்ற முகமூடியைக் கழற்றி

வைத்துவிட்டு ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக் கொண்டனர். அஜய் வந்த வேலையை அவனுடன் வந்த மற்ற அதிகாரிகள் கவனித்துக் கொள்ள அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய தன் அலுவலக அதிகாரிகளை பணித்துவிட்டு ஆதவன் அஜய்யின் தோள் மீது கை போட்டுக் கொண்டு தன் பங்களாவுக்கு அழைத்துச் சென்றான்.

நண்பனுடன் சுவாரஸ்யமாய் உரையாடிக் கொண்டே வந்த அஜய் திடீரென்று ஒன்று நினைவுக்கு வந்தவனாக நின்றான்.

"என்ன அஜய்?" ஆதவன் வினவினான்.

"அந்த டெண்டர் கோட் நம்பர்.. சீக்ரெட்டாய் இருக்க வேண்டுமென்று என்னுடன் வந்தவர்களிடம் சொல்லாமல் வைத்திருந்தேன். இப்போது என்கொயரி ஸ்டார்ட் ஆகி விட்டது. இது அவர்களுக்கு தெரிய வேண்டியது மிக அவசியம். நான் போய் சொல்லிவிட்டு வந்து விடுகிறேன். நீ காரில் வெயிட் பண்ணு.." என்று அஜய் கூறினான்.

"நானும் உன்னுடன் வருகிறேன்.." ஆதவன் உடன் வர முயல அஜய் தடுத்தான்.

"நோ.. நோ.. நானே போய்விட்டு வந்துவிடுகிறேன். நோ.. பிராப்ளம்.."

அஜய் திரும்பி விரைவாய் நடந்தான். யோசனையோடு நடந்ததில் எதிரே வந்த பெண் மீது மோதிவிட்டான். இவன் 'ஸாரி..' என்று சொல்ல வாய் திறந்த அதே நேரத்தில் அந்தப் பெண் ஓர் அந்நிய ஆடவன் மீது மோதிவிட்ட அதிர்ச்சியை முகத்தில் பிரதிபலித்தபடி அவசரமாய்,



"ஸாரி சார்.. ப்ளீஸ்.. நான் கவனிக்கவில்லை.." என்று கூறினாள்.

அஜய் ஆச்சர்யமாய் அவளைப் பார்த்தான். மோதியது நான். 'ஸாரி' சொல்வது அவள். தான் ஒரு மாவட்டத்தின் கலெக்டர் என்று அவளுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவன் வந்தது திடீர் வருகை. ஆதவனுக்குக் கூட அவன் வரப் போவது தெரியாது. சற்று முன்தான் தஞ்சையின் கலெக்டர் ஆபிஸிற்குள் அவன் நுழைந்திருக்கிறான். கூட ஆதவனும் இல்லை. எனவே அவன் கலெக்டருக்கு வேண்டியவன் என்பதால் அவள் பணிந்து பேசியிருக்க மாட்டாள் என்பது நிச்சயம்.

முன்பின் தெரியாத ஓர் ஆண் மோதிவிட்டால் முகம் கடுத்து திட்டும் பெண்களைத்தான் அவன் அறிந்திருந்தான். இவன் மோத அவள் மன்னிப்புக் கேட்டது விந்தையாகத் தோன்ற வந்த வேலையை மறந்து அவள் முகம் நோக்கினான் அஜய். பார்த்த அந்த ஓர் நொடியில் அவள் பார்வையில் தடுக்கி விழுந்து விட்டான். இன்று வரை அவனால் எழுந்திருக்கவே முடியவில்லை. மிக அருகாமையில் தெரிந்த அவள் முகமும், அகன்ற அவளது கருவிழிகளும், குடைபோல் கவிழ்ந்த இமைகளை பட்டாம்பூச்சி போல் மூடி மூடித் திறந்த படி அவள் 'ஸாரி' சொன்ன விதமும் அவனை வெகுவாய் கவர்ந்துவிட்டன.

அன்றும் மறுநாளும் ஆதவனுடன் அவன் தங்கியிருந்தான். ஆதவனின் மனைவியும் பெற்றோரும் அஜய்யை வரவேற்று உபசரித்தனர். தஞ்சை பெரிய கோவிலைச் சுற்றிப் பார்த்தான். பூம்புகார் சென்றார்கள். சுற்றியிருந்த புராதனமான கோவில்களுக்கு அஜய்யை அழைத்துச் சென்றான் ஆதவன்.

எங்கே போனாலும் அவள் நினைவு அவனைத் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது. இந்த அளவு எந்தப் பெண்ணும் அவனைப் பாதித்ததில்லை என்பதை அவன் மனம் அவனுக்கு உணர்த்தியது. மறுநாள் அவளை முதன் முதலாய் சந்தித்த அலுவலக வாயிலின் முன்னால், அதே நேரத்தில் ஆதவனோடு பேசிக் கொண்டு நின்றான் அவன். கண்களும், மனமும் 'அவள் வருவாளா..' என்று தவித்தன.

அலுவலக நேரம் முடிந்து அலுவலர்கள் வெளியே செல்ல ஆரம்பிக்க அவன் மனம் படபடக்க ஆரம்பித்தது. ஆதவனுடன் வாய் தன்னிச்சையாய் பேசிக் கொண்டிருக்க அவன் கண்களோ வாயிற்புறம் அலுவலகத்தின் உள்ளே இருந்து வேலை முடிந்து வெளியில் வரும் பெண்களின் இடையே அவள் முகம் தேடின. ஆதவன் நண்பனின் நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டு தான் இருந்தான். 'என்னதான் நடக்கிறது என்று பார்ப்போமே' என்று. நண்பனின் போக்கைக் கவனிக்காதவன் போல் பேசிக் கொண்டு நின்றான். தன் போக்கில் பேசிக் கொண்டு வந்த கலெக்ட்ரேட் அலுவலர்கள் வாசலில் தங்களது கலெக்டரைக் கண்டதும் அமைதியாகி மரியாதையோடு விலகிச் சென்றனர்.

தொலைவில் அவள் வருவது தெரிந்தது. எளிமையான காட்டன் புடவையில் தேவதை போல் அவள் வந்தாள். இக்காலப் பெண்களிடம் காண முடியாத நீண்ட பின்னல் அவனது கருத்தில் பதிந்தது. முத்துப் பல் வரிசை தெரிய பக்கத்தில் இருந்த பெண்ணிடம் புன்னகைத்துக் கொண்டே வந்தவள் ஆதவனைக் கண்டதும் பவ்யமாய் சென்றுவிட்டாள். ஆதவனின் அருகே நின்று கொண்டு அவளை



அள்ளிப் பருகுவது போல் பார்த்துக் கொண்டிருந்த அஜய்யை அவள் கண்டு கொள்ளவே இல்லை.

சென்றவளின் பின்னோடு அஜய்யின் பார்வை தொடர்வதைக் கண்ட ஆதவன், 'இது தானா..?' என்று தனக்குள் சிரித்துக் கொண்டான்.

கண் பார்வையிலிருந்து அவள் மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்த அஜய் அவள் மறைந்ததும் ஆதவனைப் பார்த்து.

"ம்ம்.. அப்புறம்? சொல்லு.." என்றான்.

"எதைச் சொல்ல..?" ஆதவன் கிண்டலாய் வினவினான்.

"இப்போது நீ சொல்லிக் கொண்டிருந்ததைத்தான்.."

"இப்போது நான் என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்..?"

அஜய் அசடு வழிந்தான். ஆதவன் உரக்கச் சிரித்து விட்டுக் கேட்டான்.

"யாருடா அந்தப் பொண்ணு..? உனக்குத் தெரிந்த பெண்ணா?"

"இனித்தான் உன்னைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.."

"என்னைக் கேட்டா..?"

"ஆமாம்.. அவள் உன் ஆபிஸில் தானே வேலை பார்க்கிறாள்..?"

"இதுவேறா..? என்டா... இங்கே நூற்றுக் கணக்கில் வேலை செய்கிறார்கள். இதில் அவளைப் போய் எப்படிக் கண்டுபிடிக்க..?"

"எனக்கு அதெல்லாம் தெரியாது. நாளை மதியம் நான் கிளம்புவேன் அதற்குள் எனக்கு அவளைப் பற்றிய ஃபுல் டீடெய்ல் வேண்டும்.."

"இவ்வளவுதானே கவலையை விடு. என் பி.ஏ.வைப் பிடிக்கிறேன். பாருடா அஜய். கவர்ன்மெண்டில் சம்பளம் கொடுத்து கலெக்டருக்கு பி.ஏவை வைத்திருப்பது அரசாங்க வேலைகளை கவனிக்க..."

"இப்போது மட்டும் என்ன கெட்டுப் போய் விட்டது? உன் ஆபிஸில் வேலை பார்ப்பவர்கள் யார், யார் என்று உனக்கு தெரிந்திருக்க வேண்டாமா? அவர்களின் பேக்ரவுண்ட் என்னவென்றும் உனக்குத் தெரிந்திருக்க வேண்டாமா? அவர் அதைத்தானே செய்யப் போகிறார்.."

"ஓ.. நீ அப்படி வருகிறாயா.. வா.. வா.. நடேசன்!"

அடுத்த நாள் காலை பதினொரு மணிக்கு ஆதவனின் டேபிளில் பவித்ராவின் ஃபுல் பயோ டேட்டாவும் சர்வீஸ் ஃபைலும் இருந்தது.

"பரவாயில்லையே.. உன் பிஏ கெட்டிக்காரன்தான்.."

"நடேசன் சுறுசுறுப்பான ஆள். நாம் கோடு போடச் சொன்னால் ரோடே போடுவார்.. இந்தா.. நண்பனுக்காக நான் என்னவெல்லாம் செய்ய வேண்டியிருக்கு பார்.."

"இந்த உதவியெல்லாம் ஓர் உதவியாடா? இன்னும் என்னவெல்லாம் இருக்கு.." அஜய் பவித்ராவின் சர்வீஸ் ஃபைலில் ஒட்டப்பட்டிருந்த அவள் போட்டோவைப் பார்த்துக் கொண்டே கூறினான்.

"அடப்பாவி.. இது போதாதுன்னு இன்னும் வேற உதவி கேட்கப் போகிறாயா..? அதுசரி.. அந்தப்



போட்டோவை கிழித்து எடுத்து விடாதேப்பா.. அது சர்வீஸ் பைல்.."

"ஏண்டா.. என்னவோ படிக்காத சோணகிரிகிட்டப் பேசுவது போல் என்னிடம் பேசுகிறாயே.. நானும் ஓர் கலெக்டர்.. நினைவிருக்கட்டும்.."

"காதல்ன்னு வந்துவிட்டால் கண்ணே தெரியாதே.."

"அதெல்லாம் நல்லாத் தெரியும். அதனால்தான் காலையிலேயே என் செல்லில் அவளைப் படம் பிடித்து விட்டேன்.."

அஜய் தன் செல்போன் திரையை உயிர்ப்பித்தான். அதில் பவித்ராவின் உருவம் பதிவாகி இருந்தது. ஆதவன் வியப்படைந்தான்.

"அடப்பாவி.. ஒரு கலெக்டர் செய்யும் வேலையாடா இது?"

"ஒரு காதலன் செய்யும் வேலை.."

"பணம் பத்தும் செய்யும் என்பார்கள். காதல் களவும் செய்யும் போல.."

ஆதவனும் அஜய்யும் அன்று மனம் விட்டுச் சிரித்தார்கள். அஜய் காற்றை விட வேகமாகச் செயல்பட்டான். அந்த வார இறுதியில் சென்னை சென்றபோது தகப்பனாரிடம் தன் மனதை தெரிவித்தான். பவித்ரா அவர்களது இனமாகவே இருந்தது பெற்றோர்களின் மனதிற்கு மகிழ்ச்சியைத் தந்தது. ஆனால் எதிர்ப்பும் எழுந்தது.

"பெண்ணோட பேமிலி மிடில் கிளாஸ்தான் போல.." பத்மாவதி யோசித்தாள்.

"கலெக்டரா இருந்து கொண்டு கலெக்டர் ஆபிஸ் கிளார்க்கை கல்யாணம் பண்ணப் போகிறாயா..?" நாராயணசாமி தாடையைத் தடவினார்.

"ஐ.பி.எஸ், ஐ.ஏ.எஸ்ன்னு படித்துவிட்டு காதலில் விழுகலாமா.." விஜய் தான் காதல் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியாத பொறாமையுடன் கண்டித்தான்.

"பெண் வெறும் டிகிரி மட்டும் தான் படித்திருக்கிறாளா..?" காலேஜ் லெக்சரராக வேலை பார்த்த அண்ணி சாரதா மட்டம் தட்டினாள்.

"ஏன் அண்ணா.. எனக்கு நீங்கள் போட்டது போல் அவர்கள் வீட்டிலும் நூறுபவுன் நகை போடுவார்களா? அப்பா எனக்கு கார் வாங்கிக் கொடுத்தது போல் உனக்கும் அவர்கள் கார் வாங்கித் தருவார்களா? எனக்கு சென்னையில் ஒரு வீடு வாங்கிக் கொடுத்திருப்பது போல் உனக்கு அவர்கள் சேலத்தில் வீடு வாங்கித் தருவார்களா..?" லாவண்யா எடுத்துக் கொடுத்தாள்.

எல்லோரும் கசமுசவென்று ஆளுக்கொன்று பேச அஜய் அனைவரையும் கையமர்த்தி விட்டு ஒரே வரியில் சொன்னான்.

"எல்லோரும் கேட்டுக் கொள்ளுங்கள். நான் கல்யாணம் பண்ணிக் கொண்டால் அவளைத்தான் பண்ணிக்குவேன்."

இதற்கு மேல் பேச என்ன இருக்கிறது..? அனைவரும் மௌனமானார்கள். அஜய்யின் செல்போனிலிருந்த பவித்ராவின் போட்டோவை ஆள் மாற்றி மாற்றிப் பார்த்தார்கள்.

"மிடில் கிளாஸ் பேமிலியா இருந்தால் என்ன.. பேமிலியயா கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறான்..?



கௌரவமான பேமிலியாய் இருக்காங்க.. நம்ம ஜாதி வேற.. இதுக்கு மேல் என்ன வேணும்.." பத்மாவதி திருப்தியானாள்.

"காதல்ன்னு வந்துவிட்டால் கிளார்க்காவது.. ஆபிஸராவது.. பெண் குடும்பப்பாங்காய் இருக்கிறாள்.. நமக்கு இதுதானே வேணும்.. குட் செலக்சன்டா.." நாராயணசாமி பல்டி அடித்தார்.

"ஐ.ஏ.எஸ் ஆபிசராக இருந்தாலும் மனதுக்குப் பிடித்தவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டால்தான் வாழ்க்கை வாழ்க்கையாக இருக்கும்," விஜய் தத்துவம் உதிர்த்தான்.

"எவ்வளவு படிச்சாலும் குடும்பத்தைத்தான் பார்த்தாகணும்.." சாரதா பெருமூச்சு விட்டாள். அவள் வேலையை விட வேண்டி வந்த வருத்தம் அவளுக்கு.

"நூறு பவுன் நகையைப் போட்டு என்ன பண்ண? போடுவது ஒன்றிரண்டு நகைகளைத்தானே.. விடு... அண்ணா.. வீடாவது ஒன்னாவது.. அந்தப் பெண்ணின் அழகு அத்தனையையும் ஈடு செய்துவிடுமே.." லாவண்யா மாற்றிப் பேசினாள். குடும்பத்தினரை ஒரு வழியாய் சரிகட்டிவிட்டான் அஜய்.

## 7



பெண் பார்த்த அன்றே நிச்சயமும் பண்ணிவிட்டார்கள்.

அழகான ஆரஞ்சு வண்ணப் பட்டுப்புடவை. பத்து பவுனில் நகை செய்து கொண்டு வந்திருந்தார்கள். மரகதவள்ளிக்கு பெருமை பிடிபடவில்லை.

''பெண்ணுக்கு நகை போட்டு கல்யாணம் பேசற காலம் மலையேறிப் போச்சுன்னு நினைச்சேன்... காலம் திரும்புது..'' சுதாகரியிடம் பெருமைப்பட்டாள்.

''அப்படியா அத்தை.. உங்களுக்கு மாமா வீட்டில் எத்தனை பவுன் நகை போட்டு கல்யாணம் பேசினார் கள்?'' சுதாகரி இடக்காகக் கேட்டாள்.

''அது.. வந்து.. என் அம்மா காலத்தில் போட்டார்கள்.''

''ம்கூம்.. பவித்ராவிற்கு அவள் அருமை தெரிந்த மாமியார் வீடு கிடைத்திருக்கிறது..'' சுதாகரி விட்ட பெருமூச்சில் 'எனக்கு அப்படிக் கிடைக்கவில்லை' என்ற ஏக்கம் பட்டவர்த்தனமாய் வெளிப்பட்டது.

ராம்குமார் ஆத்திரமடைந்தான். மரகதம் கண்களால் மகனை எச்சரித்து அடக்கினாள். மகள் கல்யாணம் முடிந்து புகுந்த வீடு போகும்வரை மருமகளின் தயவு அவளுக்கு வேண்டுமே. தவிரவும் வீட்டிற்கு வாழ வந்த மருமகளை சரியாக நடத்தவில்லை என்ற கெட்ட பெயர் ஏற்பட்டு அது மகளின் வருங்கால மாமனார் வீட்டினருக்கு தெரிந்து விடக் கூடாதே.

முறைத்தபடி கணவன் சென்றுவிட அலட்சியப் பார்வை யுடன் அகன்றாள் சுதாகரி. அவளுக்கா தெரியாது..? இந்த வினாடியிலிருந்து பவித்ராவின் கழுத்தில் தாலி ஏறி அவள் புகுந்த வீட்டிற்கு செல்லும் வரை சுதாகரி என்ன வேண்டுமானாலும்.. மனதில் தோன்றுவதையெல்லாம் பேசிக் கொள்ளலாம்.. தடுப்பார் இல்லை... அதற்குப்



பின்..? மனதில் கேள்வி தோன்ற.. 'அப்போது பார்த்துக் கொண்டால் போயிற்று..' என்று அலட்சியமாய் தோள் குலுக்கிக் கொண்டு பவித்ரா உடை மாற்ற உதவிக்குப் போனாள் சுதாகரி.

அஜய் வீட்டில் எடுத்து வந்த புதுப்புடவையை உடுத்தி அவர்கள் வாங்கி வந்த நகைகளைப் போட்டுக் கொண்டு சபைக்கு வந்து அமர்ந்தாள் பவித்ரா. முகூர்த்த நாள் குறிக்கப்பட்டு வெற்றிலை பாக்கு மாற்றிக் கொண் டார்கள். இரவு விருந்து தடபுடலாய் தயாரிக்கப்பட்டு பரிமாறப்பட்டது.

மாப்பிள்ளை வீட்டார் கிளம்பும்போது அஜய்யின் கண்கள் பவித்ராவைத் தேடின. வாசலுக்கு வந்து வழியனுப்ப வந்தவர்களில் அவளைக் காணோம். ஏமாற்றத்துடன் அவன் திரும்பும்போது ஒரு ரோஜா மலர் வந்து அவன் மேல் விழுந்தது. திரும்பிப் பார்த்தான். போர்டிகோவை ஒட்டிய அறையின் ஜன்னலில் அவள் முகம் தெரிந்தது. சம்பந்தம் பண்ணப் போகும் இரு வீட்டாரும் கொஞ்சிக் குழாவி பிரியாவிடை பெற்றும் கொடுத்தும் கொண்டிருக்க இவன் மெல்ல நழுவிப் பின்னடைந்து ஜன்னலோரம் வந்தான்.

''போய் வரவா..'' அவள் முகம் பார்த்தான்.

''ம்ம்..'' அவள் மென்மையாய் தலை அசைத்தாள்.

''அவ்வளவு தானா..?'' அவன் பார்வையில் எதிர்பார்ப்பு இருந்தது.

''வேறு என்ன?'' அவள் புரியாமல் கேட்டாள்.

''வேறு ஒன்றும் இல்லை. என் செல்போன் நம்பரை குறித்துக் கொள்,'' அவன் தன் செல்போனை எடுத்தான்.

''கொஞ்சம் இருங்கள்.. பேனாவும், பேப்பரையும் எடுத்து..'' அவள் பரபரப்பாய் உள்ளே செல்லத் திரும்பினாள்.

''கொஞ்சம் இரு.. பேனாவும் பேப்பரும் எதற்கு?'' கேலியாய் வினவினான்.

''உங்கள் செல் நம்பரை குறித்துக் கொள்ள..'' அவள் தடுமாறினாள்.

''மக்கு.. உன் செல் நம்பரைச் சொல்லு..''

அவள் தனது செல்போன் நம்பரைச் சொல்லச் சொல்ல தன் போனில் அதை பதிவு பண்ணிக் கொண்டவன், தீவிரமான முக பாவத்துடன்,

''உன் கையை நீட்டு..'' என்றான் அவசரமாக.

என்னவோ.. ஏதோவென்று அவள் தன் கரத்தை நீட்ட சட்டென்று அதில் தன் இதழ் பதித்துவிட்டு நடந்து விட்டான்.

''இதோ அஜய் வந்துவிட்டானே.. எங்கேடா போய்விட்டாய்..?'' அவனைக் காணாமல் தேடிய பத்மாவதி வினவினாள்.

''சும்மா.. பின் பக்கமும் சுற்றுச் சுவர் இருக்கான்னு பார்க்கப் போனேன்ம்மா.'' அஜய் சமாளித்தான். லாவண்யாவும், சாரதாவும் கள்ளச் சிரிப்பு சிரித்தார்கள்.

''சுற்றுச் சுவரில் ஜன்னல் இருந்ததா அண்ணா.'' லாவண்யா வாரினாள்.

''எனக்கென்ன தெரியும்..'' மழுப்பினான் அஜய்.

''ஆமாமாம். அவருக்கு வளையல் கைதான் தெரியும். வேறு எ..து..வு..மே தெரியாது. இல்லையா அஜய்..'' சாரதா கிண்டிக் கிளறினாள்.



''என்ன விசயம்..?'' நாராயணசாமி விசாரிக்க அடங்கியது போல் பாவனை செய்த சாரதாவும், லாவண்யாவும் முறையே விஜய், கருணாகரனின் காதைக் கடித்து தகவலை ஒலிபரப்பினார்கள்.

'ஆ'வென்று வாய் பிளந்து தம்பியைத் திரும்பிப் பார்த்த விஜய்யின் கண்ணில் பொறாமை தென்பட்டது.

'பேர்தான் பெரிய போலீஸ் ஆபிஸர்ன்னு பெத்த பெயர். இவன் போல் நினைத்ததை நடத்தும் துணிச்சல் எனக்கு இல்லாமல் போய்விட்டதே.'

கருணாகரன் விஜயிடம் மரியாதையாகவும் அஜயிடம் நண்பனைப் போலவும் பழகுபவன். அஜய்யின் அருகே வந்து காதில் முணுமுணுத்தான்.

''இதெல்லாம் ஒரு திரில் அஜய்.. ஜமாய் ராஜா ஜமாய்..''

ஒரு வழியாய் அவர்கள் கிளம்பிச் சென்றுவிட வீட்டுக்குள் வந்த சுதாகரி,

''புயல் அடித்து ஓய்ந்தது போல் இருக்கு..'' என்றாள் அலுப்புடன்.

''நல்லகாரியம் நடக்கிற வீட்டில் 'புயல்' அது இதுன்னு என்ன பேச்சு பேசறே..'' ராம்குமார் சினந்தான்.

''ராம்.. இப்ப அவள் என்ன சொல்லிட்டாள்ன்னு அவள் மேல் பாயுற. நேற்றிலிருந்து வேலை பார்த்த அலுப்பு பேசிவிட்டாள். பெரிது பண்ணாமல் விடு.'' மரகதவள்ளி சுதாகரிக்காக பரிந்து கொண்டு வந்தாள்.

'கருணை மழை பொழிகிறதைப் பார்... இதன் கள்ளத்தனம் தெரியாதா? மகளின் கல்யாணம் நல்லபடி முடியும்

வரை அன்னை தெரஸா அவதாரம்தான். அப்புறமில்ல இருக்கு..' என்று நினைத்தபடி மகளை அழைத்தாள்.

''சுஜி.. ஏய் சுஜி.. எங்கேடி இருக்கே..'' மகளைத் தேடிய படி அறையில் நுழைந்த சுதாகரி கையை பரவசத்துடன் பார்த்தபடி கட்டிலில் செதுக்கி வைத்த சிலை போல் அசைவற்று அமர்ந்திருந்த பவித்ராவின் அருகில் சென் றாள்.

'ம்ம்.. இவள் ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறாள்..?' அருகே சென்று பவித்ராவின் தோளைப் பற்றியவள்,

''பவித்ரா.. என்னம்மா ஆச்சு.. கையை ஏன் பார்த்துக் கிட்டு இருக்கிறாய்.. அடிகிடி பட்டுவிட்டதா?'' என்று கேட்டாள்.

'அடி பட்டு விட்டதா.. கையிலா..?' இனம் விளங்காத இளமுறுவல் பூத்தது பவித்ராவின் இதழ்களில். அஜய் யின் இதழ் பட்ட கையை சுதாகரி பார்க்கக் கூடாது என்பது போல் கையை முந்தானையில் மறைத்துக் கொண்டவள்,

''ஒன்றுமில்லை அண்ணி. சுஜிக்குட்டி எங்கே?'' என்று கேட்டாள்.

''அதைத்தான் உன்னிடம் கேட்க வந்தேன்... நீ என்னிடம் கேட்கிறாய்.'' சுதாகரி அறையை விட்டுச் செல்லத் திரும்பும் போது அவள் புடவை மடிப்பின் கொசு வங்களை ஒரு பிஞ்சுக் கரம் கட்டிலின் அடியிலிருந்து வெளிப்பட்டு பிடித்து இழுத்தது. தொடர்ந்து, ''அம்மா..'' என்ற மழலைக் குரலும் கேட்டது.

''என்னது சுஜிதாவா? இங்கே என்னடி பண்றே..?'' சுதாகரி கட்டிலின் அடியே குனிந்து பார்க்க உள்ளே சுஜிதா படுத்திருந்தாள்.



''தூக்கம் வந்தது.. தூங்கினேன்..''

''இங்கே வந்தா தூங்குவது..?''

''பெட்டில் அத்தை உட்கார்ந்து இருக்காங்க அம்மா..''

''இருந்தால் என்ன..?''

''மாமாகிட்ட பேசிக்கிட்டு இருந்தாங்க..''

சுஜிதாவின் வார்த்தைகளில் பதறிப் போனாள் பவித்ரா. குழந்தை பேசிக் கொண்டிருந்ததை மட்டும்தான் பார்த் தாளா? இல்லையென்பது அடுத்து சுதாகரியின் கேள்விக்கு சுஜிதா அளித்த பதிலில் இருந்து தெரிய வந்தது.

''எந்த மாமாகிட்ட...'' சுதாகரி பவித்ராவைத் திரும்பிப் பார்த்தாள். அவள் பார்வை கண்டு பவித்ரா சங்கடமுற் றாள்.

''அத்தை கையில்...'' அடுத்து சுஜிதா பேச விடாமல் பவித்ரா குனிந்து குழந்தையைத் தூக்கி அதன் கன்னத் தில் முத்தமிட்டாள்.

''சுஜிக்குட்டிக்கு தூக்கம் வந்தால் இங்கேதான் தூங் கணுமா? நம்ம ரூமுக்கு போகலாம்.. இந்த ரூம் நமக்கு வேண்டாம்..''

''நீங்கதானே அத்தை..'' சுஜிதா மீண்டும் பேச முயல,

''வாடா செல்லம்..'' என்றபடி குழந்தையுடன் அவளது ரூமிற்கு விரைந்தாள் பவித்ரா.

''அப்புறம் என்னடி ஆச்சு..'' என்று கேட்டாள் ஜூலி யட்.

அவர்கள் லேடிஸ் ஹாஸ்டல் அறையில் அமர்ந்திருந் தனர். ஊருக்குப் போய் திரும்பி வந்திருந்த பவித்ரா தன்

திருமணம் நிச்சயம் ஆகிவிட்ட செய்தியைக் கூறினாள். அதைக் கேட்டு முதலில் தன்னிடம் ஏன் முதலிலேயே சொல்லவில்லையென்று கோபித்து தலையணை தாங்கி யுத்தம் புரிந்த ஜூலியட் அது பவித்ராவிற்கே ஊருக்குப் போனபின்தான் தெரியுமென்றதும் சமாதானமாகிவிட்டாள். பெண் பார்க்கும் வைபவத்தின் நிகழ்வுகளை பவித்ரா விவரிக்க ஜூலியட் ஆர்வமாய் கேட்டுக் கொண்டிருந்தாள். கடைசியில் சுஜிதாவிடம் மாட்டிக்கொண்டு தான் விழித்த கதையை பவித்ரா கூறக் கூற அடக்கமாட்டாமல் சிரித்தாள் ஜூலியட்.

"அப்புறம் என்ன ஆச்சா.. என் அண்ணி 'இவள் ஏன் இப்படி ஓடுகிறாள்'ன்னு என்னை விசித்திரமாய் பார்த்துக்கிட்டே போயிட்டாங்க."

"அந்தக் குட்டி பொண்ணு..?"

"அவளே குழந்தை. கொஞ்ச நேரத்தில் மறந்து போய் விட்டாள்.."

"ஏண்டி.. கள்ளி... உண்மையிலேயே நீ.. அஜய் சாரை பார்க்கவில்லையா? அது எப்படி அவர் உன்னை சைட் அடிப்பதை நீ பார்க்காமல் இருந்தாய். என்னால் நம்ப முடியவில்லையே.."

"எனக்கே நம்ப முடியவில்லை. இங்கே வந்திருக்கிறார். இரண்டு நாள் தங்கியிருந்திருக்கிறார். என்னைப் பார்த்திருக்கிறார். எனக்குத் தெரியவில்லை பார். என்னைப் பற்றி விசாரித்துவிட்டு பெண் கேட்டே வந்துவிட்டார் பாரேன்..."

"ஆண்கள் அப்படித்தான் இருப்பார்கள். பிருத்விராஜன் மாதிரி நினைத்தவுடன் குதிரையில் பறந்து வந்து



விடுவார்கள்... நாம் சம்யுக்தை மாதிரி ஜாலியாய் இருந்த இடத்தில் இருந்து கொண்டே குதிரை வந்தவுடன் ஏறிப் பறந்து விட வேண்டியது தான்.."

"என் பிருத்விராஜன் ஒன்றும் குதிரையில் என்னைத் தூக்கிப் போக வரவில்லை. பெற்றவர்கள், கூடப்பிறந்தவர்களோடு வந்து பெண் கேட்டு நிச்சயம் பண்ணி விட்டுப் போனார்.."

"ரோசத்தைப் பார்... சரி. எப்போக் கல்யாணம்?"

"அடுத்த மாதம் ஆறாம் தேதி.."

"இன்னும் இருபது நாள்கள்தான் இருக்கு.."

"ஆமாம்..."

அப்போது செல்போன் ஒலிக்க ஆவலுடன் எடுத்து எண்ணைப் பார்த்தாள். அறிமுகமில்லாத நம்பர். அஜய் தானோ..? ஆவலாய் பேசினாள்.

"ஹலோ.."

"நான் உன் சுகுமாரன் பேசுகிறேன் பவித்ரா.." என்றது மறுமுனை.

# 8



பவித்ரா திகைத்துப் போனாள். அவளது முகமாறுதலைக் கண்டு ஜூலியட் பார்வையால் 'என்ன' என்று

வினவினாள். கையில் போனை வைத்துக் கொண்டு அவளுக்கு எப்படிப் பதில் சொல்வது?

''ஹலோ.. ஹலோ.. பவித்ரா..'' சுகுமாரன் போனில் அழைத்துக் கொண்டிருந்தான்.

''மிஸ்டர் சுகுமாரன்... நீங்கள் உங்கள் மனதில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? எவ்வளவு தைரியம் இருந்தால் 'உன் சுகுமாரன்' என்று என்னிடமே சொல்வீர்கள்? என்னை யார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? முதலில் என் செல் நம்பர் உங்களுக்கு எப்படித் தெரிந்தது? அதைச் சொல்லுங்கள்..'' பவித்ரா முகம் சிவக்கப் பொரிந்து தள்ளினாள். அவளுக்கு படபடவென்று இருந்தது.

ஜூலியட்டின் முகம் மாறியது. எழுந்து பவித்ராவின் அருகில் வந்தாள். இப்போது சுகுமாரன் பேசுவது அவளுக்கும் கேட்டது.

''என்ன பவித்ரா இப்படிப் பேசுகிறாய்? உன்னிடம் நான் பேசாமல் வேறு யார் பேசுவார்கள்? அதற்கு தைரியம் எதற்கு? நீ என்னுடைய பவித்ரா என்ற எண்ணம் ஒன்றே போதுமே. உன் செல் நம்பரை சாந்தி தான் சொன்னாள்... ஏன்டா? நீயே என்னிடம் நேரடியாய் நம்பரைச் சொல்லாமல் அவளிடம் வாங்கிவிட்டேன்னு கோபமா?''

'ஐயோ' என்றிருந்தது பவித்ராவிற்கு இவன் ஏன் இப்படி உளருகிறான். இப்போதுதானே அஜய்யின் நினைவில் வானில் பறந்து கொண்டிருந்தாள்? ஒரு நொடியில் இவன் கீழே இழுத்து மலையுச்சியில் இருந்து கீழே தள்ளுகிறானே.. விலகி விலகிச் சென்றும் துன்பம் கொடுக்கிறானே.. இவன் யார்.. அவள் யார்.. ஏன் இப்படித் துரத்துகிறான்?



பவித்ராவின் முகபாவமே அவளது எண்ணங்களை உணர்த்த ஜூலியட் 'போனை இங்கே கொடு' என்று சைகையில் கேட்டாள். 'பொறு' என்று பதிலுக்கு சைகை செய்த பவித்ரா,

''மிஸ்டர் சுகுமாரன்.. நான் சொல்லச் சொல்ல பேசிக் கொண்டே இருக்கிறீர்களே.. இனியொருதரம் இப்படிப் போன் பண்ணி 'பேத்தினால்' போலீஸில் கம்ப்ளெயின்ட் பண்ணி விடுவேன்... ஜாக்கிரதை..'' என்றாள்.

''போலீஸிலா.. ஹஹ ஹா.. ஏன் கல்யாணச் செலவை மீதம் பண்ணலாம்கிற ஐடியாவா..? போலீஸிற்குப் போனால் அவர்களே கல்யாணம் பண்ணி வைத்து விடுவார்கள் என்ற எண்ணமா? உனக்கு அந்தக் கவலையே வேண்டாம். நம் கல்யாணத்திற்கு எதிர்ப்பே வரப் போவதில்லை. நீயும், நானும் வேறு வேறு ஜாதியென்றால்தானே எதிர்ப்பு வரும். இருவரும் ஒரே ஜாதி.. ஒரே படிப்பு.. ஒரே டிபார்ட்மென்டில் வேலை... என்கிற போது எதிர்ப்பு எப்படி வரும்?

என் இரண்டு அக்காக்களுக்கும் கல்யாணம் பண்ணி முடித்து விட்டேன். இனி ஒரே தங்கை மட்டும்தான் கல்யாணத்திற்கு காத்திருக்கிறாள். கல்யாண வயசில் தங்கையை வைத்துக் கொண்டு உடனே இவன் எப்படி நம்மைக் கல்யாணம் பண்ணிக்கொள்வான்னு பயமா? அந்தப் பயமே உனக்கு வேண்டாம் பவித்ரா... ஒரு கை தட்டினால் தான் சத்தம் வராது.. இரண்டு கை தட்டினால் வருமே.. நீயும் நானும் சம்பாதிக்கிறோம்.. அவளுக்கு கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணி வைத்து விடலாம்ன்னு அம்மாவிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.. அக்காக்களின் கல்யாணத்திற்கு வாங்கிய கடனை

நாமிருவரும் சேர்ந்து ஐந்தே ஆண்டுகளில் அடைத்து விடலாம்.. அப்புறம் தங்கை கல்யாணத்திற்கு உன் வீட்டில் உனக்குப் போடும் நகைகளை போட்டு விடலாம்.. உன் வீட்டிற்கு நீ ஒரே பெண்தானாமே.. அப்புறம் தலை தீபாவளி பொங்கல்ன்னு நகை செய்து போடமாட்டாங்களா.. அதை வேண்டுமானால் நீயே வைத்துக் கொள்ளலாம்.. என்ன பவித்ரா.. நானே பேசிக் கொண்டிருக்கிறேன்.. நீ ஒன்றுமே பேச மாட்டேன் என் கிறாய்.. பவித்ரா.. பவித்ரா.. லைனில் இருக்கிறாயா..?''

அவன் கத்திக் கொண்டிருக்க 'அடப்போடா.. நான் உன் லைனிலேயே இல்லை.. நீதான் தேவையில்லாமல் என் லைனில் கிராஸ் பண்ணுகிறாய்..' என்று மனதிற்குள் திட்டியபடி செல்போன் சுவிட்சையே அணைத்துத் தூக்கி விட்டெறிந்தாள். ஜூலியட் கவலையுடன் தோழியைப் பார்த்தாள். இப்போதுதான் காய்ச்சலில் இருந்து மீண்டு வந்திருக்கிறாள். கல்யாணம் என்று சந்தோசமாக இருப்ப வளை இந்தத் தடியன் ஏன் இந்தப் பாடுபடுத்துகிறான்?

பவித்ரா மன உளைச்சலுடன் தோழியை ஏறிட்டுப் பார்த்தாள். ''என்ன ஜூலி இது... இந்த ராஸ்கல் இப்படிப் பினாத்துகிறான்? லூஸா.. சம்பந்தமேயில்லாமல் என்ன என்னவோ பேசுகிறான்..''

''பேசுகிறானா..? ஐந்தாண்டுத் திட்டமில்ல போடு கிறான்..''

''எல்லாவற்றையும் கோர்வையாகப் பேசுகிறான் பார்த் தாயா..''

''பார்த்தேனா..? கேட்டேன். அதுதான் வெங்கலத் தொண்டையில் மணியோசை மாதிரி 'கணீர், கணீர்'ன்னு சொன்னானே..''



''நானும் அவனும் ஒரே ஜாதியாமே..?''

''விசாரித்து தெரிந்து வைத்திருக்கிறான். உனக்கு இது தெரியுமா?''

''ரப்பிஷ்... நான் இது போல ஸில்லியாக விசாரிக்க மாட்டேன். படிக்கும் இடத்திலும், வேலை பார்க்கும் இடத்திலும் நட்பு மட்டுமே நம் சொந்தம்.. மற்றதைப் பேசவதே.. ஏன் நினைப்பதே தவறு.. இந்தப் பொடித்தன மான செய்கையை இவன் செய்திருக்கிறான் என்றால் இவன் எவ்வளவு பெரிய கிரிமினலாக இருக்க வேண் டும்?''

''எக்ஸாக்ட்லி.. சந்தேகமேயில்லாமல் இவன் கிரி மினல்தான்.. ஒன்றைக் கவனித்தாயா பவித்ரா.. நீ உன் வீட்டிற்கு ஒரே பெண் என்பதில் இருந்து.. நீ வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள்.. உனக்கு நிறைய நகை போடுவார்கள் என்பது வரை தெரிந்து வைத்திருக் கிறான்..''

''இந்த சாந்தி ஏன் என் நம்பரை அவனுக்குக் கொடுத் தாள்..?''

''நாளைக்கு ஆபீஸ் போனதும் முதல் வேலையாய் அவளைக் கேள்..''

''வேறு எனக்கு என்ன வேலை..? என் ரத்தம் கொதிக்கிறது ஜூலி..''

''விடுடா.. இப்போதெல்லாம் இப்படி அழகான கல் யாணமாகாத பெண்களை போனில் டார்ச்சர் பண்ணுவது வழக்கமாகி விட்டது.. இதற்கென்று ஒரு கூட்டமே இருக்கிறது..''

"கூட்டமா.. இவன் ஒருவன் டார்ச்சரே தாங்கவில்லை.."

"சரி.. வா.. சாப்பிடப் போகலாம்.. கல்யாணப் பெண் நீ.. இன்னும் இருபது நாள்களில் தாலி உன் கழுத்தில் ஏறப் போகிறது. அதற்குப் பின்னால் இவன் கலெக்டர் மனைவியிடம் வாலை ஆட்ட முடியுமா? உன்னவர் வாலை ஒட்ட வெட்டி விட மாட்டாரா..?"

'உன்னவர்' என்ற ஜூலியின் வார்த்தை இனித்தது. 'என்னவர்' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள். மனதில் பயம் மறைந்து இதம் பரவியது. தைரியம் வரப் பெற்றவளாய் எழுந்து சாப்பிடச் சென்றாள்.

இரவு தூங்கும் முன் வழக்கம் போல் செல்போனில் அலாரம் வைக்க போனை எடுத்து பார்த்தாள். யோசித்தாள்.

"என்ன பவித்ரா யோசிக்கிற?" ஜூலியட் வினவினாள்.

"இல்லை செல்லை ஆன் பண்ண பயமாய் இருக்கு."

"எதற்கு பயப்படுகிறாய்? ஓடுகிறவர்களைக் கண்டால் துரத்துகிறவர்களுக்கு கொண்டாட்டமாய்த்தான் இருக்கும். தைரியமாய் எதிர்த்து நில்."

தோழியின் வார்த்தைகளில் தைரியமுற்றவள் செல்லை உயிர்ப்பித்தாள். அலாரம் வைத்து அருகிலிருந்த ஸ்டூலின் மேல் செல்லை வைத்துவிட்டு படுத்தாள்.

"அமைதியாய் தூங்கு பவித்ரா.. காலையில் மனம் தெளிவாக இருக்கும்."

ஜூலி ஆதரவாய் பவித்ராவிற்கு போர்த்திவிட்டு அவளது கட்டிலில் படுத்தாள். விளக்கை அணைத்து



விட்டு இருவரும் தூங்க முயற்சித்துக் கொண்டு இருந்த போது பவித்ராவின் செல்போன் அடித்தது. ஜூலியட் எழுந்து விளக்கைப் போட்டாள். செல்போனை எடுக்காமல் பயத்துடன் அதைப்பார்த்துக் கொண்டிருந்த பவித்ராவைப் பார்த்தவள் கோபத்துடன் அவளது செல்போனை எடுத்துப் பேசினாள்.

"ஏய்.. மிஸ்டர்.. ஏன் பவித்ராவைத் தொந்தரவு செய்கிறாய்..?"

மறுமுனை ஒரு கணம் மௌனமானது. பின் கனமான ஆண்குரல் ஒன்று பேசியது.

"ஏனென்றால்.. இன்னும் இருபது நாள்களில் அவள் கழுத்தில் நான் தாலி கட்டப் போகிறேன் என்பதால்.. அவள் எனது நிச்சயிக்கப்பட்ட வருங்கால மனைவி என்பதால்... அவளை நிச்சயம் பண்ணியிருக்கும் மாப்பிள்ளை நான் என்ற உரிமையினால்.. இவ்வளவு விளக்கம் போதுமா?"

"காட்! சார்.. நீங்கள் கலெக்டர் அஜய்யா..?"

"பவித்ராவின் வுட் பி அஜய்.."

"ஸாரி சார்... ஐ ஆம் ஸோ ஸாரி.. நான் ஜூலியட்.. பவித்ராவின் ரூம் மேட்.. பேங்கில் வொர்க் பண்ணுகிறேன்.. வேறு யாரோ என்று நினைத்து உங்களிடம் கோபமாய் பேசிவிட்டேன்."

"இட்ஸ் ஆல்ரைட். இப்படி பாதுகாக்கும் பிரண்ட் கிடைத்திருப்பதற்கு பவித்ரா கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். நான் கூடத்தான்.. பை தி வே.. வேறு யாராவது பவித்ராவை போன் பேசி டார்ச்சர் பண்ணுகிறார்களா..?"

பவித்ரா 'சொல்லாதே' என்று வாய் மேல் விரல் வைத்து எச்சரித்தாள். ஜூலியட் 'சரி'யென்பதாய் தலை அசைத்தாள்... அதே சமயம் எதையோ எடுப்பது போல் பவித்ராவிற்கு முதுகு காட்டியவள் மெல்ல நடந்து கதவு திறந்து வெளியே வந்தாள். பவித்ரா போனிற்காக கை நீட்ட 'பொறு' என்று சைகை காட்டியவள் அவளுக்கு காது கேட்காதபடி நடந்து சற்று தூரம் சென்றவள் அவசரமாய் போனில் பேசினாள்.

"யெஸ். மிஸ்டர். அஜய். பவித்ராவை ஒருவன் டார்ச்சர் பண்ணுகிறான்."

"யார்.. யார் அது..?" அஜய்யின் குரலில் கோபம் தெரிந்தது.

"அதை நாளை சொல்கிறேனே.. பவித்ராவிற்கு இதை நான் உங்களிடம் சொல்வதில் விருப்பமில்லை.. நான் வெளியே வந்து பேசுகிறேன்.. அதிக நேரம் பேச முடியாது.. இது தானே உங்கள் நம்பர்.. நான் நாளை உங்களைக் கூப்பிடுகிறேனே.. இப்போது பவித்ரா உங்கள் போனிற்காக வெயிட் பண்ணிக் கொண்டிருக்கிறாள்.."

"சரி..அவளிடம் கொடுங்கள்.."

ஜூலியட் உள்ளே வந்து பவித்ராவிடம் போனைக் கொடுத்தாள்.

"பவித்ரா பேசுகிறேன்.." அவள் குரல் தடுமாறியது.

"எங்கே போனாய்.. நான்கு நாட்களாய் பேச முடியவில்லை. நான்தான் உன்னைக் கூப்பிட்டுப் பேசுகிறேன்.. என்னை நினைத்தாயா?"

"மறந்தால்தானே நினைப்பதற்கு.." பவித்ரா உண்மை கூறினாள்.



"ஏய்.. அப்புறம் ஏன் பேசவில்லை..."

"எனக்கு உங்கள் நம்பர் தெரியாதே.."

"ஓ.. ஆமாம்.. இப்போது இதை ஸேவ் பண்ணி விடு.."

"ஸேவ் பண்ணாமல் விட்டு விடுவேனா.."

சற்று நேரம் அவனுடன் பேசிக் கொண்டிருந்து விட்டுப் படுத்ததும் மனதில் அவன் நினைவுகள் மட்டுமே ஆக்ரமிக்க பவித்ரா நிம்மதியாய் கண் மூடினாள். இனி இந்த நிம்மதி கிடைக்காது என்பதை அறியாதவளாய்.

## 9



அலுவலகத்தில் வருகைப் பதிவேட்டில் கையொப்பம் இட்டுக் கொண்டிருந்த பவித்ரா எதிரில் வந்த சாந்தியைக் கண்டதும் கோபமாய் முறைத்தாள். அவளோ அதைக் கவனிக்காதது போல்,

"என்ன பவித்ரா.. இரண்டு நாட்களாய் லீவ் போட்டிருந்தாய்..?" என்று கேட்டாள்.

"ஊருக்குப் போயிருந்தேன்.. சாந்தி என் சீட்டிற்கு வா. உன் கூடக் கொஞ்சம் பேச வேண்டும்," பவித்ரா கண்டிப்பான குரலில் கூறினாள்.

"உடனே வர வேண்டுமா... எனக்கு கொஞ்சம் வேலையிருக்கிறதே.."

"என்ன வேலை..?" பவித்ரா எகத்தாளமாய் கேட்டாள்.

"ஆபிஸ் வேலைதான். வேறு என்ன..?" புரியாமல் கேட்டாள் சாந்தி.

"இஸிட்..? ஆபிஸில்.. ஆபீஸ் வேலையைக் கூட நீ பார்க்கிறாயா..?"

"இது என்ன கேள்வி பவித்ரா..? ஆபிஸில் வேறு என்ன வேலையைப் பார்ப்பார்கள். ஆபிஸ் வேலையைத் தான் பார்ப்பார்கள்.. ஏன் இப்படிக் கேட்கிறாய்..?"

"ஏனா..? நீதான் என்னவெல்லாமோ தேவையில்லாத வேலைகளையெல்லாம் பார்க்கிறாயே.. அதனால்தான் கேட்கிறேன்... சீட்டிற்கு வா.."

"ஆனால் பவித்ரா.." சாந்தி ஏதோ சொல்லிக் கொண்டிருக்கும்போதே பவித்ரா அவள் முகத்தைக் கூடப் பார்க்க விரும்பாதவளாய் தன் இடத்திற்குச் சென்றுவிட்டாள்.

"என்ன சாந்தி.. ஏன் பவித்ரா கோபமாய் போகிறாள்?" வனிதா விசாரித்தாள். அவர்கள் செக்சனில் வேலை பார்ப்பவள் அவள்.

"ஒன்றுமில்லையே.." சாந்தி சமாளித்தாள்.

"ஒன்றுமே.. யில்லையா.. இரண்டு பேரும் நகையும் சதையுமாய் இருப்பீங்க. சாப்பாடு.. முதல்.. சொந்த விஷயம் வரை ஷேர் பண்ணிக்குவீங்க.. கொஞ்ச நாளாய் பவித்ரா தனியாய் சாப்பிடுகிறாளே.. அதனால்தான் விசாரித்தேன்."

இவ்வளவு தூரம் அவர்கள் கண்காணிக்கப்படுகிறார்களா? சிந்தனையுடன் பவித்ராவிடம் சென்றாள் சாந்தி.

"என்ன விசயம் பவித்ரா..?"



"சுகுமாரனுக்கு என் செல்போன் நம்பரை ஏன் கொடுத்தாய்?"

"இதுதானா விசயம்.. நான் என்னவோ.. ஏதோவென்று பயந்து விட்டேன்.."

"என்ன சாந்தி இது..? இவ்வளவு சாதாரணமாகச் சொல்கிறாய்? வரவர உன் போக்கே சரியில்லை.. நீ எப்படி என் செல் நம்பரை அவனுக்கு கொடுக்கலாம்? உன் லிமிட் எது என்று உனக்குத் தெரியவில்லை.."

பவித்ரா கோபத்துடன் பேசிக் கொண்டே போக சாந்தியின் முகம் மாறியது.

"அவனா.. யாரைச் சொல்கிறாய்.."

பவித்ரா பல்லைக் கடித்தாள். அவள் என்ன சொல்கிறாள்.. இவள் என்ன கேட்கிறாள்.. பைத்தியம் பிடித்து விட்டதா இவளுக்கு?

"இப்ப அதுதான் உனக்கு முக்கியமா? நான் என்ன சொல்கிறேன்.."

"நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள். ஆனால் சுகுமாரனை மட்டும் அவன்... இவனென்று சொல்லாதே.."

"அப்படித்தான் சொல்வேன்.. அந்த அயோக்கிய ராஸ்கல் எனக்கு போன் பண்ணி என்னவெல்லாம் பேசினான் தெரியுமா?"

"உரிமையிருப்பதால் பேசியிருப்பார்." சாந்தி எங்கோ பார்த்தபடி கூறினாள்.

"உரிமையா.. என்ன உரிமை..?" பவித்ரா கொதித்துப் போனாள்.

''உன்னைக் கைபிடிக்கப் போகும் உரிமை..'' சாந்தி வெறித்த பார்வையுடன் பேசினாள்.

''கை பிடிப்பானா? யார் கையை யார் பிடிப்பது? அவன் கையை முறித்து விடுவேன்... உனக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.. இனி என்னுடன் இப்படி விளையாடினால் நடப்பதே வேறு.. போ.. என் முகத்தில் இனி விழிக் காதே..''

சாந்தி இறுகிய முகத்துடன் போய் விட்டாள். சற்று நேரத்தில் அவள் முன் நிழலாடியது. சாந்தியாக இருக்கும் என்ற நினைவில்.

''நான் சொன்னால் சொன்னதுதான்...'' என்றவாறு நிமிர்ந்தாள். அதிர்ந்தாள்.

''எனக்குத்தான் தெரியுமே.. என் பவித்ரா சொன்னதை மாற்றும் ஜாதியல்ல என்று. வார்த்தை தவற மாட் டாய்ன்னு எனக்குத் தெரியாதா..'' என்றபடி சுகுமாரன் அங்கு நின்று கொண்டிருந்தான்.

இவனா..? இவன் ஏன் இங்கு வந்தான்..? அலுவலக நேரத்திலேயே அருகில் வந்து பேச இவனுக்கு எங்கிருந்து தைரியம் வந்தது?

அவசரமாய் சுற்று முற்றும் யாராவது கவனிக்கிறார் களா... என்று பார்த்தாள். கவனித்துக் கொண்டு தான் இருந்தார்கள் என்பது தெரிந்தது. வழக்கமில்லாத வழக்க மாய் இவன் அருகே வந்து நின்றால் கவனிக்காமல் என்ன செய்வார்கள்.. என்ற எரிச்சல் மண்ட,

''மிஸ்டர் சுகுமாரன்.. என்ன ரௌடியிஸம் பண்ணு கிறீர்களா..?'' என்று வினவினாள்.



''காதலில் ரௌடியிஸம் வரத்தானே செய்யும்..?''

''நீங்கள் காதலித்தால் போதுமா... நான் காதலிக்க வேண்டாமா..?''

''என்னைக் காதலிக்காமல் எங்கே போய் விடப் போகிறாய்?''

''என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்பவருடன் போய் விடுவேன்..''

''ஹா.. ஹா.. நான்தானே உன் மணாளன்..''

''பழைய கால சினிமா வசனம் பேசாதீர்கள்.. சகிக்க வில்லை.''

''சரி இந்தக் கால சினிமா வசனம் மாதிரியே பேசவா..''

''நீங்கள் எப்படிப் பேசினாலும் சகிக்கவில்லை. இடத் தைக் காலி பண்ணுங்கள்.. காலையில் வந்து என் உயிரை எடுக்காதீர்கள்..''

''அதுதான் கோபமா... நான் ஈவினிங் தான் போன் பண்ணுவதாக இருந்தேன்.''

''மிஸ்டர்.. என்ன விளையாடுகிறீர்களா? இந்தப் போன் பண்ணுகிற வேலையை எல்லாம் என்னிடம் வைத்துக் கொள்ளாதீர்கள்.. இந்தச் சாந்தியை என்ன பண்ணினால் தேவலை..''

''ஏன் அவள் என்ன பண்ணினாள்? அவளை ஏன் கோபித்தாய்..?''

''அவள் சொல்லித்தான் வந்தீர்களா?''

''ஆமாம்.. என்னிடம் தானே உன் போன் நம்பரைக் கொடுத்தாள்?''

''நீங்கள் யார் சார்..? எனக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?''

சுகுமாரன் அவளை விழியோடு விழி பார்த்தவாறு அசையாமல் நின்றான். அவன் நின்ற விதம் பவித்ராவை அச்சுறுத்தியது. இவன் ஏன் இப்படி போஸ் கொடுக்கிறான்? ஜூலியட் கூறிய வார்த்தைகளை நினைவு படுத்திக் கொண்டாள். பயப்படக்கூடாது. தைரியமாய் எதிர்த்து நிற்க வேண்டும்.

''ஹலோ.. மிஸ்டர்.. இங்கே நின்று என்ன பார்வை வேண்டிக் கிடக்கிறது. உங்கள் வீட்டிற்குப் போங்கள்.. இல்லாவிட்டால் நான் கம்ப்ளெயின்ட் பண்ணுவேன்.''

''என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் பவித்ரா.. நானும் பொறுமையாய் பேசிப் பார்க்கிறேன்.. அளவுக்கு மீறிப் பேசுகிறாயே..''

'யார்.. யாரைச் சொல்வது..?' விதியை நொந்து கொண்டாள் பவித்ரா.

''யார் அளவு மீறுவது?எனக்குப் போன் பண்ணி கண்டபடி உளருவது யார்? நீங்கள்தானே.. கேட்கவே சகிக்கவில்லை.. ஸ்டுப்பிட்..''

''மரியாதையாய் பேசு.. நான் போனில் பேசத்தான் செய்வேன்..''

''நான் முதலில் என் சிம் கார்டை மாற்றுகிறேன். அப்புறம் எப்படி எனக்கு கண்டதுகளின் போன் வரும்ன்னு பார்க்கிறேன்.''

''கண்டதா..? யார்..? நானா..?''

''வேறு யார்..? இங்கே நீங்கள்தானே நிற்கிறீர்கள்?''



''பவித்ரா.. நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவன்..''

''கனவு காணவேண்டாம்.. எனக்கு கல்யாணம் நிச்சயமாகி விட்டது. இன்னும் இருபது நாள்களில் கல்யாணம். மாப்பிள்ளை யார் தெரியுமா? கன்னியாகுமரி மாவட்டக் கலெக்டர்.''

இனி அவன் தலைதெறிக்க ஓடிவிடுவான் என்ற பவித்ராவின் கணிப்பு பொய்யானது. அவன் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. அவளை பயங்கரமாய் பார்த்தான்.

''கடைசியில் நீ இவ்வளவுதானா?''

''இவ்வளவுதானா என்றால்..?'' புரியாமல் கேட்டாள் பவித்ரா.

''கலெக்டர் மாப்பிள்ளை வந்ததும் கொடுத்த வாக்கை கை கழுவி விட்டாயே..''

''வாக்குக் கொடுத்தேனா..? நானா..? யாருக்கு..?''

''நீ தான்.. 'என்னைக் கை விட மாட்டேன்'னு எனக்கு வாக்குக் கொடுத்தாய். மறந்து விட்டதா? வார்த்தை தவறி விட்டாயா?''

''நான் வார்த்தை தவறினேனா..? நான் எப்போது.. எங்கே..உங்களுக்கு வாக்குக் கொடுத்தேன்?''

''நான் ஆஸ்பத்திரியில் கிடந்தபோது எனக்கு வாக்குக் கொடுத்தாய்..''

''பொய்...''

''மெய்.. சாந்தியை வேண்டுமானால் கேட்டுப்பார்..''

'ஆமாம்' என்றாள் சாந்தி. மதிய உணவு இடைவேளையில் அலுவலக வாசலில் மர நிழலின் அடியில் தனிமையில் நின்று பேசினார்கள்.

"சுகுமாரன் சொல்வது உண்மைதான் பவித்ரா. நீ அவருக்கு வாக்குக் கொடுத்தாய்.. என்னை கைவிடமாட்டாய்ன்னு வாக்குக் கொடுன்னு அவர் கை நீட்டினார்.. நீ அவர் கை பிடித்து வாக்குக் கொடுத்தாய்.."

"எப்போது...?"

"அவர் ஆஸ்பிடலில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தபோது... யு ஸீ பவித்ரா... நீ வாக்குக் கொடுத்ததால்தான் அவர் உயிர் பிழைத்தார். இப்படி அவரைத் திரும்பவும் சாகடிக்கவா நீ அன்று அவருக்கு உயிர் கொடுத்தாய்?"

"ஏய்... என்ன... நீயும் அந்த ஆளும் கூட்டணியா? நான் எப்போது ஹாஸ்பிடல் வந்தேன்.. பொய் சொல்ல எப்போது கற்றுக் கொண்டாய் சாந்தி?"

"நான் தான் பொய் சொல்பவள்... உன் ரூம் மேட் உண்மை விளம்பிதானே.. அவளிடம் போய் கேட்டுப் பார், சுகுமாரன் அட்மிட் ஆகியிருந்த மருத்துவமனைக்கு நீ வந்தாயா, இல்லையா.. என்று... அவர் கை மேல் உன் கையை வைத்து இறுக்கிப் பிடித்திருந்ததை உன் பிரண்ட் பார்த்தாளா.. இல்லையான்னு... என்று... உன் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டு விட மறுத்த அவர் கையிலிருந்து உன் கையை உன் ரூம் மேட் விடுவித்துக் கொண்டு போனாளா.. இல்லையா... என்று கேட்டுப் பார்... போ... போய் கேட்டு விட்டு வந்து பேசு..."

"இதோ பார் சாந்தி... நீ சொல்வது எதுவுமே என் நினைவில் இல்லை."



"அதற்காக...? நடந்தது எதுவும் இல்லையென்று ஆகிவிடுமா? சாகக் கிடந்த மனிதரை பிழைக்க வைத்தாய் என்று சந்தோசப் பட்டேன். இப்படி கலெக்டர் மாப்பிள்ளை கிடைக்கவும் பல்டி அடிப்பாய்ன்னு நினைக்கவில்லை. உனக்கு உன் சுயநலம்தான் பெரிது..."

"என்ன சாந்தி என்னென்னவோ சொல்கிறாய்?"

"பவித்ரா... நீ வாக்குக் கொடுத்தது நிஜம். சுகுமாரனுக்கு நீ கை பிடித்து வாக்குக் கொடுத்தாய். அப்போது நான் அந்த இடத்தில் தான் இருந்தேன். இதை எங்கே வேண்டுமானாலும் வந்து சொல்வேன்."

பொறியில் மாட்டிய எலியாய் தவித்துப் போனாள் பவித்ரா. ஒரு வாரத்திற்கு முன் பழக்கமேயில்லாத சுகுமாரன்... இன்று அவள் கை பிடித்து வாக்குக் கொடுத்த காதலனாக மாறி நிற்கிறான். நெருங்கிய தோழியாய் இருந்த சாந்தி அவளுக்கு நினைவில்லாத வாக்கிற்கு சாட்சி கூறி வில்லியாக மாறி நிற்கிறாள்.

பவித்ராவிற்கு தலை சுற்றியது. அலுவலகத்திலிருந்து சீக்கிரமே அறைக்குத் திரும்பினாள். கண் மூடி கட்டிலில் விழுந்தபோது இந்த உலகத்தில் அவள் மட்டும் நிராதரவாய் நிற்பது போல் இருந்தது.

ஜூலியட் அறைக்குத் திரும்பியபோது கண் மூடிப் படுத்துக் கிடந்த பவித்ராவின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.

"எனக்கு ஃபீவரில்லை" கண் திறவாமல் பவித்ரா கூறினாள்.

"என்னடி ஆச்சு... அந்த சாந்தியிடம் கேட்டாயா...?"

"கேட்டேன்... அவள் உன்னிடம் கேட்கச் சொன்னாள்..."

''என்ன கேட்கச் சொன்னாள்?''

பவித்ரா கேட்டாள். ஜூலியட் பதில் சொன்னாள். பவித்ராவின் மனதில் புயல் அடிக்க ஆரம்பித்தது.

# 10



ஜூலியட் பவித்ராவின் அருகே கட்டிலில் அமர்ந்தாள். பவித்ராவின் கை பற்றி தன் கைக்குள் வைத்துக் கொண்டு அமுத்தினாள்.

''என்னடி ஆச்சு? அந்த சாந்தி சண்டைக்கு வந்தாளா...?''

''இல்லை.. என் மேல் பழி போடுகிறாள்.''

''உன் மேலா... குட் ஜோக்.. நீ என்ன செய்தாய்? அவள் செல் நம்பரை எந்தப் பொறுக்கிக்காவது கொடுத்தாயா? அவன் அவளுக்கு நேரம் கெட்ட நேரத்தில் போன் செய்து பிதற்றினானா? செய்வதையும் செய்துவிட்டு உன்னையே மிரட்ட அவளுக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்?''

''ஜூலி... அன்றைக்கு எனக்கு பீவர்ன்னு ஹாஸ்பிடல் கூட்டிப் போனாயே... அப்போது எனக்கு நினைவு இருந்ததா...?''

''இல்லைடா... நான் தான் உன்னை கைத்தாங்கலாய் கூட்டிப் போய் ட்ரீட்மெண்ட் கொடுத்து கூட்டி வந்து படுக்க வைத்தேன்.''



பவித்ரா உயிர் வரப் பெற்றவளாய் எழுந்து அமர்ந்தாள். ஜூலியட்டின் கையைப் பிடித்துக் கொண்டாள். கண்கள் பிரகாசிக்கக் கேட்டாள்.

''அப்படித்தானே.. ஜூலி.. நீ நேராய் என்னை டாக்டர் கிட்ட கூட்டிப் போனாய் அவங்களை கன்சல்ட் பண்ணி விட்டு நேராய் ரூமுக்குக் கூட்டி வந்து விட்டாய் அப்படித் தானே... ஹாஸ்பிடலில் என் கூடவே தானே இருந்தாய்... சரிதானே.''

ஜூலியட்டின் புருவங்கள் உயர்ந்தன. கேள்வியாய் பவித்ராவை பார்த்து,

''ஏன்டி... என்ன ஆச்சு.. எதற்கு இப்படிக் கேட்கிறாய்?'' என்று கேட்டாள்.

''சொல்லு. ஜூலி.. நான் வேறு எங்கும்.. ஐ மீன்.. ஏதாவது ஒரு ரூமிற்குப் போயிருந்தேனா.. இல்லைல்ல.. சொல்லு ஜூலி.. இல்லை தானே...''

ஜூலியட் யோசித்தாள். பின் தலை ஆட்டினாள்.

''நீயேன் கேட்கிறாய்ன்னு தெரியவில்லை.. ஆனால் பவித்ரா... நான் எனக்குத் தெரிந்த டாக்டரைப் பார்த்து விட்டு வர உன்னை ஹாஸ்பிடல் அவுட் பேஷண்ட்ஸின் வெயிட்டிங் ரூமில் உட்கார வைத்து விட்டுப் போனேன். திரும்பி வந்து பார்த்தபோது நீ அங்கு இல்லை.''

பவித்ராவின் முகம் இருண்டு விட்டது.

''ஜூலி... நீ என்ன சொல்கிறாய்... வேறு எங்கு இருந்தேன்...?''

''நான் ஹாஸ்பிடலில் ஒவ்வொரு ரூமாக தேடி வந்தபோது... நீ ஒரு பைத்தியத்தின் ரூமில் இருந்தாய்...''

"பைத்தியத்தின் ரூமிலா...?"

"ஆமாம் பவித்ரா... யாரோ ஒரு ஆள் உன் கையை பிடித்துக் கொண்டு விட மாட்டேன்னு மல்லுக் கட்டினான். ஒரு வழியாய் அவன் கையிலிருந்து உன் கையை விடுவிக்க நான் பட்ட பாடு... அப்பப்பா... நீ நினைவில்லாமல் நிற்க முடியாமல் தள்ளாடினாய் அவன் கட்டிலில் படுத்துக் கொண்டு உன் கையைப் பிடித்துக் கொண்டு இருக்கிறான். ஹாஸ்பிடல் ரூம்... இல்லா விட்டால் அதைப் பார்த்தவர்கள் தவறாய் நினைத்திருப்பார்கள்... உனக்குத் தெரியாமலே எப்படி அங்கு போனாய் பவித்ரா? அவன் ஏன் உன் கையைப் பிடித்திருந்தான்? உனக்கு உடம்பு சரியானதும் கேட்கணும்னு நினைத்திருந்தேன். பட்.. நீ ஊருக்குப் போய் விட்டாய்.. வரும்போது கல்யாண மேட்டருடன் வந்தாய். இதைக் கேட்க மறந்து விட்டேன்.." ஜூலியட் யோசனையுடன் கூறினாள்.

"ஜூலி... அப்போது அந்த ரூமில் வேறு யாரும் இருந்தார்களா?"

"அதைத்தானே முதலில் கவனித்தேன்... எவனாவது பொறுக்கி ஹாஸ்பிடலில் அட்மிட் ஆவது போல் பொறுக்கித் தனம் பண்ணுகிறானோன்னு சந்தேகம் வந்ததால் நான் செல்போனை ஆன் பண்ணிக் கொண்டுதான் ரூமிற்குள் வந்தேன்... பட்... அங்கே நம் வயதில் ஒரு பெண்ணும்... வயதான ஓர் அம்மாளும் நின்று கொண்டு இருந்தார்கள். அவர்களைப் பார்த்த பின்னால் தான் எனக்கு நிம்மதியே வந்தது."

"ஆனால் என் நிம்மதி இப்போது போய் விட்டதே..."

"ஏய்... இன்னும் பத்தொன்பது நாள்கள்தான் உன் கல்யாணத்திற்கு இருக்கின்றன. இப்போது போய் இது என்ன பேச்சுன்னு பேசுகிறாய்?"



"கல்யாணமா.. எனக்கா? அது நான் நினைத்தது போல் நடக்குமா?"

"என்னடி ஆச்சு... என்னவோ போல் பேசுகிறாய்... அன்றைக்கு ஹாஸ்பிடலில் நடந்ததை இப்போது ஏன் கேட்கிறாய்?"

"ஜூலி... அன்றைக்கு என் கையைப் பிடித்திருந்தானே அவன் யார் தெரியுமா?... அவன் தான் சுகுமாரன்."

"ஓ... மை காட்... அவன் அங்கே எப்படி அட்மிட் ஆனான்?"

"விஷம் குடித்திருந்தானாம்."

"போய் சேரவில்லையா?"

"இல்லையே.. என்னைப் போய் சேர வைக்க பிழைத்து வந்துவிட்டான்..."

"ச்சை... என்னடி உளறுகிறாய்?"

"இல்லை ஜூலி.. அந்த ரூமில் நம் வயதில் ஒரு பெண் இருந்தாள்ன்னு சொன்னாயில்லையா... அவள் வேறு யாருமில்லை.. சாந்தி.."

"என்னடி இது... அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியாய் தருகிறாய்..."

"எனக்கு அவள் தந்ததை உனக்கு நான் தருகிறேன்."

"அவள் என்ன சொன்னாள்..?"

"நான் சுகுமாரனுக்கு வாக்குக் கொடுத்தேனாம்."

"எப்போது...?"

"அந்த ஹாஸ்பிடல் ரூமில்.. அன்றைக்கு நாம் ஹாஸ்பிடல் போயிருந்தபோது அவனைத் தேடிப்போய்... அவன் கை பிடித்து வாக்குக் கொடுத்தேனாம்."

''என்னவென்று?''

''அவளைக் கைவிட மாட்டேன் என்று.''

''இது என்னடி கருமமா இருக்கு? வழக்கமாய் பெண்கள் கையைப் பிடித்து உன்னைக் கைவிடமாட்டேன்னு ஆண்கள்தான் சொல்வாங்க. அவன் என்ன பெண் பிள்ளையா? அவன் கையைப் பிடித்துக் கைவிட மாட்டேன்னு நீ சொல்ல?''

ஜூலியட் சிரித்தாள். பவித்ரா சிரிக்கவில்லை. அவள் முகம் வெளுக்க அமர்ந்து இருந்தாள். தோழியின் நிலையைக் கண்டதும் ஜூலியட்டின் சிரிப்பு பாதியில் மறைந்தது. அவள் முகத்தில் தீவிரம் வந்தது.

''சரி... அதைப் பற்றி இப்போது என்ன வந்தது?''

''என்ன ஜூலி இப்படிச் சொல்கிறாய்? நான் அவனுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேனே. அதை எப்படி மீறு வேன்?''

''அதற்காக? இப்போது என்ன செய்ய உத்தேசம்?''

''முதலில் என் கல்யாணத்தை நிறுத்தப் போகிறேன்.''

''வாட்...?''

''யெஸ். கலெக்டர் மாப்பிள்ளை என்றதும் நான் வார்த்தை தவறி விட்டேனென்று என் மீது பழி வந்திருக் கிறது.''

''அதற்காக? முட்டாள்! என்ன பேசுகிறாய்ன்னு தெரிந்துதான் பேசுகிறாயா? சிறுபிள்ளைத்தனமாய் பிஹேவ் பண்ணிக் கொண்டிருக்கிறாய்... நேற்றே என்ன சொன்னேன்? ஓடுகிறவர்களைக் கண்டால் துரத்துகிறவர் களுக்குக் கொண்டாட்டமாய்த்தான் இருக்கும். சென்டி



மென்டாய் உன்னை லாக் பண்ணப் பார்க்கிறார்கள்... நீயும் கேனை மாதிரி மாட்டப் பார்க்கிறாய்.. முதலில் நீ உன் ஊருக்கு மூட்டையைக் கட்டு இங்கே இருந்தால் ஏதாவது ஒன்று கிடக்க ஒன்று ஆகி விடும் போல இருக்கிறது.''

''நான் எப்படி என் வார்த்தையைத் தட்டிக் கழிப்பது ஜூலி?''

''ஏய்.. நீயென்ன லூஸா? இது என்ன விளையாட்டுத் தனமான காரியமா? எவனோ ஓர் அயோக்கியனும் எவளோ ஓர் பொறாமை பிடித்தவளும் பின்னும் சதி வலையில் தெரிந்தே சிக்குகிறாயே... அறிவில்லையா?''

''ஆனால் நான் வாக்குக் கொடுத்திருக்கிறேனே...''

''உன்னை அடித்தே கொன்று விடுவேன். இப்படி ஓர் அபத்தமான பிளாக் மெயிலில் மாட்டுவதற்கு நீ போய் சேருவதே பெட்டர்...''

அப்போது அறைக்கு வெளியே இருந்து யாரோ அழைத்தார்கள். ''ஜூலி...'' ஜூலியட் எழுந்து வெளியே சென்று பார்த்தாள்.

''என்ன மலர்விழி?''

''வார்டன் உன்னைக் கூப்பிடுது.''

''எதற்காம்?''

''ஐ டோன்ட் நோ.. நீயே போய் கேட்டுக் கொள்.''

ஜூலியட் மாடிப் படியிறங்கி வார்டன் ரூமிற்குச் சென்ற அதே நேரத்தில் மாடியிலிருந்த அவர்களது ரூமில் பவித்ராவின் செல் போன் ஒலித்தது. பயத்துடன் எடுத்துப் பார்த்தாள்.

அஜய்யின் நம்பர்... மனதில் பாரத்துடன் பேசினாள்.

"ஹலோ..." குரலில் சுரத்தே இல்லை.

"என்னது கிணற்றுக்குள் இருந்து பேசுவது போல். 'ஹலோ' என்கிறாய். பேசுவது யார் என்று தெரியவில்லையா? உன் அஜய்..."

'அவன் என்னவென்றால் உன் சுகுமாரன் என்கிறான். இவனோ உன் அஜய் என்கிறான். இருவரில் யார் அவளுடையவன்...'

"ஹலோ... பவி... கேட்டுக் கொண்டுதானே இருக்கிறாய்..."

"என்ன சொல்லி என்னை அழைத்தீர்கள்?"

"ஏன் 'பவி' என்றேன். எனக்கு அப்படிக் கூப்பிடத்தான் இஷ்டம்.."

அவளுக்கு நெஞ்சை அடைத்தது. இவன் இனியவன். இவனது அருகாமை அவளுக்குக் கிடைக்காமல் போய் விடுமோ.. துயரத்துடன் கூறினாள்.

"வேண்டாம் அஜய். என்னை விட்டு விடுங்கள்."

"வாட்.." மறுமுனையில் அவன் குரல் அதட்டியது.

"ஆமாம் அஜய். இந்தக் கல்யாணத்தை நிறுத்தி விடுங்கள்.. இது நடக்காது.. ப்ளீஸ்.. எனக்குக் கல்யாணமே வேண்டாம்..."

கண்களில் நீர் வழிய அவள் கெஞ்சினாள். அவளின் அழுகையை அவன் கேட்டான். ஒரு நிமிடம் மௌனமாக இருந்தான். பிறகு..

"ஓகே.. உன் விருப்பம் அதுவென்றால் அப்படியே செய்து விடலாம்" என்று கூறிவிட்டு போனை துண்டித்து விட்டான்.



'அவ்வளவுதானா..' இதயம் கசந்தது. 'எல்லாமும் முடிந்து விட்டது.' இன்னும் இரு வாரங்களில் திருமணம். அஜய்யின் மனைவியாக அவள். எல்லாமும் இனி கனவுதானா? கழிவிரக்கத்தில் கண்களில் நீர் பொங்கி வழிந்தது. துடித்துப் போய் கதறினாள் பவித்ரா.

கதவு திறந்தது. ஜூலியட் உள்ளே வந்தாள். "ஒன்றுமில்லை. பவித்ரா. ஹாஸ்டல் டே வருதில்ல.. அதில் நாம் ஏதாவது பெர்பார்மன்ஸ் கொடுக்கணுமாம். 'ஓகே மேம்'ன்னு சொல்லி விட்டு வந்தேன். நீயென்ன அழுது கொண்டிருக்கிறாய்?"

பதில் சொல்லாமல் பவித்ரா குப்புறப்படுத்து அழ ஆரம்பித்தாள். அவள் கையிலிருந்த செல்போன் நழுவி கீழே விழுந்தது. ஜூலியட் அதை எடுத்து 'யார் பேசியது' என்று பார்த்தாள். அஜய்யின் பெயர் வந்தது. சத்தமில்லாமல் அவளது போனில் அஜய்யின் செல்போன் எண்ணை பதிவு பண்ணியவள் பவித்ராவின் செல்போனை அவளருகே வைத்தாள். தனது செல்போனுடன் அறையை விட்டு வெளியேறி மொட்டை மாடிக்கு வந்தாள். அஜய்யின் செல்போன் நம்பரை அழுத்தினாள். மறுமுனையில் குரல் கேட்டது.

"சொல்லுங்கள் ஜூலியட்..."

"சார்?" ஆச்சர்யமாய் வினவினாள் அவள்.

அடுத்து அவர்கள் இருவரும் அரை மணி நேரத்திற்கு மேல் பேசினார்கள். ஒருவரை ஒருவர் பார்த்தறியாத இருவரும் ஒருவரிடம் ஒருவர் மனம் விட்டுப் பேசினார்கள். இறுதியில் பவித்ராவின் நலம் விரும்பும் அந்த உண்மைத் தோழியும் அவள் மனம் கவர்ந்த அந்த அன்புக் காதலனும் ஓர் முடிவிற்கு வந்தார்கள்.

# 11



மொட்டை மாடியில் மாலை நேரக் காற்று இதமாக வீசியது. ஹாஸ்டலை சுற்றி ஓங்கி வளர்ந்திருந்த தென்னை மரங்களின் கீற்றுக்கள் மொட்டை மாடிக் கைப்பிடிச் சுவரின் மேல் படிந்து நின்றன. எத்தனையோ மாலை வேளைகளில் ஜூலியட்டும், பவித்ராவும் இதே மொட்டை மாடியில் அமர்ந்து அரட்டை அடித்திருக்கிறார்கள். பவித்ரா இல்லாமல் ஜூலியட் தனியே வந்து போன் பேசுவது இந்த முறைதான். ஜூலியட் வானத்தை அண்ணாந்து பார்த்தாள். மேகங்கள் இல்லாமல் வானம் நிர்மலமாய் காட்சி தந்தது.

நேற்று வரை பவித்ராவின் மனம் கூட இப்படித்தான் நிர்மலமாய் இருந்தது. இதே அந்தி வானின் செம்மை நிறத்தில் முகம் சிவக்க 'அஜய்' பற்றிப் பேசிக் கொண்டிருந்தாள். அவையெல்லாம் நீர் மேல் வரைந்த ஓவியம் போல் ஒரு நொடியில் அலையடித்துக் கலைவதா? அவ்வாறு கல் விட்டெறிந்து அந்த நீர் ஓவியத்தை கலைத்த சண்டாளர்களின் சதி வேலையை ஜெயிக்க விடுவதா?

பவித்ரா! அழகானவள். அன்பானவள். அறிவானவள். இவளைப் போன்ற பெண்ணிற்கு ஒரு கயவன் கணவனாக வர முயல்வதா? இந்த சுகுமாரனை உண்மையிலேயே



காதலித்திருந்தால் 'கலெக்டர்' என்ன இந்த பாரையே ஆளும் ராஜா வந்திருந்தாலும் பவித்ரா திரும்பிக் கூடப் பார்த்திருக்க மாட்டாளே... காதலில் ஒரு பெண்ணை கட்டிப் போட முடியாமல், 'கடமையில்' கட்டிப் போட முயலும் அந்த நாசகாரனை என்ன செய்தால் தகும்?

இந்த சாந்தி என்ற பெண் ஏன் இப்படிச் செய்கிறாள்? ஒரு பெண்ணின் வாழ்வை அழிக்க மற்றொரு பெண் துணை போவதா? தெய்வத்திற்கே இது பொறுக்குமா? மனச்சாட்சியே இல்லாமல் செயல்படும் அவள் என்ன மாதிரியான பெண்?

எது எப்படியிருந்தாலும் இந்நிலையை நீடிக்க விடக் கூடாது. முதலில் இந்த ஊரிலிருந்து பவித்ராவை அப்புறப்படுத்த வேண்டும். இங்கேயே இருந்தால் மன உளைச்சல் தாளாமல் அவள் தற்கொலை கூட பண்ணிக் கொள்ளக்கூடும்.

ஒன்று மட்டும் ஜூலியட்டுக்கு நிச்சயமாய் தெரியும். பவித்ரா தற்கொலை கூட பண்ணிக் கொள்வாளே தவிர ஒரு போதும் சுகுமாரனை மணந்து கொள்ள இசைய மாட்டாள்.

தோழியின் மனப் போராட்டத்திலிருந்து அவளை விடுவிக்க தனியே போராட ஜூலியட்டால் முடியாது.

துணை தேடி பவித்ராவின் 'துணை'க்குப் போன் பண்ணினாள். உடனே போன் எடுக்கப்பட்டது.

"சொல்லுங்கள்... ஜூலியட்" என்றான் அஜய்.

ஜூலியட் ஆச்சரியப்பட்டுப் போனாள்.

"சார்.. இது என் போன் தான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்...? என் நம்பர் என்று எப்படிக் கண்டு பிடித்தீர்கள்...?"

''பவித்ரா என்னை விட்டு விடுங்கள்''ன்று இப்போதுதான் கேட்டாள். என்னிடம் மயங்கியவள்... என்னைப் பிடித்திருக்கிறது என்று சொல்லியவள்... என் நிச்சயதார்த்தப் புடவையை கட்டிக் கொண்டு எனக்கான வருங்கால மனைவி இவள்தான் என்று பெரியவர்கள் நிச்சயதாம்பூலம் மாற்றும்போது மகிழ்ச்சியோடு குடும்ப சபையில் அமர்ந்திருந்தவள்.. இன்று என்னைப் பார்த்து.. 'என்னை விட்டு விடு' என்கிறாள். இதை நான் எங்கே போய் சொல்லி முறையிடுவது? யார் எனக்கு நியாயம் சொல்வார்கள்?''

பெண்ணிற்கு துயரம் வந்தால் அழுது தீர்த்து விடலாம். ஆண்களுக்கு துயரம் வந்தால் அவர்கள் என்ன செய்ய முடியும்?

ஒரு மாவட்டத்தின் ஆட்சித் தலைவர். அவன் மனதை ஆட்சி செய்யும் பெண்ணின் இத்தகைய வாய் மொழியை கேட்ட பின் அவன் மனம் எப்படித் துடித்திருக்கும்? என்பதை ஜூலியட்டால் உணர முடிந்தது.

''சார்... நான் தவறு செய்து விட்டேன்..'' குற்ற உணர்வோடு கூறினாள் ஜூலி.

''நீங்கள் என்னம்மா தவறு செய்தீர்கள்...?'' அவன் இதமாய் வினவினான்.

''நேற்றே உங்களிடம் நான் விரிவாய் பேசியிருக்க வேண்டும்... நடந்ததை சொல்லியிருக்க வேண்டும். நாளை பேசலாம் என்று தள்ளிப் போட்டேன். இப்போது இந்த ஓர் நாளில் எல்லாமே தலை கீழாக மாறி விட்டது. பவித்ரா உடைந்து விட்டாள். 'நாளை' என்று எந்தக் காரியத்தையும் தள்ளிப் போடக்கூடாதுன்னு பெரியவர்கள் இதைத்தான் சொல்லுகிறார்களோ...''



''மனம் வருந்த வேண்டாம் ஜூலி. நான் உங்களை 'வா போ' என்று கூப்பிடலாமா... எனக்கு உங்களிடம் பேசும்போது என் தங்கை லாவண்யாவிடம் பேசுவது போலவே இருக்கிறது. வித்தியாசமாகத் தோன்றவில்லை.''

ஜூலியட் நெகிழ்ந்து போனாள். அவள் பெற்றோருக்கு ஒரே பெண் மகவு.

''சார்... நீங்கள் என்னைத் தங்கையாக நினைக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.. எனக்கு அண்ணன் கிடையாது.. தேங்க்ஸ்.''

''சொல்லு... ஜூலி... என்ன நடந்தது?''

''சார்.. பவித்ரா 'எமோஷனல் பிளாக் மெயிலி'ல் சிக்கியிருக்கிறாள். இங்கே சுகுமாரன் என்று ஒரு ராஸ்கல்...'' என்று ஆரம்பித்து அனைத்தையும் கூறி முடித்தாள்.

''ஸோ... பவித்ரா காதல் விவகாரம் எதிலும் சிக்கவில்லை... ஆனால் அதில் சிக்க வைக்கப்பட்டது போல் சித்ரவதைப் படுகிறாள். அப்படித்தானே.''

''ஆமாம் அண்ணா.. யு ஆர் அப்சல்யூட்லி கரெக்ட். பவித்ரா தானுண்டு. தன் வேலையுண்டு என்று இருப்பவள். அவளைப் போய் இப்படிப் பாடாய் படுத்துகிறான் அந்த ஃபிராடு. அதற்கு அந்தப் பெண் சாந்தியும் துணை போகிறாள். ஏன் என்று தான் தெரியவில்லை.''

''கண்டுபிடித்து விடலாம்... இப்போது நாம் ஒரு வேலை பண்ண வேண்டுமே.''

''சொல்லுங்கள் அண்ணா.. பவித்ராவைக் காப்பாற்ற நான் என்ன உதவி வேண்டுமானாலும் செய்யக் காத்திருக்கிறேன்.''

"முதலில் நான் போனைக் கட் பண்ணி விட்டுக் கூப்பிடுகிறேன்."

"ஏன் அண்ணா?"

"ஒரு சின்ன வேலை.. முடித்துவிட்டு உடனே கூப்பிடுகிறேன். ப்ளீஸ் வெயிட்."

போன் துண்டிக்கப்பட்ட மறுகணம் ஜூலியட்டின் போனில் அவனது செல்போன் எண்கள் ஒளிர அஜய் அழைத்தான். ஒரு நொடியில் ஜூலியட்டிற்கு விஷயம் விளங்கியது. செல்போனில் அவன்தான் கூப்பிட்டான். செல்போன் கட்டணம் அவளுக்கு அதிகமாகி விடக் கூடாதென்று அவனே அவளை அழைப்பதற்காக 'வேலையிருக்கிறது' என்று சொல்லி போனைத் துண்டித்து விட்டு அவன் போனிலிருந்து அவளை அழைக்கிறான்.

"வேலை முடிந்து விட்டதா அண்ணா..." ஜூலியட் நகைத்தாள்.

"நான் நினைத்தது முடிந்து விட்டது." அவனும் சிரித்தான்.

"இப்போதாவது.. நான் என்ன செய்ய வேண்டும்ன்னு சொல்கிறீர்களா?"

"ஷ்யூர்.. ஜூலி! உனக்கு லீவ் இருக்கிறதா... ஒரு இருபது நாள் லீவ் போட்டுவிட்டு வெளியூர் வர முடியுமா?"

"முடியும் அண்ணா... நாளைக்கு லீவ் போட்டு விடுகிறேன்... பவித்ராவை நான் எங்கு அழைத்து வர வேண்டும்?"

"கிளெவர் கேர்ள்... பவித்ராவை நான் கூட்டி வரச் சொல்வேன்னு கண்டுபிடித்து விட்டாயே... குட்..." அஜய்யின் குரலில் மெச்சுதல் இருந்தது.



"நான் நினைத்ததை நீங்கள் சொல்லி விட்டீர்கள். இப்போதுதான் பவித்ராவை மூட்டை கட்டச் சொன்னேன். அவள் மறுத்துவிட்டு குப்புறப்படுத்துக் கதறிக் கொண்டிருக்கிறாள்.." ஜூலியட்டின் குரலில் வருத்தம் இருந்தது.

"கதறிக் கொண்டிருக்கிறாளா..." அஜய்யின் குரலில் ஒருவிதமான திருப்தி இருந்தது தெரிந்தது. அது ஒரு காதலனின் திருப்தி. 'பிரிந்து போ' என்று சொல்லிவிட்டு ஒரு காதலி கதறினால் அந்தக் காதலன் பிரிந்தா போய் விடுவான்? இன்னும் இறுக்கிக் கொள்ள மாட்டானா? அஜய்யும் அதைத்தான் செய்தான்.

"ஜூலி.. எனக்கு கொடைக்கானலில் ஒரு வீடு இருக்கிறது... எங்கள் குடும்பச் சொத்து. பாகம் பிரித்த போது என் பெயருக்கு வந்தது. அங்கே வீட்டைப் பார்த்துக் கொள்ள... கணவன் மனைவியாக ஒரு குடும்பம் அவுட் ஹவுஸில் தங்கி இருக்கிறது. ஒரு பதினொரு நாள்கள் நீயும் பவித்ராவும் அங்கே போய் தங்கியிருக்க முடியுமா?"

"முடியாது என்பது பவித்ரா விசயத்தில் இல்லை. ஆனால் அண்ணா பவித்ராவை என்ன சொல்லி அழைத்துச் செல்வது? அவள் என்னுடன் வர மறுப்பாளே... அதுதான் கவலையாக இருக்கிறது..."

"அந்தக் கவலை உனக்கு வேண்டாம். அதை நான் பார்த்துக் கொள்கிறேன். இப்போதைக்கு நமது முதல் வேலை அந்தச் சூழ்நிலையிலிருந்து பவித்ராவை அப்புறப்படுத்த வேண்டும். அந்தச் சுகுமாரனும், சந்தியும் கண்டுபிடிக்க முடியாத ஓர் இடத்தில் அவளைப் பாதுகாக்க

வேண்டும். அப்புறம்.. அவர்கள் செல்போனில் பவித்ராவை தொடர்பு கொள்ளக்கூடாது. அவள் செல்போனிலிருந்து சிம் கார்டை எடுத்து விடு. நாளை வேறு சிம் கார்டு அவளைத் தேடி வரும். புரிகிறதா ஜூலி."

"புரிகிறது அண்ணா. நான் பார்த்துக் கொள்கிறேன்."

"ஜூலி. நீ அவளருகில் இருக்கிறாய் என்ற நம்பிக்கையிலும் நிம்மதியிலும்தான் நான் இங்கு இருக்கிறேன். இல்லாவிட்டால் உடனே கிளம்பி அங்கு வந்து விடுவேன். ப்ளீஸ் டேக் ஹேர்..."

"ஓகேண்ணா..." மறுமுனை துண்டிக்கப்பட்டது.

ஜூலியட் செல்போனை கன்னத்தில் தட்டியபடி ஒரு நிமிடம் யோசனையாய் அமர்ந்தாள். அவளைச் சுற்றி இருள் பரவ ஆரம்பித்திருந்தது. இனி அஜய் பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கையுடன் எழுந்து கீழே இறங்கி அறைக்குள் போய் பார்த்தாள். அழுது அழுது ஓய்ந்து போய் பவித்ரா தூங்கிக் கொண்டிருந்தாள். ஜூலியட் கைக்கடிகாரத்தில் மணி பார்த்தாள். சாப்பாட்டு நேரம் இன்னும் வரவில்லை. பவித்ராவின் அருகே அமர்ந்து அவள் முகம் பார்த்தாள். கண்ணீர் வழிந்து காய்ந்து போன கோடுகள் கன்னத்தில் தெரிந்தன. இந்த அழுகை எதற்காக? யாருக்காக? என்ற வேதனையுடன் அவள் தூக்கம் கலைத்து விடாமல் முடி கோதி விட்டாள்.

கன்னியாகுமரியில் அஜய் வேகமாகச் செயல்பட்டான். முதலில் சேலத்துக்குப் போன் பண்ணினான். எதிர் முனை எடுக்கப்பட்டு ''ஹலோ'' சொன்னது.

"மிஸ்டர் ராம்குமார்..?"

"யெஸ்.. ஐ ஆம்."



"நான் அஜய்."

"ஓ.. மாப்பிள்ளை.. இதுதான் உங்கள் போன் நம்பரா.. எனக்கு..."

"மிஸ்டர் ராம்குமார்.. நான் பேசப் போவது மிக முக்கியமான விஷயம். நாம் அதைப் பற்றிப் பேசலாம். மற்றவை பிறகுதான். மிஸ்டர் ராம்குமார் நான் சொல்லப் போவதை கேட்டு நீங்கள் பவித்ராவின் மீது கோபப்பட்டு விடாதீர்கள். நம் வீட்டுப் பெண் மன உளைச்சலில் மாட்டியிருக்கிறாள். நாம் ஜாக்கிரதையாய் அவளை இதிலிருந்து விடுவிக்க வேண்டும். ஒரு கண்ணாடிப் பாத்திரத்தை கையாள்வது போல் இந்தப் பிரச்னையை ஹேண்டில் பண்ண வேண்டும். திரும்பவும் சொல்கிறேன். நமக்கு பவித்ரா முக்கியம்."

ராம்குமார் திகிலடைந்தான். இரண்டு நாள்களுக்கு முன்னர் தங்கையை பெண் பார்த்து நிச்சயம் பண்ணிய மாப்பிள்ளை இன்று போன் பண்ணி என்னென்னவோ சொல்கிறான். இந்த பவித்ரா எதில் மாட்டியிருக்கிறாள்? திருமணம் நிச்சயமானவுடன் அவளை வேலையை விட வைத்திருக்க வேண்டுமோ...? நினைத்ததை போனில் சொன்னான்.

"நோ.. நோ... மிஸ்டர் ராம்குமார்... நல்ல வேளையாய் நாம் வேலைக்கு அனுப்பினோம். வீட்டில் இந்தச் சிக்கல் தேடி வந்திருந்தால் நம்மால் பெரியவர்களையும், பவித்ராவையும் சேர்ந்து சமாளிப்பது முடியாமல் போயிருக்கும். அதற்கு இது தேவலை..."

'எது தேவலை?' என்று அறியாமல் ராம்குமார் அஜய்யை பேச விட்டான். அவன் சொல்லச் சொல்ல ராம்குமாரின்

ரத்தம் கொதித்தது. மீசை துடித்தது. புஜங்கள் ஆவேசமாய் முறுக்கின. மனம் ஆக்ரோசம் கொண்டு எழுந்தது. அந்த சுகுமாரனை கொன்றே விடுவது என்று ராம்குமார் முடிவெடுத்தான்.

## 12



எந்தத் தமையனுக்குத்தான் நேமே என்று வேலைக்கு போய் வரும் தங்கையை நிம்மதியாக இருக்கவிடாமல் தூரத்தும் அசுர குணம் கொண்ட ஜென்மங்களைத் துண்டாட வேண்டுமென்ற வெறி வராமல் இருக்கும்? ராம்குமாருக்கு அந்த வெறி வந்தது. அவன் கோபத்தில் பற்களைக் கடித்தது அஜய்க்கு தெளிவாகக் கேட்டது.

"ராம்குமார்.. வேண்டாம்.. கோபத்தைக் கட்டுப்படுத்துங்கள். இது புத்திசாலித்தனமாக செயல்பட வேண்டிய நேரம். கோபத்தைக் காட்டும் நேரமில்லை."

"எப்படி மாப்பிள்ளை பொறுமையாய் இருக்க முடியும்? என் தங்கை கதறி அழுதிருக்கிறாள். கல்யாணத்தை நிறுத்தி விடுங்கள் என்று உங்களிடம் கேட்டிருக்கிறாள். உங்களுக்குத் தெரியாது மாப்பிள்ளை. அவள் உங்களை எவ்வளவு விரும்பினாள் என்று எங்களுக்குத்தான். ஐமீன்.. எனக்கும், சுதாகரிக்கும் தான் தெரியும். நீங்கள் நிச்சயதார்த்தம் முடிந்து போன பின் அந்த இரவு முழு



வதும் அவள் அவளுடைய வலது கையை உற்றுப் பார்த்துக் கொண்டு தூங்கவேயில்லை. வலது கைக்கு ஒரு தலையணையை அண்டை கொடுத்துத்தான் தூங்கினாள். இன்னும் ஒன்று தெரியுமா? அன்று இரவு உணவை 'கை வலிக்கிறது' என்று சொல்லி ஸ்பூனால் சாப்பிட்டாள்... ஏன் என்று நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை..." ராம்குமார் நாசுக்காய் நடந்ததை உணர்த்தினான்.

அஜய்க்கா ஏன் என்று தெரியாது? அவனது வலது கையில் இதழ் பதித்து விட்டு வந்தவனுக்கு வாய் இனித்ததே... அவள் எப்படி கை பார்க்காமல் இருந்திருப்பாள்? காதலின் போதை அஜய்யின் உடலில் தோன்றியது. அந்தக் கணம் பவித்ராவைப் பார்க்க வேண்டும் போன்ற கிளர்ச்சி அவனுடலில் தோன்றியது. ராம்குமாரிடம் கோபத்தை அடக்கச் சொல்லிவிட்டு இவன் தாபத்தை அடக்காமல் இருப்பதா? தன் உணர்வுகளை கட்டுக்குள் கொண்டு வந்தான்.

"பவித்ரா எந்த நிலையில் இருக்கிறாள் என்று தெரியுதில்லையா? அதிலிருந்து அவளைக் காப்பாற்றுவோம். அவனைத் தண்டிப்பது வீண் வேலை."

"அதற்காக அவனை அப்படியே விட்டு விடுவதா?"

"அப்படியில்லை ராம்குமார். நம் முன் திருமணம் நிற்கின்றது. இன்னும் பதினெட்டு நாள்கள்தான். அந்த இரு வாரங்களும் நாம் பவித்ராவை பாதுகாக்க வேண்டும்.. அதன் பின் அவள் என் மனைவியாகி விடுவாள்..."

ராம்குமாரின் கோபம் மெல்லக் குறைந்தது. கவலை வந்தது.

''என் மாப்பிள்ளை... சேலத்திற்கு கூட்டி வந்து விடவா?''

''அந்த ராஸ்கல் அங்கும் வருவான்...''

''நான் அவனைக் கொன்று குடலை உருவி மாலை போடுவேன்.''

''உனக்காகச் சாகிறேன்னு உங்கள் தங்கையிடம் சொல்லி விட்டு அவன் சாவான். ஏற்கனவே அரைப் பைத்தியமாக மாறியிருக்கும் உங்கள் தங்கை முழுப் பைத்தியமாக மாறுவாள்... தேவையா?''

''வேறு என்ன செய்யலாம் மாப்பிள்ளை...? எங்கள் சொந்தக்காரர்கள் ஊர்களில் ஏதாவது ஒன்றிற்கு அவளை அனுப்பி வைக்கலாமா?''

''நடந்து கொண்டிருக்கும் விவகாரத்தில் பவித்ராவின் பங்கு எதுவுமேயில்லை. அவள் அப்பாவி. இது உங்கள் சொந்தக்காரர்களுக்கு தெரியுமா? இல்லை புரிந்து கொள்ளத்தான் அவர்கள் முயற்சி செய்வார்களா? கண், காது, மூக்கு வைத்து செய்தியை ஒளிபரப்பி விடுவார்கள். தேவையில்லாம பவித்ராவின் கேரக்டர் ஸ்பாயில் ஆகிவிடும்...'' அஜய் எடுத்துக் கூறினான்.

''ஆமாம்.. நீங்கள் சொல்வதும் சரிதான். இது எனக்குத் தோன்றவில்லையே... என்ன செய்யலாம் மாப்பிள்ளை..'' ராம்குமார் கேட்டான்.

''இப்போது அந்த ராஸ்கல் மீது நாம் கை வைக்கக் கூடாது. பவித்ராவை அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டும். அதற்கு முன்னால் திருமணம் நின்று போய் விட்டதாகவே அவள் நம்ப வேண்டும்.''



''என்ன மாப்பிள்ளை... நல்ல காரியம் நடக்கப் போகும்போது அச்சானியமாய் பேசுகிறீர்கள். திருமணம் நடக்கும் மாப்பிள்ளை...''

''பதற வேண்டாம் ராம்குமார்... குறித்த நாளில் திருமணம் நடக்கும். அதில் எந்த மாற்றமும் இல்லை... எந்த அயோக்கியனாலும் அதை நிறுத்த முடியாது. நிறுத்தவிட மாட்டேன். கவலைப்படாதீர்கள்.''

''நன்றி மாப்பிள்ளை... ரொம்ப நன்றி. உங்கள் இடத்தில் வேறு ஒருவர் இருந்திருந்தால் என் தங்கையைத்தான் சந்தேகப்பட்டிருப்பார்கள். நீங்கள் அப்படிச் செய்ய வில்லை..'' ராம்குமாரின் நாத்தழுதழுத்தது. அவன் மூக்கை உறிஞ்சுவது போனில் கேட்டது.

''பாருங்கள் ராம்குமார். பவித்ராவை எனக்குப் பிடித்திருப்பதால் இந்த நிலையை நான் எடுக்கவில்லை. அவளை எனக்குப் புரிந்தும் இருக்கிறது. நல்ல மன முடைய பெண். கொடுக்காத வாக்குறுதிக்காக அலை பாய்கிறாள். அவள் மனதில் நான்தான் இருக்கிறேன். அது எனக்குத் தெளிவாகத் தெரியும். அதனால்தான் இந்த ரிஸ்க்கை எடுக்கிறேன். நீங்களும் ஒத்துழைத்தால்தான் நான் நினைத்ததைச் செயல்படுத்த முடியும். ஒத்துழைப் பீர்கள் தானே?''

''என்ன மாப்பிள்ளை இப்படிக் கேட்டு விட்டீர்கள்? ஆணையிடுங்கள், நிறைவேற்றுகிறேன். இனி எனக்கு வேறு என்ன வேலை?''

''நல்லது ராம்குமார். நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். நாளைக்கு முதல் வேலையாய் தஞ்சாவூர் போக வேண்டும். போய்... உங்கள் தங்கையிடம் நான் ஏதோ

காரணம் சொல்லி தட்டிக் கழித்து திருமணத்தை நிறுத்தி விட்டேன்னு என் மேல் கோபமாய் பேச வேண்டும். மனம் கலங்கியிருக்கும் உங்கள் தங்கையை ஓய்வெடுக்க உடனடியாக கொடைக்கானலுக்கு அனுப்பி வைத்து விடுங்கள்..."

"தனியாகவா...?"

"துணைக்கு பவித்ராவின் ரூம் மேட் ஜூலியட்டை அனுப்புங்கள்..."

"அந்தப் பெண்ணிடம்..."

"நான் பேசிவிட்டேன். ஒன்று தெரியுமா ராம்குமார்? இவ்வளவு விசயங்களும் ஜூலியட் சொல்லித்தான் எனக்குத் தெரிய வந்தது."

"ஆபிஸ் வேலையை ரிசைன் பண்ணி விடச் சொல்லவா?"

"அவன் சுதாரித்து விடுவான்... இப்போதைக்கு மெடிகல் லீவ் கொடுக்கச் சொல்லுங்கள். ஒரு மாதம் லீவ் போடட்டும்..."

"கொடைக்கானலில் அவர்கள் தங்க..."

"என் வீடு இருக்கிறது. வீட்டில் துணைக்கு ஒரு குடும்பமே இருக்கும். கவலை வேண்டாம். போலீஸ் புரடக்‌ஷனே ஏற்பாடு செய்து விடுகிறேன்... என் கண் காணிப்பை மீறி ஒரு எ.. எறும்புகூட... பவித்ராவை நெருங்க முடியாது. நான் பார்த்துக் கொள்கிறேன்... அப் புறம் ஒரு விசயம் ராம்குமார்... இவை எதுவுமே உங்கள் வீட்டாருக்கும், என் வீட்டாருக்கும் தெரியக்கூடாது... உங்கள் மனைவியிடம் கூடச் சொல்ல வேண்டாம்..."



"நிச்சயமாய் சொல்ல மாட்டேன். நீங்கள் இவ்வளவு தூரம் யோசித்துச் செயல்படும்போது நானும் யோசித் துத்தான் ஸ்டெப் எடுத்து வைப்பேன். கவலையில்லாமல் இருங்கள். நைட்டே நான் தஞ்சாவூர் கிளம்பி விடு கிறேன்... அப்புறம் அவர்கள் கொடைக்கானல் போக..."

"கார் அனுப்பி வைக்கிறேன். நீங்களும் கூடப் போய் விட்டு சேலம் போவது நல்லது."

"அதுதான் சரி. எனக்கும் நிம்மதியாய் இருக்கும்."

"ஓ.கே. ராம்குமார். நான் இன்னும் சில வேலைகள் செய்ய வேண்டி இருக்கிறது... வைத்து விடவா... பை."

அடுத்து அஜய்... ஆதவனுக்கு போன் பண்ணினான். எடுத்துப் பேசியவன் அஜய் சொல்லச் சொல்ல முகம் மாறினான்.

"வாட்... யார்... சுகுமாரன்கிறது அவன் பெயரா? ... ம்... ம்... சாந்தி... ஓ.கே... நான் பார்த்துக் கொள்கிறேன்.. இப்போதே நடேசனுக்கு போன் பண்ணுகிறேன்."

அஜய் போனைத் துண்டித்ததும் ஆதவன் நடேசனுக்கு போன் பண்ணினான்.

"நடேசன்.. திஸ் இஸ் வெரி அர்ஜன்ட். நம் ஆபிஸில் பவித்ரா வொர்க் பண்ணும் அதே செக்சனில் வேலை பார்க் கும் சுகுமாரன், சாந்தி என்ற இரண்டு பேரின் முழு ஜாதக மும் காலையில் என் டேபிளில் இருக்க வேண்டும்..."

"ஜாதகம் என்றால்... அவர்களைப் பற்றிய சொந்த விவரங்களா?"

"ஆமாம்.. அவர்களைப் பற்றி அக்கம் பக்கத்து வீடு களில் விசாரியுங்கள். ஆபிஸில் உள்ளவர்களிடம் விசாரி யுங்கள். ஐ நீட் ஃபுல் டீடெயில்ஸ் எபௌட் தெம்."

"நாளைக் காலையில் அது உங்கள் கையில் இருக்கும் சார்.." நடேசன் உறுதி கூறினான். அப்போதே செயல்பட ஆரம்பித்தான்.

அஜய் கொடைக்கானல் வீட்டிற்குப் போன் செய்தான். அங்கிருந்த அவுட் ஹவுஸில் குடியிருந்த மாடசாமி போனை எடுத்தான்.

"அலோ... நான் மாடசாமி பேசறேங்க... நீங்க யாரு பேசறது...?"

"மாடசாமி.. நான் அஜய் பேசுகிறேன்."

"ஆத்தி... கலெக்டர் ஐயாங்களா? என்னங்கய்யா... இந்த நேரத்தில் பேசறீங்க?"

"மாடசாமி... நான் கல்யாணம் பண்ணிக்கப் போற பெண்ணும் அதன் தோழியும் கொடைக்கானலில் நம்ம வீட்டில் தங்கியிருக்க நாளை வருவார்கள்..."

"உங்களுக்குக் கல்யாணமா? எங்ககிட்ட சொல்லவே யில்லையே ஐயா..."

"அதுதான் இப்போது சொல்லி விட்டேனே மாடசாமி..."

"எப்போக் கல்யாணம் ஐயா?"

"இன்னும் பதினெட்டு நாள்கள்தான் இருக்கு."

"கல்யாணத்தை இவ்வளவு கிட்டக்க வைத்துக்கிட்டா கல்யாணப் பொண்ணு இங்கே வருது? கல்யாணத்துக்குப் பின்னாலே ஜோடியா நீங்கள் ரெண்டு பேரும் வந்து தங் கணும். நாலும் என் பொண்டாட்டியும் ஆக்கிப் போட ணும். அதை விட்டுவிட்டு..."

"அவளுக்கு உடம்பு சரியில்லை மாடசாமி... கல் யாணத்தைத் தள்ளிப் போட முடியாத சூழ்நிலை...



அதனால் ஓய்வெடுக்க வருகிறாள்... அப்புறம் ஒரு விஷயம் மாடசாமி. கல்யாணப் பெண்ணுக்கு உடல் நிலை சரியில்லைன்னு சொந்த பந்தங்களுக்குத் தெரிய வேண்டாம். என்ன புரிகிறதா...?"

"அப்பா, அம்மாவுக்குச் சொல்லக்கூடாது. அவ்வளவு தானே. சரிங்க ஐயா."

"நாளை அவளையும், அவள் தோழியையும் அவ ளுடைய அண்ணன் கூட்டி வருவார். பார்த்துக் கவனித்து அனுப்பு. பேங்கில் பணம் போட்டு விடுகிறேன். செல வுக்கு எடுத்துக் கொள்..."

"அதுக்கென்ன ஐயா."

"கல்யாணம் பற்றி அவளிடம் எதுவும் பேச வேண் டாம் மாடசாமி. உடம்பு சரியில்லை கல்யாணம் வேண் டாம் என்று பிடிவாதத்திக் கொண்டிருக்கிறாள். கல்யாணம் குறித்த தேதியில் நடக்கும்ன்னு அவளுக்குத் தெரியாது..."

"அடக்கடவுளே... இப்படியும் ஒரு நல்ல குணமான குணவதி உலகத்திலும் இருக்குமா? கலெக்டர் மாப் பிள்ளை ஊர்பட்ட சொத்து... உடம்பு சரியில்லைன் னாலும் மறைச்சுக் கட்டிக்கிற பொம்பளைக இருக்கிற உலகத்திலே.. கல்யாணத்தையே நிறுத்தச் சொல்ற இந்த மாதிரிப் பொண்ணை கையெடுத்துக் கும்பிடணும்ங் கய்யா... நீங்க கொடுத்து வைத்தவங்க..."

"என்னத்தைக் காடுத்து வைத்தேன்?" என்று அலுத் துக் கொண்டே போனைக் கீழே வைத்த அஜய்க்கு அயர் வாக இருந்தது.

ஊர் உலகத்தில் இப்படித்தான் கல்யாணம் பண்ணிக் கொள்கிறார்களா? என்று எரிச்சலுறும்போதே பவித்ராவின்

முகம் மனக் கண்ணில் தோன்றி அவனது அயர்வையும், எரிச்சலையும் விரட்டியடித்தது.

'ஸாரி' சொல்லி அறிமுகமற்ற பார்வை பார்த்தவள், 'பிடித்திருக்கிறது' என்று முகம் சிவக்க சொல்லிவிட்டு அவன் முகத்தின் மேல் முந்தானை உராய உள்ளே ஓடினாளே... அவளை எப்படி அவனால் கைவிட முடியும்?

ஊரறிய தாலிகட்டி கைபிடிக்கத்தான் முடியும்.

## 13



பவித்ரா எழுந்ததும் அவசரமாய் மணி பார்த்தாள்.

"நேரம் ஆகவில்லை. வா சாப்பிடப் போகலாம்" ஜூலி அமைதியாகக் கூறினாள்.

பவித்ராவின் பார்வை செல்போனின் மேல் படிந்தது. அதிலிருந்த சிம்கார்டை ஜூலியட் அப்புறப்படுத்தியிருந்தாள். அதை அறியாமல் பயத்துடன் அதைப் பார்த்து நிற்கும் பவித்ராவைப் பார்த்து ஜூலியின் மனதில் பரிதாபம் எழுந்தது.

"போனெல்லாம் வரவில்லை. அதுவும் நீ ஒரு முடிவை எடுத்து அஜய்யிடமும் சொல்லி விட்டாயே... அப்புறம் என்ன கவலை... வா..." என்று அழைத்தாள்.



பவித்ராவின் நெஞ்சில் துயரம் மண்டியது. அஜய்யிடம் விட்டுவிடச் சொல்லி விட்டாளே... அவனும் சரியென்று சொல்லி விட்டானே...

"எனக்குப் பசியில்லை ஜூலி... நீ போய் சாப்பிடு."

"பட்டினி கிடந்தால் எல்லாம் சரியாகி விடுமா? பைத்தியம்."

"இனி சாப்பிட்டு என்ன பயன்?"

"சாப்பிடாமல் இருந்தாலும் ஒரு பயனில்லை வா..." அதட்டி அழைத்துக் கொண்டு போய் தோழியை சாப்பிட வைத்தாள் ஜூலி.

இரவு தூக்க மாத்திரை ஒன்றை எடுத்துக் கொடுத்து, "போட்டுக் கொள்..." என்றாள் ஜூலியட்.

"எதற்காக ஜூலி..."

"நிம்மதியான உறக்கத்திற்காக.. அது இப்போது உனக்கு மிகவும் அவசியம்."

"உறக்கம் வரும்... நிம்மதி? அது வருமா...?"

"வரும்... நீ நினைத்தாலும் நினைக்காவிட்டாலும் நிச்சயம் வரும்..."

குழந்தை போல் தோழியின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து மாத்திரை சாப்பிட்டு விட்டு உறங்கி விட்டாள் பவித்ரா.

மறுநாள் செய்ய வேண்டியவற்றை யோசித்துக் கொண்டே கண் அயர்ந்து விட்டாள் ஜூலியட் விடிந்தும் விடியாமலும் இருந்தபோது.. வாசல் கதவு தட்டப்பட்டது. எழுந்து திறந்தாள். வாட்ச்மேன் நின்றிருந்தார்.

"பவித்ரம்மாவின் அண்ணன் வந்திருக்கிறாம்மா..."

பவித்ராவை எழுப்பினாள் ஜூலியட்.

''பவித்ரா... பவித்ரா... எழுந்திரு.. உன் அண்ணன் வந்திருக்காராம்...''

பவித்ரா வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். மலங்க மலங்க விழித்தாள்.

''அண்ணனா... இங்கேயா... நிஜமாகவா...'' தந்தியடித்தாள்.

''ஆமாம்.. வா போய் பேசலாம்...''

எழுந்தவள் தள்ளாடினாள். ஜூலியட் தோள் பற்றி நிறுத்தினாள்.

''நைட் மாத்திரை போட்டாயில்லையா... அதுதான் போய் முகம் கழுவி வா.''

இருவரும் கீழே இறங்கி வந்தார்கள். வாசல் கேட்டின் உள் பக்கமாய் ராம்குமார் நின்றிருந்தான். பவித்ரா பதட்டமாய் அவனருகே சென்றாள்.

''என்னங்கண்ணா... அவசரமாய் புறப்பட்டு வந்திருக்கீங்க...'

''வர வேண்டியதாய் போய் விட்டது... பவித்ரா... உன் கல்யாணம் நின்று விட்டதம்மா. அந்த அஜய்... எதையோ பொய்யாய் காரணம் சொல்லி தட்டிக் கழித்து விட்டார். வீட்டில் அப்பாம்மா உடைந்து விட்டார்கள்.''

பவித்ரா உதடு கடித்து துக்கத்தை அடக்கிக் கொண்டாள். கண்ணீர் வழிய ஆரம்பித்தது. ஜூலி நாடகத்தின் கதா பாத்திரங்களில் அவளும் ஒன்று என்பதால் அமைதியாய் நடப்பதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்னால்தானே இந்தத் துன்பம்'' குற்ற உணர்வில் தவித்தாள் பவித்ரா.



''என்னம்மா அழுகிறாயா? அதற்காகத்தான் கிளம்பி வந்தேன்.''

புரியாமல் தமையனை ஏறிட்டுப் பார்த்தாள் பவித்ரா.

''என்னம்மா பார்க்கிற... அண்ணன் ஏன் இப்படிச் சொல்கிறான்னு புரியலையா? இங்கேயிருந்தால் உனக்கு மனம் ஆறாது பவித்ரா...''

''அதனால்...?''

''என் நண்பர் ஒருவரின் பங்களா தேக்கடியில் இருக்கிறது. அங்கே போய் கொஞ்ச நாள் இருந்து விட்டு வாம்மா. உனக்கு மனமாறுதலா இருக்கும்.''

''அண்ணா... நான் கவர்ன்மென்ட் சர்வன்ட்.''

''அதனால் என்னம்மா... உடம்பு சரியில்லையென்றால் என்ன பண்ணுவது? மனது சரியில்லாமல் நீ எப்படி வேலை பார்க்க முடியும்?''

'உண்மைதானே' பவித்ராவின் உடல் குலுங்கியது. தினமும் சுகுமாரனையும் சாந்தியையும் சந்திக்க வேண்டுமே. முடியுமா?.. முதலில் இன்று ஆபிஸ் போய் வர முடியுமா? அண்ணன் சொன்னது போல கொஞ்ச நாள் லீவ் போட்டு விட்டு தேக்கடி போய் தங்கி வந்தால் என்ன? அஜய்யை இழந்த மனவலி அப்போதாவது மறையாதா? அவனை மறக்க முடியாதா...?

''சரி... அண்ணா... எத்தனை நாள் லீவ் போட வேண்டும்?''

''ஒரு மாதம் மெடிகல் லீவ் போட்டு விடு. நான் எம்.சி. வாங்கித் தருகிறேன்.''

''சம்பளமில்லாத லீவ்தான் எடுக்க முடியும்.''

"பரவாயில்லை... நீ ரெடியாய் இரு. நான் ஒன்பது மணிவாக்கில் எம்.சி.யுடன் வருகிறேன்."

"நீங்கள் எதற்கு வீணாய் அலைய வேண்டும்?"

"இந்த நிலையில் உன்னைத் தனியாய் விட முடியாதும்மா."

அவன் ஒன்றை நினைத்துக் கூற அவளும் ஒத்துக் கொண்டாள். பவித்ராவை முன்னால் போக விட்டுப் பின் தங்கிய ஜூலியட், ராம்குமாரிடம்,

"கொடைக்கானல்தானே போக வேண்டும். தேக்கடியென்று ஏன் மாற்றிச் சொன்னீர்கள்?" என்று வினவினாள்.

"அஜய்தான் மாற்றிச் சொல்லச் சொன்னார். தான் எங்கே போகப் போகிறோம்னு பவித்ராவுக்கு தெரியக் கூடாதென்றார்."

"அதுதான் சரி.. இவள் அந்தச் சந்திரிடம் உளருவாள்."

"ஏம்மா.. அவர்களை ஒன்றும் செய்ய முடியாதா?"

"முடியும் சார்... இப்போது பவித்ராவின் கல்யாணம் தானே முக்கியம்?"

"ஆமாமாம்... நான் வீட்டில் சென்னைக்கு ஒரு பிரண்டின் வீட்டு விசேஷத்திற்குப் போவதாகச் சொல்லி விட்டுக் கிளம்பி வந்திருக்கிறேன். முதலில் உங்கள் இருவரையும் பத்திரமாக கொடைக்கானல் கொண்டு போய் சேர்க்க வேண்டும். அங்கு பாதுகாப்பு சரியாக இருக்கிறதா என்று எனக்கு திருப்தியான பின்பு நான் சேலத்திற்குத் திரும்ப வேண்டும். அம்மா ஜூலி... நீ யார் பெற்ற பெண்ணோ? எங்கள் கூடப் பிறந்த பிறப்பு மாதிரி என் தங்கையைக் காப்பாற்ற துடிக்கிறாயே. இந்த நன்றிக் கடனை எப்படிக் கழிப்பேன்?"



ராம்குமார் கண்களில் நீர் மல்கக் கை கூப்பினான்.

"இது என் கடமை சார். என் பிரண்ட் ஒரு பாவமும் அறியாதவள். அவளுக்கு கனவிலும் நினைத்துப் பார்த்திராத சிக்கல் வந்திருக்கிறது. அதுவும் என் கண் முன்னாலே உருவாகியிருக்கிறது. அவளைக் காப்பாற்றா விட்டால் நான் மனுஷியா?"

"இந்தக் காலத்திலும் உன்னைப் போன்ற ஜீவன்கள் இருப்பதால்தான் மழை பெய்கிறது. நான் இப்போது என் ரூமிற்குப் போகிறேன். ஒன்பது மணிக்கு வருகிறேன்."

"ஹோட்டலில் ரூம் போட்டிருக்கிறீர்களா?"

"நான் போடவில்லையம்மா. மாப்பிள்ளை எனக்காக ரூம் புக் பண்ணச் சொல்லி இருந்தாராம். பஸ்ஸை விட்டு இறங்கும்போதே எனக்காக கார் காத்துக் கொண்டு இருந்தது. மாப்பிள்ளையின் ஏற்பாடுதான் எல்லாம்..."

"ம்ம்... இப்படி ஒரு கணவர் கிடைக்க பவித்ரா கொடுத்து வைத்திருக்கிறாள்."

"கொடுத்து வைத்திருக்கிறாளான்னுதான் இப்போது தெரியவில்லையே... யார் கண் பட்டதோ.. சிரித்துக் கொண்டே கிளம்பி வந்த என் தங்கை அழுது கொண்டு நிற்கிறாள்."

"எல்லாம் சரியாகி விடும் கவலைப்படாதீர்கள்."

"நீயும் கிளம்ப வேண்டும் ஜூலி. தெரியுமில்லையா?"

"தெரியும் சார். நீங்கள் கேட்டுக் கொண்டதால் கிளம்பி வரப் போவதாக பவித்ராவிடம் கூறப் போகிறேன். நீங்களும் அப்படியே சொல்லுங்கள்."

"சரியம்மா. தயாராக இருங்கள். நான் வருகிறேன்."

ராம்குமார் சென்று விட்டான். இப்போது நன்றாக விடிந்திருந்தது. ஜூலியட் தனக்கும், பவித்ராவிற்கும்

காபி தம்ளர்களை வாங்கிக் கொண்டு மாடிக்குப் போனாள். அறையினுள் தரையில் அமர்ந்து சுவரில் சாய்ந்து உட்கார்ந்து முழங்கால்களைக் கைகளால் கட்டி அதில் முகம் புதைத்திருந்த பவித்ராவின் அருகே அமர்ந்தாள். பவித்ரா அழுது கொண்டிருந்தாள். ஜூலியட் அவள் கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

"காபி குடி பவித்ரா... கொஞ்சம் தெம்பாக இருக்கும்." வற்புறுத்தி முடிக்க வைத்தாள் ஜூலியட்.

"கடைசியில் கல்யாணம் நின்று விட்டது..." பவித்ரா முணுமுணுத்தாள்.

"நீ அதைத்தானே விரும்பினாய்..." ஜூலியட் குத்திக் காட்டினாள்.

"விருப்பம்...! ஜூலி... என் விருப்பத்திற்கு இனி எந்த மதிப்பும் இல்லை. நான் இனி பூமிக்கு பாரம்தான்!" வெதும்பிய குரலில் கூறினாள் பவித்ரா.

"அதனால் பூமிக்கு ஒன்றும் குறைவு வராது எழுந்திரு. தெரிந்தே பாவம் செய்யும் பாவிகளைத் தாங்கும் பூமி மாதா உன்னைத் தாங்காமல் போய் விடுவார்களா? வா கிளம்பும் வேலையைப் பார்க்கலாம்..."

"ஜூலி.. உன்னைத் தொந்தரவு செய்வதாக நினைக்காதே..."

"என்னன்னு சொல்லுடி."

"நீயும் என்னுடன் தேக்கடிக்கு வாயேன்.. ப்ளீஸ்... நான் தனியாகப் போனால் என் மனமே என்னைக் கொன்று விடும் போல இருக்கு..." பவித்ரா விம்மினாள்.



"இதற்கு ஏன்டி அழுகிறாய்? வான்னு கூப்பிட்டால் போதாதா? உன் அண்ணனும் ரிக்வஸ்ட் பண்ணிக் கொண்டார். உன்னை இந்த நிலையில் தனியாக நான் அனுப்புவேனா? பேங்க் போய் லீவு போட்டு விட்டு வந்து விடுகிறேன். இப்போது துணிகளை அடுக்கலாம் வா..."

துணிகளை பெட்டிகளில் அடுக்கி முடித்து விட்டுக் குளித்துச் சாப்பிட்டு அவர்கள் கிளம்பும் போது மணி ஒன்பதாகி இருந்தது. ராம்குமார் வந்து விட்டான். ஜூலியட்டிடம் பவித்ராவிற்குத் தெரியாமல் ஒரு கவரைக் கொடுத்தான். உடைத்துப் பார்த்தாள். சிம் கார்டு இருந்தது.

"பவித்ரா.. உன் செல் போனைக் கொடு. பேங்கிற்கு ஒரு கால் பண்ணிக் கொள்கிறேன். என் போனில் சார்ஜ் இல்லை..."

பவித்ரா ராம்குமாரிடம் பேசிக் கொண்டே அவளது செல்போனைக் கொடுத்தாள். சற்றுத் தள்ளிச் சென்ற ஜூலியட் சிம் கார்டை பவித்ராவின் செல்போனில் பொருத்தினாள். ராம்குமார் அதை ஜாடையாய் கவனித்துக் கொண்டிருந்தான்.

"இந்தாப்பா உன் போன்..."

"பேசி விட்டாயா..?"

பவித்ரா போனை வாங்கிக் கைப்பையில் போட்டுக் கொண்டாள். ஜூலியட் நிம்மதியாய் உணர்ந்தாள். இனி போனில் டார்ச்சர் பண்ண முடியாது.

"அப்போ... நான் பேங்கிற்குக் கிளம்புகிறேன்."

''லீவ் போட மறந்து விடாதே ஜூலி.''

''மறப்பேனா? டோன்ட் வொர்ரி.. பை...''

பவித்ரா ஜூலியட்டிற்கு கை அசைத்து விட்டு ராம்குமாரைப் பார்த்தாள்.

''அண்ணா ஜூலியும் என்னுடன் வருகிறாள்.''

''நானும் அதைத்தான் நினைத்தேன்ம்மா... கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். நல்ல பெண் மாதிரித் தெரிகிறது. உனக்குத் துணையாக இருக்கும்.''

பேசிக் கொண்டே காரின் அருகே சென்றார்கள். டிரைவர் பின் பக்கக் கதவைத் திறந்து விட்டார்.

''யாருடைய கார் அண்ணா இது?'' பவித்ரா கேள்வியாய் நோக்கினாள்.

''என் பிரண்டுடையதும்மா. நீ மனம் சரியில்லாமல் இருக்கிறாய். பஸ், டிரெய்ன், ஆட்டோன்னு உன்னை அலைக்கழிக்க வேண்டாம்ன்னு நான்தான் ஏற்பாடு பண்ணினேன். ஆபிஸ் போய் லீவ் போட்டுவிட்டு இந்தக் காரிலேயே தேக்கடி போய் விடலாம்.''

''நீங்களும் வந்து விட்டுவிட்டு வருவீர்கள் தானே...''

''பின்னே? தனியாய் உங்களிருவரையும் அனுப்பு வேனா?''

முகம் வாட பவித்ரா காரில் ஏறிக் கொண்டாள். ராம் குமார் அருகில் அமர்ந்ததும் கார் கிளம்பியது.

அதே நேரம் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரான ஆதவனின் மேஜை மேல் சுகுமாரன், சாந்தி ஆகியோரின் விவரங்கள் அடங்கிய பைல் வந்து சேர்ந்தது.



# 14



நடேசன் வேகமாகச் செயல்பட்டிருந்தான். சுகுமாரனின் பக்கத்து வீட்டினர் பக்கத்து சீட்டினர் முதற்கொண்டு விசாரித்து தகவல்களைச் சேகரித்திருந்தான். சாந்தி பற்றியும் அப்படியே. ஆதவன் அவற்றைப் படிக்கப் படிக்க அவனது முகம் பல்வேறு உணர்வுகளுக்கு ஆட்பட்டு அவற்றைப் பிரதிபலித்தது. படித்து முடித்தவுடன் அஜய்க்கு போன் பண்ணினான்.

''சொல்லு ஆதவா... அவர்களைப் பற்றிய விவரங்கள் கிடைத்ததா?''

''கிடைத்தது அஜய். அந்த சுகுமாரன் பவித்ரா வேலையில் ஜாயின் பண்ணிய அன்றே அவள் என்ன ஜாதின்னு விசாரித்து இருக்கிறான்...''

''பவித்ரா மேல் இன்ட்ரஸ்டா?''

''நீ வேற.. பவித்ரா வேலையில் ஜாயின் பண்ணி ஒரு வருடம்தானே ஆகிறது? அவன் வேலையில் சேர்ந்து ஐந்து வருடம் ஆகிறது. வேலைக்கு வந்த முதல் நாளே இந்த ஆபிஸில் என் ஜாதியைச் சேர்ந்த பெண் யாரவது வேலை பார்க்கிறார்களா? என்றுதான் கேட்டானாம்.''

''மென்டலா..? ஏன் அப்படிக் கேட்டான்?''

"அந்தக் காலத்தில் பெண்ணுக்கு எவ்வளவு நகை போடுவார்கள். எவ்வளவு சீர்வரிசை செய்வார்கள். எவ்வளவு ரொக்கம் கொடுப்பாங்கன்னுதான் கேட்பாங்க. இப்போதெல்லாம். இவையெல்லாத்தையும் வாங்கிக் கிட்டு பெண் வேலைக்கும் போகணும்னு கேட்கிறாங்க... அதுவும் கவர்ன்மெண்ட் வேலையாக வேண்டுமாம்..."

"ஐ... ஸீ... அவன் கல்யாணத்திற்கு பெண் தேடியிருக்கிறான்."

"ஆமாம்... அவனுக்கு இரண்டு அக்காக்கள்... ஒரு தங்கை... சிறு வயதிலேயே அப்பா இறந்து விட்டாராம். அவனுடைய அம்மா வீட்டு வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றி இருக்கிறாங்க. அவனுடைய அக்கா, தங்கைகள் டெய்லரிங் தெரிந்தவர்களாம். துணி தைப்பார்களாம். இப்படி பெண்களின் சம்பாத்தியத்தில் படித்து வந்தவன்."

"அப்பேற்பட்டவன் அடுத்த பெண்களுக்கு டார்ச்சர் கொடுக்கிறானே..."

"அது விசித்திரம் அஜய். இந்தப் பெண் சாந்தி இருக்கிறாளே... இவள் மூன்று வருடங்களுக்கு முன் இங்கு வேலைக்கு வந்தவள். சுகுமாரனின் மேல் சாந்திக்கு காதலாம்."

"வாட்... இது என்ன புதுக்கதை சொல்கிறாய்?"

"கதைதான். எனக்கே இப்படியும் ஒரு பெண் இருப்பாளான்னு ஆச்சரியமாய் இருக்கிறது. இவள் இரண்டு வருடங்களுக்கு முன்னாலேயே தன் காதலைச் சுகுமாரனிடம் சொல்லியிருக்கிறாள். அதற்கு அவன் ஜாதிவிட்டு ஜாதி கலப்புத் திருமணம் செய்து கொண்டால் தன் அக்கா



தங்கைகளின் கல்யாணத்தில் பிரச்னை வரும்னு மறுத்திருக்கிறான். உடனே இந்தப் பெண் தன்னுடைய சேமிப்புப் பணம், நகையெல்லாவற்றையும் கொடுத்து அவன் அக்காக்களின் கல்யாணத்தை நடத்தச் சொல்லியிருக்கிறாள்."

"அடப்பாவமே.. அதையும் வாங்கிக் கொண்டு அந்தப் பெண்ணை ஏமாற்றத் துணிந்தானா அந்தப் பாவி?"

"ஏமாற இவள் ரெடியாக இருக்கும்போது ஏமாற்ற அவன் ஏன் யோசிக்கப் போகிறான்? சுகுமாரனின் அக்காக்களின் கல்யாணத்தில் இவள் ஓடி ஓடி வேலை செய்திருக்கிறாள். அக்காக்களின் கல்யாணம் முடியும் வரை இவளிடம் சுகுமாரனும் அவனது அம்மாவும் இழைந்து இழைந்து பேசியிருக்கிறார்கள். கல்யாணம் முடிந்தவுடன் கழட்டி விட்டு விட்டார்கள்."

"ஏன் ஆதவா... அந்தப் பெண் இவ்வளவு செய்திருக்கிறாள். கவர்ன்மெண்ட் சர்வண்ட்... அப்புறம் என்ன?"

"அஜய்... அந்த சுகுமாரனின் அம்மா கெட்டிக்காரப் பெண்மணியாம். இந்தப் பெண் சாந்தியின் வீட்டில் இவள்தான் மூத்தவளாம். இவளுக்கு அடுத்து இரண்டு தம்பிகள், இரண்டு தங்கைகள் படித்துக் கொண்டு இருக்கிறார்களாம். அப்பா சாதாரண மளிகைக் கடை கணக்குப் பிள்ளை. இவளது சம்பளம் குடும்பத்திற்கு என்றுமே தேவைப்படும் நிலைமையாம்."

"அப்புறம் எப்படி பண உதவி, நகை உதவியெல்லாம் செய்தாள்?"

"பணத்திற்கு லோன் போட்டிருக்கிறாள். நகை அவளுடைய பாட்டியுடையது. இவளது கல்யாணத்திற்கு என்று அவளது அம்மா கொடுத்தது."

''பேதைப் பெண்... இதற்காகவாவது அவன் மனம் இரங்கியிருக்கலாம்.''

''அவனுடைய அம்மாவின் துர்போதனையும் ஆலோசனையும் இல்லாமல் இருந்திருந்தால் ஒரு வேளை அவனுடைய மனம் இரங்கியிருக்கும். ஆனால் அந்த அம்மா கஷ்டப்பட்டவள். அவளுடைய நிலைமைக்கு சுகுமாரனின் வேலையும் சம்பளமும் மிகப் பெரிதாகத் தோன்றி விட்டது. அவளைப் பொறுத்தவரை சுகுமாரன் ஓர் தங்க முட்டை போடும் வாத்து. அவனுக்கு வசதியான கவர்ன்மெண்ட் வேலையும் சேர்த்துப் பார்க்கும் பெண்ணைக் கல்யாணம் பண்ணி வைத்து விட்டால் காலம் பூராவும் வீட்டைப் பார்த்துக் கொள்கிறேன் பேர் வழின்னு அவர்கள் நிழலில் காலம் தள்ளி விடலாம்.. மகள்களுக்கும் பிறந்த வீட்டுச் சீர் செய்யலாம்ன்னு பேராசை அந்தம்மாவிற்கு.''

''அப்புறம் ஏன் சாந்தியின் உதவியை வாங்க வைத்தாள்?''

''பறக்கிறதை நினைத்து இருக்கிறதை விட்டு விடக் கூடாதுன்னும் ஓர் கணக்கு. அத்தோடு அவன் நினைப்பின்படி பெண் அமைந்து விட்டால் அவளிடம் பணம் வாங்கி சாந்தி கொடுத்த பணம், நகைகளை திருப்பிக் கொடுத்து விடலாம்ன்னு மகனுக்கு ஐடியா கொடுத்திருக்கிறாள்.''

''நல்ல மகன்... நல்ல தாய்.. இப்படியிருந்தால் நாடு உருப்படும்.''

''அதைப் பற்றி அவர்களுக்கு என்ன கவலை. அவர்கள் வீடு உருப்பட வேண்டும் என்பது மட்டும்தான் அவர்களது கவலை. அவர்களது எதிர்பார்ப்பின்படி பவித்ரா அவர்கள் கண்ணிலும், கருத்திலும் பட்டு விட்டாள். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் பவித்ரா பற்றிய விவரங்களை சுகுமாரனுக்கு சாந்திதான் சொல்லியிருக்கிறாள். பவித்ராவுடன் அதிகம் நெருங்கிப் பழகியவள் சாந்திதான். எனவே சாந்தியின் வாயைக் கிளறி விவரங்களை அறிந்து இருக்கிறான். பவித்ராவின் அப்பா ரிட்டயர்டு சென்ட்ரல் கவர்ன்மெண்ட் எம்ப்ளாயி. அண்ணன் மட்டும்தான். அவரும் பெரிய டிபார்ட்மெண்ட் ஸ்டோர் ஓனர். சேலத்தில் பெரிய சொந்த வீடு. நிறைய நகை செய்து வைத்திருக்கிறார்கள். இவை போதாதா? சுகுமாரன் பவித்ராவின் மேல் குறி வைக்க?''

''சரி... ஹாஸ்பிடலில் விஷம் குடித்து சேர்ந்தது உண்மையா?''

''டிராமா பண்ணியிருக்கிறான். அந்த ஹாஸ்பிடலின் மெடிகல் ரிப்போர்ட்டையே நடேசன் வாங்கி வந்து விட்டான். விஷம் உடலில் கலக்கவில்லையாம். 'பேஷண்ட் பயத்தில் விஷத்தை சட்டையில் ஊற்றிக் கொண்டு குடித்து விட்டதாக பயந்து போய் மயங்கி விட்டார்'ன்னு அங்கிருந்த டாக்டர் சொன்னாராம். எப்படியிருக்கு கதை?''

''பயங்கரமாய் இருக்கு.''

''சாந்தி சுகுமாரனுக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று பயந்து விட்டாளாம். பவித்ராவை கல்யாணம் பண்ணிக் கொண்டால்தான் அவன் பிழைப்பான்னு அவளை தாயும், மகனும் நம்ப வைத்து விட்டனர். பவித்ரா காய்ச்சலுக்காக அந்த ஹாஸ்பிடல் போக சாந்திதான் பவித்ராவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சென்றிருக்கிறாள். பவித்ரா காய்ச்சல் வேகத்தில் பக்கத்திலிருப்பவளின் கையைப் பிடிப்பது போல் தடுமாறி விழுந்து சுகுமாரனின்

கையை ஆதாரவுக்குப் பிடித்திருக்கிறாள். இதைத்தான் வாக்குக் கொடுத்து விட்டாய்ன்னு சொல்லி உன் வருங் கால மனைவியை கலங்கடிக்கிறார்கள்..."

"இப்போது என்ன செய்யலாம் ஆதவா?"

"பவித்ராவிற்கு லீவ் சேங்ஷன் பண்ணும்படி அவர் செக்ஷன் இன்ஜார்ஜிடம் சொல்லியிருக்கிறேன். நீ முதலில் உன் வுட்பியை கடத்திக் கொண்டு போ."

"அவர்கள் இரண்டு பேரையும் என்ன செய்வது?"

"நான் பார்த்துக் கொள்கிறேன். நான் ஒரு மாவட்டக் கலெக்டர். என்னுடைய ஆபிஸிலேயே இப்படி விஷக் கிருமிகள் இருப்பதா? நான் நடவடிக்கை எடுக்கிறேன். இனி இது எங்கள் அலுவலகப் பிரச்னை."

"ஆதவா... ஒன் ரிக்வஸ்ட்."

"என்னடா?"

"முடிந்தால் அந்த சுகுமாரனுக்கும், சாந்திக்கும் திருமணம் நடத்தி வை."

"ஏன்டா உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது. தே ஆர் கிரிமினல்ஸ். அவர்களை பனிஷ் பண்ணுவதை விட்டுவிட்டு இப்படிச் சொல்கிறாயே."

"காரணமாகத்தான் சொல்கிறேன். சுகுமாரனைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதை விட வேறு ஒரு தண் டனை சாந்திக்கு வேண்டுமா என்ன? சாந்தியின் பொருளா தார நிலைமை பற்றி நீயே சொன்னாய். சுகுமாரனின் பேராசைக்கு இப்படி குடும்பச் சுமை நிறைந்த பெண்தான் மனைவியாக கிடைக்க வேண்டும். தவிர..."

"தவிர...?"



"ஆதவா... நடந்தவை எல்லாம் பொய் பித்தலாட்டம்ன்னு உனக்கும், எனக்கும் தான் தெரியும். பவித்ரா...? அவள் நான் சொன்னால் நம்புவாளா? அவளைத் திருமணம் செய்து கொள்வதற்காக நான் கதை சொல்கிறேன் என்று தான் நினைப்பாள். அவளது மனச்சிக்கலில் இருந்து... அவள் கொடுக்காத வாக்குறுதியில் இருந்து... அவளை வெளியே கொண்டு வர இது சிறந்த வழி."

"அட ஆமாம். நான் முயற்சி செய்கிறேன் அஜய்."

"முயற்சி வேண்டாம். முடிவே செய்."

"ஓ.கே. முடிவாகவே செய்கிறேன் போதுமா."

"அதையும் சீக்கிரம் செய் ஆதவா. என் கல்யாணத் திற்கு இன்னும் இரண்டு வாரங்கள்தான் இருக்கின்றன.. அதற்குள்..."

"என்னிடம் சொல்லி விட்டாயல்லவா? கவலையை விடு."

"தேங்க்ஸ் ஆதவா."

"எதற்குடா... முதுகில் ஒன்று வைத்து விடுவேன். படவா. இருந்திருந்து நீ என் ஆபீஸில் வேலை பார்க்கும் பெண்ணைக் காதலித்து வைத்தாய். அது நல்ல முறை யில் கல்யாணத்தில் முடிகின்றதே என்று சந்தோஷப்பட் டால்... இப்படி ஆகி விட்டது. இதைச் சரிப்படுத்துவது என் கடமை அஜய்."

நெகிழ்ச்சியுடன் போனை வைத்தான் அஜய். நெருக் கடியான நேரத்தில் உதவும் நட்பு கிடைக்க கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

தன் அலுவலக வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தான் அஜய். ராம்குமாரோ தங்கையை தஞ்சாவூரிலிருந்து கடத்தும் வேலையில் ஈடுபட்டிருந்தான்.

தஞ்சை கலெக்ட்ரேட் ஆபிஸ் முன்பாக போய் இறங்கியவுடன் பவித்ராவை தன்னருகேயே அழைத்துக் கொண்டு ராம்குமார் ஆபீஸிற்குள் நுழைந்தான்.

"எதற்கு அண்ணா... நீங்கள் காரிலேயே வெயிட் பண்ணுங்கள். நான் போய் வந்து விடுகிறேன்" பவித்ரா தடுத்துப் பார்த்தாள்.

சுகுமாரன் அண்ணன் முன்னிலையில் வந்து ஏதேனும் உளறி விடுவானோ என்ற பயம் அவளுக்கு. அண்ணன் தன்னைத் தவறாக நினைத்து விடக் கூடாதே என்ற கவலையும் சேர்ந்து கொண்டது.

"இல்லை பவித்ரா. நானும் கூட வருகிறேன். உனக்கு உடல்நிலை சரியில்லை." ராம்குமார் பிடிவாதமாக கூடச் சென்றான்.

அந்த சுகுமாரனின் முகரையைப் பார்த்து வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கொதிப்பு அவனுக்கு. நிச்சயம் அவன் தங்கையிடம் வாலாட்ட வருவான். அதை ஒட்ட நறுக்க அண்ணன் ஒருவன் இருக்கிறான் என்பதை காண்பித்து விட வேண்டாமா?

பவித்ராவும், ராம்குமாரும் அலுவலகப் படியேறினார்கள். பவித்ராவிற்காக காத்துக் கொண்டிருந்த சுகுமாரன் முப்பத்தியிரண்டு பற்களையும் காண்பித்தபடி பவித்ராவின் முன் வந்து நின்றான். பவித்ரா பயத்தோடு அண்ணனையும் சுகுமாரனையும் மாறி மாறிப் பார்த்தாள்.



# 15



முப்பத்தி இரண்டு பல்லையும் காட்டியபடி வந்த சுகுமாரனைப் பார்த்ததும் ஒரு பல்லைக்கூட விடாமல் உடைத்துவிடத் தோதாக பற்களை அவனே காட்டுகிறான். ஏன் விட வேண்டும்? உடைத்து விடலாம் என்று தான் ராம்குமார் மனதிற்குள் ஆத்திரப்பட்டான். ஆனால் அஜய்யின் எச்சரிக்கை நினைவில் வரவும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

சுகுமாரன், ராம்குமார் யார் என்று தெரியாதவனாய் பவித்ராவிடம் பேச முயல அவனை அறியாதவன் போல் ராம்குமார் பவித்ராவிடம் பேச ஆரம்பித்தான்.

"நம்ம ஊரில் பக்கத்து வீட்டுக்காரன் குப்பையை நம் வீட்டு முன்னால் கொட்டி வம்பிழுத்தான் பவித்ராம்மா. விட்டேன் பாரு ஓர் அறை. வாயிலிருந்த பல்லெல்லாம் உதிர்ந்து போய் வாய் கிழிந்து ரத்தம் கொட்டோ கொட்டுன்னு கொட்டியது. ஒழுங்கா இருடா நாயே.. இல்லைன்னா கையைக் காலை முறித்து விடுவேன்னு சத்தம் போட்டேன். அன்றைக்கு அடங்கினவன் தான்... அதற்கப்புறம் வாயைத் திறப்பதே இல்லை. இன்னும் நாலைந்து நாதாரிப் பயல்கள் இருக்கிறான்கள். தோலை உரிக்க நேரம்

பார்த்துக் கொண்டிருக்கிறேன்.. சார்.. யாரும்மா? தெரிந்தவரா?"

சுகுமாரன் பயந்து போய் பற்களைக் காட்டாமல் வாயை இறுக மூடிக் கொண்டான். ஏதோ வேலையிருப்பது போல் அங்கிருந்து அவசரமாய் அகன்றான். அதைக் கண்ட பவித்ராவின் முகத்தில் எல்லையற்ற நிம்மதி சூழ்ந்தது. ஜாடையாய் தங்கையின் முகத்தைக் கவனித்த ராம்குமாருக்கு உண்மையிலேயே அந்த சுகுமாரனின் தோலை உரிக்க வேண்டும் என்ற அவா பிறந்தது.

பவித்ரா தன் செக்ஷன் ஹெட் கிளார்க்கிடம் சென்றாள். மெடிகல் லீவ் லெட்டரையும் டாக்டர் சர்டிபிகேட்டையும் கொடுத்தாள். அதற்காகவே காத்திருந்தவர் உடனடியாய் அனுமதி வழங்கிக் கையொப்பமிட்டார்.

"கிளம்பும்மா..."

"அதற்குள்ளாகவா சார்?" பவித்ராவின் முகத்தில் வியப்புக்குறி. அவளுக்கென்ன தெரியும். அவள் வருவதற்கு முன்னரே அவள் லீவ் லெட்டரோடு வருவாள் என்ற விவரம் அவருக்குத் தெரியும் என்பது.

"ஆமாம்மா.. உடம்பு சரியில்லாத பெண். சீக்கிரமாய் போ." அவளை அனுப்புவதில் அவர் குறியாய் இருக்க அங்கே வந்து நின்றாள் சாந்தி.

"என்ன பவித்ரா. லீவ் போட்டிருக்கிறாயா?"

"ம்ம்." பவித்ராவுக்கு பதில் சொல்ல விருப்பமில்லை. தங்கையின் முகமாறுதலைக் கவனித்த ராம்குமாருக்கு அவள் யார் என்று தெரிந்து விட்டது. சாந்தியைக் கூர்ந்து கவனித்தான் அவன். ராம்குமார் தன்னைப் பார்ப்பதை உணர்ந்த சாந்திக்கு தர்மசங்கடமாய் இருந்திருக்க



வேண்டும். அவனைப் பார்ப்பதைத் தவிர்த்து பவித்ராவிடம் விடாமல் மீண்டும் கேள்வி கேட்டாள். சுகுமாரனுக்கு அவள் விவரம் சொல்லியாக வேண்டுமே. சுகுமாரன் கேட்டுக் கொண்டதன் பேரில்தான் அவள் பவித்ராவிடம் வந்திருந்தாள்.

"லீவ் போட்டிருக்கிறாயா பவித்ரா?" சாந்தி வினவினாள்.

"ம்ம்..." பவித்ரா அங்கிருந்து நகர முயன்றாள்.

"எத்தனை நாள் லீவ்?" சாந்தி தூண்டித் துருவினாள்.

"ஒன் மன்த்..." பவித்ரா எங்கோ பார்த்துக் கொண்டு கூறினாள்.

"திரும்ப வந்து விடுவாயில்லை...?" சாந்தி கேட்டாள்.

"வந்துதானே ஆகவேண்டும்" பவித்ரா விரக்தியுடன் சொன்னாள்.

"ஊருக்குப் போகிறாயா?"

"ஆமாம்."

"சேலத்திற்கா...?"

"இல்லை.. தேக்கடிக்கு..."

"அங்கே யார் இருக்கிறார்கள்?"

சாந்தியின் கேள்விகளைச் செவிமடுத்துக் கொண்டிருந்த ராம்குமார் ஆத்திரத்தில் இருந்தான். எவ்வளவு தெனாவெட்டாய் விசாரிக்கிறாள் இந்தப் பெண்? இன்னும் விட்டால் கேள்வி கேட்டே பவித்ராவை மயங்க வைத்து விடுவாள் போலத் தோன்றவும்,

"எம்மா... இதையெல்லாம் கேட்டு உனக்கு என்ன ஆகப் போகிறது?" என்று பட்டென்று சாந்தியிடமே நேரடியாய் கேட்டான்.

இதை எதிர்பார்க்காத சாந்தி தடுமாற்றத்துடன் உதடு கடித்துக் கொண்டாள். சுகுமாரனின் கெஞ்சிய முகத் தோற்றம் நினைவில் வர தன்னைத் திடப்படுத்திக் கொண்டு கூறினாள்.

''நான் பவித்ராவின் பெஸ்ட் பிரண்ட் சார்.''

''என்னம்மா சொன்னே...? பெஸ்...ட் பிரண்டா? யார்... நீயா?'' ராம்குமாரின் கேள்வியில் இருந்த கொதிப்பு புரியாத சாந்தி.

''ஆமாம் சார்... அதனால்தான் விசாரித்தேன்..'' என்றாள்.

''அப்படியாம்மா... சரி கேட்டுக் கொள். எந்த எடுபட்ட நாய் கண் பட்டதோ தெரியவில்லை. என் தங்கையின் கல்யாணம் நின்று போய் விட்டது. எந்த நாசமாய் போகிற பாவிகள் வயிறு எரிந்தார்களோ தெரியவில்லை. என் தங்கைக்கு இந்த அதிர்ச்சியில் உடம்பு சரியில்லாமல் போய்விட்டது. அதனால் அவள் மனமும், உடலும் சரியாகும் வரை தேக்கடியில் என் சொந்தக்காரர் வீட்டில் ரெஸ்ட் எடுக்கட்டும்ன்னு அனுப்பி வைக்கிறோம்... இந்த விவரம் போதுமாம்மா... இல்லை இன்னும் கொஞ்சம் வேண்டுமாம்மா...'' பல்லை நறநறவென்று கடித்துக் கொண்டு வார்த்தைகளைத் துப்பினான் ராம்குமார்.

''என்னது? கல்யாணம் நின்று போய்விட்டதா?'' சாந்தி யோசனையுடன் பவித்ராவைப் பார்த்தாள். பவித்ராவின் சோர்ந்த தோற்றத்தைப் பார்த்ததும் என்ன நினைத்தாளோ அதற்கு மேல் வார்த்தை வளர்க்காமல் போய் விட்டாள். அவள் பின்னாலேயே ராம்குமாரின் பார்வை தொடர்ந்தது. சீட்டிற்குப் போகாமல் அவள் அலுவலகத்திற்கு வெளியே செல்வதையும், அவசரமாய் சுகுமாரன் அவளைத்



தொடர்ந்து செல்வதையும் கவனித்த ராம்குமார் எத்தகைய சூழலில் தங்கை சிக்கியிருக்கிறாள் என்பதை நேரடியாய் அறிந்து கொண்டான்.

''போகலாமா பவித்ரா'' ராம்குமார் வினவ பவித்ரா தலை அசைத்தாள்.

இருவரும் காரில் ஏறிக் கிளம்புவதை அங்கேயே சுற்றிக் கொண்டு சுகுமாரன் கண்காணித்துக் கொண்டிருப்பது இருவருக்குமே தெரிந்தது.

கார் கிளம்பிப் போனதும் சாந்தியின் அருகே வந்த ராம்குமார் ''நிச்சயமாய் தெரியுமா சாந்தி.. பவித்ராவின் கல்யாணம் நின்று போய் விட்டதா?'' என்று ஆவலாய் விசாரித்தான்.

அவனது ஆவலை வெறுப்புடன் கவனித்த சாந்தி முகம் திருப்பிக் கொண்டாள். அவள் கண்கள் கலங்கின. சுகுமாரன் அதை உணர்ந்து கொண்டவனாய் ஜாக்கிரதை ஆனான். முகத்தை சோகமாக வைத்துக் கொண்டான். வேண்டுமென்றே மூக்கை உறிஞ்சினான்.

''பாவம் அந்தப் பெண்... எங்கேயிருந்தாலும் நன்றாக வாழ்கன்னு தான் மனசில் நினைச்சேன்...'' சாந்தியை ஓரக்கண்ணால் பார்த்தான்.

''நிஜமாகவா சுகுமார்... நீங்கள் அவளை மறக்க நினைத்தீர்களா?'' சாந்தி அவசரமாய் வினவினாள். அவள் முகம் மலர்ந்து விட்டது.

''என்னால் எப்படி அவளை மறக்க முடியும் சாந்தி? விஷப் பாட்டிலை என் வீட்டிலும், ஆபிஸிலும் எந்த நேரமானாலும் குடிக்க ரெடியாய் வைத்திருக்கிறேனே...'' சுகுமாரன் தேவதாஸ் போல் பார்த்தான்.

சாந்தியின் முகம் பயத்தில் வெளுத்து விட்டது.

"என்ன பிடிவாதம் இது சுகுமார்? வாழ்க்கை வாழ்வதற்காகத்தான். பவித்ரா மட்டும்தான் இந்த உலகில் இருக்கிறாளா?"

சாந்தியின் கேள்வியில் 'நான் இல்லையா?' என்ற ஏக்கம் தொனித்தது. சுகுமாரனுக்கா அது தெரியாது?

'உன்னைக் கட்டிக் கொண்டு நான் என்ன செய்ய? உன் குடும்பத்திற்கு உழைத்துக் கொட்ட நான்தானா கிடைத்தேன்?' என்று மனதிற்குள் அவளைத் திட்டியவன் வெளியே வெகு நல்லவன் போல்...

"உண்மைதான் சாந்தி... என் அழகிற்கும், படிப்பிற்கும், வேலைக்கும் ஆயிரம் பெண்கள் கிடைப்பார்கள்.. ஆனால் பாழாய் போன இந்த உள்ளம் பவித்ராவின் பின்னால் போய் விட்டதே. நான் என்ன செய்வேன்... நான் என்ன செய்வேன்" என்று வசனம் பேசினான். ஊடே இரண்டு வார்த்தைகளுக்கு ஓர் முறை இரும வேறு செய்தான்.

சாந்தியின் உள்ளம் பனிக்கட்டியாய் உருகி விட்டது. இவன் எவ்வளவு வெகுளியாக இருந்தால் மனதை மறைக்காமல் அவளிடமே அவன் இன்னொரு பெண்ணைக் காதலிக்கிறான் என்பதைச் சொல்லி உதவி கேட்பான்?

'சாந்தி... நீ என்னைக் காதலிக்கிறாய்... ஆனால் என்னால் பவித்ராவை மறக்க முடியவில்லையே... அவள் கிடைக்காவிட்டால் நான் விஷம் குடித்துச் செத்து விடுவேன்' என்று முதல் நாள் சொன்னான். அடுத்த நாள் சொன்னபடி விஷத்தைக் குடித்து விட்டானே. உயிருக்கு மன்றாடியவனை பவித்ராவைக் கொண்டு போய்



முன்னால் நிறுத்தித்தான் பிழைக்க வைத்தாள். திரும்பவும் அதே செயலைச் செய்ய மாட்டான் என்பது என்ன நிச்சயம்? சாந்தி கவலையோடு சுகுமாரனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"சுகுமார்... எதற்காக தேவையில்லாதவைகளை சிந்திக்க வேண்டும். பவித்ராவின் கல்யாணம் நின்று போய் விட்டது. அவள் மனம் மாறுதலுக்காக தேக்கடிக்கு ஒரு மாத லீவில் போயிருக்கிறாள். வந்த பின் அவளிடம் உங்களைப் பற்றிப் பேசலாம்... ஒரு மாதம் தானே... கண் மூடித் திறப்பதற்குள் ஓடிப்போய் விடும்.." என்று ஆறுதல் கூறினாள்.

"அதற்கில்லை சாந்தி... இந்த ஒரு மாதத்தில் அவள் மனம் மாறி விட்டால்? கொடுத்த வாக்கைக் காற்றில் பறக்க விட்டு விட்டால்...?" சுகுமாரன் கவலையுடன் கேட்டான்.

"எல்லோரும் உங்களைப் போலவே இருப்பார்களா சுகுமார்? பவித்ரா பண்பான குடும்பத்தில் பிறந்தவள். கொடுத்த வாக்கை ஓர் நாளும் காற்றில் பறக்க விட மாட்டாள்" சாந்தி பட்டென்று பதில் கூறினாள். எவ்வளவு நேரம்தான் அவளும் பொறுமையாய் அவனுக்குப் பதில் சொல்வாள்?

அவளும் பெண் தானே? அவளுக்கென்று ஒரு மனம் இருக்காதா? இருக்கக் கூடாதா? போன வருடம் வரை 'நீதான் எல்லாம்' என்று கூறிக் கொண்டிருந்தவன் இன்று 'பவித்ரா ஜெபம்' படித்தால் அவளுக்கு எப்படி இருக்கும்?

ஆனால் சுகுமாரன் இதற்கெல்லாமா அசைவான்? அவனுக்குத்தான் சாந்தியை ஆட்டி வைக்கும் வித்தை தெரியுமே...

"உண்மைதான் சாந்தி... நான் துரோகி... கொடுத்த வாக்கைக் காற்றில் பறக்க விட்டவன் நான்தான்... பவித்ராவிடம் எப்படி நான் நேர்மையை எதிர்பார்க்க முடியும்? நான் செத்து விடுகிறேன். அதுதான் சரி... நான் வாழ்வதற்கே லாயக்கற்றவன்."

அவ்வளவுதான். சாந்தி ஆடிப் போய் விட்டாள். "ஐயோ சுகுமார்... என்ன வார்த்தை சொல்லி விட்டீர்கள்? நான் இருக்கிறேன் சுகுமார். உங்களைச் சாக விட மாட்டேன்... இப்போது என்ன... நான் பணம் ஏற்பாடு பண்ணித் தருகிறேன்... நீங்கள் தேக்கடிக்குப் போய் பவித்ராவைத் தேடிக் கண்டு பிடித்துப் பேசுங்கள்."

சுகுமாரன் 'அப்படி வா வழிக்கு' என்று தனக்குள் புன்னகைத்துக் கொண்டான்.

# 16



நேசம்! எத்தனை பெரிய மனிதர்களையும் அடிமைப் படுத்துவது இது. எத்தனை திட சித்தம் படைத்தவர்களையும் இளக்கும் வல்லமை படைத்தது இது. எத்தனை பெரிய அறிவாளியையும் முட்டாளாக்கும் சக்தி படைத்தது இது. இதன் முன்னால் மற்ற எதுவும் பெரிதாகத் தோன்றாது.

சாந்தியும் அப்படித்தான். குடும்பத்தின் ஆணிவேராய் இருந்து தன் குடும்பத்தை முன்னேற்றத் துடித்தவள்



இன்று தன் குடும்பத்தினை மறந்து சுகுமாரனே எல்லாமாகிப் போனாள். என்று அவன் மேல் நேசம் கொண்டாளோ அன்றே அவள் தொலைந்து போனாள். சுகுமாரனின் மேல் அவள் எல்லை கடந்த நேசம் கொண்டிருந்தாள். தன் காதலை அவனிடம் வெளிப்படுத்தியபோது அவன் ஏற்கவில்லையென்பதையும் மறந்தாள். அவன் துயர் துடைக்கப் பறந்தாள். அவன் சிரித்தால் அவள் சிரித்தாள். அவன் முகம் வாடினால் இவளும் வாடினாள். 'பாத்திரம் அறிந்து பிச்சை போடு' என்று பெரியவர்கள் தெரியாமலா சொல்லி வைத்தார்கள்? தகுதி இல்லாத தரம் தெரியாத ஒரு கீழ்மை குணம் கொண்ட மனிதனின் மேல் நேசம் கொண்டதன் பலனை சாந்தி அணுஅணுவாய் சித்ரவதைப்பட்டு அனுபவித்தாள்.

சுகுமாரன் ஓர் முட்டாள். குப்பையைக் கிளறும் கோழிக்கு வைரத்தின் மதிப்புத் தெரியுமா? வைரத்தை விட புழுவின் மேல் தானே அதற்கு நாட்டமிருக்கும்? சுகுமாரனும் அப்படித்தான். சாந்தியின் நேசம் எங்கு தேடினாலும் கிடைக்காதது. அவனோ தாயின் போதனையில் அதை உணராமல் போனான். அவளது நேசத்தை விடப் பணத்தையே நாடினான்.

இவர்களின் காதல் போராட்டத்தில் சிக்கி சின்னாபின்னமானது பவித்ராவின் மென்மையான மனது.

சாந்தி அதை உணராமல் இல்லை. தோழிக்கு ஆதரவாய் பேச முடியாவிட்டாலும் பரவாயில்லை. அவளுக்கு கெடுதல் செய்யாமலாவது இருக்கலாம் என்றாலும் அதற்கும் சுகுமாரன் விடவில்லை. இன்று பவித்ரா திருமணம் நின்று மனம் உடைந்து அமைதியைத் தேடி ஊர் விட்டு ஊர் போவதற்கு அவளே காரணமாகி விட்டாளே...

போதாக் குறைக்கு அங்கும் பவித்ராவை நிம்மதியாக இருக்க விட மாட்டேனென்று சுகுமாரன் துரத்திப் போக பண உதவி செய்யவும் முனைய வேண்டியதாகி விட்டதே. சாந்தி துயரத்துடன் கண்களை மூடிக் கொண்டாள்.

பவித்ராவை ஹாஸ்டல் வாசலில் இறக்கி விட்டு விட்டு,

"சீக்கிரம் கிளம்பி வாங்கம்மா..." என்றான் ராம்குமார்.

"நீங்கள் வேண்டுமானால் ரூமுக்குப் போய் விட்டு வாங்க அண்ணா... ஜூலியட் வர நேரமாகுமோ... என்னவோ..."

"ஆனால் ஆகட்டும். நான் காலையிலேயே ரூமைக் காலி பண்ணி விட்டு வந்துவிட்டேன். நான் பாட்டுக்கு காரில் உட்கார்ந்து ரெஸ்ட் எடுக்கிறேன். நீங்கள் வரும் போது வாங்க..."

பவித்ராவுக்கு அண்ணனின் நடவடிக்கை புரியாத புதிராய் இருந்தது. பொதுவாய் ராம்குமார் ஒரே இடத்தில் அடங்கி உட்கார மாட்டான். டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் குட்டி போட்ட பூனை போல் சுற்றிக் கொண்டிருப்பான். ராம்குமாருக்குப் பிடிக்காத இன்னொரு விஷயம் காத்திருப்பது. ஒரு வினாடிகூட காத்திருக்க மாட்டான். அவனுடன் வெளியே கிளம்ப வேண்டுமென்றால் சுதாகரிக்கு ஹார்ட் அட்டாக்கே வந்துவிடும்.

"ரெடியா.. ரெடியா..?" என்று அவன் கத்துவதில் வெறுத்துப் போனவளுக்கு அவன் கூட வெளியே போகும் ஆசையே விட்டுப் போய் விட்டது. அந்த அள வுக்குப் பொறுமைசாலி..! இன்று அவளுக்காக காரில் லேடிஸ் ஹாஸ்டல் வாசலில் மணிக்கணக்காக இருந் தாலும் பரவாயில்லை என்று காத்திருக்கிறானா?



திருமணம் நின்று போனதில் மனம் வெறுத்து தங்கை ஏதும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு விடுவாள் என்று பயந்து விட்டானோ என்ற நினைவில் அவள் கண்கள் கலங்கியது. அண்ணனுக்குத் தான் தன் மேல் எத்தனை பாசம் என்ற நிறைவோடு ஹாஸ்டலுக்குள் போனாள் பவித்ரா. ஆனால் அவளுக்குத் தெரியாது... சுகுமாரன் லேடிஸ் ஹாஸ்டல் பக்கம் வந்தாலும் வருவான் என்ற சந்தேகத் தால் ராம்குமார் வாசலில் காவல் காக்கிறான் என்பது.

அறைக்குள் நுழைந்த போது அங்கு ஜூலியட் தயாராய் நின்றதைக் கண்ட பவித்ரா வியப்புடன்,

"என்னடி... நீ எப்போது வந்தாய்? உனக்கு லீவ் கிடைத்து விட்டதா?" என்று கேட்டாள்.

"ஏன் ஸ்டேட் கவர்ன்மெண்டில்தான் உடனே லீவ் கொடுப்பார்களா? சென்ட்ரல் கவர்ன்மெண்டிலும் கொடுப் பார்கள்."

"சரிம்மா... நான் உன்னோடு வம்புக்கு வரவில்லை. கிளம்புவோமா? கீழே அண்ணன் காரில் வெயிட் பண்ணு கிறார்."

அவர்கள் இறங்கி வர ஆரம்பித்தார்கள். கீழே சுகுமாரன் அவன் நண்பனிடம் ஓசி வாங்கிய புல்லட்டில் படு ஸ்டைலாக வந்து இறங்கி ஹாஸ்டல் வாசலில் எட்டிப் பார்த்தான். காரிலிருந்து இறங்கிய ராம்குமார் சத்தமில்லா மல் அவன் பின்னால் சென்று நின்று,

"என்னடா.. லுக் விடறே..." என்றான்.

காதுக்குள் கேட்ட குரலில் தூக்கி வாரிப் போட திரும்பிப் பார்த்த சுகுமாரனுக்கு ராம்குமாரைக் கண்டதும் சப்த நாடியும் ஒடுங்கியது.

"இல்லை... சும்மா பார்த்தேன்..."

"சும்மா பார்க்க இது என்ன எக்ஸிபிஷனா? லேடிஸ் ஹாஸ்டல்."

"நான்.. நான்... வேறு வேலையாக வந்தேன்..."

"என்ன வேலை? பொறுக்கித்தனம் பண்ணுகிற வேலையா?"

"இங்கே பாருங்கள் சார்... நான் கௌரவமான ஆள்."

"உன் கௌரவத்தைத்தான் பார்த்தேனே... இப்போது தான் உன்னை கலெக்ட்ரேட்டில் பார்த்தேன்... இப்போது இங்கே வந்து நிற்கிறாய்.. என்ன? எலும்பை எண்ணாமல் போக மாட்டாய் போல இருக்கே..."

"மிரட்டுகிறீர்களா. நான் போலீஸிற்குப் போவேன்."

"நான் ஆல் ரெடி போய் விட்டேன். ஜமீன்... நீ லேடிஸ் ஹாஸ்டல் வாசலில் சந்தேகப்படும்படி நிற்கிறாய்ன்னு இப்போது தான் கம்ப்ளெயின்ட் பண்ணினேன். அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். எப்படி வசதி...?"

கடைசி முயற்சியாய் பவித்ரா கிளம்பும் முன் அவளிடம் பேசி ஊருக்குப் போகாமல் தடுத்து நிறுத்த எண்ணி வந்தவன் பயத்தில் வெலவெலத்து விட்டான். இன்னும் பவித்ராவின் மனது முழுமையாகத் தெரியவில்லை. இப்போது போய் அவள் முன்னால் ஈவ் - டீஸிங் கேஸில் மாட்டிக் கொள்வதா?

தற்காலிகமாக பின் வாங்கி புல்லட்டில் ஏறிப் பறந்து விட்டான் அவன். ராம்குமார் போனை எடுத்து அஜய்யிடம் பேசினான்.

"சொல்லுங்கள் ராம்குமார். பவித்ராவுடன் கிளம்பி விட்டீர்களா?"



"இன்னும் இல்லை மாப்பிள்ளை. பவித்ராவின் ஹாஸ்டல் வாசலில் வெயிட் பண்ணிக் கொண்டிருக்கிறேன். அவர்கள் இன்னும் வரவில்லை. மாப்பிள்ளை.. நான் கூப்பிட்டது வேறு ஒரு மேட்டரைச் சொல்லுவதற்காக... அந்த ராஸ்கல் ஹாஸ்டல் வாசல் வரை வந்து விட்டான்."

"எப்போது?"

"ஜஸ்ட் இப்போதுதான்.. ஃபைவ் மினிட்ஸ் இருக்கும்."

"நீங்கள்.. அடிதடி என்று போய் விடவில்லையே..."

"நீங்கள்தான் என் கையைக் கட்டிப் போட்டு விட்டீர்களே..."

"நல்லவேளை... வேறு எப்படி விரட்டினீர்கள்?"

"போலீஸிற்கு போன் பண்ணியிருக்கிறேன் என்றேன். ஓடி விட்டான்."

"குட் ஜாப்... தேவைப்பட்டால் நாம் போலீஸின் உதவியை நாடலாம்."

"தேவையில்லை மாப்பிள்ளை... அதோ ஜூலியட்டும் பவித்ராவும் வந்து விட்டார்கள். நாங்கள் கிளம்ப வேண்டியதுதான்."

பவித்ரா அருகில் வந்ததும் போனை அணைத்து விட்டுக் கார் கதவைத் திறந்து விட்டான். டிரைவர் அவர்களது பெட்டிகளை டிக்கியில் அடுக்கினார். பின் பக்கம் ஜூலியட்டும், பவித்ராவும் உட்கார்ந்து கொள்ள முன் பக்கம் டிரைவர் சீட் பக்கத்தில் ராம்குமார் அமர்ந்து கொண்டான்.

கார் கிளம்பிச் சாலைப் போக்குவரத்தில் கலந்து நகரை விட்டு விலகி தார்ச் சாலையில் வழுக்கி ஓட ஆரம்பித்தது. தஞ்சை மாநகரம் பின்னே தள்ளப்பட ஜூலியட்

ஊர்க்கதை உலகக் கதையெல்லாம் சளசளக்க ஆரம்பித்தாள். மெல்ல மெல்ல அவள் பேச்சில் கவரப்பட்டு தானும் கலந்து கொண்டாள் பவித்ரா. துயரம் மறந்தாள்.

"அனுஷ்காவைப் பாருடி... அருந்ததியில் வந்து நடிப்பில் மிரட்டுச்சு. இப்போ வேட்டைக்காரனில் விஜய்யோடு ஜெம டான்ஸ்... பிச்சு உதறுது."

கண்களின் மேல் கையை விரித்து ஜன்னல் வழி வெளியே பார்த்தாள் ஜூலியட். பவித்ராவிற்கு ஒன்றும் புரியவில்லை.

"என்னத்தைடி.. அப்படிப் பார்க்கிற.."

"நீதானே அனுஷ்காவைப் பார்க்கச் சொன்னாய்... எங்கேடி."

"உன்னை... கடி ஜோக் அடிப்பதில் நீ கில்லாடியாச்சே... உன்னிடம் போய் நான் வாயைத் திறப்பேனா..." பவித்ரா வாய் பொத்திக் கொண்ட அதே நேரம் திருச்சியில் ஹோட்டலின் முன் கார் நின்றது.

"மணி மூன்றாகப் போகுது. வயிற்றுக்குள் எதையாவது தள்ளலாம். வாங்கம்மா" என்றவாறு காரை விட்டு இறங்கினான் ராம்குமார்.

"என்ன சார்... இப்போது போய் இப்படி ஒரு முடிவுக்கு வந்துட்டீங்க..." போலியான கவலையோடு கேட்டாள் ஜூலியட்.

"எம்மா.. ஏற்கனவே மதியச் சாப்பாட்டு நேரம் தாண்டி விட்டது. இப்ப சாப்பிடணும்னு முடிவெடுக்காமல் எப்போது எடுப்பது?"

"இல்லை சார். பவித்ரா இனிமேல் வாயைத் திறக்க மாட்டேன்னு சொல்லிட்டாள்... இப்ப சாப்பிடணும்னா அவள் வாயைத் திறக்கணுமே."



"ம்ம்ம்..." என்று குரல் கொடுத்தபடி ஜூலியட்டின் முதுகில் ஓங்கி ஒரு போடு போட்டாள் பவித்ரா.

"ஏண்டி.. இந்த அடி அடிக்கிறாய்?"

"இத்தோடு விட்டேனேன்னு சந்தோஷப்படு."

தோழியுடன் கலகலப்பாய் பேசியபடி சாப்பிட்ட தங்கையைப் பார்த்து மனம் நிறைந்தது ராம்குமாருக்கு. அஜய் சொன்னது உண்மைதான். அந்தச் சூழ்நிலையிலிருந்து விடுபட்டவுடன் தங்கையின் முகத்தில் பழையகளை திரும்பி விட்டதே. இப்படியே திருமணமும் நடந்து முடிந்து விட்டால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது அவனுக்கு. மாலைக் காபியை வத்தலக்குண்டில் குடித்து முடித்தவர்கள் கொடைக்கானல் மலையேறும் போது இருட்ட ஆரம்பித்திருந்தது.

இருளில் கார்த்திகை தீபத்திற்காக ஏற்றி வைக்கப்பட்ட அகல் விளக்குகள் போல் கீழே ஊர்களில் தெரிந்த மின் விளக்குகள் ஜொலிக்க வளைந்து வளைந்து போன மலை ரோட்டில் கார் மலை ஏற ஆரம்பித்தது.

## 17



பவித்ராவும் ஜூலியட்டும் ஆவலுடன் மலையின் கீழே பார்த்தார்கள். மின்மினிப் பூச்சிகளின் வெளிச்சம் போல... பாரதியார் கவிதையில் வரும் 'பட்டுக் கருநீலப்

புடவை பதித்த நல் வயிர'ங்கள் போல... சீரியல் பல்புகளின் தோரணம் போல... கீழே தெரிந்த விளக்குகளின் வெளிச்சம் பற்பலத் தோற்றங்களைக் காட்டியது. மலையின் மேல் ஏற ஏற குளிரின் தாக்கம் உடலைத் துளைக்க ஆரம்பித்தது. பவித்ராவும், ஜூலியட்டும் கார் கண்ணாடிக் கதவுகளை ஏற்றி விட்டனர். சுடிதாரின் துப்பட்டாவால் உடலை போர்த்திக் கொண்டார்கள்.

"என்னம்மா... குளிரடிக்கிறதா.." என்று வினவினான் ராம்குமார்.

"ஏன் சார்... உங்களுக்குக் குளிரவில்லையா?" ஜூலியட் கேலியாய் கேட்டாள்.

"ஆண்களுக்குக் குளிரடித்தாலும் கவலையில்லை ஜூலி... முரட்டு ஜீன்ஸ்.. டீசர்ட் காலில் ஷூ... ஷாக்ஸ்ன்னு புல்கெட்டப்புடன் இருப்பார்கள்... பெண்களுக்குத்தான் கஷ்டம்.. நல்ல வேளையாய் இன்றைக்கு நாம் சுடிதாரில் கிளம்பினோம். சேலை கட்டி வந்திருந்தால் இந்தக் குளிரில் விறைத்திருப்போம்... ஆமாம் அண்ணா. உங்களிடம் அப்போதிருந்து கேட்க வேண்டுமென நினைத்திருந்தேன். நாம் தேக்கடி போவதாகத்தானே சொன்னீர்கள்? இப்போது கொடைக்கானல் போகிறோமே..." நினைவு வைத்துக் கேட்டாள் பவித்ரா.

"தேக்கடின்னாம்மா சொன்னேன்? பார்த்தாயா... எந்த ஊருக்குப் போகிறோம் என்பது கூட எனக்கு மறந்து விட்டது. இரண்டு நாள்களாய் ஒரே டென்ஷன்ம்மா... எதுவும் சரியாய் நினைவில் வரவில்லை..." ராம்குமார் சாதுர்யமாய் பேசி சமாளித்தான்.

'எதனால் டென்ஷன்?' என்பது நினைவில் வர வேதனையுடன் மௌனமானாள் பவித்ரா. வெளியே



இருளில் இடையே தெரிந்த உயரமான மரங்கள் இப்போது அச்சுறுத்தின. அவளது எதிர்காலத்தைப் போல.

திடீரென்று அமைதியாகி விட்ட பவித்ராவைப் பார்த்ததும் ராம்குமாரும் ஜூலியட்டும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

கார் இப்போது கொடைக்கானலில் நுழைந்து விட்டது. சில சாலை வளைவுகளுக்குப் பின்னர் சுற்றிலும் பெரிய காம்பவுண்டு சுவருடன் கூடிய ஓர் அழகிய பங்களாவின் முன்னே சென்று கார் நின்றது.

டிரைவரின் ஹார்ன் சத்தத்தில் உள்ளேயிருந்து ஒரு ஆள் ஓடி வந்தான். வாசல் கேட்டின் பூட்டைத் திறந்து விட்டான். கார் உள்ளே நுழைந்தது.

காரை விட்டு இறங்கிய பவித்ரா குளிர் தாங்காமல் அவசரமாய் உள்ளே சென்றாள். பெரிய வரவேற்பறை ஹீட்டர் வசதியுடன் இருந்தது. ஆளுயுர ஜன்னல்கள். அதை மறைத்த திரைச்சீலைகள்.. அமர்ந்தால் ஆளை உள்ளே இழுத்துக் கொள்ளும் பிரம்மாண்ட சோபாக்கள்... மேலேயிருந்து தொங்கும் அலங்கார விளக்குகள்... என்று ஓர் திரைப்படக் காட்சியில் வரும் மாளிகை போல இருந்த அந்த வீட்டை பிரமிப்புடன் பார்த்தாள்.

ராம்குமாருக்கும் அதே நிலைதான்... 'ஆ'வென்று வாய் பிளக்க வீட்டைப் பார்த்தவன் அருகில் வந்து நின்ற ஜூலியட்டிடம் தாழ்வான குரலில் வினவினான்.

"ஏம்மா ஜூலி... மாப்பிள்ளை என்னிடம் இது அவருடைய வீடுன்னு சொன்னாரே... உன்னிடமும் சொன்னாரா?"

"ஆமாம் சார். குடும்பச் சொத்து. என் பங்குக்கு வந்தது. என் பெயரில் தான் இருக்கிறதுன்னு சொன்னார்.

குடும்பத்துச் சொத்துன்னா.. அவர்கள் பரம்பரைப் பணக் காரர்களாய் இருக்க வேண்டும். உங்களுக்கு அவர்களது பண நிலவரம் எதுவும் தெரியாதா?''

''இல்லைம்மா. தெரியாது. பெரிய கலெக்டர். பெண் கேட்டு வருகிறார்ன்னு நினைத்தோம். இங்கு வந்து பார்த்தால் மன்னர் பரம்பரை மாதிரியில்ல மாளிகை இருக்கு? அதைப் பார்த்துக் கொள்ள ஓர் குடும்பத்தையே சம்பளம் கொடுத்து வைத்திருக்கிறார். இவ்வளவு பெரிய இடத்தில் வாழ என் தங்கை வரம் வாங்கி வந்திருக்க வேண்டும்.''

''நிச்சயமாய்... பணம், வசதி, கலெக்டர் பதவி... இவற்றை விடுங்கள். ஒரு கயவன் பின்னிய சிக்கலில் மாட்டிக் கொண்டு 'என்னை விட்டு விடுங்கள்'ன்னு இவள் உளறி விட்டாள். அதை உடனே விசாரித்து அவளை அதிலிருந்து விடுவிக்க பிளான் போட்டு இவ்வளவு செய்கிறாரே.. இவரைப் போல் ஓர் கணவன் கிடைக்க பவித்ரா தவம்தான் பண்ணியிருக்க வேண்டும்.''

அப்போது வீட்டின் வெளியேயிருந்து ஒரு பெண் அவசரமாய் உள்ளே வந்தாள். கிராமத்துப் பாணியில் புடவையை பின் கொசுவம் வைத்துக் கட்டியிருந்தாள். கொடைக்கானல் குளிருக்காக ஸ்வெட்டர் வேறு அணிந்திருந்தாள்.

''பாரேன்டி... பழமை பாதி, புதுமை பாதி கலந்து செய்த கலவை நான்னு இந்தம்மா வந்து நிற்பதை...'' ஜூலியட், பவித்ராவின் காதோரம் முணுமுணுக்க பவித்ரா 'களுக்' கென்று சிரித்தாள்.

அவளது சிரிப்பில் கவரப்பட்ட அந்தப் பெண் பவித்ராவின் அருகே வந்து கன்னம் வழித்து முகம் பார்த்தாள்.



''ஆத்தி... என் கண்ணே பட்டு விடும்போல இருக்கே... அம்சமா தேச்சு வைச்ச பித்தளை விளக்காட்டம் இருக் கறீங்களேம்மா'' என்று அவள் கூற,

''ஏ... புள்ள... ராக்காயி'' என்று மாடசாமி அதட்டி உதட்டில் பவித்ரா அறியாமல் விரலை வைத்து எச்சரித்தான்.

''எல்லாம் எனக்கும் தெரியும்'' என்று கணவனிடம் நொடித்த ராக்காயி,

''வாங்கய்யா... வாங்கம்மா... சாப்பாடு ரெடியாய் இருக்கு. சாப்பிட்டுட்டுத் தூங்குங்க. கலம்பர மத்ததை யெல்லாம் பேசிக்கலாம், குளிர் பிரதேசம். பசி கபகபங் கும்'' என்றபடி உள்ளே விரைந்தாள்.

''நீ சொன்னாலும் சொல்லவிட்டாலும் நானே சாப்பாடு இருக்கான்னு கேட்கலாம்ன்னு இருந்தேன். என்னமாய் பசிக்குது'' என்றவாறு ராக்காயின் அருகே வந்த ஜூலியட் கிசுகிசுப்பான குரலில்.

''அது சரி... அவள்தான் உங்க ஐயாவைக் கட்டிக்கப் போற பெண்ணுன்னு உனக்கு எப்படித் தெரிந்தது. கரெக்டாய் கண்டு பிடித்து விட்டாயே?'' என்று ரகசியமாய் வினவினாள்.

அவ்வளவுதான். ரகசியம் பேச ஆள் கிடைத்து விட்ட குஷியில் ஜூலியட்டை விட தாழ்ந்த குரலில் ராக்காயி கிசுகிசுத்தாள்.

''இந்த ராக்காயியை என்னன்னு நினைச்சீங்கம்மா.. ஒரே பார்வையில ஒன்பது பேரை அளவெடுத்து அக்கு வேறு ஆணி வேராய் நிலவரம் சொல்லிடுவேன்ல்ல. எங்க ஐயா கண்டதும் காதல்ன்னு மயங்கிப் புட்டாராம். அவரைப் பெத்தவங்க ஒரே இனம்ங்கிறதால சரின்னு

செல்லிட்டாங்களாம். ஒரே இனம்ன்னா பொண்ணு இந்துப் பொண்ணாயிருக்கணுமில்ல.. நீங்கதான் கழுத்தில் சிலுவை டாலர் போட்ட சங்கிலி போட்டிருக்கீங்கல்ல.."

"ஓ.. நீ அப்படி வருகிறாயா? வெரிகுட்... வெரிகுட்."

"அது மட்டுமா? அந்தப் பொண்ணு சும்மா சினிமா ஸ்டார் மாதிரி... அதான் இந்த 'கண்டேன் காதலில்'ன்னு ஒரு படத்தில் வந்துச்சே தமன்னாவா... அந்தப் பொண்ணு மாதிரி... கலக்கலா இருக்குது. நீங்க என்னை மாதிரி சும்மா பார்க்கிற ரகமாய் இருக்கறீங்க. கண்டதும் காதல்ன்னா அந்தப் பொண்ணு மேலே தானே வரும்கிற கணக்குத் தான்."

"ஓ.. நீ இப்படியும் வருவாயா? வெரிபேட்... வெரிபேட்."

அந்த ராக்காயி ரகசியம் பேசி விட்ட சந்தோஷத்தில் ஜூலியட் தன்னை ஆங்கிலத்தில் பாராட்டுகிறாளென்று பரவசப்பட்டுப் போனாள். அதனால் வாயெல்லாம் பல்லாக.

"டாங்க்யூம்மா..." என்று நன்றி வேறு சொன்னாள்.

"என்னடி அங்கே ரகசியம் பேசிக்கிட்டு இருக்கே?" பவித்ரா அழைத்தாள்.

"விதிடி... இங்கே வந்து இவளிடம் ரகசியம் பேசணும்ன்னு இருக்கு... இதில் என் அழகை வேறு வர்ணித்து விட்டுப் போகிறாள்" ஜூலியட் சிரித்தாள்.

எல்லோரும் பிரம்மாண்டமான அந்த சாப்பாட்டு மேஜையைச் சுற்றி அமர ராக்காயி பம்பரமாய் சுழன்று எல்லோர் முன்னாலும் தட்டை வைத்துப் பரிமாற ஆரம்பித்தாள். வாய் மட்டும் பேசிக் கொண்டே இருந்தது.



"அவசரத்திற்கு ஒரு கிலோ கோழி தான் கிடைச்சது. அதான் சாம்பார் வைத்து சிக்கன் சிக்ஸ்டிபைவ் போட்டேன்."

"அட இங்கிலீஸெல்லாம் பிச்சு உதறுகிற..." ஜூலியட் கிண்டல் அடித்தாள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லைம்மா. அந்த வறுவலுக்கு அதுதானே பேரு. அதனால சொல்லுது. சுத்த கைநாட்டு கேசும்மா" மனைவிக்கு பாராட்டு கிடைப்பதைப் பொறுக்காத மாடசாமி கூறினான்.

"இவரு பெரிய இங்கிலீஷ் துரை.. இதுக்கு மட்டும் என்ன தெரியுமாம்? பள்ளிக்கூடத்தில் மழைக்கு ஒதுங்கினதில்ல மூணா...ம் கிளாக வரைக்கும் படிச்சிருக்காம். மாடசாமின்னு கையெழுத்துப் போடச் சொல்லுங்க. பேப்பரோட இந்த முனையில் கீழே ஆரம்பிச்சு பேப்பர் பூராவும் கிறுக்கி.. மடசாமின்னு துணைக்காலை விட்டுட்டுப் போடும். அதுக்கு கைநாட்டே தேவலை..." ராக்காயி கணவனை வாரினாள்.

"தா... வாயை மூடிக்கிட்டு சாப்பாட்டைப் போடுடி. சும்மா ஓட்டைப் பானைக்குள்ள நண்டை விட்டது மாதிரி லொடலொடன்னு பேசிக்கிட்டு..." மாடசாமி இளம் வயது பெண்களின் முன்னால் தன் கல்வித் தரத்தைக் கப்பல் ஏற்றிய மனைவியைப் பார்த்துச் சத்தம் போட்டான்.

ராக்காயி முகம் சுருங்கிப் போய் பரிமாற ஆரம்பித்தாள். அதைக் கவனித்த ஜூலியட் பவித்ராவிடம் மெல்லிய குரலில் கூறினாள்.

"இப்போது ராக்காயி முகத்தில் பல்ப் எரிய வைக்கவா?"

"எப்படி மேஜிக் செய்யப் போகிறாய்?"

"மேஜிக்கெல்லாம் ஒன்னும் இல்லை.. ரகசியம்.. பரம ரகசியம்."

ஜூலியட் கண்களைச் சிமிட்டிவிட்டு ராக்காயியைப் பார்த்து ரகசியமாய் சமிக்ஞை செய்தாள். ராக்காயி ஆவலுடன் மெதுவாய் அவள் அருகில் வந்து குனிந்தாள். ஜூலியட் கிசுகிசுப்பான குரலில், ஆனால் பவித்ராவிற்கும் கேட்கும்படியான குரலில்,

"சாம்பார் நீ வைத்ததா?" என்று கேட்டாள்.

ராக்காயி 'ஆமாம்' என்று தலையாட்டினாள். ஜூலியட் அதே குரலில்,

"இன்னும் கொஞ்சம் ஊற்று..." என்றாள்.

ராக்காயி சம்பாரை ஊற்றிவிட்டு நகர்ந்தாள். அவள் முகத்தில் சுணக்கம் மாறி வெளிச்சம் பரவியிருந்தது. பவித்ராவிற்கு ஒன்றும் புரியவில்லை.

"ஏண்டி.. சாம்பார் நல்லாயிருக்கு. ஊற்றுன்னு சொல்வதில் என்ன ரகசியம் வேண்டிக் கிடக்கு. கிசுகிசன்னு வேறு பேசினாய்."

"அதில் தான் விஷயமே இருக்கு.. பார்ட்டிக்கு கிசுகிசு என்றால் தான் படிக்கும். எதற்கும் இங்கே தங்கும் நாள்களில் இந்தமெத்தேடையே ஃபாலோ பண்ணுவோம். ஏண்டி பவித்ரா... ரகசியம்னா இவளுக்கு இப்படிப் பிடிக்கிறதே.. நான் வேண்டுமானால் உன்னிடம் பெட் கட்டுகிறேன்.. இவள் கல்யாணம் ரகசியக் கல்யாணமாகத்தான் இருக்கும்."

"சேச்சே... அப்படியெல்லாம் தெரியவில்லை. நீ எதையாவது கற்பனை பண்ணாதே."



"தோடா.. இப்ப புருவ் பண்ணவா? மாடசாமி."

ஜூலியட் அழைக்கவும் மாடசாமி அவசரமாய் அவளருகில் வந்தான். 'அடுத்த வீட்டுப் பொம்பளைகன்னா ஆளாப் பறந்து சேவை செய்வானுங்களே.. இந்த ஆம்பளைப் புத்தி இருக்கிறதே...' ராக்காயி பல்லைக் கடித்துக் கொண்டு கணவனை முறைத்தாள். மாடசாமி அதை சட்டை செய்யவில்லை.

"என்னங்கம்மா... என்ன வேணும். நாளைக்கு ஊர் சுற்றிக் காட்டவா?"

"யோவ்.. இப்ப அந்தம்மா உன்கிட்ட ஊர் சுத்தணும்னு கேட்டுச்சா?"

"விடு ராக்காயி. உன் புருசன் ஆர்வக் கோளாறில் ஏதோ கேட்டு விட்டார்.. மாடசாமி.. நான் ஊர் சுற்றுவதைக் கேட்க உன்னைக் கூப்பிடவில்லை. உனக்கும் ராக்காயிக்கும் எப்படிக் கல்யாணம் நடந்தது."

"இது என்னம்மா.. இப்படிக் கேட்கறீங்க? தாலிகட்டித் தான் கல்யாணம் நடந்தது..." ராக்காயி ரோசத்துடன் கூறினாள்.

"நான் அதைக் கேட்கவில்லை ராக்காயி... காதல் திருமணமா இல்லை..."

"அதுவாம்மா" ராக்காயி முகத்தில் வெட்கம் சூழ்ந்தது.

"இது என் முறை மாமன் தாம்மா..." பவித்ரா ஜூலியட்டிடம் ஜாடை காட்டினாள். ராக்காயி தொடர்ந்து பேசினாள்.

"ஆனா.. என் அப்பன், பொண்ணு தரமாட்டேன்னு சொல்லி வேற மாப்பிள்ளை பார்த்திடுச்சு. உடனே என் மாமன் என்னைத் தூக்கிப் போய் தாலி கட்டிருச்சு..."

இப்போது ஜூலியட் பவித்ராவிடம் 'என்ன சொல்கிறாய்?'' என்று பார்த்தாள்.

## 18



பவித்ராவிற்கு ஆச்சர்யம் தாளவில்லை. அது எப்படி இவள் மட்டும் எல்லாவற்றையும் மிகச் சரியாகக் கணிக்கிறாள்?

''என்னடி என்னை அப்படிப் பார்க்கிற? விட்டால் மெழுகுவர்த்தி ஏற்றி என் முன்னால் ஜெபம் பண்ண ஆரம்பிச்சுடுவ போலயிருக்கே.''

சிக்கன் சிக்ஸ்டிபைவை கையில் எடுத்துக் கடித்து ருசி பார்த்துக் கொண்டே பவித்ராவைப் பார்த்து ஜூலியட் வினவினாள்.

''குடம் எத்தி சாம்பிராணி காட்டுறயேன்னு கேளுங்கம்மா. அப்படிச் சொன்னாத்தானே அவங்களுக்குப் புரியும்'' ராக்காயி எடுத்துக் கொடுத்தாள்.

''இதிலெல்லாம் ரொம்ப கவனமாய் இருக்கிறாள் பார்... ராக்காயி... நீ ஆளும் சூப்பர். உன் சமையலும் சூப்பர்...'' ஜூலியட் கை கழுவ எழுந்தாள்.

''உங்களுக்காச்சும் என் அருமை தெரியுதே'' ராக்காயி மாடசாமியை ஜாடையாய் பார்த்துக் கொண்டே கூறினாள்.



''இதைப் பார்றா.. உன் மாமன் உன்னைத் தூக்கிப் போய் தாலி கட்டினார்ன்னு இப்பத்தானே பெருமையாய் பேசின? உன் அருமை தெரியாமலா உன் மாமன் உன்னைத் தூக்கிப் போய் தாலி கட்டினாராம்?''

கைக்குட்டையால் வாயைத் துடைத்துக் கொண்டே வந்த ஜூலியட் கூறினாள்.

''எம்மா நீங்க வேற... வயித்தெரிச்சலைக் கிளப்பிக்கிட்டு...''

''என்ன ராக்காயி இவ்வளவு சலிப்பாய் பேசற அளவுக்கு ஆகி விட்டதா.''

''எல்லாம் ஆசை அறுபது நாள்.. மோகம் முப்பது நாள் கேசம்மா...''

''ச்ச... ச்ச... ச்சு..'' ஜூலியட் சூள் கொட்டினாள்.

''என்னடி இப்ப நாயைக் கூப்பிடுகிறாய்?'' பவித்ரா அதட்டினாள்.

''ராக்காயி கதையைக் கேட்டால் பரிதாபமா இருக்குடி. ஏன் ராக்காயி உனக்குக் கல்யாணமாகி முதல் மூன்று மாதங்கள்தான் நீ சந்தோசமாக இருந்தாய்... எப்படி கரெக்டா சொல்லிட்டேனா?''

''ஆமாம்... எப்படிம்மா கண்டுபிடிச்சே?'' ராக்காயி மூக்கில் விரலை வைத்தாள்.

''எல்லாம் ஓர் கணக்குத்தான்.. சரி.. இப்ப நாங்க தூங்கணுமே... எங்க ரூம் எங்கே...'' ஜூலியட் தோழியைப் பார்த்துச் சிரித்தாள்.

''என்னடி கணக்கு? எனக்குச் சொல்ல மாட்டாயா...?'' பவித்ரா ஆவலாய் ஜூலியட்டின் அருகே வந்தாள்.

''அவன்தானடி சொன்னான்..'' ஜூலியட் புருவம் உயர்த்தினாள்.

''என்ன சொன்னான்?'' பவித்ரா விழித்தாள்.

''போடி மக்கு.. மோகம் முப்பது நாள்.. ஆசை அறுபது நாள். போட்டலா தொண்ணூறு நாள். மூன்று மாதங்கள்.. தட்ஸ் ஆல்.. எப்படி?''

''நீயும் உன் கணக்கும்...''

பவித்ராவும் ஜூலியட்டும் கலகலவென்று சிரிக்க... ராக்காயிக்கு இருப்புக் கொள்ளவில்லை. அருகில் வந்து நின்று கொண்டு,

''என்னம்மா சிரிக்கறீங்க... என்கிட்ட சொல்லக் கூடாதா?'' என்றாள்.

''உன்கிட்டத்தானே முதலில் சொல்லணும் கிட்ட வாயேன்...''

ஜூலியட் மர்மமான முகபாவத்துடன் அழைக்க அவள் ஏதோ ரகசியம் பேசப் போகிறாள் என்ற எதிர்பார்ப்புடன் உற்சாகமாய் ராக்காயி அவர்கள் அருகே வந்து கிசுகிசுப் பான குரலில் ''என்னம்மா?'' என்றாள்.

''பார்த்தாயா?'' என்று பவித்ராவுக்கு ஜாடை காட்டிய படி ராக்காயி காதருகே குனிந்த ஜூலியட் அவளை விட கிசுகிசுப்பாய்.

''எங்கள் ரூம் எங்கேயிருக்கிறது?'' என்று கேட்டாள்.

ராக்காயியுடைய முகத்தில் குடம் குடமாய் அசடு வழிந்தது.

''வாங்கம்மா...'' என்று இருவரையும் அழைத்துக் கொண்டு போனாள்.



''அண்ணன்...'' என்று தயங்கிய பவித்ரா திரும்பிப் பார்க்க மாடசாமி..

''ஐயா அப்பவே படுக்கப் போயிட்டாரும்மா.. உங்க ரூமுக்கு பக்கத்து ரூம்தான்...'' என்று கூறினான்.

அவர்களுக்காக கொடுக்கப்பட்ட அறையின் பிரம் மாண்டத்தை ரசித்தவாறு உறங்கிப் போனார்கள் இருவரும். காலையில் அறைக்கதவு படபடவென்று தட்டப்பட ஜூலி கம்பளியின் கதகதப்பில் சுருண்டு படுத்தவாறு.

''பவித்ரா... யாருன்னு பாருடி'' என்றாள்.

பவித்ரா எழுந்து சென்று கதவைத் திறந்தாள். ஆவி பறக்கும் காபிக் கோப்பைகளோடு ராக்காயி 'ஈ'யென்று பல்லைக் காட்டினாள்.

''என்னம்மா நல்லாத் தூங்கினிங்களா... இந்தாங்க காபி...'' என்றபடி உள்ளே வந்தவள் ஜூலியட்டின் முகத்தின் மேலிருந்த கம்பளியை விலக்க,

''ராக்காயி.. நாம் அப்புறம் ரகசியம் பேசலாம்.. இப்போ டோன்ட் டிஸ்டர்ப் மி..'' என்றாள் ஜூலியட்.

''இந்தம்மா என்னா சொல்லுது'' என்று ராக்காயி வினவ,

''தூக்கம் வருதாம்... பாவம் தூங்கட்டும்'' என்றாள் பவித்ரா.

''அடடா.. அப்படியா.. அந்தம்மா கூட சித்த பேச லாம்ன்னு வந்தேன்.''

''அவள் எழுந்ததும் சித்த என்ன.. நிறையவே பேச லாம்..''

பவித்ரா சமாதானமாய் பேசி அனுப்பி வைத்தாள். ராக் காயி ஏக்கமாய் ஜூலியட்டை பார்த்துக் கொண்டே

அறையை விட்டு வெளியேற கதவை அடைத்து விட்டு வந்து ஜூலியட்டை எழுப்பினாள்.

"ஏண்டி... உனக்கு வேற தனியாய் சொல்லணுமா?"

"அதெல்லாம் சொல்ல வேண்டாம். காபியை குடித்து விட்டுத் தூங்கு."

"எங்கே.. அவன் போயிட்டானா..." ஜூலியட் எழுந்து காபியைக் குடித்தபடி கேட்டாள். பவித்ரா புன்னகைத்தாள்.

"கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாய் அனுப்பினேன். என்ன சொக்குப் பொடி போட்டாய்? உன் பின்னாலேயே சுற்றிச் சுற்றி வருகிறான்?"

"நான் சொக்குப்பொடி போட்டு என்னடி ஆகப் போகிறது? அவளோட மாமன் மாடசாமியில்ல சொக்குப் பொடி போடணும்?" ஜூலியட் சிரித்த அதே நேரம் அறைக்கு வெளியே மாடசாமியின் குரல் கேட்டது.

"ஜூலியம்மா... வெளியே ஏதும் போகணுமின்னா என்னைக் கூப்பிடுங்க..."

பவித்ராவும் ஜூலியட்டும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு கண் சிமிட்டிச் சிரித்தனர்.

"ஜூலி... இவன் என்ன உனக்குச் சொக்குப் பொடி போட அலைகிறான்?" பவித்ரா சிரித்தபடி எழுந்தாள்.

"எங்கேடி போற? நான் தூங்கப் போகிறேன்."

"தூங்கு.. தூங்கு.. நான் வெளியே போய் வீட்டைச் சுற்றிப் பார்க்கிறேன்."

பவித்ரா வீட்டுக்கு வெளியே வந்து பார்த்தாள். சுற்றிலும் பலவித நிறங்களில் ரோஜாச் செடிகள் பூத்துக் குலுங்கின. அந்த வீடே சுற்றுலாத் தளம் போல் பார்க்க அவ்வளவு அழகாக இருந்தது. கொடைக்கானலின் அழகையெல்லாம் தன்னுள் பூட்டிக் கொண்டது போல் தோட்டமும் வீடும் கருத்தைக் கவர்ந்தது. பச்சைப் பசேலென்ற கம்பளம் விரித்தாற் போலிருந்த புல் தரையின் நடுவே வட்ட வடிவ கற்கள் வரிசையாய் நடப்பதற்காக அணிவகுத்துச் சென்றன. தோட்டத்தில் அமர்ந்து உரையாட மரத்தால் ஆன பெஞ்சுகள். சாய்வாக அமைக்கப்பட்டு இருந்தன. தோட்டத்தின் அழகை ரசித்துக் கொண்டிருந்த பவித்ரா.



"என்னம்மா... எதை அப்படி ஆராய்ச்சியாய் பார்க்கிற?" என்ற ராம்குமாரின் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

அவள் பின்னால் வந்து நின்று கொண்டிருந்தான் ராம்குமார்.

"இல்லை அண்ணா... அந்த மரபெஞ்சுகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.."

"ஆமாம்... அங்கேயிருக்கு... பார்க்க அழகாயிருக்கு."

"அது மட்டுமில்லை அண்ணா."

"சாய்ந்து கொள்ள வசதியாய் சாய்வாய் அமைந்திருக்கு."

"இது கொடைக்கானல் அண்ணா.. இங்கே சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்தால் சில்லுன்னு இருக்கும். அதை யோசித்து மரபெஞ்சுகளை அமைத்திருக்கிறார்கள்."

"அட ஆமாம். இதை நான் யோசிக்கவேயில்லை."

"ஆனால்.. இதை யோசித்து அமைத்திருக்கும் உங்கள் பிரண்ட் உண்மையிலேயே ரசனையும், புத்திசாலித் தனமும் சேர்ந்திருக்கிறவர்."

உண்மையறியாத பவித்ரா பாராட்ட ராம்குமார் அவளது அறியாமையை எண்ணி மனதிற்குள் வருந்தினான்.

இன்னும் பதினைந்து தினங்களில் இந்த மாளிகையின் மகாராணியாகப் போகிறவள் யாரோ ஒருத்தி போல இந்த மாளிகையின் அழகை ரசிக்கிறாள்.

அதன் உரிமையாளனுக்கு அவள் உரிமையாகப் போவது தெரியாமல் அவனது ரசனையைப் பாராட்டிக் கொண்டிருக்கிறாள்.

"சரிம்மா... சாப்பிட்டவுடன் நான் கிளம்புகிறேன்."

"அதற்குள்ளாகவா அண்ணா.. ஊர் சுற்றிப் பார்க்கவில்லையா?"

"நான் பாக்காத கொடைக்கானலா? ஊரில் போட்டது போட்டபடி விட்டு விட்டு வந்திருக்கிறேன். இன்னொரு நாள் அண்ணி, சுஜிதாவோட இங்கே வந்து சம்மர் முழுதும் என்ஜாய் பண்ணி விட்டால் போகிறது..."

"ஆமாமாம். இது உங்கள் சொந்தக்காரரின் விடு போலதானே."

"சரியாகச் சொன்னாய்."

அண்ணனின் நண்பர் வீடு என்ற நினைவில் பவித்ரா கூற பவித்ராவின் வீடு என்ற நினைவில் ராம்குமார் பதிலளித்தான். இருவரும் சற்று நேரம் மரபெஞ்சில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.



சாப்பிட்டவுடன் ராம்குமார் அவனது அறைக்குச் சென்று அஜய்க்கு போன் பண்ணினான்.

"ஹலோ மாப்பிள்ளை ராம்குமார் பேசறேன்."

"மாடசாமி இப்போது தான் போன் பண்ணினான். நல்லபடி வந்து சேர்ந்து விட்டீர்கள்ன்னு சொன்னான். நான் கொடைக்கானல் போலீஸிடம் பேசி விட்டேன். நம் வீட்டைக் கண்காணிக்க ஏற்பாடு செய்து விட்டேன்."

"அப்போ நான் நிம்மதியாய் கிளம்பலாமா?"

"செய்யுங்கள். இல்லாவிட்டால் அத்தை, மாமாவிற்கு சந்தேகம் வரும். அப்புறம் ஒரு விசயம் ராம்குமார். கிளம்பும் முன் காரில் கடைத் தெருவிற்கு போய் அவர்கள் இருவருக்கும் ஸ்வெட்டர், சால் வாங்கிக் கொடுத்து விடுங்கள்... தேக்கடி என்றதால் முன்னேற்பாடு இல்லாமல் வந்திருப்பார்கள்" ராம்குமார் நெகிழ்ந்து போய் கூறினான்.

"எவ்வளவு யோசிச்சு செயல்படுகிறீர்கள் மாப்பிள்ளை. எனக்குக் கூட இது தோன்றவே இல்லையே."

"இட்ஸ் ஆல்ரைட். உங்களுக்கு சேலம் வர கார் ஏற்பாடு பண்ணியிருக்கிறேன். நீங்கள் போன கார் எனது சொந்தக்கார். அதன் டிரைவர் ஒரு எக்ஸ் - சர்வீஸ் மேன். பெண்களுக்கு பாதுகாப்பாக அவர் இருக்கட்டும் என்று இந்த பதினைந்து நாள் மட்டும் அவரை ஏற்பாடு பண்ணியிருக்கிறேன். அந்தக் கார் அங்கேயே நிற்கட்டும். அவர்கள் வெளியே போனால் அந்தக் காரிலேயே போய் வருவார்கள். பயம் வேண்டாம்."

"இருந்தாலும் மாப்பிள்ளை..."

"நானிருக்கிறேன் ராம்குமார். பயம் வேண்டாம்."

அந்தக் குரலில் ராம்குமாரின் அச்சமெல்லாம் பஞ்சாய் பறந்தது. சற்று நேரத்தில் வெளியே போனவன் ஸ்வெட்டர்கள், ஷால்கள் அடங்கிய பிளாஸ்டிக் பைகளுடன் திரும்பி வந்தான்.

"ஐ... அண்ணா... எங்களுக்கா... எப்படி அண்ணா இவ்வளவு பொருத்தமாய் வாங்கி வந்திருக்கிறீர்கள்..." பவித்ரா வியந்தாள்.

"அதை போனில் டைரக்ஷன் கொடுத்தவரிடம் போய் கேள்..." ஜூலியட் முறை முறுத்தாள்.

ராம்குமார் சிரித்துக் கொண்டே ஜூலியட்டின் முகத்தைப் பார்த்தான். அவன் பேச விரும்புவதை உணர்ந்து கொண்ட ஜூலியட் தோட்டத்துப் பக்கம் சென்றாள். சற்று நேரத்தில் அங்கே வந்த ராம்குமார், போனில் அஜய் கூறிய விவரங்களைக் கூறிவிட்டு,

"அப்போ.. நான் கிளம்புகிறேன்ம்மா... எங்கே போனாலும் காரிலேயே டிரைவரை துணைக்குக் கூட்டிக் கொண்டு போங்க..." என்று விடை பெற்றான்.

"நான் பார்த்துக் கொள்கிறேன் சார். அஜய் அண்ணா என்னிடமும் போனில் பேசினார். பவித்ராவை உங்களுக்குப் போன் பண்ணச் சொல்கிறேன். அந்த நம்பரை ஸேவ் பண்ணிக் கொள்ளுங்கள். வீட்டில் இரண்டு நாளாய் அவளுடன் பேசாமல் கவலையாய் இருப்பார்களே..."

சற்று நேரத்தில் வாடகைக் கார் வந்துவிட ராம்குமார் கை அசைத்து விடைபெற்று புறப்பட்டுச் சென்று விட்டான்.



# 19



அன்று காலையில் எழுந்தபோதே பவித்ரா முக மலர்ச்சியுடன் இருந்தாள். என்னவென்று தெரியாமல் மனம் உல்லாசமாய் இருந்தது. லேசாய் பாடக் கூடச் செய்தாள்.

அறையிலிருந்த டி.வி.யில் சேனல்களை மாற்றிக் கொண்டிருந்த ஜூலியட் தோழியின் முகபாவத்தைக் கவனித்தவாறு,

"என்னடி.. பாட்டெல்லாம் பலமாய் இருக்கு.. என்ன பாட்டு இது?" பவித்ரா சத்தமாய் பாடினாள்.

"நாம் ஒருவரை ஒருவர் சந்திப்போமென்று

காதல் தேவதை சொன்னாள்.. ஊம்.. ஊம்.. ஊம்..

என் இடது கண்ணும் துடித்தது.

உன்னைக் கண்டேன் இந்நாள் பொன்னாள்."

"இடது கண் துடிப்பதில் இவ்வளவு விஷயம் இருக்கிறதா? நான் ஏதோ நரம்புக் கோளாறுன்னுதானே இத்தனை நாளாய் நினைத்திருந்தேன்." குப்புறப் படுத்தபடி கால்களை மாற்றி மாற்றி ஆட்டிக் கொண்டிருந்த ஜூலியட் கூறினாள்.

"நினைப்பாய்... நினைப்பாய்... நீ எது வேண்டு மானாலும் நினைப்பாய்" என்றபடி பவித்ரா அறைக் கதவைத் திறக்கப் போனாள்.

"பவித்ரா..." என்று ஜூலியட் அழைக்கவும் நின்று கேட்டாள்.

"என்னடி...?"

"உன் இடது கண்ண துடித்ததா?"

"வாட்... இது என்னடி கேள்வி?"

"சும்மா கேட்டேன். சும்ம்ம்மா... போ."

இவளுக்கு என்ன ஆயிற்று என்று ஜூலியட்டை விசித்திரமாய் பார்த்தபடி கதவைத் திறந்து ஹாலுக்கு வந்த பவித்ராவிற்கு ஜூலியட் ஏன் அப்படிக் கேட்டாள் என்பது விளங்கியது.

ஹாலின் சோபாவில் அமர்ந்து காபி குடித்துக் கொண் டிருந்தான் அஜய். ஒரு கணம் தன் கண்ணையே நம்ப முடியாமல் கண்ணைக் கசக்கிக் கொண்டு உற்றுப் பார்த்தாள்.

அது அஜய்தான். எதிரே நின்று கொண்டிருந்த மாட சாமியிடம் ஏதோ கேட்டுக் கொண்டிருந்தவன் மாடசாமி யின் பார்வையின் மாறுதலை உணர்ந்து திரும்பிப் பார்த்தான்.

பவித்ராவைக் கண்டதும் ஒன்றுமே நடவாதது போல் எழுந்து நின்று "ஹலோ..." என்றான். பவித்ராவின் உதடு துடித்தது. இவன் எங்கே இங்கே வந்தான் என்ற கேள்வி மனதில் ஓடும்போதே.. அவள் உடலில் ஓர் பரவசம் உதிப்பதை அவளால் உணர முடிந்தது.



ஓர் முறை தான் அவனைப் பார்த்தாள். அன்றே அவள் ஆவியோடு ஒன்றிப் போய் விட்டான் அவன். அவனைத் திரும்பவும் காண முடியுமா? என்று தவித்துக் கிடந்த வளின் எதிரே அவன் நிற்கிறான்.

அஜய் அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்தான். அவன் பார்வையின் வேகம் தாங்காமல் பவித்ரா உதடு கடித்து தலை குனிந்தாள்.

"என்னங்க... பேச மாட்டீங்களா... நான் ஹலோ சொன் னேனே..." அவளையா 'வாங்க போங்க' என்று மரியாதை யாய் விளிக்கிறான்? மனம் கதறியது. கண்களில் நீர் மல்க ஜன்னல்புறம் பார்த்தவாறு,

"எப்போதும் போலவே பேசலாம்.. புதிதாய் மரியாதை யெல்லாம் எனக்குக் கொடுக்க வேண்டாம்..." என்று கூறினாள்.

அஜய்யின் விழிகள் மின்னின.

"அது எப்படி..? அடுத்த வீட்டுப் பெண்? மரியாதை கொடுக்க வேண்டாமா?" வம்புக்கு இழுத்தான் அவன்.

"பழி வாங்குகிறீர்களா? எனக்கு அதெல்லாம் தெரி யாது. எப்போதும் போலவே பேசினால் பதில் பேசுவேன். இல்லையென்றால்..."

"கட் பண்ணி விடுவாய்... அப்படித்தானே" என்ற அஜய் அவள் துடித்துப் போய் பார்க்கவும் மனம் இளகி விட்டான்.

"பேச்சை கட் பண்ணி விடுவாய்ன்னு சொன்னோன்... என்னை நீ கட் பண்ணி விட்டதை... ஐ மீன்... என் உறவை கட் பண்ணி விட்டதைச் சொல்லவில்லை." மெல்ல அவளருகில் நெருங்கி நின்றான்.

"நீங்கள் எப்படி இங்கே...?"

"ஏன் வந்தாய்ன்னு கேட்காமல் எப்படி வந்தாய்ன்னு கேட்கிறாய். பரவாயில்லை.. ராம்குமார் உன்னிடம் சொல்லவில்லையா?"

"இல்லையே..."

"எனக்குக் கொடைக்கானலில் ஒரு வாரம் தங்க வேண்டிய வேலை இருக்கிறது. போன வாரம் தற்செயலாய் ராம்குமாரைப் பார்த்தேன். நீங்கள் இங்கே தங்கியிருப்பதாய் சொல்லி அட்ரஸ் கொடுத்தார். பழகின பாசம். ஒரு நாள் தான் பார்த்தேன். ஏதோ பல காலம் பழகியது போல் ஓர் உணர்வு... சொந்தம்தான் வேண்டாம் என்று சொல்லிவிட்டாய்... இருந்தும் வந்து பார்த்து விட்டுப் போகலாமென்று ஏனோ மனதில் தோன்றியது... இது என்ன மாதிரியான பந்தம் என்றுதான் தெரியவில்லை... அதுதான் வந்திருக்கிறேன். ம்ம்.. வீடு மிகவும் அழகாக இருக்கிறது.. உன் வீடா?"

அஜய் விட்ட சரடில் மாடசாமி 'ஆ'வென்று வாய் பிளந்தான். உண்மையில் அஜய் வந்தது கொடைக்கானலில் உள்ள நண்பர் வீடுகளுக்கு திருமண அழைப்பிதழ் கொடுப்பதற்காக முதல் நாள் இரவே வந்து விட்டான். 'அன்பே வா' படத்தில் வருவது போல் அவனுடைய அறை அவனுக்காக காத்திருக்க, வந்து உண்டு உறங்கிடும் விட்டான். அதிகாலையில் ஜூலியட்டை போனில் அழைத்து சந்தித்து அழைப்பிதழ் கொடுத்து விட்டான்.

"வாவ்... இன்விடேஷனே இவ்வளவு சூப்பரா இருக்கே.. கல்யாணம் எப்படி இருக்கும்? அசத்தறீங்க அண்ணா..."

"பின்னே... முதல் நாள் நிச்சயம் பண்ணும்போது பிடித்திருக்கிறதுன்னு சொல்லி சைட் அடித்துவிட்டு...



முத்தம் கொடுக்க உனக்கையாய் கையை நீட்டி விட்டு... மறுநாள் போனில் ரொமான்ஸ் பேசிவிட்டு... அதற்கு மறுநாள்..

ஏதோ வில்லனிடம் ஹீரோயின் கெஞ்சுவது போல் 'என்னை விட்டு விடுங்கள்'ன்னு அதே சூப்பர் சுந்தரியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேனே... எல்லாம் சூப்பராய்த்தான் இருக்கும்."

அஜய் கூறியதைக் கேட்ட ஜூலியட்டிற்குச் சிரிப்பு வந்து விட்டது.

"ஆனாலும் பவித்ராவும் பாவம்தான் அண்ணா."

"அப்படின்னா நான் பாவம் இல்லையா..."

"இதோ பாருங்கள் அண்ணா.. காதலித்தேன்.. கல்யாணம் முடித்தேன்னு இருக்கிறது உங்களைப் போன்ற ஹீரோக்களுக்கு அழகா? வில்லனைப் பந்தாடி விட்டு ஹீரோயினைக் காப்பாற்றி கைப்பிடிக்க வேண்டும். அந்த வகையில் உப்பு சப்பில்லாத உங்கள் காதல் கதைக்கு பவித்ரா உயிர் கொடுத்தாளே... அவளைப் பாராட்ட வேண்டும்."

"எதற்கு? என் வீட்டிலேயே ஒளிந்து மறைந்து நான் தங்குவதற்காகவா?"

"ஒளிந்து மறைந்து ஏன் தங்க வேண்டும்? ரைட் அன்ட் ராயலாய் நான் உங்களை இங்கே தங்க வைக்கிறேன்."

"எப்படி?"

ஜூலியட் வழி சொன்னாள். அதன்படி ராம்குமார் அழைத்த விருந்தாளியாய் பவித்ராவிடம் கதை பேசினான்

அஜய். அதைக் கேட்டு மாடசாமி வாய் பிளக்க ராக்காயி உற்சாகமானாள்.

'ஆஹா... எஜமானரும் ரகசிய வேலை செய்கிறாரா.'

''ஏன் புள்ள... இது என்ன ஐயா இப்படி ஒரு கதை சொல்கிறார். ஏற்கனவே கட்டிக்கப் போற பொண்ணுக்குக் கல்யாணம் நடக்குமுன்னு தெரியாது... நீயும் சொல்லா தேன்னார்... சரின்னோம்... இப்ப சொந்த வீட்டிலேயே விருந்தாளி போல் வந்து நிற்கிறார். என்னடி கூத்து இது'' மனைவியிடம் ரகசியக் குரலில் வினவினான் மாடசாமி.

அவ்வளவுதான். ராக்காயி புளகாங்கிதமடைந்து விட்டாள். அவளது மாமன் அவளிடம் ரகசியக் குரலில் பேசுகிறானா? இது கூட இவனுக்குத் தெரியுமா? என்னவோ காதல் வேகத்தில் காதோரம் அவன் கிசுகிசுத்த மாதிரி நாணிக் கோணி வெட்கப்பட்டவள், அவனை விட ரகசியக் குரலில் பதில் சொன்னாள்.

''யோவ்... அதெல்லாம் அவங்களுக்குள்ள இருக்கிற விளையாட்டுய்யா... நாம இதையெல்லாம் கண்டுக்கக் கூடாது. அந்த அம்மா முகத்தைப் பாரேன்... அப்படியே சொக்கிப் போய் நிக்குது... ஐயாவோட முகத்தைப் பார். கிறங்கிப் போயில்ல நிக்கறாரு... நல்ல சோடிய்யா இது. நடக்கறதை வேடிக்கைப் பார்ப்போம்.''

''ஆமாம் புள்ள... ரெண்டு பேத்தையும் பாத்தா பெருமாளையும் லட்சுமியையும் சேத்துப் பாத்தாப்புலதான் இருக்குது...'' மாடசாமி ரசித்துக் கூற,

''எந்தப் பெருமாளுய்யா... நம்ம பால்காரப் பெருமாளா?'' என்று ராக்காயி சந்தேகம் கேட்டு வைத்தாள்.



அவ்வளவு நேரம் குணசாலியாய் பேசிக் கொண்டிருந்த மாடசாமிக்கு கோபம் தலைக்கேறியது.

''கூறு கெட்டவளே... எதுக்கும், எதுக்கும் முடிச்சுப் போடற... ஞானசூன்யம்... உன்கிட்டப் போய் பழமை பேச வந்தேன் பார்.. என் புத்தியை...'

''புத்தியா... அது உனக்கு இருக்கா?... யோவ்.. உனக்கு இல்லாததப் பத்தி நீயேன் பேசற?''

சண்டை மூண்ட அதே சமயம் ஜூலியட் குரல் கொடுத்தபடி வந்தாள்.

''என்ன ராக்காயி... மாடசாமிக்கு மண்டகப்படி நடத்தறே... என்ன விஷயம்?''

''மனுஷன் ஏதோ தன்மையாய் பேசதுன்னு பார்த்தால் தலைகீழா இல்ல பாயுது...''

ராக்காயி புகார் பண்ணினாள்.

''அப்படியா... ஏன் மாடசாமி தலைகீழா நின்னால் குடல் பிரண்டுவிடப் போகுது... எதுக்கு விஷப் பரீட்சை...?'' ஜூலியட் மாடசாமியைத் தூண்டினாள்.

''ஆமாம்மா... இவள் பெரிசா நேராய் நின்று கிழிச்சாள். படிக்காத கூதரைக்கு சாமியையும் தெரியல்ல...'' சாமி பேரும் தெரியல்ல.. பெரிசா பேச வந்திட்டா.'' ஜூலியட்டின் முன்னால் தன் வீரத்தைக் காட்ட ஆசைப்பட்ட மாடசாமி வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டான்.

''தா... இப்ப ஏன் வேட்டியை மடக்கறே... ஆம்பளை வீரத்தை ஒரு பொம்பளை கிட்டக் காட்ட வந்துட்டியாக்கும். ஐயா வந்திருக்கார். அவரு கிட்ட உன் வண்ட வாளத்தை தண்டவாளத்தில் ஏத்திடுவேன்னு வை. அப்புறம் கொடைக் கானலில் நீ குப்பை கொட்ட முடியாது... உன் நெய்காரன்

பட்டியில் போய் உழவு மாட்டை விரட்டனும். ஆமா சொல்லிட்டேன். நீ பொண்டாட்டியை நல்லா வச்சிருக் கேன்னு ஐயா நினைச்சுக்கிட்டு இருக்கார்... உன் மரி யாதையை காப்பாத்திக்க... அதை விட்டுட்டுப் பொண் டாட்டி முன்னாலே ஷூடு கட்டினேன்னு வை... அப்புறம் நான்.. நானா இருக்க மாட்டேன்."

தனியாக அடித்து நொறுக்கியிருந்தாலும் ராக்காயி பொறுத்துப் போயிருப்பாள். ஜூலியட்டின் முன்னால் அவன் எகிறவும் ஒரு பிடி பிடித்து விட்டாள். அஜய் இருக்கவும் மாடசாமி காற்றுப் போன பலூனாய் அடங்கி விட்டான்.

"ஏன் புள்ள... இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு இப்படிக் கோவிச்சுக்கறே. ஏன்... நான் உன்கிட்ட கோவிச் சுக்கக் கூடாதா... எனக்கு உரிமையில்லையா." ஜூலியட் டின் முன்னாலேயே அவன் ராக்காயி தோள் மேல் கை வைத்துக் குழையவும் அவளுக்கு வாயெல்லாம் பல்லாகி விட்டது.

"போ மச்சான்... உனக்கு கோவிச்சுக்கவும் நேரம் காலம் கிடையாது. கொஞ்சிக் குழாவவும் நேரம் காலம் தெரி யாது... அம்மா முன்னாலேயே மேல கை போடறியே... கையை எடுமச்சான்.." அவன் கையை எடுக்க முடியாமல் தன் கையை அவன் கை மேல் வைத்துக் கொண்டு ஜூலியட்டை வெற்றிப் பார்வை பார்த்தாள் ராக்காயி.

"வாரே... வாஹ்... ராக்காயி... உங்க ஐயாவும் பவித் ராவும் போடற லவ் *சீனை*யெல்லாம் உங்க லவ் *சீன்* தூக்கிச் சாப்பிட்டு விட்டது... உன்னை என்னமோன்னு நினைத்தேன். பயங்கர கைகாரியாய் இருக்கிறாயே... நடத்து, நடத்து."



ஜூலியட் அஜய்யின் அருகே போய் நின்றாள். பவித்ரா அஜய்யின் முகம் பார்க்கவும், நிலம் பார்க்கவுமாக மாறி மாறி விழி சுழற்றிக் கொண்டிருந்தாள். காலை நேர வானம் செம்மையா? இல்லை அவளது கன்னச் சிவப்பு செம்மையா என்ற ஆராய்ச்சியில் அஜய் இருந்தான்.

ஜூலியட் தொண்டையைச் செருமினாள்.

## 20



அஜய் நிதானத்திற்கு வந்தான். பவித்ரா இன்னும் முகம் சிவந்தாள்.

"என்ன சார்... பேச்சு வார்த்தை பலமாய் இருக்கு" ஜூலியட் கேலியாய் விசாரித்தாள்.

"நாங்கள் எங்கே பேசினோம்?" அஜய் பவித்ராவைப் பார்த்துக் கொண்டே ஜூலியட்டிற்குப் பதில் சொன்னான்.

"கேள்வி கேட்டது நான்... என்னைப் பார்த்துப் பதில் சொல்லுங்கள்..." ஜூலியட் நமட்டுச் சிரிப்புச் சிரிக்க பவித்ரா தவித்துப் போனாள்.

"பார்த்தாலும்... பார்க்கா விட்டாலும்.. பதில் உங்களுக் குத்தானே..." அஜய் அப்போதும் பவித்ராவை விட்டு பார்வையை அகற்றவில்லை.

"அது சரி... பார்வையிலேயே பல கதைகள் பேசிக் கொள்வதை கவிதையிலும் கதையிலும் தான் படித்திருக்

கிறேன். இப்போதுதான் நேரடியாய் பார்க்கிறேன்'' பவித்ராவின் தோள் மீது கை போட்டுக் கொண்டவள்,

"எங்கே சார் தங்கியிருக்கிறீர்கள்?'' என்று அறியாதவள் போல் கேட்டாள்.

''இப்போது தான் நான் சொன்னேன். நினைவில்லையா?'' அஜய் பொய் கூற விரும்பாமல் சாமர்த்தியமாய் பதில் கொடுத்தான்.

''ஆமாம்... ஆமாம்... மறந்து விட்டேன் பார்த்தீர்களா? பவித்ரா... நீ காலை தூக்கம் போட்ட போது நான் காலாற நடந்து வரலாம்ன்னு வாக்கிங் போனேன். அப்போது தான் சாரைப் பார்த்தேன்... நம் வீட்டிற்கு வர என்னிடமே வழி கேட்டார்... யாருன்னு விசாரித்தால்... நம்ம சார்...''

ஜூலி கதை அளக்க இடம் பார்த்து ராக்காயி உள்ளே புகுந்தாள்.

''ஏம்மா.. அதுவரை சாரை யாருன்னே உங்களுக்குத் தெரியாதுல்ல...''

''ஆமாம் ராக்காயி. சார் யாருன்னே எனக்குத் தெரியாது...''

''உங்ககிட்ட இந்த வீட்டுக்கு வழி தெரியாமல் சார் வந்து கேட்டாரில்ல.''

''ஆமாம் ராக்காயி. அவர் என்ன இந்த வீட்டை முன்ன பின்ன பார்த்தவரா? வழி அவருக்கு எப்படித் தெரியும்? பாவம்.''

ராக்காயி ஜூலியட்டின் விழிகளில் தெரிந்த ரகசிய பாஷை கண்டு சந்தோசம் அடைந்தாள். அஜய் தன் பேண்ட் பாக்கெட்டில் கையை விட்டுக் கொண்டு தன்



வீட்டில் தானே விருந்தாளியாய் நிற்கும் விந்தையை எண்ணி நொந்து கொண்டு ஜூலியட்டை 'போதுமே..' என்பது போல் ஓர் பார்வை பார்த்தான்.

''பவித்ரா.. சொல்ல மறந்து விட்டேன்.. நீ தூங்கிக் கொண்டிருக்கும் போது உன் அண்ணா எனக்குப் போன் பண்ணினார். அஜய் சார் வேலை முடியும் வரை இந்த வீட்டில் இருக்கச் சொல்லச் சொன்னார்.''

''இங்கேயா... இவரையா... அண்ணனா சொன்னார்?'' ஆனந்தத் திகைப்புன் கேட்டாள் பவித்ரா.

''உன் அண்ணனே தான் சொன்னார்... தெரியாத ஊர்.. துணைக்குத் தெரிந்த ஆள் இருந்தது போலவும் இருக்கும்ன்னு சொன்னார்... என்ன சார்... உங்களுக்கு ஒன்றும் அப்ஜெக்சன் இல்லையே...'' நேற்றுப் பிறந்த குழந்தை போல் முகத்தை வைத்துக் கொண்டு ஜூலியட் வினவினாள்.

''உங்கள் சிநேகிதிக்கு அப்ஜெக்சன் இல்லையென்றால் எனக்கும் இல்லை'' அஜய் பவித்ராவின் முகம் பார்த்தான்.

பவித்ரா என்ன சொல்வதென்று தெரியாமல் தடுமாறினாள்.

''ஓ.கே. ஜூலியட். நான் இங்கே தங்குவதில் உங்கள் பிரண்டிற்கு விருப்பமில்லை போல் தெரிகிறது. நான் கிளம்புகிறேன்'' அஜய் கிளம்புவது போல் வாசல் பக்கம் திரும்ப பவித்ரா அவசரமாய்,

''இல்லை.. இல்லை.. போய் விடாதீர்கள்...'' என்று அலறி விட்டாள்.

அஜய்யின் கண்களும் ஜூலியட்டின் கண்களும் சந்தித்துக் கொண்டன. அஜய்யின் முகத்தில் பெருமிதம்

வந்தது. இது அவனது முதல் படி.. போகப் போக பவித்ராவின் மனதை முழுவதும் தன் பக்கம் திருப்பி விடலாமென்ற நம்பிக்கை அவனுள் முளைத்தது. ஜூலியட் தோழியைப் பரிவாகப் பார்த்தாள்.

"அப்போ... சாரை இங்கேயே தங்கச் சொல்லி விட லாமா பவித்ரா?"

"அண்ணனே சொல்லி விட்டாரே... அப்புறம் என்ன?"

"ஓ.கே. மாடசாமி.. சாருக்கு அந்த ஸ்பெஷல் கெஸ்ட் ரூமைக் காட்டு. நீ போய் சாரின் பெட்டி படுக்கைகளை எடுத்து வந்துவிடு. ராக்காயி.. நீ சாருக்கு என்ன பிடிக் கும்ன்னு கேட்டு சமையலில் அசத்து..." ஜூலியட் சுறுசுறுப்பாய் உத்தரவிட்டாள்.

அஜய் தன் ரூமின் பக்கம் கால் வைத்தவன் நின்று பவித்ராவைப் பார்த்து,

"தேங்க்ஸ்..." என்றான்.

"எதற்கு?" பவித்ரா தடுமாற்றத்துடன் கேட்டாள்.

"இடம் கொடுத்ததற்கு" என்ற அஜய் 'மனதில்' என்று தன் மனதோடு சொல்லிக் கொண்டான்.

அஜய் அவன் அறைக்குள் சென்றுவிட பவித்ராவிற்கு உலகமே அழகாக மாறி விட்டது போல் தோன்றியது. அவள் மனதில் பிறந்த உணர்வுகளை அசை போட, அனுபவிக்க அவளுக்குத் தனிமை தேவைப்பட்டது. பவித்ரா அறைக் குள் சென்று கதவை அடைத்துக் கொண்டாள்.

ராக்காயி எதிரும் புதிருமாய் அறைகளுக்குள் சென்று அடைபட்டுக் கொண்ட அந்த இருவரையும் மாறி மாறிப் பார்த்தவள்,



"இது என்னம்மா அதிசயமா இருக்கு. சொல்லி வச்சது போல் ரெண்டு பேரும் ரூமுக்குள் போய் கதவை அடைச்சுக்கிட்டாங்க" என்று ஜூலியட்டைப் பார்த்துக் கேட்டாள்.

"அதுவா.. ராக்காயி ரெண்டு பேரும் ரகசியக் கனா காணப் போயிருக்காங்க..." ஜூலியட் அங்கிருந்த சோபா வில் அமர்ந்து கொண்டே ராக்காயியைப் பார்த்துக் கூறி னாள்.

"என்னது... 'கனா' கேள்விப்பட்டிருக்கேன். அது என் னம்மா ரகசியக் கனா..." ராக்காயி ஜூலியட்டின் அருகே தரையில் அமர்ந்து கொண்டு கேட்டாள்.

"ஏன் ராக்காயி... உன் மாமன் உன்னைத் தூக்கிப் போய் தாலி கட்டினாரே உன் இஷ்டமில்லாமல் தூக்கிப் போனாரா..."

"அதுசரி... என் இஷ்டமில்லாமல் என் மேல் விரல் பட்டிருந்தாலும் அந்த விரலை வெட்டிப் போட்டிருக்க மாட்டேனா? எனக்கும் அதும் மேலதான் இஷ்டம். இல்லாட்டி என்னைத் தூக்கிப் போக அது என்ன மதுரை வீரனா? ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியாது. என்னைத் தூக்க அதுக்கு ஏது அம்புட்டு தெனாவட்டு... எல்லாம் கூப்பிடுற மாதிரி கூப்பிடறதுதான்... இஷ்டமில்லாதது மாதிரி நாம ஜம்ப் பண்ணி அது தோளில் தொத்திக்கிறது தான். எல்லாம் நாடகம்தான்."

"பாருய்யா... இதில் இவ்வளவு கதை இருக்கிறதா? அதை விடு... ராக்காயி... கல்யாணத்திற்கு முன்னால் உன் மாமனைப் பத்தி நினைப்பியா?"

"போம்மா.. இதையெல்லாம் கேட்டுக்கிட்டு."

"ஐ... ஐ... வெட்கத்தைப் பாரு... அப்படி நினைச்சியே அதற்குப் பெயர் தான் ரகசியக் கனவு."

"அடி ஆத்தி... இதில இம்புட்டு விசயம் இருக்கா."

"ஆமாம்.. பின்ன என்னன்னு நினைத்தே? இப்பச் சொல்லு அவங்க ரெண்டு பேரும் ரூமுக்குள்ள அடை வாங்களா? மாட்டாங்களா?"

"என்னவோம்மா.. தனித்தனியா அடையறவங்க ஒன்னா ஒரே கூட்டுக்குள்ள அடையனும்... அதுதான் எனக்கு ஆத்தாமையா இருக்கு."

"நாம் எதுக்கு இருக்கிறோம்? சரி பண்ணிடலாம்."

"நீங்க சொல்லிட்டிங்கன்னா செய்துருவீங்கம்மா."

"அப்படியா? தனியாய் பேசினால் புகழ்கிறாய்... உன் மாமன் முன்னால் எதிரி போல் பார்க்கிறாய்... என்ன விஷயம்?"

"அதுவாம்மா... அதுக்கு நான் படிக்கலைன்னு ஒரு எண்ணம். உங்களை மாதிரி படிச்ச பொண்ணுங்க முன்னாலே என்னை மட்டம் தட்டும். லேசா நினைச்சுப் பேசும். அதால..."

"பொறாமை...? ம்ம்! இதற்கும் ஒரு வழி பண்ணலாம்."

சற்று நேரத்தில் அஜய் உடை மாற்றி வெளியே வந்தான். ஜூலியட்டைப் பார்த்து.

"பிரண்ட்ஸ்க்கு இன்விடேஷன் வைத்து விட்டு வந்து விடுகிறேன்" என்றான்.

ஜூலியட் தலையாட்டி விட்டு அவனுடன் பேசியபடி அவன் காரருகே சென்றாள். அவன் கை அசைத்து விட்டுக் கிளம்பினான். பதிலுக்கு கை அசைத்து விட்டு ஜூலியட்



உள்ளே வரும்போது பவித்ரா எதிரே வந்து கொண்டிருந் தாள்.

"என்ன பவித்ரா... தூங்கினாயா? ஆளையே காணோம். அஜய் இப்போதுதான் வெளியே கிளம்பிப் போனார்..." ஜூலியட் கூறினாள்.

"பார்த்தேன்..." என்றாள் பவித்ரா முறைப்புடன்.

"என்ன பார்த்தாய்?" ஜூலியட் வியப்புடன் வினவி னாள்.

"அவர் உனக்கு டாடா சொன்னதையும்... நீயும் பதி லுக்கு டாடா சொல்லி வழி அனுப்புவதையும் பார்த் தேன்..." பவித்ரா முறைத்தாள்.

'ஆ... நீ அப்படி வருகிறாயா?' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட ஜூலியட், ராக்காயி அங்கு வரவும் அவள் முகம் பார்த்துக் கண்ணடித்தாள். ரகசிய சமிக்ஞை புரிந்ததும் உற்சாகமாய் ராக்காயி தயாரானாள்.

"என் ராக்காயி... இப்ப இங்கே தங்கியிருக்க வந்திருக் கிறாரே அஜய்.. அவரைப் பற்றி என்ன நினைக்கிற?"

ஜூலியட்டின் கண் பேசிய பாஷை புரிந்த ராக்காயி பதில் கூறினாள்.

"என்னம்மா இப்படிக் கேட்கறீங்க.. அவர் அழகென்ன.. படிப்பென்ன... அவரைக் கட்டிக்க எந்த மகராசிக்கு கொடுத்து வச்சிருக்கோ."

"அவர் பேசுகிற அழகை இன்று பூராவும் பார்க்கலா மில்ல ராக்காயி?"

"அவர் நடக்கிற அழகை விட்டுட்டிங்களே... ராஜநடை யில்ல..."

"அவர் சிரிக்கிற அழகிருக்கே.. ச்ச்ச்..."

"அவர் முறைச்சா மட்டும் குறைஞ்சா இருக்கார்?"

"இப்படி ஒருத்தரிடம் பேசிப் பழக சந்தர்ப்பம் கிடைத்தால் நீ விட்டு விடுவாயா ராக்காயி?"

"ம்ஹூம்... ஆசையிருந்து என்னம்மா செய்ய? எனக்குத்தான் என்னைத் தூக்கிப் போய் தாலிகட்டின மாமன் இருக்குதே..."

"ஹை.. ஜாலி.. எனக்கு நடத்திப் போய் மோதிரம் போட்ட மாமன் கூட இல்லை. எனக்கு லைன் கிளியரா இருக்கு.. நீ என்ன சொல்கிற ராக்காயி...?"

"நீங்கதான் தரை மேலயே கப்பல் விடுற ஆளாச்சே... ஜமாய்ங்கம்மா.. உங்க பாடு.. அவர் பாடு..."

பவித்ரா அழுதே விடுவாள் போலத் தோன்ற பொங்கும் சிரிப்பை அடக்கிக் கொண்ட இருவரும் அங்கிருந்து நழுவிப் பின் பக்கம் போய் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

"ஹோ.. ஹோ... அம்மா... வயித்தை வலிக்குதே" ராக்காயி வயிற்றைப் பிடித்துக் கொண்டாள்.

"இந்த மக்கு இருக்கிறாளே. இவளுக்கு அஜய் மேல் அப்படி ஒரு காதல்.. பைத்தியம் மாதிரி பினாத்திவிட்டு விழிக்கிறாள்" கோபத்துடன் கூறினாள் ஜூலியட்.

"அடி மேல் அடி அடித்தால் அம்மியே நகரும்."

"அதை விட நமக்கு வேறு என்ன வேலை? நாலு பக்கமும் தாக்குதல் நடத்தி விட மாட்டோம்..? என்ன சொல்கிறாய்?"

"நீங்க சொன்னால் மாட்டேன்னா சொல்லப் போறேன்?"



"உன் மாமன் சொன்னால் மட்டும் மாட்டேன் என்பாய்..."

"அது கேட்கிற லட்சணம் அப்படி.. உருப்படியாய் கேட்காது."

அதே நேரம் முன்னறையில் அமர்ந்து நகம் கடித்துக் கொண்டிருந்த பவித்ராவின் முன்னே அஜய் வந்து நின்றான்.

# 21



நகம் கடித்துக் கொண்டிருந்த பவித்ரா அஜய்யை புரியாமல் பார்த்தாள்.

"என்ன அப்படிப் பார்க்கிறாய்?" அஜய் வினவினான்.

"இப்போதுதான் டாட்டா.. பைபை சொல்லிவிட்டுப் போனீர்கள். உடனே வந்து விட்டீர்களே. இதற்கா அத்தனை டாட்டா?" எரிச்சலுடன் வினவினாள் பவித்ரா.

"யாருக்கு டாட்டா சொன்னேன். ஓ... ஜூலியட்டிற்கு சொன்னதைச் சொல்கிறாயா? யார் நம் மேல் அக்கறை காட்டுகிறார்களோ... அவர்களிடம் தானே சொல்லி விட்டுப் போகத் தோன்றும்?" விசித்திரமான முறுவலுடன் வினவினான் அஜய்.

"அக்கறை காட்டினால் அவர்கள்தான் உயர்த்தியா? மற்றவர்கள் வேண்டாதவர்களா?" அழ மாட்டாத குறையாய் வினவினாள் பவித்ரா.

"வேண்டியவர்கள் என்றால் எனக்குத் துணை வந்திருப்பார்களே... ஐ மீன்.. வாசல் வரையாவது துணைக்கு வந்திருப்பார்களே..." பதிலுக்கு வினவினான் அஜய்.

வினாக்களுக்கு வினாக்களே விடையாக அவர்கள் பேசிக் கொண்டிருப்பதை அறியாமல் அடுத்த வினாவை தொடுத்தாள் பவித்ரா.

"ஸோ... துணைக்கு வருகிறவர்கள்தான் உயர்த்தி என்கிறீர்களா?"

"இல்லை... என்கிறாயா?"

"சரி.. இப்போது ஏன் வந்தீர்கள்?"

"முக்கியமான பைல் ஒன்றை எடுக்க..." அஜய் ஒரு வழியாய் விடையைச் சொல்லி வினாத் தொடுப்பதை நிறுத்தி வைத்தான்.

"நான் எடுத்துத் தரவா?" என்று கேட்டபடி அங்கே வந்தாள் ஜூலியட். ராக்காயி கனகாரியமாய் ஒரு துணியை எடுத்துக் கண்ணாடி பொம்மையின் மேல் இல்லாத தூசியை துடைத்தவாறு நடப்பதை நோட்டம் விட்டாள்.

"ஏன் அவருக்கு கால் இல்லையா... அவரே போய் எடுத்துக் கொள்வார்..." பவித்ரா அஜய்யைப் பார்த்த பார்வையில் 'நீயே போய் எடுத்துக் கொள்' என்ற கட்டளை இருந்தது.

வாய்க்குள் சிரிப்பை அடக்கிக் கொண்ட ஜூலியட்டைப் பார்த்து ஓர் நன்றிப் பார்வையை வீசி விட்டு அஜய் தனது அறைக்குள் சென்றான்.

பவித்ரா ஜூலியட்டை மிதப்பாய் ஓர் வெற்றிப் பார்வை பார்க்க அவள் கைகளை விரித்துத் தோளைக் குலுக்கினாள்.



அஜய் இன்விடேஷன்கள் அடங்கிய தோள்பையை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

"ஜூலியட்... இங்கே நான்கைந்து பேரைப் பார்க்க வேண்டும். பேச்சுத் துணைக்கு வருகிறீர்களா..." அஜய்யின் முகத்தில் குறும்பு இருந்தது.

"ம்ம்.. அதற்கென்ன.." என்று ஜூலியட் ஆரம்பிக்கும் போதே.

"வேண்டாம்.. ஜூலியட் தலைவலிக்கிறது என்று சொன்னாள்" என்று அவர்கள் எதிர்பார்த்தது போலவே பவித்ரா ஊடே பேசினாள்.

"நான் எப்போதடி அப்படிச் சொன்னேன்" ஜூலியட் சண்டைக்கு வந்தாள்.

"இப்போதுதானே. தலையைப் பிடித்துக் கொண்டு இருந்தாய்" பவித்ரா காதல் வந்தால் கள்ளம் வந்து விடும் என்பதை மெய்ப்பித்தவளாய் வாதாடினாள்.

"நோ.. நோ.. மிஸ்டர் அஜய்.. எனக்குத் தலைவலி இருந்தாலும் உங்களுடன் வந்தால் பஞ்சாய் பறந்து விடுமே..." ஜூலியட் கொஞ்சும் குரலில் கூறினாள்.

"ஏன் பவித்ரா... ஜூலியட்டின் தலைவலி மேல் அவ்வளவு அக்கறை இருந்தால் நீயே என் கூட வரலாமே.." அஜய் பட்டென்று தேங்காய் உடைத்தது போல் கேட்டு விட்டான்.

"நான்... நானா..." பவித்ரா தடுமாறினாள். பேச வார்த்தைகள் இல்லாமல் குரல் நலிந்தது.

"நீ... நீதான்" அவள் பாணியிலேயே பேசிய அஜய்,

"ஒன்று நீ துணைக்கு வா... இல்லாவிட்டால் துணைக்கு வருகிறவர்களைத் தடுக்காதே... ஜூலியட்" அஜய் கோபமாய் திரும்ப முனைய,

"ஏன்... நான் வர மாட்டேனா.. வருவேன்..." தனக்குத் தானே தைரியம் சொல்லிக் கொள்பவள் போல் சொல்லிக் கொண்டு பவித்ரா எழுந்து கொண்டாள்.

ஜூலியட்டின் மனதில் ஆனந்தம் பிறந்தது. ராக்காயியைப் பார்த்து ரகசியமாய் கட்டை விரலை உயர்த்திக் காட்டினாள்.

பவித்ரா காரின் பின் பக்கக் கதவைத் திறக்க முயல அஜய் அதை மூடிவிட்டு முன்புறக் கதவைத் திறந்து விட்டான். பவித்ரா தயக்கத்துடன் ஏறி அமர்ந்து கொண்டாள். கார் கிளம்பியது.

கொடைக்கானலின் சாலையில் கார் ஓட இருபுறமும் தெரிந்த இயற்கையின் அழகை ரசித்தவாறு பவித்ரா மனதின் போராட்டத்தை மறந்தவளாய் சீட்டில் சாய்ந்து அமர்ந்து கொண்டு வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள். அதைக் கடைக் கண்ணால் கவனித்தான் அஜய்.

"கொடைக்கானலை சுற்றிப் பார்த்தாயா?"

"எங்கே...? வீட்டைத்தான் சுற்றிச் சுற்றி வருகிறேன்..."

"ஏன் பார்க்க வேண்டியது தானே...?"

"பயமாய் இருக்கிறது" மனதில் இருப்பதை மறைக்காமல் கூறினாள் அவள்.

காரை ஓட்டிக் கொண்டிருந்தவனின் முகம் இறுகியது.

"எதற்குப் பயம்?" என்று அதட்டினான் அவன்.

'சுகுமாரன் வந்து விடுவான் என்ற பயம்' என்று சொல்ல முடியாமல் அவள் மௌனம் சாதித்தாள்.

"பதில் சொல்ல மாட்டாயா...?"

"என்னவோ... பயமாய் இருந்தது."



"போகட்டும்... இன்று என்னுடன் சுற்றிப் பார்க்கலாம்..."

"நீங்கள் வேறு வேலையாய் கிளம்பினீர்களே.."

"நாளைக்குப் பார்த்துக் கொள்கிறேன்."

அவன் வண்டியை அருவியின் பக்கம் செல்லும் சாலையில் திருப்பி நிறுத்தினான். இருவரும் இறங்கி அருவியின் எதிரேயிருந்த பாலத்தின் மேல் நடந்தார்கள். குளிர் மழைச் சாரல் தெறிக்க அருவி கொட்டிக் கொண்டிருந்தது. பாலத்தின் ஓரத்தில் சூடான பஜ்ஜிகளை சுட்டு விற்றுக் கொண்டிருந்தனர். மாங்காய் பத்தைகள் வேறு நாவில் நீரை ஊற வைத்தன. அஜய் மாங்காய் பத்தையை வாங்கிக் கொடுக்க அதை வாங்கிச் சுவைத்த வண்ணம் அருவியின் அருகே சென்றாள் பவித்ரா. முகத்தில் ஈரக் காற்று அடிக்க அவள் அதை ரசித்து அனுபவித்ததைப் பார்த்த அஜய்,

"இந்த அருவி பழைய சினிமாப் படத்தின் பாடல் காட்சி ஒன்றில் வருகின்றது தெரியுமா?" என்று கேட்டான்.

"என்ன பாட்டு அது?"

"வெண்ணிற ஆடைன்னு ஒரு பழைய படம். அதில் 'அம்மம்மா.. காற்று வந்து ஆடை தொட்டுப் பாடும்' என்ற ஓர் பாடல்.. அது இங்கே எடுத்ததுதான்."

"பி.சுசீலா பாடிய பாட்டுத்தானே அது. எனக்கு ரொம்பவும் பிடிக்குமே... இப்போது நினைவுக்கு வருகிறது."

அடுத்துக் காரை உயர்ந்த யூகலிப்டஸ் மரங்கள் அடர்ந்த பகுதிக்குச் செலுத்தினான். மரங்களுக்கிடையே மக்கள் கூட்டம் போய் வந்து கொண்டிருந்தது.

"இங்கே என்ன இருக்கு?"

"வானைத் தொடும் மரங்கள் இருக்கு... வா..."

அவள் கையை இயல்பாகப் பிடித்து அழைத்துச் சென்றான்.

மேடும் பள்ளமுமான மலைப் பகுதியில் அவன் கை பிடிக்காமல் போவது கடினம் என்பதால் அவளும் கையை விலக்கிக் கொள்ளவில்லை.

"இதுதான் 'குணா' படத்தில் வரும் குகை."

அவன் காட்ட பாறைகளின் இடுக்கில் தெரிந்த அந்தக் குகைப் பகுதியைப் பார்த்தாள் அவள்.

"பயமாய் இருக்கிறது..."

"எதற்கெடுத்தாலும் பயமா..?" அவள் கையை இன்னும் இறுகப் பிடித்துக் கொண்டான் அஜய்.

அந்தக் குளிர் காற்றுக்கே பசிக்குமோ என்னவோ... பவித்ராவிற்கும் பசித்தது. நடந்து போய் திரும்பி வந்ததில் சோர்வாய் உணர்ந்தவள். அங்கு சாய்ந்து விழுந்து கிடந்த பெரிய மரத்தின்அடியின் மேல் அமர்ந்து கொண்டாள். சற்றுப் பொறுத்து அவள் அருகே வந்து அமர்ந்த அஜய்,

"இந்தா சாப்பிடு" பிளாஸ்டிக் தட்டு ஒன்றை நீட்டினான்.

"என்ன இது..." ஆவலாய் வாங்கிக் கொண்டே கேட்டாள் அவள்.

"பிரெட் ஆம்லெட்" அவன் சாப்பிட்டவாறே பதில் கூறினான்.

நிமிடத்தில் சாப்பிட்டு முடித்து அங்கே ஓடிய கால்வாயில் கைகழுவி நிமிர்ந்த பவித்ராவிற்கு தெம்பு வந்திருந்தது.

"இப்போது போகலாமா?"



"ம்ம்..."

கார் கிளம்பி 'பில்லர் ராக்' எனப்படும் தூண்பாறையை அடைந்தது. தூண் வடிவத்தில் அமைந்திருந்த பாறையை ரசித்தவர்கள் அடுத்து 'சூசைட் பாயின்ட்' எனப்படும் 'தற்கொலை முனை'யை பார்க்கச் சென்றனர்.

"ஆக்கவலா.. இது அழகான இடம்.. எல்லோரும் தற்கொலை பண்ணிக்கத் தூண்டுகிற மாதிரி பெயர் இருக்குன்னு சொல்லி இதற்குப் 'பசுமைப் பள்ளத்தாக்கு' என்று புதிய பெயர் வைத்திருக்கிறார்கள். யாரும் அருகே போய் விடாமல் பாதுகாப்பு வேலியும் போட்டிருக்கிறார்கள்." அஜய் விவரிக்கும்போது பவித்ரா மெதுவாய் அந்தப் பள்ளத் தாக்கை எட்டிப் பார்த்தாள்.

அதன் ஆழம் அச்சுறுத்தியது. தலையைச் சுற்றி மயக்கம் வருவது போல் இருக்க அருகிலிருந்த அஜய்யை இறுகப் பிடித்து அணைத்து அவன் தோளில் முகம் புதைத்துக் கொண்டாள்.

பயத்தில் அவள் உடல் நடுங்குவதை உணர்ந்தவன் ஆதரவாய் அவள் முடி கோதி தன் கரங்களால் அரவணைத்துக் கொண்டான்.

## 22



காரில் வந்து அமர்த்திய பின்னும் பவித்ராவின் முகம் தெளியாமல் இருக்க அஜய் அவள் தோள் மேல் கை

போட்டு அமைதிப்படுத்தினான். இந்த நெருக்கத்தில் ஒன்றை பவித்ராவின் மனம் உணர்ந்தது. அவனது தொடு கையில் அவள் விலகவில்லை. அவனுடன் ஒன்றி நடந் தாள். எனில் இது உணர்த்துவது என்ன? அஜய்யை 'யாரோ' வென்று அவளால் விலக்க முடியாது என்பதைத்தானே...

'கோக்கர்ஸ் வால்க்ஸ்' பாதையில் இருவரும் அரு கருகே நடந்தபோது இருவரின் மத்தியிலும் மௌனம் குடி கொண்டிருந்தது.

"வீட்டிற்குப் போகலாம்" என்றாள் பவித்ரா.

"அதற்குள்ளாகவா...? பக்கத்தில்தான் போட்டிங் போக ஏரி இருக்கிறது... மறு பக்கம் பூங்கா..." அஜய் எடுத்துச் சொன்னான்.

''நாளைக்குப் பார்க்கலாமே...'' பவித்ரா இயல்பாய் கூறினாள்.

''ஓ.கே...'' அஜய் உற்சாகத்துடன் திரும்பினான்.

திரும்பி வரும்போது கார் ஏதோ மக்கர் செய்ய இறங்கி காரின் பேனட்டைத் திறக்க அஜய் முயற்சி செய்யும் போது திடீரென்று மழை பொழிய ஆரம்பித்தது. அவசர மாய் காரில் ஏறிக் கொண்டவன் காரின் கண்ணாடிக் கதவுகளை ஏற்றி விட்டான்.

மழை கொட்ட ஆரம்பித்தது. கார் சாலையின் ஓரமாகத் தள்ளி நிறுத்தப்பட்டிருந்தது. கார்கள் போய்க் கொண்டும், வந்து கொண்டும் இருந்தன. மழைத் துளிகள் காரின் முன் பக்கத்தை மறைத்து தாரை தாரையாய் வழிய ஆரம் பித்தது.

அஜய்யின் மனதில் அது உறைத்தது. மழை பொழியும் மாலை நேரத்தில் கொடைக்கானலில் பூட்டிய காருக்குள்



அவனும் அவனது காதலியும் தன்னந் தனிமையில்... மெல்லத் திரும்பிப் பக்கவாட்டில் அவளது முகம் பார்த்தான். அவள் கைவிரல் நகங்களை கவகாரியமாய் ஆராய்ந்து கொண்டிருப்பதிலிருந்து அவளும் தடுமாறு கிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது. அஜய்யின் உடலும் மனமும் கிளர்ச்சியுற்றன. மெல்ல அவளருகே நெருங்கி அமர்ந்தான் அவன். அவள் முகம் சிவக்க முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவள் தோள் மேல் கை போட்டு அவள் முகத்தைத் தன் புறம் திருப்பினான் அவன். அவளது கூந்தல் வாசம் அவன் மனதை மயக்கியது. அவள் நெற்றி யில் மென்மையாய் இதழ் பதித்தான். அவள் தொய்ந்தாள்.

''வேண்டாம் அஜய்...''

''ஏன்...?''

''இது தவறு...''

''எது?''

''ப்ளீஸ் அஜய்... ப்ளீஸ்...''

அவள் மறுப்பை லட்சியம் செய்யாமல் அவன் கன்னத்தில் தன் சூடான இதழ்களைப் பதித்தான் அஜய்.., பவித்ரா விம்மினாள். விம்மலோடு அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். அஜய்யின் கைகள் அவளை இறுகத் தழுவின. ஒருவரிடமிருந்து ஒருவர் விலக முயலாமல் இழைந்து கொண்டிருந்த அந்நேரத்தில் பவித்ராவின் உதடுகள் அஜய்யின் காதோரம் முணுமுணுத்தன.

''நான்.. வாக்குக் கொடுத்திருக்கிறேன்... அஜய்.''

''முட்டாள்.. அது பொய்யான வாக்குறுதி...''

''இல்லை... உண்மையாம். சாந்தி சொன்னாள்.''

"இல்லையென்று நான் சொல்கிறேன்."

அஜய்யின் உடலில் கனன்று கொண்டிருந்த தாபம் கணப் பொழுதில் அடங்கியது. பவித்ராவை விட்டு விலகி அமர்ந்தான்.

"என்னால்தானே..." பவித்ராவின் மனம் அரற்றியது. வெளியே மழை விட்டிருந்தது. அஜய் இப்போது காரைக் கிளப்ப அது சுவாதீனமாய் கிளம்பியது. அஜய் எரிச்சலுடன் முணுமுணுத்தான்.

"காரும் என்னை சோதிப்பதிலேயே குறியாய் இருக்கிறது. நல்லா ஓடிக்கிட்டு இருக்கும். திடீர்னு என்ன காரணம்ன்னு கண்டுபிடிக்க முடியாமல் நின்று விடும்."

அவனது குத்தல் மொழிகள் புரிந்தும் மௌனம் சாதித்தாள் பவித்ரா. வீடு தூரத்தில் கண் பார்வையில் பட்டது.

"நாளைக்கு மீதி இடங்களைப் பார்க்கலாம் என்றாயே.. நாளைக்கும் வருவாயா?"

பவித்ராவின் காதில் அது விழுந்ததாகத் தெரியவில்லை. அவள் தொலை தூரத்தில் விண்ணையும் மண்ணையும் இணைத்த தொடுவானத்தை வெறித்துக் கொண்டு இருந்தாள். அஜய் கோபத்துடன் கார் பிரேக்கில் காலை வைத்து அழுத்தினான். ஒரு குலுக்கலோடு கார் நின்றது. பவித்ரா உடல் தூக்கிப் போட தன்னுணர்வுக்கு மீண்டாள்.

"நான் கேட்டது காதில் விழுகவில்லையா?"

"என்ன கேட்டீர்கள்?"

"அதைக் கூடக் கவனிக்காமல் என்ன வெட்டி யோசனை?"



"ஏதோ யோசித்துக் கொண்டிருந்தேன்."

"நாளைக்கும் என்னுடன் வெளியே வருவாயான்னு கேட்டேன்."

"வந்தால் உங்களுக்குத்தான் கஷ்டம்."

"எனக்கு என்ன கஷ்டம் வரும்..."

"இப்போது போல் ஆகிவிடும்."

"இப்போது என்ன ஆகி விட்டது?"

அவள் முகம் சிவக்க கண்கள் கலங்க திரும்பிக் கொண்டாள். இன்பமும் துன்பமும் ஒரு சேரத் தாக்க அந்தத் தாக்குதலைத் தாங்க இயலாமல் தவித்தாள். அஜய்யின் மனதில் கோபம் குறைந்து அவள் மேல் இரக்கம் சுரந்தது.

"உன் பிரச்னைதான் என்ன? என்னிடம் மனம் விட்டுப் பேசு பவி... எல்லாமே சரியாகி விடும். முதலில் என்னை நம்பு.. அடுத்து உன்னை நம்பு.. உன்னால் யாருக்கும் கெடுதல் பண்ண முடியாதென்று நம்பு."

"எப்படி என்னை நானே நம்புவது? என்னால் ஒரு உயிருக்கு ஆபத்து நேர்ந்தது... அதைக் காப்பாற்ற என்னையறியாமல் வாக்குறுதியும் கொடுத்து விட்டு அந்த வாக்குறுதியையும் பொய்யாக்கினேன்.. வாக்குத் தவறினேன்."

"உன்னையறியாமல்.. என்று நீயே சொல்கிறாய்.. அறியாமல் செய்த வாக்குறுதிக்கு நீ எப்படிக் கட்டுப்பட்டவள் ஆவாய்?"

"வாக்குறுதியை அறியாமல் கொடுத்து விட்டேனென்று தெரிந்த பின்னும் அதைச் சரி பண்ண முடியாமல் இருப்பது தவறில்லையா?"

அஜய்யின் முகம் சுருங்கியது. இவள் என்ன சொல்ல வருகிறாள்? இன்னும் பத்து தினங்களில் அவனுக்கும்

அவளுக்கும் திருமணம் நடக்கப் போகிறது. இவள் இப்படிப் பிதற்றிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?

''தவறை சரி செய்ய என்ன செய்யப் போகிறாய்?'' கடுமையாகக் கேட்டான் அஜய். அவன் விழிகள் சிவந் திருந்தன.

''எனக்குத் தெரியவில்லை'' அவள் பரிதாபமாய் கூறி னாள்.

''இதோ பார் பவி.. என் பொறுமைக்கும் ஓர் எல்லை இருக்கிறது.''

''இதையேதான் அவனும் சொன்னான்.''

''எவன்?''

''சுகுமாரன்.''

''அவன் பெயரை ஏன் சொல்லுகிறாய்? அவனை ஏன் நினைக்கிறாய்?''

''நான் எங்கே அவனை நினைத்தேன்? அவன் தானே என்னை நினைத்துக் கொண்டிருப்பதாய் கூறுகிறான்?''

''யார் வேண்டுமானாலும் உன்னை நினைத்தேன்னு சொன்னால் நீ கேட்டுக் கொண்டு நிற்பதா?''

''இவன் வெறுமனே சொன்னபோது விரட்டி விட்டேனே. ஆனால் இவன் விஷத்தைக் குடித்து விட்டானே.''

''அதனால் அவன் மேல் பரிதாபம் வருகிறதா?''

''என் மேல் தான் குற்றமென்று குற்ற உணர்ச்சி வரு கிறது.''

''தேவையில்லாத குற்ற உணர்ச்சி.. உன் மேல் ஒரு தவறும் இல்லை.''



''அது யாருக்குத் தெரியும்?''

''முதலில் உனக்குத் தெரியுமா?... உனக்கே தெரிய வில்லையே.''

''ஐ டோன்ட் நோ.. பட் ஒன் திங்க்... உங்களுடன் சந் தோசமாக என்னால் இருக்க முடியுமென்று தோன்ற வில்லை., ஏதோ குற்றம் செய்வதைப் போல் மனம் பதைக்கிறது. உங்கள் பக்கம் என் மனம் முழுவதும் சாய்ந்து விட முயற்சிக்கும் போது அவன் நினைவு குறுக்கே வந்து தடுக்கிறது. ஐ ஆம் ஸாரி. என்னால் உங்களுக்குத்தான் வீண் தொந்தரவு. நீங்கள் ஜூலியைக் கூப்பிட்டு வந்து இருக்கலாம். அவள் கலகலப்பாய் பேசிக் கொண்டாவது இருந்திருப்பாள்.''

''முட்டாள். ஜூலியட் எனக்குத் தங்கை போல... அவளுக்கும் எனக்குமிடையே இருப்பது அண்ணன் தங்கை பாசம்'' சினந்தான் அஜய்.

''இருக்கலாம்.. என் பிரண்ட்டைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அவள் மிகவும் நல்லவள்... பட் அஜய்... அண்ணன் என்ற பாசத்தோடு கூட உங்களிடம் என்னை விட அதிக உரிமையை அவள் எடுத்துக் கொள் வதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை..'' மனதை மறைக்காமல் உரைத்தாள் பவித்ரா.

''இதிலிருந்தே உன் மனம் உனக்குப் புரியவில்லையா பவி..'' அஜய் அவளிடம் நெருங்கி அமர்ந்து அணைக்க முயன்றான்.

''என் மனம் எனக்குப் புரிந்ததால்தான் தவிப்பு அதிகமாகிறது...'' அவனிடம் இருந்து விலகி அமர்ந்தாள் பவித்ரா.

அவன் கோபத்துடன் பல்லைக் கடித்தான். முகம் கல்லைப் போல் இறுகி விட,

"ஏன் விலகுகிறாய்... என்னிடம் இருந்து தப்பித்து யாரிடம் செல்லப் போகிறாய்... சுகுமாரனிடமா?" என்று கேட்டு விட்டான்.

பவித்ரா துடித்து விட்டாள். இப்படி ஓர் எண்ணம் அவளுக்குள் உதித்ததே இல்லையே... அஜய்யுடன் சந்தோசமாய் இருக்க முடியாமல் நெஞ்சில் ஓர் நெருஞ்சி முள் குத்தி ரணமாக்குவதால்தானே விலகினாள்? அஜய்யிடம் இருந்து தன் கற்பைக் காப்பாற்றி சுகுமாரனிடம் அர்ப்பணம் செய்வதற்காகவா விலகினாள்? நினைக்கும்போதே அருவெறுப்பில் குமட்டிக் கொண்டு வந்தது அவளுக்கு.

முதன் முதலில் அவளின் பெண்மையை வெற்றி கொண்ட ஆண் மகனின் வாயிலிருந்து இத்தகைய வார்த்தைகளைக் கேட்க அவள் என்ன பாவம் செய்தாள்? இதுதானா அவளது காதலுக்குக் கிடைத்த பரிசு?

பவித்ரா கார்க் கதவைத் திறந்து கொண்டு இறங்கினாள். மழை நேர கொடைக்கானலின் குளிர் காற்று அவள் உடலை சல்லடையாக்கித் துளைத்தது. வீட்டை நோக்கி நடையில் விரைவு கூட்டி நடந்தாள் அவள்.

அஜய் பதறிப் போய் இறங்கி அவள் பின்னால் ஓடி வந்து வழியை மறித்தான். அவனை லட்சியம் செய்யாமல் அவள் விலகி நடந்தாள்.

"பவி... இங்கே பார்... நான் அப்படிக் கேட்டிருக்கக் கூடாதுதான். நான் கேட்டது தப்புத்தான். இந்த கிளைமேட்டில் ஸ்வெட்டர் கூட இல்லாமல் நடக்காதே... காரில் வந்து ஏறு."



அவன் கெஞ்சல் வார்த்தைகள் அவள் காதுகளில் ஏறவில்லை.

"இந்தக் கோட்டையாவது போட்டுக் கொள்.. குளிர் தாங்கும்."

தன் கோட்டைக் கழற்றி அவளுக்கு போட்டு விட அவன் முயல அவள் தட்டி விட்டுவிட்டு மடமடவென்று நடந்தாள். அஜய் அவளுடன் வாதாடிக் கொண்டே உடன் நடக்க வீடு வந்து விட்டது.

கீழ்வானில் ஒன்றாய் பறந்த பறவைகள் இரண்டும் கிழக்கு மேற்காய் பிரிந்து பறந்தன.

## 23



அப்போதுதான் சால்வையைப் போர்த்திக் கொண்டு சுடச்சுட காபியை உறிஞ்சியபடி சோபாவில் காலை மடித்து அமர்ந்து டி.வி.யைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜூலியட். அருகே ராக்காயி அமர்ந்து சீரியலை விமர்சித்துக் கொண்டிருந்தாள்.

"ஆ.. இந்த சீரியலை வையும்மா.. பாவம்.. அந்த மருமகப் பொண்ணு.. அதை என்ன பாடுபடுத்துது பாரு இந்த மாமியார்..."

"நீயும் ஆரம்பிச்சுட்டியா? மாமியார் மருமகள்ன்னால் சண்டை தான் போடணுமா. நாம் வேறு சேனலைப் பார்க்கலாம்..." ஜூலியட் சேனலை மாற்றினாள்.

"இதைப் போடும்மா.. ரெண்டாம்தாரத்தோட பேச்சைக் கேட்டுக்கிட்டு முதல் தாரத்தை என்னமா கொடுமைப் படுத்தறான் தெரியுமா? பாவிப்பயல்."

"ஈஸிட்... அப்புறம் அந்தப் பாவிப் பயலை எப்படிப் பனிஷ் பண்ணினாங்க?"

"மூணாந்தாரம் ஒன்னையும் அவன் கட்டிக்கிறான். கடைசியில் மூணாந்தாரமும், முதல் தாரமும் ஒண்ணாச் சேர்ந்து ரெண்டாம் தாரத்தை அடக்குறாங்க."

"அப்பவும் ரெண்டாம் மனைவியைத் தான் பனிஷ் பண்றாங்க. முதல் மனைவி உயிரோடு இருக்கும்போது இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்புன்னு அந்த புருஷன்காரனைத் தூக்கி உள்ளே போட வில்லை...?"

"கதைதானேம்மா."

"கதையில் சட்ட மீறுதல்களும் தவறான வழிகாட்டு தலும் வரக்கூடாது ராக்காயி. சினிமாவைக் கூட நாம் தேடிப் போய் பார்க்க வேண்டும். டி.வி. சீரியல்கள் நம் வீட்டு ஹாலுக்குள் நாம் தினசரி பார்க்கிற நம் வாழ்வின் தினப்படிக் கடமைகளில் ஒன்றாகி விட்டது. பெண்களை அவமதிக்கும், பெண்களுக்கு மிகப் பெரிய கொடுமை இழைக்கும் வழக்கம் பல மனைவிகள் கட்டுவது, பலதாரத் தடைச் சட்டம் வந்த பின்னாலும் டி.வி. சீரியல்கள் இதை இயல்பான ஒன்றாக.. நாம் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாகச் சித்தரிப்பது சட்ட மீறல். இதை நாம் சகித்துக் கொள்கிறோம்."

"என்னமோம்மா.. நீங்க சொல்றது எதுவுமே எனக்கு விளங்கலை."



"ராக்காயி.. இப்போது உன் மாமன் மாடசாமி உன்னை விட்டுவிட்டு நீ உயிரோடு இருக்கும்போதே இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்டாருன்னு வை நீ என்ன செய்வே?"

"அந்த ஆளை... ஒரே வெட்டில் இரண்டு கூறாய் வெட்டிப் போடுவேன்."

"எந்த ஆளை..."

"என் மாமனைத்தான்."

"அந்த ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கிட்ட பெண்ணை வெட்ட மாட்டாயா?"

"ஏம்மா.. நான் உயிரோடு இருக்கும்போது இன்னொரு தாரம் கட்ட அலைஞ்சது இந்தப் பாவிதானம்மா..."

"பார்த்தாயா உனக்கு நடக்கிறது என்பதை பேச்சுக் குக்கூட உன்னால் தாங்க முடியவில்லை. அதையே டி.வி. சீரியல்களில் நடக்கிறது என்றால் எந்தவிதமான அப்ஜெக் ஷனும் இல்லாமல் விழுந்து விழுந்து ரசிக்கிறாய். இதில் விமர்சனம் வேறு செய்கிறாய்..."

அந்த நேரம் பார்த்து மாடசாமி எதையோ கேட்டுக் கொண்டு வர... பலதார நினைவில் இருந்த ராக்காயி... அவனை 'வெட்டவா இல்லை குத்தவா' என்பது போல் முறைப்பாய் பார்த்தாள். அவள் பார்வை விளங்காதவனாய் அவன்,

"ஏன்டி ராக்காயி... என் அத்தை மகள் போட்ட கடி தத்தைப் பார்த்தியா" என்று கேட்டு வைத்தான். அவ் வளவுதான் பொங்கி வெடித்து விட்டாள் ராக்காயி.

"பார்த்தேன்... பார்த்தேன். எல்லாத்தையும் பார்த்துக்கிட் டுத்தான் இருக்கேன். இங்க நான் ஒருத்தி கல்லுக்

குண்டாட்டம் இருக்கும்போது அத்தை மக ரத்தினம் போட்ட கடுதாசி வேணுமா உனக்கு. யோவ்.. இந்த ராக்காயியைப் பத்தித் தெரிஞ்சுக்கிட்டே ஆட்டம் போட்டேன்னு வை.. தாங்க மாட்டே."

"அட யாருடி இவ.. சுத்த விவரம் கெட்ட சிறுக்கியாய் இருக்கிறா.. ஏன்டி இப்ப நான் என்னத்தைக் கேட்டுப் புட்டேன்? படிக்காதவ நீ... கடிதாசியைப் பார்த்து விஷயம் புரியாமல் கிழித்து வைக்கப் போறியேன்னு நினைச்சுக் கேட்டால் இந்தக் குதி குதிக்கிறவ...?"

"ஓகோ... நான் கைநாட்டுக்கேசு.. உன் அத்தை மகள் எழுதப் படிக்கத் தெரிஞ்சவ.. உனக்கு கடுதாசு எழுதற அளவுக்கு இருக்கிறா.. மனசுக் கழுதையை தறி கெட்டு அலைய விட்ட நான் சும்மா இருக்க மாட்டேன்."

மாடசாமி ஜூலியட்டைப் பரிதாபமாகப் பார்த்து தஞ்சம் புகுந்தான்.

"ஏம்மா... இப்ப நான் என்ன செஞ்சுப்புட்டேன்?"

"ஒன்றுமே செய்யக் கூடாதுன்னு அவளுக்குப் பயம். ஏன் மாடசாமி. உன் அத்தை மகள்... அதுதான் இப்ப உனக்குக் கடிதம் போட்டிருக்கிறதே... இந்த அத்தை மகள் கல்யாணம் ஆகாத பெண்ணா?"

"அட நீங்க வேறம்மா. அது என்னை விட ஐஞ்சாறு வயசு மூத்ததுங்க. மூணு புள்ளைக இருக்குது. என் ஆத்தா வீட்டுக்குப் பக்கத்து வீடு. என் ஆத்தா சொல்லச் சொல்ல இது லெட்டர் எழுதித் தரும். அதைத்தான் கேட்டேன்."

"ராக்காயி இது அநியாயம். உன் மாமன் சொன்னதைக் கேட்டாயா."

"கேட்டேன்.. கேட்டேன்.. இன்னைக்கு வயசுக்கு மூத்த அத்தை மக எழுதின கடுதாசி வரும். நாளைக்கு



வயசில இளமையா எவளாவது மாமன் மக எழுதிப் போடுவா. இவ கைநாட்டுக் கேசுதான்னு கடுதாசியை உடைச்சேன்னு வை. கையை முறிச்சு அடுப்பில் விறகுக்குப் பதில் வைத்து எரிச்சுருவேன்..."

"கூல் டவுன் ராக்காயி... கூல் டவுன்.. பயங்கரமான சண்டையாய் இல்ல உன் சண்டை இருக்கு. போன ஜென்மத்தில் கசாப்புக் கடைக்காரியா இருந்தாயா? வெட்டுவதிலேயே குறியாய் இருக்கிறாய்."

ஜூலியட் அவர்கள் இருவரையும் சமாதானப் படுத்திக் கொண்டு இருந்தபோது பவித்ரா வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே பிரவேசித்தாள்.

"என்ன ராக்காயி இவள் 'ரோபோ' மாதிரி நடந்து வருகிறாள். பவித்ரா என்னடி ஆச்சு. ஏன் இப்படி நடந்து வருகிறாய்" ஜூலியட் எழுந்து பவித்ராவின் கையைப் பிடிக்க அது 'சில்'லென்றிருந்தது.

"என்னடி உடம்பு இப்படிச் சில்லிட்டிருக்கிறது" ஜூலியட் பதறிக் கொண்டு இருக்கும்போது அஜய் உள்ளே வந்தான்.

"காரில் வரமாட்டேன்னு பிடிவாதமாய் நடந்து வந்தால் வேறு எப்படி இருக்கும்? மாடசாமி.. போய் காரை எடுத்துக் கொண்டு வா."

மாடசாமி அவசரமாய் வெளியே செல்ல ராக்காயி ஓடிப்போய் சூடாய் காபி கொண்டு வந்தாள். பவித்ரா அதற்குள் அவளது அறைக்குள் போய்விட ஜூலியட் காபியை வாங்கிக் கொண்டு பின்னாலேயே சென்றாள். கட்டிலில் சுருண்டு படுத்திருந்த பவித்ராவின் அருகே அமர்ந்து எழுப்பினாள்.

"எழுந்திரு பவித்ரா... இந்தக் காபியை சூடாய் குடி.. கொஞ்சம் குளிர் விடும்."

இயந்திரம் போல் காபியைப் பருகிய பவித்ரா மீண்டும் கட்டிலில் சுருண்டு படுத்துக் கொள்ள கனமான கம்பளியைக் கொண்டு அவளுக்குப் போர்த்தி விட்ட ஜூலியட் அறையில் ஹீட்டரைப் போட்டு விட்டு வெளியே வந்தாள்.

ஹால் சோபாவில் தலை மேல் கை வைத்து அமர்ந்திருந்த அஜய்யின் எதிரே வந்து அமர்ந்த ஜூலியட்,

"என்ன அண்ணா நடந்தது?" என்று விசாரித்தாள்.

"என்னவென்று சொல்வது? பேச்சு வாக்கில் ஓர் வார்த்தை சொல்லி விட்டேன். கோபித்துக் கொண்டு இறங்கி நடந்து வந்து விட்டாள்..."

"அது என்ன வார்த்தையென்று நான் கேட்க மாட்டேன். அது உங்களிருவருக்குமான பெர்சனல். பட்... அண்ணா.. நீங்கள் பவித்ராவை இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை... சொல்லாத வாக்குறுதிக்காக துயர் பட்டு தன் வாழ்வையே குலைத்துக் கொள்ள இருந்தவள் அவள். அவளிடம் போய் யோசிக்காமல் பேசி விட்டீர்களே.. வெண்ணெய் திரண்டு வரும்போது பானையை உடைத்த கதையாய் வந்து நிற்கிறீர்களே.. எவ்வளவு நாடகமாடி அவளை உங்களுடன் அனுப்பினேன். என் உயிர் தோழி என் மீது பொறாமைப்படும்படி பேசினேன். உங்களை அண்ணா என்று கூப்பிட்டுக் கொண்டே அவளது பொறாமையைத் தூண்டி விட்டேன். இவ்வளவும் எதற்காக? உங்களிருவருக்கும் தனிமையை உண்டு பண்ணுவதற்காக... அழகான மலைச் சூழலில் தனிமையில் பேசிப் பழகினால் உங்கள் சங்கடங்கள் தீர்ந்து ஒன்று சேர்வீர்கள் என்று பார்த்தால்.. இப்படி ஆகிவிடாதே.."



"ஒன்றும் ஆகாது ஜூலி... நாளை அவளுடன் பேசுகிறேன்."

ஆனால் இரவு உணவுக்கு பவித்ராவை அழைக்கப் போகும் போதே அவள் உடல் அனலாய் கொதிப்பதைக் கண்டார்கள். காய்ச்சல் வேகத்தில் உளறினாள் அவள். உடல் தூக்கித் தூக்கிப் போடப் பதறினாள்.

"ஜூலி.. அவருடன் போகாதே... அவருடன் பேசாதே... யு ஆர் மை பெஸ்ட் பிரண்ட்... ஐ பிலிவ் யூ.. பட் ஐ லவ் அஜய்..." என்று கதறினாள்.

"வாக்குக் கொடுத்திருக்கிறேனே.. தெரியாமல் கொடுத்தாலும் வாக்கு வாக்குத்தானே..." என்று கட்டிலின் விளிம்பில் தலையை மோதிக் கொண்டாள்.

ஜூலியட் பதறினாள். பவித்ராவை இறுகப் பிடித்து படுக்க வைத்தாள்.

"அண்ணா ஓடுங்கள்.. டாக்டரைக் கூட்டி வாங்க... இப்படித்தான் அந்த அயோக்கிய ராஸ்கல் விஷத்தைக் குடித்து விட்டான்னு தெரிந்தவுடன் காய்ச்சலில் விழுந்து விட்டாள். அவளை டாக்டரிடம் கூட்டிப் போகிறேன்னு அந்தப் படுபாவி அட்மிட் ஆகியிருந்த ஹாஸ்பிடலுக்கு நானே கூட்டிப் போய் இவளை இந்த நிலைமைக்கு கொண்டு வந்து விட்டேன். இவள் மனம் மென்மையானது அண்ணா.. என்ன வார்த்தை சொன்னீர்களோ இப்படி ஆகிவிட்டாளே..." ஜூலியட் கதறினாள்.

அஜய் வேகமாய் போனை எடுத்துப் பேசினான். சற்று நேரத்தில் டாக்டரின் கார் அவர்களது பங்களாவிற்குள் வந்து நின்றது. மாடசாமி ஓடிப் போய் கார்க் கதவைத் திறந்து விட்டு மருந்துப் பெட்டியை எடுத்துக்

கொண்டான். டாக்டர் தீனதயாளன் அஜய்யின் நண்பனாக இருந்தான்.

"வாட் இஸ் தி மேட்டர் அஜய்? ஹூ இஸ் திஸ் வுமன்?"

"மை வுட்பி."

"வாட்?"

"இன்னும் டென் டேஸில் எங்களுக்குக் கல்யாணம். மேரேஜ் இன்விடேசன் கொடுக்கத்தான் வந்திருக்கிறேன். இன்று உன் வீட்டிற்கு வருவதாக இருந்தேன்."

"அப்புறம் ஏன் வரவில்லை..."

கட்டிலில் படுத்திருந்த பவித்ரா உடலை முறுக்கினாள்.

"ஐயோ... கல்யாணம் நின்று போய் விட்டதா.. என்னால்தானே.. என்னால்தானே.. இனி அஜய்யும் நானும் யாரோவா?" என்று கதறினாள்.

தீனதயாளனின் புருவங்கள் முடிச்சிட்டன. நண்பனைப் பார்த்தான். அஜய் அவனது பார்வையைத் தவிர்த்தான்.

"வாட் இஸ் திஸ் அஜய்? கல்யாணம் நின்று விட்டதா? அதனால்தான் இவங்க மனம் பாதிக்கப்பட்டிருக்கிறதா?"

அஜய் மறுத்துப் பேச வாயெடுத்தபோது பவித்ரா புலம்பினாள்.

"வாக்குக் கொடுத்தேனா? நானா? இல்லை சாந்தி நான் வாக்குக் கொடுக்கவில்லை.. என்ன ஜூலிக்குத் தெரியுமா? சொல் ஜூலி. நான் வாக்குக் கொடுத்தேனா...?"

ஜூலியட் பவித்ராவின் அருகே செல்ல முயல தீனதயாளன் தடுத்தான்.

"அவர்கள் பேசட்டும். இப்போது அவர்கள் பேசுவது மிக அவசியம்."



பவித்ரா தன் போக்கில் மனதிலிருப்பதைக் கொட்டிக் கொண்டிருந்தாள்.

"யாருக்காக விலகிப் போகிறேன் என்று சொன்னீர்கள் அஜய். சுகுமாரனுக்காகவா? சொல்லலாமா? அப்படி ஓர் வார்த்தையே என்னைப் பார்த்துச் சொல்லலாமா? நான் உங்களைத்தானே காதலிக்கிறேன்... அவனுக்கு வாக்குக் கொடுத்ததாய் சாந்திதானே சொல்கிறாள்."

அஜய் பரிதவிப்போடு பவித்ராவை நெஞ்சோடு அள்ளி அணைத்துக் கொண்டான். நண்பனின் தோள் மேல் ஆதரவாய் தட்டிய தீனதயாளன்

"உன் வருங்கால மனைவிக்கு இருப்பது 'ஊஞ்சலாடும் உள்ளம்' என்று கூறினான்.

## 24



"ஊஞ்சலாடும் உள்ளமா?" ஜூலியட் புரியாமல் கேட்டாள்.

"யெஸ்... ஊஞ்சலாடும் உள்ளம்தான். ஊஞ்சலில் ஆடினால் எப்படியிருக்கும்? நிலையில்லாமல் இங்கும் அங்கும் போய் வந்து கொண்டிருக்கும். உங்கள் தோழியின் உள்ளமும் இப்போது ஊஞ்சலாடுவது போல் நிலையில்லாமல் தவிக்கிறது. ஒன்று மட்டும் நிச்சயம் அஜய்.. ஷி லவ்ஸ் ஒன்லி யு. இதில் ஏதோ தடை வருவதால் வரும் தவிப்புத்தான் இது. டோன்ட் வொர்ரி.."

தீனதயாளன் ஊசி மருந்தைச் செலுத்தியதும் பவித்ரா மெல்ல மெல்ல பிதற்றலை நிறுத்தி உறக்கத்தில் ஆழ்ந்து போனாள். ஜூலியட் மெல்லிய விசும்பலுடன் பவித்ராவின் அருகேயே அமர்ந்திருக்க அஜய் தீனதயாளனுடன் பேசியபடி அவனை வழி அனுப்ப வாசலுக்குச் சென்றான்.

"அவள் மேல் எதுவும் குற்றமில்லை தயாளன்... ஒரு ராஸ்கல்..."

"ஸ்ஸ்... அஜய்.. நான் என்ன மேட்டர்ன்னு கேட்டேனா? உன் வுட்பியின் நிலைமையைச் சொன்னேன். அவ்வளவுதான். உன் பெர்ஸனல் உன்னோடு இருக்கட்டும்."

"தயாளா... அவள் இப்படித் துடிக்கிறாளே."

"நான்தான் சொன்னேனே... அவங்களுக்கு இருப்பது 'ஊஞ்சலாடும் உள்ளம்' என்று. அதைச் சரிப்படுத்தினால் போதும். எல்லாம் சரியாகி விடும்..."

"அதுதான் எப்படி?"

"இப்போது... ஆடும் ஊஞ்சலை நிலை நிறுத்த என்ன செய்வாய்?"

"அதன் ஆட்டத்தை இழுத்துப் பிடித்து நிலையாக நிற்கச் செய்வேன்."

"அதைச் செய் அஜய்."

"விளங்கவில்லையே..."

"அவர்கள் உள்ளத்தை ஓரிடத்தில் நிலைக்கச் செய்... அதாவது உன்னிடத்தில் நிலைக்கச் செய். அவங்க காதலிப்பது உன்னைத்தான். வேறு ஒருவரை அவர்கள் மனம் ஏற்க மறுப்பதால் வரும் ஊசலாட்டம் தான் இது.. இதை அவர்களுக்குப் புரிய வை."



தீனதயாளன் கிளம்பிச் சென்று விட்டான். அஜய்யின் காதுகளில் அவன் கூறிய வார்த்தைகளே எதிரொலித்தன.

'ஊஞ்சலாடும் உள்ளம்.'

அஜய்யின் மனக் கண்ணில் பவித்ரா ஊஞ்சலில் நிற்காமல் ஆடும் காட்சி தோன்றியது. அவளது ஊஞ்சலாட்டத்தை நிறுத்த வேண்டுமே... எப்படி? உள்ளே வந்தவன் தலையைப் பிடித்தபடி சோபாவில் விழுந்தான்.

சமையலறைக்குப் போன மாடசாமி ராக்கம்மா கன்னத்தில் கை வைத்து மூலையில் அமர்ந்திருப்பதைப் பார்த்தான்.

"என் புள்ள... இப்படி எல்லாரும் ஆளுக்கு ஒரு மூலையில் அலையடிச்சு ஒதுங்கினவங்களாட்டம் உட்கார்ந்திருந்தால் எப்படி?"

"வேற என்னத்தைய்யா செய்யச் சொல்ற? ஆக்கி வைச்ச சோத்தை சாப்பிட மனசில்லாம இந்த வீட்டில் அத்தனை ஜீவனும் மனசொடிஞ்சு கிடக்குதுகளே... ஆலமரமாட்டம் நிமிர்ந்து நின்ன நம்ம கலெக்டர் ஐயா ஆசைப்பட்டவளைக் கட்டிக்கிறதுக்கு இம்புட்டு இடைஞ்சலா? மலை போல நம்மை ஆதரிச்ச ஐயா மனசு சரியில்லாம முடங்கிக் கிடக்கிறப்போ நம்ம தொண்டைக்குள்ள மட்டும் எப்படிப் பச்சைத் தண்ணீ இறங்கும்? அந்தம்மாவைப் பாரு... கேலியும், கிண்டலுமா கலகலன்னு வீட்டை நிறைச்ச பொம்பளைப்புள்ள... சிநேகிதிக்கு ஒரு கஷ்டம்ன்னதும் தேம்பித் தேம்பி அழுகுது.. இப்படி ஓர் பாசத்தை என் உடன் பிறப்புக் கிட்டக்கூட நான் பார்க்கலையே..."

"நீ சொல்றதெல்லாம் சரிதான் புள்ள... அதுக்காக நாமளும் இப்படி மூலையில் ஒதுங்கி உட்கார்ந்தா என்ன

ஆகிறது? போ... போய் எல்லோரையும் சாப்பிடக் கூப்பிடு.. அட போ புள்ளங்கிறேன்."

ராக்காயி எழுந்து ஹாலுக்குச் சென்றாள். அஜய் தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவன் கண்கள் கலங்கியிருந்தன.

"என்னம்மா..."

"சாப்பிட வாங்கய்யா.."

"எனக்கு வேண்டாம்மா..."

"இப்படிச் சொன்னால் எப்படிங்க ஐயா.. பாவம்.. அந்த ஜூலி அம்மாவும் பட்டினியாகக் கிடக்குது. நீங்க தானே ஐயா அந்தம்மாவையும் சாப்பிட வைக்கணும். நீங்களே பட்டினி கிடந்தால் எப்படி?"

'அது ஒன்று இருக்கிறதே..' அஜய் எழுந்தான். ஜூலியட் அவனுக்காகவும், பவித்ராவிற்காகவும் ஒரு மாதம் லீவ் போட்டுவிட்டு ஊர் விட்டு ஊர் வந்திருக்கிறாள். அவளைச் சரிவர கவனிக்காமல் தன் துக்கத்தில் ஆழ்ந்து விடுவதா?

"ஜூலி..." அஜய் பவித்ராவின் அறைக் கதவைத் திறந்து அழைத்தான். ஜூலியட் நிமிர்ந்தாள். அழுது அழுது அவள் முகம் வீங்கியிருந்தது.

"சாப்பிட வாம்மா.."

"எனக்கு வேண்டாம் அண்ணா..."

ராக்காயி அப்போது ஊடே குரல் கொடுத்தாள்.

"நீங்க சாப்பிடலைன்னா ஐயா எப்படிச் சாப்பிடுவார்? வாங்கம்மா..."

ஒரு வழியாய் அஜய்யின் பெயரைச் சொல்லி ஜூலியட்டையும், ஜூலியட்டின் பெயரைச் சொல்லி அவனை



யும் சாப்பிட வைத்து விட்டாள் ராக்காயி. அவர்கள் இருவரும் சாப்பிட்டு விட்டுப் போனதும் மாடசாமி மனைவியிடம் வந்தான்.

"பரவாயில்லையே புள்ள... உன்னை என்னமோன்னு நினைச்சேன். படிச்ச புள்ளைகூட திகைச்சுப் போயிரும். நீ அவரு பேரைச் சொல்லி அந்தம்மாவை சாப்பிட வைச்சுட்ட... புத்திசாலிடி நீ."

"என்னய்யா... என்ன சொன்னே.. திரும்பவும் சொல்லு."

"என்னடி... தப்பா எதையும் சொல்லிட்டேனா?"

"அட சொல்லுய்யான்னா..."

"என்னடி இந்தக் கொஞ்சு கொஞ்சுறவ... புத்திசாலின்னேன்."

"ஏய்யா.. எப்பப் பார்த்தாலும் என்னைய கைநாட்டுக் கேஸு"ன்னு தானே சொல்லுவ? இப்ப மட்டும் புதுசா என்ன வந்துருச்சாம்."

"அடிப்போடி போக்கத்தவளே.. எழுதப் படிக்கத் தெரிஞ்சாப் போதுமா? இதையிதை இப்படியிப்படிச் செய்யணும்.. அதையதை அப்படியப்படிச் செய்யணும்கிற அறிவுதான முக்கியம்? அது உங்கிட்ட எம்புட்டு இருக்குன்னு இன்னைக்குத்தான தெரிஞ்சது..."

"க்கும்.. இப்ப மட்டும் என் அருமை பூரா தெரிஞ்சுக்கிட்டயாக்கும்."

"இப்பவாவது தெரிஞ்சுக்கிட்டேன்ல்ல... இதுவும் தெரியாம இத்தனை நாள் ஓட்டிட்டேனே... அதை நினைச்சுப் பாரு."

"என் நினைப்பிருக்கட்டும். நீ உட்காரு சோற்றைப் போடறேன்."

"நீயும் உட்காருடி. சேர்ந்தே சாப்பிடலாம்."

"போய்யா.. நீயும் உன் கரிசனமும்... அந்த பவித்ராம்மா காய்ச்சல் வேகத்தில கண்ணைத் திறக்காமல் கிடக்குது. ஒரு தம்ளர் பாலைக் காய்ச்சி அதைக் குடிக்க வைத்தால்தான் என் தொண்டையில் சோறு தண்ணி இறங்கும் மச்சான்... நீ சாப்பிடு."

ராக்காயி தட்டைப் போட்டு சாப்பாடைப் பரிமாற ஆரம்பிக்க மாடசாமி மனைவியின் அருகே வந்து அவளைக் கட்டிக் கொண்டான்.

"ஏய்... என்ன மச்சான் இது. உன் கிட்ட இது ஒன்னு இருக்கு. உனக்கு வையவும் நேரம் காலம் தெரியாது.. கொஞ்சவும் நேரம் காலம் தெரியாது. விடு மச்சான்."

"எப்பயும் விட இப்பத்தான் புள்ள நீ அழகா இருக்கே."

"இருக்கேனில்ல. எங்கயும் போயிர மாட்டேன். இப்ப ஆளை விடு."

பவித்ராவின் அறைக்கதவை சூடான பாலோடு தட்டினாள் ராக்காயி. கதவு தானாய் திறந்து கொண்டது. கட்டிலில் சோர்வாய் கண் மூடிப் படுத்துக் கிடந்தாள் பவித்ரா. கட்டிலில் பவித்ராவின் அருகே ஜூலியட் கால் மடக்கி உட்கார்ந்திருக்க அஜய் அருகேயிருந்த சோபாவில் அமர்ந்திருந்தான்.

"என்ன ராக்காயி... பால் கொண்டு வந்தாயா?" ஜூலியட் பவித்ராவைத் தூக்கி தன் மேல் சாய்த்துக் கொண்டு குழந்தைக்குப் புகட்டுவது போல் கொஞ்சம் கொஞ்சமாய் குடிக்க வைத்தாள்.

"இப்ப எப்படிம்மா இருக்காங்க..." காலி தம்ளரை வாங்கிக் கொண்டே ராக்காயி கேட்டாள்.



"காய்ச்சல் கொஞ்சம் குறைஞ்சிருக்கு... தூக்கம் தான் இவளுக்குச் சரியான மருந்து. தூங்கி எழுந்தாள் சரியாகி விடுவாள். ஆமாம் நீ சாப்பிட்டியா?" ஜூலியட்டின் விசாரிப்பில் ராக்காயி மனம் நெகிழ்ந்து விட்டாள்.

வேலையாள்களை 'சாப்பிட்டாயா?' என்று எத்தனை பேர் கேட்கிறார்கள்? ராக்காயி பதில் சொல்லும் முன் ஜூலியட் முந்திக் கொண்டாள்.

"நீயாவது.. சாப்பிட்டிருக்கிறதாவது.. வா.. நீ சாப்பிடுகிறாயான்னு செக் பண்ணி விட்டுத்தான் நான் வந்து படுப்பேன்..."

ராக்காயி சமையலறைக்குள் சென்றாள். அப்போதுதான் சாப்பிட்டு முடித்திருந்த மாடசாமி கைகழுவிக் கொண்டிருந்தான். ஜூலியட்டைப் பார்த்ததும்,

"வாங்கம்மா.. இவளைக் கொஞ்சம் சாப்பிடச் சொல்லுங்கம்மா.. கொலை பட்டினியாய் கிடக்கிறா.. சொன்னா கேட்க மாட்டேங்கிறா..." என்றான்.

"இதைப் பாருடா - பெண்டாட்டியை இப்படிக் கவனிக்கறே.. சண்டை போடுவது மாதிரி ரெண்டு பேரும் நடிக்கறீங்களா.." வரவழைத்துக் கொண்ட உற்சாகத்துடன் ஜூலியட் அங்கிருந்த சேரில் அமர்ந்து கொண்டாள்.

ஜூலியட்டின் முகத்தில் சிரிப்பைப் பார்க்கவும் ராக்காயி சந்தோசமாய் சாப்பாட்டைப் போட்டுச் சாப்பிட ஆரம்பித்தாள். அவளின் செயல் கண்டு ஜூலியட்டின் மனம் கனிந்தது.

என்ன மாதிரியான பெண் இவள்? கிராமத்து மனுஷி. மனதில் இருப்பதை வெளியில் கொட்டி விடும் சுபாவம். லேசாய் சிரித்து... துளியளவு அன்பைக் காட்டினால்

சொத்தையே எழுதிக் கொடுத்துவிடும் வெள்ளை மனம் படைத்தவள்.

"என்னம்மா.. அப்படிப் பார்க்கறீங்க?"

"கடைசியில் உன் மாமனை கைக்குள் போட்டு விட்டாய்..."

"போம்மா.. உங்களுக்கு இது வேடிக்கையா இருக்கு. நாளை பின்ன நீங்க கல்யாணம் பண்ணி குடும்பம் நடத்திப் பாருங்க. அப்பப் புரியும். வாழுற காலத்தில் எதாவது ஒரு நிமிசத்தில தாலி கட்டின மனுசன் அவன் பொண்டாட்டி கைக்குள்ள அடங்கித்தான் போவான்."

"அடடா... என்னா தத்துவம்.. என்னா தத்துவம்.. புல்லரிக்குது போ."

"அது சரிம்மா.. அங்கே பவித்ராம்மா தனியாப் படுத்திருக்காங்க நீங்க போங்க. நான் சாப்பிட்டு முடிச்சிட்டேன்."

"அவள் தனியாய் இல்லை ராக்கவி. கூட அஜய்யும் இருக்கார்."

"இருந்தால்..."

"பாவம்... தனியாய் அவளைப் பார்க்கட்டும். அதனால் தான்..."

"புரியுது.. புரியுது.. நீங்க பாட்டுக்கு பேசிக்கிட்டு இருங்க. நான் பாட்டுக்கு இந்தப் பாத்திரத்தை விலக்கறேன்."

பவித்ராவின் அறையில் அமர்ந்திருந்த அஜய் ஜூலியட் எழுந்து போனதும் கட்டிலில் பவித்ராவின் அருகே அமர்ந்தான். தூக்கக் கலக்கத்தில் அவள் புரண்டு அவன் மடியை ஒரு கையால் அணைத்துக் கொண்டு ஒரு பக்கமாய் திரும்பிப் படுத்தாள். அஜய்யின் மனம் கனம் குறைந்து



இளைப்பாறியது. அவள் நெற்றியில் புரண்ட சுருள் கற்றைகளை ஒதுக்கிவிட்டான். அவள் தூக்கத்தில் முணுமுணுத்தாள்.

"அஜய்... ஐ லவ் யூ..."

## 25



அஜய் மெய் சிலிர்த்துப் போனான். ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ் மனம் என்றும் பொய் சொன்னதில்லை. மனோதத்துவ நிபுணர்கள் 'ஹிப்னாடிசத்தை' கையாள முதலில் உறக்க நிலைக்குத்தான் கொண்டு செல்வார்கள். அந்த ஆழ்ந்த உறக்கத்தில் பவித்ரா கூறினாள்.

"அஜய்... ஐ லவ் யூ..."

குனிந்து பவித்ராவின் நெற்றியில் முத்தமிட்டான் அஜய். அவள் மீண்டும் 'ம்ம்' என்று முணுமுணுத்துக் கொண்டு ஒட்டிப் படுத்துத் தூங்கி விட்டாள். கள்ளமில்லாத பிள்ளை முகத்தை பார்த்துக் கொண்டே இருந்த அஜய் அறை வாசல் கதவு நாசுக்காய் தட்டப் படுவதைக் கேட்டு விலக முயன்றான். அதற்குள் ஜூலியட் உள்ளே வந்து விட்டாள்.

"தூங்குகிறாளாண்ணா... தூக்கத்திலும் உங்களை விடாமல் பிடித்துக் கொண்டாள் பார்த்தீர்களா?" இயல்பான குரலில் பேசிய ஜூலியட் பவித்ராவின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.

"காய்ச்சல் முழுவதும் குறைந்து விட்டது..." என்றாள் நிம்மதியுடன். அஜய்யும் தொட்டுப் பார்த்து நிம்மதி அடைந்தான்.

பவித்ராவின் தூக்கம் கலையாமல் அவள் கையை நகர்த்தி வைத்து விட்டு எழுந்தான் அஜய்.

"பார்த்துக் கொள் ஜூலி. குட்நைட்."

"குட் நைட் அண்ணா."

அஜய் வெளியேறியதும் அறைக் கதவைத் தாழிட்டு விட்டு வந்தாள் ஜூலியட். பவித்ராவின் அருகே படுத்து உறங்கிப் போனாள்.

ஆனால் அங்கிருந்து போன அஜய் உறங்கவில்லை. ஆதவனுக்கு போன் பண்ணினான். எடுத்துப் பேசிய ஆதவன் ஆச்சர்யம் தாளாமல்,

"என்னடா.. லேட் நைட்டில் போன் பண்ணியிருக்கிறாயே... எதுவும் சீரியஸாக இல்லாமல் நீ இந்த நேரத்தில் கூப்பிட மாட்டாயே."

"ஆதவா 'ஊஞ்சல்' பார்த்திருப்பாய்.. கேள்விப்பட்டிருப்பாய். 'ஊஞ்சலாடும் உள்ளம்' பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா...?"

"ஊஞ்சலாடும் உள்ளம்...? வாட் இஸ் திஸ்?"

"என் பவித்ராவின் உள்ளம் ஊஞ்சலாடும் உள்ளமாம்"

அஜய் கொடைக்கானலில் நிகழ்ந்தவைகளைக் கூறினான்.

"கவலைப்படாதேடா. நான் இங்கு அந்த சாந்திக்கும் சுகுமாரனுக்கும் பொறி வைத்து விட்டேன். இன்னும் இரண்டு நாள்களில் ஒரு ரிசல்ட் சொல்கிறேன்."

"இரண்டு நாள்களில் என்று எந்த நம்பிக்கையில் சொல்லுகிறாய்?"



"அந்த சுகுமாரன் நாளைக்கு தேக்கடிக்கு பவித்ராவைத் தேடிக் கிளம்புகிறான்."

"இவ்வளவு நாள் என்ன செய்தானாம்."

"அவனே கடனில் இருக்கிறான். தேக்கடியில் தங்க, திங்க பணம் வேண்டாமா? அதை சாந்தி புரட்டிக் கொடுக்க அவளுக்கு டைம் வேண்டாமா?"

"அந்த சாந்தியும் கஷ்டப்படுகிறவள்தானே.. இவன் திடீரென்று பணம் கேட்டால் அவள் என்ன செய்வாள்?"

"கடன் வாங்கிக் கொடுத்திருக்கிறாள்."

"அந்தக் கடனை அவன் வாங்கக் கூடாதா?"

"அவன் வாங்கினால் அவன் தானே திருப்பிக் கொடுக்கணும்?"

"ம்ம்.. இவனெல்லாம் ஒரு பிறவி..?"

"என்னவோ பிறவியெடுத்து விட்டான். நம் வழியில் கிராஸ் பண்ணாமல் விலகிப் போயிருந்தால் பிரச்னை இல்லை. வம்புக்கு வந்து விட்டானே. ஒரு வழி பண்ணாமல் எப்படி விடுவது? அஜய்.. நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே... பவித்ராவின் உடல்நிலையை கவனித்துக் கொள். இரண்டு நாளில் நல்ல செய்தி சொல்கிறேன்..." ஆதவன் போனை வைத்தான்.

விடிந்ததும் அஜய் முதல் வேலையாய் பவித்ராவைப் பார்க்கத்தான் போனான். கட்டிலில் சாய்வாய் அமர்ந்திருந்தாள் அவள். அஜய்யைக் கண்டதும் முதல் நாள் மாலை நேரம் நினைவுக்கு வர முகம் திருப்பிக் கொண்டாள். ஜூலியட்டை அறையினுள் காணோம்.

"என்னிடம் பேச மாட்டாயா?" அஜய் கேட்டான்.

பதில் வரவில்லை.

"கோபமா?"

அதற்கும் பதில் இல்லை.

"ஓ..கே.. என்னை வெறுத்து விட்டாய். ஒரு வாரம் தங்கியிருக்கலாம்ன்னு நினைத்தேன். உனக்குத்தான் என்னுடன் பேசப் பிடிக்கவில்லையே.. அப்புறம் நான் எதற்கு இங்கு இருக்க வேண்டும்? இப்போதே கிளம்பு கிறேன்.." அவன் பேசிக் கொண்டிருக்கும்போதே ஜூலியட் மூன்று கோப்பைகள் ஏந்திய டிரேயை தூக்கிக் கொண்டு உள்ளே வந்து உட்கார்ந்தாள்.

"இந்தாங்க அண்ணா காபி. குடித்து விட்டு நீங்கள் கிளம்புங்கள்."

"எப்படிம்மா கரெக்டாய் இங்கேயே எனக்கும் காபி கொண்டு வந்தாய்? நான் இங்கு வந்ததைப் பார்த்தாயா?"

"இதைப் பார்க்க வேறு வேண்டுமா? எப்படியும் விழித்த வுடன் இவளை குசலம் விசாரிக்க இங்குதான் வருவீர்க ளென்று எனக்குத் தெரியாதா?"

பவித்ராவின் முகத்தில் திருப்தி நிலவியது. அதை ஜாடையாய் பார்த்துக் கொண்டே ஜூலியட் கூறினாள்.

"நைட் கொஞ்சமாவது தூங்கினீர்களா? இல்லையா? நேற்று ஈவினிங்கிலிருந்து இவள் பக்கத்தில் உட்கார்ந்து காவல் காப்பதே உங்கள் வேலையாய் இருந்ததே.. போசா மல் ஹோட்டல் ரூமிலேயே நீங்கள் தங்கியிருந்திருக் கலாம்... இங்கே வந்து இவளுக்கு நர்ஸ் வேலை பார்க்க ணும்னு உங்களுக்குத் தலை எழுத்தா? பேசாமல் கிளம் புங்கள் அண்ணா. நீவா பவித்ரா... அண்ணன் கிளம்பி விடுவார். நீ நிம்மதியாய் இருக்கலாம்."



பவித்ரா மூக்கை உறிஞ்சிக் கொண்டாள். ஜூலி யட்டைப் பார்த்தாள்.

"ஜூலி... அவரைப் போக வேண்டாம்ன்னு சொல்லு. அண்ணன் அவரை இருக்கச் சொல்லியிருக்கிறார். அவர் போய் விட்டால் அண்ணன் கோபித்துக் கொள்வார்."

"ஏன்.. இவர்... இதோ.. இங்கேதானே இந்த ரூமில் நிற்கிறார். இவரிடமே நேரில் சொல்லு.. உனக்கும் இவருக் கும் நான் என்ன மீடியேட்டரா? அதிலும் எப்படி பிலா விடு கிறான் பார். அண்ணன் கோபித்துக்குவாராம்.. அடேங் கப்பா எப்படி பிலிம் காட்டறேடி... நடிகையர் திலகம் சாவித்திரி கெட்டாள் போ."

"ஜூலி.. விளையாட இது நேரமில்லை..."

"ஆமாமாம். பாரதியார் கூட அப்படித்தான் சொல்லி யிருக்கார்."

"இப்போது பாரதியாரை தேவையில்லாமல் ஏன் இழுக்கிறாய்?"

"நானா அவரை இழுத்தேன்? நீதான் இழுத்தாய்."

"தெற்கெடுத்தாலும் என் மேல் தான் பழி சொல்ல வேண் டுமா?" பவித்ரா வெதும்பிய குரலில் கேட்க ஜூலியட் வேதனையடைந்தாள். ஆனாலும் அதை மறைத்துக் கொண்டு வெளியே சிரித்துப் பேசினாள்.

"பாரதியார் 'மாலை முழுவதும் விளையாட்டு'ன்னு பாடியிருக்கார்... நீ வேறு விளையாட இந்தக் காலை நேரம் தோது இல்லை என்றாயா... அதைச் சொன்னேன்ப்பா... நீ சீரியஸாய் எடுத்துக் கொள்ளாதேப்பா..."

"ஆகட்டும்.. அவரைப் போக வேண்டாம்ன்னு சொல்லு."

''நான் சொல்லத் தேவையே இல்லை. நீ சொன்னது அவரது காதில் விழுந்து விட்டது. அவர்தான் நீ கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டாரே.. ஏன் கவலைப்படு கிறாய். எங்கேயும் போக மாட்டார்."

"ஆனால் இன்று ஓர் நாள் மட்டும் நேற்று செய்யாமல் விட்ட வேலையை முடித்துவிட்டு வந்து விடுகிறேன். பர்மிஷன் வாங்கிக் கொடும்மா'' அஜய் கெஞ்சுதலாய் கூறுவது போல் நடிக்க பவித்ரா புன்னகை அரும்பிய முகத்தை அவன் பார்க்காமல் திருப்பிக் கொண்டாள்.

அஜய் முகமலர்ச்சியுடன் கிளம்பி நண்பர்களுக்கும் அக்கம் பக்கத்து வீட்டினருக்கும் திருமண அழைப்பிதழ் கொடுக்கக் கிளம்பிப் போனான். நண்பகல் உணவுக்கு அவன் வரத் தாமதமாகியது. பவித்ராவை சாப்பிட அழைத்தபோது அவள் போக்குக் காட்டினாள். அஜய் வந்ததும் விருப்பமில்லாமல் வந்து உட்காருவதைப் போல வந்து சாப்பிட அமர்ந்தாள்.

"என்ன ராக்காயி... சிக்கன் பிரியாணி. சிக்கன் வறுவல்... சிக்கன் குருமா... கலக்கிட்டே போ..." ஜூலியட் கிண்டல் செய்தாள்.

"காய்ச்சலில் விழுந்து எழுந்திருச்ச உடம்பு. வாய்க்கு கர்ருன்னு உப்பு.. உறைப்பா.. மணமா இருந்தால்தானே தொண்டையில சோறு இறங்கும்? அதுதான்... காலையி லேயே போய் எடுத்தாந்தேன்" என்றாள் ராக்காயி.

"பாரு ராக்காயி.. காய்ச்சல்ன்னு சொல்லிவிட்டு அவள் பாட்டுக்கு கவிழ்ந்து படுத்துத் தூங்கி விட்டாள். அவளுக்கு தொண்டு செய்து நான்தான் களைத்துப் போயிருக்கேன். அதனால் எனக்கு நாலு கரண்டி அதிகமாகவே எல்லா



வெரைட்டியிலும் அள்ளிப் போடு'' ஜூலியட் தட்டில் தாளம் போட்டாள்.

பவித்ரா எதுவும் பேசாமல் அஜய்யின் முகத்தைப் பார்க்காமல் சாப்பிட ஆரம்பித்தாள். அப்படியே விட்டு விட்டால் ஜூலியட்டின் சக்திக்கு மதிப்பில்லாமல் போய் விடாதா? ஜூலியட் அஜய்யைப் பார்த்தாள்.

''அண்ணா நீங்க நேற்று நைட்டும் சாப்பிடவில்லை... காலையிலும் சாப்பிடாமல் வெளியே போய் விட்டீர்கள். இப்போதும் சரியாகச் சாப்பிடாமல் கொறிக்கிறீர்களே. எங்கே இந்த வறுவல்?'' ஜூலியட் அருகேயிருந்த பாத் திரத்தைக் காணாதது போல் நடித்தாள்.

பவித்ரா கீழ்க் கண்ணால் அஜய்யின் தட்டைப் பார்த் தாள். வறுவல் இருந்த பாத்திரத்தை ஜூலியட்டின் அருகே நகர்த்தினாள்.

''ஆ.. இதோ இருக்கு. இந்தாங்க அண்ணா. அப்புறம் பிரியாணி எங்கே.''

பவித்ரா அந்தப் பாத்திரத்தையும் நகர்த்தி வைக்க ஜூலியட் எடுத்து அஜய்யின் தட்டில் பரிமாறினாள்.

"அப்பாடா. நான் ஒருத்தி இருக்கப் போய் உங்களைக் கவனிக்கிறேன். இல்லா விட்டால் நீங்கள் வயிறார சாப் பிட்டிருக்க முடியுமா அண்ணா.''

ஜூலியட் பாசரசம் பிழிந்தாள். பவித்ரா அவளை முறைத் தாள். ரசக் கிண்ணத்துடன் அங்கு வந்த ராக்காயி கூறி னாள்.

"நல்லா இருக்கும்மா கதை. காலையில் வேலை மெனக் கெட்டு மார்க்கெட் போய் கோழியை வாங்கிட்டு வந்து சுத்தம் பண்ணி வெட்டி மசாலா அரைச்சு மாங்கு. மாங்

ருன்னு ஆக்கி வைச்சிருக்கிறது நானு.. காணோம், காணோம்கிற சட்டியையெல்லாம் உங்க பக்கம் கரிசனமா நகர்த்தி வைக்கிறது பவித்ராம்மா... இதில நீங்க என் னத்தை செஞ்சுபுட்டிங்க. அதெல்லாம் நீங்க இல்லாட் டாலும் பவித்ராம்மா ஐயாவை தங்கம், தங்கமா பார்த்துக் குவாங்க."

பவித்ராவின் முகம் சுடர் விட்டுப் பிரகாசித்தது. அஜய் அவளைப் பார்க்க ஓர் நொடி தன் பார்வையை விலக்காமல் அவன் பார்வையோடு கலக்க விட்டவள் அடுத்த நொடி.

"அப்போ.. நான் மதியமே கிளம்புகிறேன் ஜூலியட்...." என்ற அவனது வார்த்தையைக் கேட்டதும் முகம் வாடிப் போனாள். அவள் முகம் தவித்ததைப் பார்க்காதவன் போல் அவன் எழுந்து கொண்டான்.

## 26



ஜூலியட்டிற்கு ஒன்றுமே பிடிபடவில்லை. ஒரு வாரம் தங்கியிருப்பேன் என்றுதானே சொன்னான். இரண்டு நாள்களில் கிளம்பி விட ஏன் முடிவு செய்தான்? அவனைப் பின் தொடர்ந்து அவன் அறைக்குச் சென்று கேட்டாள் அவள்.

"பவித்ராவின் உள்ளம் ஊஞ்சலாடிக் கொண்டிருக் கிறதே... அதை நிறுத்துவதற்காக..." என்றான். அஜய் பெட்டியில் துணிகளை அடுக்கிய வண்ணம்.



"நீங்கள் அருகிலிருந்து அதற்கு முயற்சி பண்ணுவதை விட்டு விலகிச் செல்வது எந்த வகையில் அந்த ஊஞ்ச லாட்டத்தை நிறுத்தும்?" என்றாள் ஜூலியட் குற்றம் சாட்டும் தொனியில்.

"விலகிச் செல்வது இப்போது அவசியம் ஜூலி."

"எப்படி அவ்வளவு நிச்சயமாய் சொல்கிறீர்கள்?"

"நிழலின் அருமை வெயிலில்தான் தெரியும்."

"புரியவில்லை அண்ணா..."

"எனது அருமை எனது பிரிவில்தான் அவளுக்குத் தெரியும்... அடி மனதில் என் மேல் ஆழ்ந்த காதல் அவ ளுக்கு இருக்கிறது. அதை அவள் உணர்ந்து கொள்ளட் டும். அதன் பின் எந்த வாக்குறுதியையும் உடைத்து விடும் வல்லமையைப் பெற்று விடுவாள். பிரிவு தான் காதலின் வலிமையை அவளுக்கு உணர்த்தும்."

"எத்தனை நாள் பிரிவைத் தரப் போகிறீர்கள்?"

"மூன்று நாள்கள்... எழுபத்திரண்டு மணி நேரம்."

"வெறும் மூன்று நாள்கள்தானா..." நிம்மதியாய் கூறி னாள் ஜூலியட்.

"உனக்கு அது வெறும் மூன்று நாள்கள்... பவித்ராவிற்கு அது இவ்வளவு எளியான விஷயமில்லை. அவளால் தாங்க முடியாத மூன்று நாள்கள்."

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"இது காதலின் கோட்பாடு. கேள்விப்பட்டதில்லையா... காதலர்கள் ஒருவருக்கு அருகே மற்றொருவர் இருக்கும் போது மணிகள் கூட வினாடிகளாய் பறக்கும். பிரிவிலோ... வினாடிகள் கூட ஒரு நாள் போலத் தோன்றும்."

"அனுபவித்துச் சொல்கிறீர்கள் போல இருக்கிறது."

"டெபனிட்டா.. அவளும் அதை அனுபவிக்க வேண் டாமா?"

"தண்டனை கொடுக்கறீர்களா?"

"ட்ரீட்மெண்ட் கொடுக்கிறேன்."

"இவ்வளவு கடுமையான ட்ரீட்மெண்ட்டா?"

"வலி இல்லாமல் ஆபரேஷன் பண்ண முடியாது."

"இதன் முடிவு எப்படி அமையுமோ.. அவள் நேற்றுத் தான் காய்ச்சலில் விழுந்தாள். உங்கள் கண் முன் துடித் ததைப் பார்த்தீர்கள் தானே.. பார்த்த பின்னுமா பரிட்சை வைக்கிறீர்கள்?"

"நான் தான் இந்தப் பிரிவு அவசியமான ஒன்று. ட்ரீட் மெண்ட் போலன்னு சொல்கிறேனே ஜூலி.. இன்னும் என்னை நம்பவில்லையென்றால் எப்படி?"

"மற்ற நேரங்களில் எப்படியோ.. எனக்குத் தெரியாது அண்ணா.. இப்போது உங்கள் அருகாமை அவளுக்கு அவசியமில்லையா?"

"வருவேன்ம்மா.. இங்கே இன்விடேசன் வைக்க வேண்டியவர்களுக்கு வைத்து விட்டேன்... மற்ற என் னுடன் டிரெய்னிங் படித்த ஐ.ஏ.எஸ். ஆபிஸர்ஸ்... அப் புறம் என்னுடன் படித்தவர்கள்ன்னு நிறையப் பேருக்கு நானே நேரில் போய் இன்விடேசன் கொடுக்க வேண்டி யிருக்கு. மூன்று நாள்களில் அதை முடிக்க வேண்டும்... சொந்த பந்தங்களுக்கு என் வீட்டார் கொடுத்துக் கொள் வார்கள். இன்னும் கல்யாணத்திற்கு எட்டே நாள்கள்தான் பாக்கி என்பதை மறந்து விட்டாயா?"



"ஆமாம் அண்ணா... இவள் இப்படியிருக்கிறாளே..."

"கவலை வேண்டாம். எல்லாம் சரியாகிவிடும்..."

அஜய் பெட்டியுடன் வெளியே வந்து மாடசாமி, ராக் காயி இருவருக்கும் சில உத்தரவுகளை போட்டு விட்டு பவித்ராவின் அறைக்குள் சென்றான்.

"பவித்ரா.. கிளம்புகிறேன்."

"ஜூலி.. இன்னும் ஒரு வாரம் இங்கே இருப்பதாகச் சொன்னாரே.. இப்போது ஏன் கிளம்புகிறார்ன்னு கேள்."

"ஜூலி இங்கு இல்லை. இந்த ரூமில் நீயும் நானும்தான் இருக்கிறோம். எதைப் பேசினாலும் நேரடியாய் பேசு."

"என் மேல் பழி போடவா கிளம்புகிறீர்கள்?"

"உன் மேல் நீயே பழி போட்டுக் கொண்டு உட்கார்ந் திருப்பது போதாதா? நான் வேறு போட வேண்டுமா?"

"நீங்கள் ஊருக்குக் கிளம்பினால் அப்படித்தானே அர்த்தம் ஆகிறது?"

"நீ எப்படி வேண்டுமானாலும் அர்த்தம் எடுத்துக் கொள்வாய். நான் அதற்குப் பிணையாக முடியாது. நான் வந்த வேலை முடிந்து விட்டது கிளம்புகிறேன்.. குட்பை..."

"குட்பை சொல்கிறீர்களா? இப்போது மட்டுமா? எப் போதுமா?"

"நான் என்ன சொன்னாலும் நீ கேட்கப் போவது இல்லை. உன் மனதுக்குத் தோன்றியபடி நினைத்துக் கொள்."

"இவ்வளவுதானா நீங்கள்...?"

"என்ன சொல்ல வருகிறாய்ன்னு எனக்குப் புரியவில் லையே."

"உங்களுக்குப் புரியாது. புரியப் போவதும் இல்லை. நீங்கள் ஆண்... ஆண்கள் எல்லோரும் அவசரப் புத்தி படைத்தவர்கள்.. உங்களுக்கு பொறுமை கிடையாது."

"எனக்கு...? பொறுமை கிடையாது...? ம்ஹூம்.. இதற்கு நான் பதில் சொல்லும் நாள் வரும். அன்று பதில் சொல்கிறேன்."

"இப்படி விட்டு விட்டுப் போக நினைத்தவர் அன்று மழை நாளின் தனிமையில் என்னைத் தொட்டிருக்கக் கூடாது..." பவித்ரா ஒரு எட்டு முன்னே வந்து இதைக் கூறினாள்.

"விட்டுவிடு என்று என்னைக் கேட்டவளின் வாயில் இருந்து வரும் வார்த்தைகள் இவை? 'விட்டு விடு' என்று நிச்சயம் பண்ணியவனைப் பார்த்து அன்று சொன்னாய். 'விட்டு விடு' என்று நீ சொன்ன மழை நாளின் தனிமையில் உன்னைத் தொட்டு அணைத்த போதும் சொன்னாய். நீ சொன்னதைத்தான் அன்றும் கேட்டேன். இன்றும் கேட்கிறேன். இதில் என் மீது என்ன குற்றம் இருக்கிறது" அஜய் கைகளை கட்டி கால்களை அகல விரித்து நின்றவாறு அவளைக் கூர்மையாய் பார்த்தபடிக் கேட்டான்.

"ஆமாம். உங்கள் மீது குற்றமில்லை. குற்றமெல்லாம் என்மீதுதான். நான்தான் குற்றம் செய்தவள்.." பவித்ரா விம்மினாள்.

"பவித்ரா..." என்று ஏதோ சொல்ல முயன்றவனை கையமர்த்தியவள்...

"பவி... இப்போது... பவித்ரா... ஆகிவிட்டேனில்லை... என் மனதில் என்ன இருக்குன்னு உங்களுக்குத் தெரியாது..." என்று குமுறினாள்.



"எனக்குத் தெரியும்." அவன் அமைதியாய் கூறினான்.

"என்ன தெரியும்?"

"தெரிந்ததைச் சொன்னால் ஏற்றுக் கொள்ளவா போகிறாய்?"

"ஸோ...?"

"நான் கிளம்புகிறேன்."

"அவ்வளவுதானா...?"

"அவ்வளவுதான்..."

அவன் சரேலென்று திரும்பி வாசல் நோக்கி விரைந்தான். பவித்ரா விம்மலுடன் ஜன்னலருகே ஓடினாள். திரை விலக்கி வெளியே பார்த்தாள். ஜூலியட்டிடம் நின்று ஏதோ பேசிய அஜய் காரில் ஏறிக் கிளம்புவது தெரிந்தது.

கட்டிலில் தோற்றுப் போன உணர்வுடன் எதையோ இழந்து விட்ட துக்கத்துடன் துயரம் ஏந்திய மனத்துடன் குப்புற விழ்ந்தாள் பவித்ரா. மடை திறந்த வெள்ளமாய் கண்ணீர் பெருக்கெடுக்க சத்தமில்லாமல் அழ ஆரம்பித்தாள் அவள்.

அஜய் வெளியே ஜூலியட்டிடம் என்ன பேசினான் என்பதை மட்டும் அறிந்திருந்தால் அவள் அப்படி அழுதிருப்பாளா...? காதலில் நம்பிக்கை என்பது இரு பக்கமும் இருக்க வேண்டியது அவசியம். அஜய்க்கு பவித்ராவின் மேல் நம்பிக்கை இருந்தது. அவன் காதலில் பின் வாங்கவே இல்லை. பவித்ராவிற்கோ... என்று தன் நினைவு இல்லாமல் வாக்குக் கொடுத்ததாய் குற்றம் சாட்டப் பட்டாளோ... அன்றே அவளுக்கு அவள் மீதே நம்பிக்கையில்லாமல் போய் விட்டது. தன்னம்பிக்கை இல்லாதவள் தன் காதலனை எப்படி நம்புவாள்?

அஜய் தன்னை விட்டு... தன் வாழ்வை விட்டு... போய் விட்டான் என்றே அவள் நினைத்து விட்டாள்.

இதில் வேடிக்கை என்னவென்றால் அவன் வீட்டில் இருந்து கொண்டே... அவனை இருக்கச் சொல்லி அண்ணன் பெயரை அவள் சொன்னதுதான்.

அஜய் வெளியேறும்போது அவன் மனம் என்ன பாடு பட்டது என்பதை ஜூலியட் மட்டுமே அறிவாள்.

"ஏன் அண்ணா... இப்படி ஓடி வரும்படி என்ன நேர்ந்தது?"

"இன்னும் ஓர் நொடி தாமதித்தால்கூட அவள் முன்னால் நடிக்க முடியாமல் நான் என்னைக் காட்டிக் கொண்டு விடுவேனோன்னு எனக்குப் பயமாய் போய் விட்டது. ஓடி வராமல் வேறு என்னம்மா செய்வது?"

"அவள் தான் போக வேண்டாம் என்று சொல்கிறாளே..."

"அவள்தான் புரியாத உலகத்தில் இருக்கிறாள் என்றால் நீயுமா? அவள் எங்கே இருக்கிறாள்? என் வீட்டில்.. என் வேலையாள்களின் கவனிப்பில் இருக்கிறாள். அதை விட்டு விட்டு... நான் போனால் திரும்பவும் பார்க்க முடியாதுன்னு அவள் புலம்புகிறாளே..."

"பயந்து விட்டாள் பாவம்..."

"பாவமாய்த்தான் இருக்கிறது. அதற்காக என்ன செய்ய? கிட்டப் போய் கண்ணீரைத் துடைத்து விட முடியுமா?... நெருங்கிப் போனால் என்னை விட்டு விடு வாக்குக் கொடுத்திருக்கிறேன்' என்று அழுகிறாள். சற்றுத் தள்ளிப் போனால்... 'ஊ... ஊ... என்னை விட்டுவிட்டுப் போகிறாயா?'ன்னு அழுவாள். வதைக்கிறாள்ம்மா."



ஜூலியட் 'களுக்'கென்று சிரித்தாள்.

"காதல்ன்னா இவ்வளவு ஹிம்சை இருக்கிறதா...?"

"ஆமாம்... நீ காதல்.. கீதல் பண்ணி விடாதேம்மா.. சுத்த இம்சை பிடித்த விவகாரம் இது. ஆளைக் கொன்று தின்றுவிடும்."

"அதற்கு வேறு ஆளைப் பாருங்கள். எப்போதுமே சேலஞ்ச் ஆன விஷயங்களை பேஸ் பண்ணுவதில்தான் எனக்கு ஆர்வம் அதிகம்."

"அப்போது காதலைப் பார்த்துப் பயமில்லை."

"உங்களைப் போல ஒரு காதலர் கிடைத்தால் பயமேயில்லை ..............."

அஜய் வாய்விட்டுச் சிரித்து ஜூலியட்டின் தலையில் செல்லமாய் ஓர் குட்டு குட்டிவிட்டு விடைபெற்றான்.

## 27



குமுளியைத் தாண்டி அந்த பஸ் வேகமெடுத்து ஓடியது. ஏ.஝ி. செய்யப்பட்ட சொகுசு பஸ் அது. வசதியான இருக்கையில் சாய்ந்து அமர்ந்து அந்த சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தான் சுகுமாரன். உயர்தர ஜீன்ஸும்.. டிசர்ட்டும் அணிந்திருந்தான். போன பிறந்த நாளுக்கு சாந்தி வாங்கிக் கொடுத்திருந்தான். புதிய கைக்கடிகாரத்தில் மணி

பார்த்துக் கொண்டான். சீட்டுப் பணம் எடுத்து சாந்திதான் அதையும் வாங்கிக் கொடுத்திருந்தாள்... கழுத்தில் தங்கச் செயின் ஒன்று தவழ்ந்தது. 'மாப்பிள்ளைக்கு' என்று சாந்தியின் அம்மா வைத்திருந்தது என்று சொல்லி முட்டாள் சாந்திதான் அதையும் கொடுத்திருந்தாள். பஸ்ஸில் பொருத்தப்பட்டிருந்த டி.வி.யை கன்னத்தில் கை வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தவனின் விரலில் மின்னிய மோதிரம் ஒளிர்ந்தது. அதுவும் யாருடைய உபயம் என்று சொல்லத் தேவையில்லை. சந்தேகமேயில்லாமல் சாந்தியின் உபயம்தான்.

இப்படி உடை முதற்கொண்டு நகை வரை ஒரு பெண்ணிடம் வெட்கமில்லாமல் வாங்கிப் போட்டுக் கொண்டு அவளிடமே வெட்கமில்லாமல் செலவுக்குப் பணமும் வாங்கிக் கொண்டு இன்னொரு பெண்ணின் வாழ்வைக் குலைக்க அவளைத் தேடி வேட்டை நாய் போல் போய் கொண்டு இருந்தான் அந்த வீரத்திருமகன்.

அவனுடைய சீட்டிற்கு நான்கு சீட் பின்னால் அமர்ந்து அவனையே கண் காணித்துக் கொண்டிருந்தான் ஒருவன்.

சுகுமாரன் தஞ்சாவூரில் பஸ் ஏறும்போது கூடவே ஏறி அவன் அறியாமல் அவனைத் தொடர்ந்து வருபவன் அவன்.

சுகுமாரனின் நடவடிக்கைகளை செல்போனில் தெரியப்படுத்திக் கொண்டே இருந்தான் அவன்.

வழியில் சாலை ஓரமாய் இருந்த மோட்டலில் பஸ் நின்றது.

"பஸ் அரை மணி நேரம் இங்கே நிற்கும்..." கண்டக்டர் அறிவித்து விட்டு இறங்கி விட்டார்.



சாப்பிட.. பாத்ரூம் போக... சும்மா காலாற இறங்கி நடக்க என்று பஸ்ஸே காலியானபோது... அந்த ஒருவன் மட்டும் பஸ்ஸை விட்டு இறங்கவில்லை. பஸ்ஸில் வெறுமில்லை என்பதை உட்கார்ந்த நிலையிலேயே சரி பார்த்து விட்டு எழுந்து நடந்தான்.

சுகுமாரனின் சீட்டிற்கு அருகே வந்ததும் மிக இயல்பாய் அவனது சீட்டில் உட்கார்ந்தான். காலடியில் இருந்த சுகுமாரனின் டிராவல் பேக்கை குனிந்து எடுத்து மடியில் வைத்தான். ஒரு கவரை அவனது துணிகளுக்கு அடியில் வைத்து ஜிப்பை மூடி மீண்டும் சீட்டிற்கு அடியில் தள்ளினான்.

மெதுவாய் எழுந்து பாண்ட் பாக்கெட்டில் கை விட்டவாறு சீழ்க்கையடித்துக் கொண்டே பஸ்ஸை விட்டு இறங்கி நடந்தான். சற்றுத் தொலைவு சென்றதும் கண் பார்வையில் பஸ் இருக்கும் தூரத்தில் நின்று கொண்டு செல்போனை எடுத்து உயிர்ப்பித்தான்.

"சொல் கரிகாலா... முடித்து விட்டாயா?" என்றது மறுமுனை.

"முடித்து விட்டேன் சார்" என்றான் கரிகாலன்.

"தேக்கடிக்கு இன்னும் எவ்வளவு தூரமிருக்கும்?"

"ஒன் அவரில் போய் விடுவோம் சார்."

"வெல்.. இனி மிகவும் கவனமாக அவனைத் தொடர வேண்டும்."

"ஓ.கே. சார்."

செல்லை அணைத்து விட்டு வேலியோரமாக இயற்கை உபாதையைத் தணித்து விட்டுப் பஸ்ஸை நோக்கிச் செல்ல ஆரம்பித்தான் அந்தக் கரிகாலன்.

பஸ்ஸில் டிரைவர் சீட்டில் ஏறி அமர்ந்து விட்டிருந்தார். இவன் பதட்டம் இல்லாமல் சீழ்க்கையொலியையும் நிறுத்தாமல் பஸ்ஸில் ஏறினான். முன் வரிசை சீட்டில் இருந்த சுரிதார் அவனைக் கள்ளப் பார்வை பார்த்தது.

'அடப் போம்மா.. சைட் அடிக்கவா நான் இந்தப் பஸ்ஸில் ஏறினேன்...?' என்று மனதில் நினைத்துக் கொண்டே அந்தப் பதினெட்டின் பார்வையை லட்சியம் செய்யாமல் கடந்தான்.

அவன் பின்னாலேயே வந்த சுகுமாரனுக்கு இது கோபத்தை அளித்தது. அவன் தஞ்சாவூரில் பஸ்ஸில் ஏறிய போதே முன் வரிசை சீட்டைப் பார்த்து விட்டான்.

'ஆஹா.. இன்று பூத்த பூப்போல் இருக்கிறாளே...' என்று போகும் போதும் வரும்போதும் பார்வைக் கணையைத் தொடுத்துக் கொண்டு இருந்தான். அந்த டீன் - ஏஜ் அவனை சட்டை செய்யவே இல்லை.

சாப்பிட ஓட்டலுக்குள் சென்றவன் இருபதே நிமிசத்தில் சப்பிட்டு விட்டு வந்து அந்தப் பெண் அமர்ந்திருந்த ஜன்னலோர சீட்டின் பக்கமாக பஸ்ஸின் வெளியே நின்று கொண்டு ரோமியோ போல் சேட்டை செய்து பார்த்தான்.

அந்தப் பெண் என்னவோ,

'ஆடுறா ராமா' குரங்கைப் பார்ப்பதைப் போல் ஓர் பார்வை பார்த்து விட்டு அலட்சியமாய் முகம் திருப்பிக் கொண்டது.

இவ்வளவு நேரம் கால் கடுக்க வெளியே நின்றும் திரும்பிப் பார்க்காத அந்தப் பெண் தன் முன்னால் சென்ற கட்டைத் தடியனை கடைக்கண்ணால் கூட இல்லாமல் நேரடியாகப் பார்த்தால் அவனுக்கு எப்படியிருக்கும்?



எப்படியாவது அந்தப் பெண்ணிடம் ஓர் வார்த்தை பேசிவிட வேண்டும் என்று தோன்றிவிட ஏதோ சந்தேகம் கேட்பது போல்,

"எக்ஸ்யூஸ் மீ..." என்றான். உடனே அந்தப் பெண்,

"என்ன வேண்டும் அங்கிள்?" என்று கேட்டு விட்டது.

சுகுமாரனின் நெஞ்சில் இடி இறங்கியது. அவ்வளவு கேவலமாகவா நம் பெர்ஸனாலிட்டி இருக்கிறது... என்று தனக்குள் நொந்து கொண்டவன் பதிலே பேசாமல் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு தன் சீட்டிற்குச் சென்றான்.

அதன் பின்னால் முன் சீட் தேவதையின் பக்கம் மறந்தும் கூட அவன் பார்வை செல்லவில்லை.

தேக்கடியில் இறங்கினதும் முதல் வேலையாய் ஏதேனும் ஸ்டார் ஹோட்டலில் ரூம் போட்டுக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். அங்கு தானே ஆண்களுக்கான பியூட்டி பார்லர் இருக்கிறது. தன்னை அழகுபடுத்திக் கொண்ட பின்தான் பவித்ராவைப் பாக்கப் போக வேண்டும் என்று மனதில் நிச்சயம் செய்து கொண்டான்.

பணம் தான் பை நிறைய இருக்கிறதே. கஷ்டப்பட்டுச் சம்பாதித்து இருந்தால் காலணா காசு அநாவசியமாய் செலவழிந்தால் கூட மனம் கிடந்து அடித்துக் கொள்ளும். இது சாந்தி கடன் வாங்கிக் கொடுத்த பணம், திருப்பிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அவனுக்கு இல்லை. காமதேனு போல கேட்கக் கேட்க கொடுத்துக் கொண்டே இருக்க சாந்தி இருக்கும்போது அவனுக்கு என்ன கவலை?

தேக்கடி பஸ் நிலையத்திற்குள் நுழைந்தது பஸ். சுகுமாரன் படு ஸ்டைலாய் டிராவல் பேக்கை எடுத்து

முதுகில் மாட்டிக் கொண்டு கூலிங் கிளாஸை போட்டுக் கொண்டான்.

இறங்கியதும் பஸ் நிலையத்துக்கு வெளியே வந்து டாக்ஸி ஒன்றில் ஏறிக் கொண்டான்.

"எங்கே சார் போகணும்?"

"ஏதாவது பெரிய... ஸ்டார் ஹோட்டலாய் பார்த்துப் போப்பா."

கரிகாலன் தனக்காக காத்து நின்ற மகேந்திரா ஜீப் ஒன்றில் ஏறிக் கொண்டான். முன்னால் சென்ற சுகுமாரனின் டாக்ஸியை பின் தொடர்ந்தது ஜீப்.

உயர்தர ஹோட்டல் ஒன்றின் முன் டாக்ஸி சென்று நிற்க சுகுமாரன் இறங்கி டாக்ஸியை அனுப்பி விட்டு ஹோட்டல் வரவேற்பறையை அணுகினான்.

கையில்லாத ரவிக்கை அணிந்திருந்த பெண்ணை பட்டிக்காட்டான் மிட்டாய் கடையைப் பார்த்தது போல் பார்த்துக் கொண்டு சுகுமாரன் நிற்க,

"யெஸ்...?" என்றாள் அந்தப் பெண் மனதிற்குள் அவனைத் திட்டியவாறே....

"ஒன் ரூம் ப்ளீஸ்..." படு ஸ்டைலாய் கேட்டான்.

"என்ன பர்ப்பஸா வந்திருக்கீங்க" அவள் முறைத்தாள்.

"பவித்ராவைத் தேடி.." தன்னையறியாமல் பதில் சொன்னான் அவன்.

"வாட்...?" அவள் எரிச்சலடைந்தாள்.

"நோ.. நோ.. ஊர் சுற்றிப் பார்க்க.."

"ஓ.கே. உங்க அட்ரஸை இந்த லெட்ஜரில் எழுதி சைன் பண்ணுங்க. அதற்கு முன் அட்வான்ஸை பே பண்ணிடுங்க."



சுகுமாரன் அவனது முகவரியை எழுதிக் கையெழுத்துப் போட்டு விட்டு ரூம் பாயின் பின்னால் லிஃப்டிற்குள் போனான்.

கரிகாலன் ஜீப்பிலிருந்து இறங்கி வரவேற்பை அணுகி அந்தப் பெண்ணிடம் தாழ்ந்த குரலில் ஏதையோ பேசினான்.

பின் திரும்பி ஜீப்பில் ஏறிச் சென்று விட்டான்.

சுகுமாரன் குளியலறைக்குள் புகுந்து குளித்து உடை மாற்றிக் கொண்டு அறையை விட்டு வெளியேறி கீழ்ப் பகுதியில் இருந்த ரெஸ்ட்டாரெண்டிற்குச் சென்றான்.

அவன் அமர்ந்திருந்த டேபிளுக்கு நான்கு டேபிள் தள்ளி கரிகாலன் வந்து அமர்ந்தான். ஒரு கப் காபி வரவழைத்துப் பருகியவாறு சுகுமாரனைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சாப்பிட்டு முடித்து சுகுமாரன் எழுந்து செல்லவும் செல்போனை எடுத்து அழுத்தினான். மறுமுனை.

"சொல் கரிகாலா..." என்றது.

"பட்சியைப் பிடிக்க டைம் வந்து விட்டது சார்." என்றான் கரிகாலன்.

"ஓ.கே.. கேட்ச் ஹிம்."

எதிர் முனையில் போன் துண்டிக்கப்பட்டது. கரிகாலன் எழுந்து வெளியே வந்தான். அவன் லிஃப்டிற்குள் சென்றதும் எங்கிருந்தோ நான்கு யூனிபார்ம் அணிந்த போலீஸார் வந்து அவனுடன் சேர்ந்து கொண்டனர். சுகுமாரனின் அறைக்குச் சென்று கதவைத் தட்டினர். கதவைத் திறந்த சுகுமாரன் திகைத்து நின்றான்.

"போலீஸா... என்ன வேண்டும்."

"நீங்கள்தான் வேண்டும்."

"நான் ஒன்றும் செய்யவில்லையே."

''அதை ரூமை செக் பண்ணிவிட்டு நாங்கள் சொல்கிறோம்.''

# 28



சுகுமாரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. முதலில் தேக்கடியில் உள்ள சுற்றுலா ஸ்பாட்களுக்கு செல்லும் முடிவோடு அவன் கிளம்பிக் கொண்டிருந்தான். பவித்ராவை ஒருவேளை அங்கே சந்திக்க முடியலாம் என்கிற எண்ணம் ஓர் பக்கம். அடுத்தவள் காகதானே கரியாகிறது.. நாம் அனுபவிக்கலாமே என்ற எண்ணம் மறுபக்கம்...

பவுடரில் குளித்து.. சென்டில் நீச்சலடித்து... ஒரு மணி நேரமாய் யோசித்து தேர்ந்தெடுத்து வைத்திருந்த உடையை உடுத்தி ஆளுயர கண்ணாடியின் முன் நின்று அழகு பார்த்துக் கொண்டிருந்தபோது அவனது அறையின் அழைப்பு மணி அலறியது.

கதவைத் திறந்தால் நான்கைந்து போலீஸ்காரர்கள் உள்ளே வந்து 'ரூமை செக் பண்ண வேண்டும்' என்றார்கள்.

''சார்... நீங்கள் தவறாய் எதையோ நினைத்து வந்திருக்கிறீர்கள் போல இருக்கிறது. என் ரூமை செக் பண்ணினால் என்ன கிடைக்கப் போகிறது...''



''அதையும் பார்த்து விடலாமே.''

கரிகாலன் வாயில் சுயிங்கம் மென்று கொண்டே சுகுமாரனின் அருகில் நின்று கொண்டு விறைப்பாய் பார்த்தான்.

'இவன் நம் கூட பஸ்ஸில் வந்த ஆளாச்சே' என்று ஓர் மணி மனதின் ஓர் மூலையில் அடிக்க சுகுமாரன்.

''சார்...'' என்று வாய் திறந்தான்.

''ஸ்ஸ்ஸ்...'' வாய் மேல் விரல் வைத்து எச்சரித்தான் கரிகாலன்.

''சார்... இங்கேயிருக்கு...'' என்றான் ஒரு போலீஸ்காரன்.

''என்ன இருக்கிறது?'' சுகுமாரன் கரிகாலனிடம் கேட்டான்.

''ஏன்? நீ தானே வைத்திருக்கிறாய்? உனக்குத் தெரியாதா?''

''நிஜமாகவே தெரியவில்லை சார்...''

''நீ நடிகன்டா... ஜார்ஜ்... அதுதானா?''

''அதுவேதான் சார்.''

''எது?'' என்று சுகுமாரன் கேட்ட கேள்விக்கு அவர்கள் பதில் சொல்லவில்லை.

''கிளம்பு..'' என்றான் கரிகாலன்.

''எங்கே...?'' புரியாமல் விழித்தான் சுகுமாரன்.

''யு ஆர் அன்டர் அரெஸ்ட்.''

''வாட்.''

''உன்னைக் கைது பண்ணியிருக்கிறோம் வா.''

''எதற்கு என்னைக் கைது பண்ணுகிறீர்கள்?''

''போதை மருந்தை கடத்தி வந்ததற்காக...''

''போதை மருந்தா..? எங்கே...?''

''இங்கே...!'' அவனது பேக்கில் துணிகளுக்கு அடியில் இருந்த கவரை எடுத்து உடைத்துக் காட்டினான் கரிகாலன்.

உள்ளே சின்னச் சின்ன பாலிதீன் கவர்களில் வெள்ளை நிற பவுடர் இருந்தது. சுகுமாரன் இது எப்படி அவன் பேக்கில் வந்தது என்று மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சரியப்பட்டான்.

''இது எப்படி என் பேக்கில் வந்தது?''

''நீ தூக்கி வராமல் கால் முளைத்தா வந்திருக்கும்.. நடடா.''

''சார்... சார்... நீங்க கூட பஸ்ஸில் என்கூடத்தானே வந்தீர்கள்..''

''உன்கூட வரவில்லைடா. உன்னைப் பின் தொடர்ந்து வந்தேன்.''

''என்னைப் பின் தொடர்ந்தா.. எதற்காக சார்?''

''நீ போதை மருந்தை கடத்துகிறாய் என்று எங்கள் டிபார்ட்மென்டிற்கு தகவல் வந்தது. அதனால் பின் தொடர்ந்து வந்தேன்.''

அடுத்த சில நிமிடங்களில் சுகுமாரன் போலீஸ் கஸ்டடியில் சிக்கினான்.

தஞ்சை கலெக்ட்ரேட்டில் சாந்தி வேலையில் ஆழ்ந்திருந்தபோது.. அந்த செக்‌ஷனின் சூப்பரின்டெண்ட் அவளை அழைத்தார்.



''சாந்தி நீங்க வேறு செக்‌ஷனுக்கு டெபுடேசன் போகணும்.''

''என்ன சார் திடீர்னு இப்படிச் சொல்றீங்க?''

''ஏம்மா.. டெபுடேசன் திடீர்னு தானே வரும்.''

''என் சீட்டில் பெண்டிங் வொர்க் நிறைய இருக்கே சார்.''

''ஆபீஸுக்கு வேலைக்கு வந்தால் வேலையை மட்டும் பார்க்கணும். வேலையைத் தவிர மற்ற எல்லாவற்றையும் பார்த்தால் பெண்டிங் வராமல் என்ன செய்யும்?''

''சார்! நான் ஆபிஸில் வேலை பார்க்கலைன்னு உங்களுக்குத் தெரியுமா? பேச வேண்டுமென்று பேசாதீர்கள்.''

''அன்றைய வேலைகளை அன்றே பார்த்தால் பெண்டிங் வருமா?''

''சார்... நான் லீவ் நாளில் ஆபீஸ் வந்து கூட என் வேலையை முடித்து விடுவேன். என்னைத் திட்டவெல்லாம் வேண்டாம்.''

''ஏனென்றால் அன்றைக்குத்தானே சுகுமாரன் ஆபீஸ் வரமாட்டார். அவர் தொல்லையில்லாமல் நிம்மதியாய் வேலை பார்க்க முடியும்?''

''சார்... நீங்க தேவையில்லாமல் பேசுகிறீர்கள்.''

''சும்மாயிருங்கம்மா... எல்லாவற்றையும் நான் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். கூடிக் கூடிப் பேசுவதும்.. அடுத்தவர் குடியைக் கெடுப்பதும்... சேச்சே.. நீங்க நல்ல பெண். குட் வொர்க்கர்ன்னு பெயர் வாங்கியிருந்தீர்கள்.. எல்லாவற்றையும் கெடுத்துக் கொண்டீர்களேம்மா.. போங்க... இது கலெக்டரோட ஆர்டர். அவருடைய பி.ஏ.

லீவில் போயிருக்கார். அவருடைய வேலைகளைச் செய்ய உடனடியாய் ஒரு ஆள் தேவைப்படுகிறது."

"வேறு பி.ஏ. இருப்பாங்களே சார்..?"

"இது கான்பிடென்ஷியல் வொர்க். வேறு ஒருவனிடம் ஒப்படைக்க முடியாது. நீங்கள் தானே 'நல்ல குடி நாணயம்.. தூத்துக்குடி வெங்கலம்'ன்னு பெயர் வாங்கி வைத்திருக் கிறீர்கள். அதுதான் உங்களை அழைக்கிறார்கள்... போங்க."

"சார்.. ப்ளீஸ் வேறு ஆளை அனுப்புங்கள் சார்."

"ஏம்மா.. ஒரு தடவை சொன்னால் உங்களுக்குப் புரி யாதா? இது கலெக்டருடைய ஆர்டர். பை நேமில் வந்திருக் கிறது. உங்களை அனுப்பச் சொல்லி உங்கள் பெயரில் வந் திருக்கும் டெபுடேசன் ஆர்டரை ஒபே பண்ண முடியுமா? முடியாதா?"

"போகிறேன் சார்."

"போங்க.. போங்க.. உங்க சுகுமாரன் தான் லீவில் போயி ருக்காரே.. அவன் வரும் வரை டெபுடேசனில் இருங்க."

வார்த்தையை வளர்க்காமல் வெளியே வந்தாள் சாந்தி. தன் சீட்டிற்கு வந்து டேபிள் டிராயரை மூடி சாவியை எடுத்து ஹேண்ட் பேகில் போட்டுக் கொண்டவள் கலெக் டரின் அறை இருந்த தளத்திற்குச் சென்றாள்.

அனுமதி பெற்று கலெக்டரின் அறைக்குள் சென்றாள். ஆதவன் தலை நிமிர்ந்தான்.

"டேக் யுவர் சீட்."

"நோ தேங்க்ஸ் சார். இட்ஸ் ஆல்ரைட்."

"டேக் இட்.. இந்த பைல் மிகவும் முக்கிய, ரகசிய பைல். இதில் சிட்டிக்குள் பெரிய பாலம் ஒன்றைக் கட்ட



டெண்டர்ஸ் கோட் பண்ணிய லெட்டர்கள் இருக்கின்றன. நேற்றே பைனல் பண்ணி கையெழுத்துப் போட்டு ஒரு நபரை செலக்ட் பண்ணி விட்டோம். இதுதான் அவருடைய டெண்டர் கோட் பண்ணிய லெட்டர் இருக்கும் பைல். அவருக்கு ஒப்புதல் உத்தரவு அனுப்பி இந்த பைலை முடிக்க வேண்டும். இது இன்றைக்கே முடிந்தாக வேண் டும். ஸோ.. நாளை நீங்கள் உங்கள் செக்ஷனுக்கு போய் விடலாம். கவனமாய் செய்யுங்கள். இது வெரி.. வெரி.. கான்பிடென்ஷியல் வொர்க்..."

"ஓ.கே. சார்..." பைலை எடுத்துக் கொண்டு சாந்தி அறையை விட்டு வெளியேறினாள்.

நடேசனின் சீட்டில் அமர்ந்து கொண்டு சாந்தி கம்ப்யூட் டரை உயிர்ப்பித்து வேலையை ஆரம்பிக்கும்போது.. கலெக்டர் அழைக்கும் இன்டர்காம் மணி ஒலித்தது. அவசர மாய் பைலை அப்படியே போட்டு விட்டு ஆதவனின் அறைக்குள் நுழைந்தாள்.

ஆதவன் கையில் டெலிபோன் இருந்தது. ரிஸீவரின் வாய் பகுதியை மூடியவன் சாந்தியைப் பார்த்துக் கேட்டான்.

"மிஸ் சாந்தி.. உங்கள் செக்ஷனில் சுகுமாரன்னு யாரும் வொர்க் பண்ணுகிறாங்களா?"

சாந்தி பதற்றமடைந்தாள். சுகுமாரனுக்கு என்ன ஆயிற்று? ஒருவேளை அவன் போன பஸ் எதுவும் ஆக்ஸி டெண்ட் ஆகிவிட்டதா?

"ஆமாம் சார்.. அவருக்கு என்ன ஆனது?"

"அவரைப் போலிஸில் அரெஸ்ட் பண்ணியிருக்கிறாங் கள்."

"ஐயோ... அவர் தேக்கடிக்கு இல்லே போனார்?"

"தேக்கடியில்.. ஒரு ஸ்டார் ஹோட்டலில் தான் அவரை அரெஸ்ட் பண்ணியிருக்கிறார்கள்..."

"ஸ்டார் ஹோட்டலிலா...?" சாந்தியின் வாய் அடைத்துக் கொண்டது.

"சாந்தி... நான் பார்க்கிலும்... பஸ் ஸ்டாண்டிலும் கூட படுத்து எழுந்து கொள்வேன். கூடுமானவரை நீ கொடுக்கும் பணத்தை அதிகம் செலவழிக்காமல் பவித்ராவைக் கண்டுபிடித்து அவளைக் கையோடு கூட்டிக் கொண்டு வந்து விடுகிறேன்..."

கருமாரன் கண்ணைச் சிமிட்டி கண்ணீரை அடக்கும் பாவனை காட்டி பணத்தை வாங்கிக் கொண்டது நினைவில் ஆடியது. ஸ்டார் ஹோட்டலில் தங்கினானாமா? வேறு சாதாரண ஹோட்டலில் தங்க மனம் வரவில்லையா?

'பணம் அவனுடையதாக இருந்தால் இப்படிச் செய்வானா?' என்ற கேள்வி அவள் மனதில் எழுந்தது.

## 29



சாந்தி வேதனையுடன் ஆதவனைப் பார்த்தாள். இது கருமாரனுக்கு அவள் உதவ வேண்டிய நேரம்.. இப்போது பணக்கணக்கைப் பார்ப்பது கூடாது. ஆதவன் போனில் பேசினான்.



"யெஸ்... கலெக்ட்ரேட்டில் வேலை பார்ப்பவர்தான்" மறுமுனை ஏதோ பேச...

"ஓ... ஐ... ஸீ... டேக் யுவர் ஆக்ஷன்" என்று கூறி விட்டுப் போனை வைத்தான்.

நிமிர்ந்து சாந்தியைப் பார்த்தவன் கண்டிப்பான தொனியில்,

"இன்னும் நீங்கள் போகவில்லையா? ஓ.கே.. கோ யுவர் சீட். வேலையை சீக்கிரமாய் முடியுங்கள்.. க்விக்."

சாந்தி தயங்கி நின்றாள். பின் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டாள்.

"சார்... அந்த கருமாரன்..?"

"அவன் இங்கே வேலை பார்க்கிறானா இல்லையான்னு கன்பர்ம் பண்ணிக் கொள்ள டெபுடி கமிஷனர் ஆப் போலீஸ் அலுவலகத்திலிருந்து நம் ஆபிஸிற்கு போன் பண்ணியிருக்கிறார்கள். உங்கள் செக்ஷன் பெயரைக் கேட்டதும் கன்பர்ம் பண்ணிக் கொள்ள உங்களைக் கூப்பிட்டுக் கேட்டேன்."

"சார்... அவர் ரொம்ப நல்லவர் சார்."

"எவர்...?"

"கருமாரன்தான் சார்."

"போதை மருந்து கடத்திய ஒரு கிரிமினல் நல்லவனா?"

"போதை மருந்து கடத்தினாரா?"

சாந்தி திகிலடைந்தாள். போதை மருந்துக் குற்றத்தில் வருடக் கணக்கில் சிறையிலிருக்க வேண்டுமே.. ஜாமீனில் எடுக்க முடியாதே.

"என்ன சார் சொல்கிறீர்கள்.. அவருக்கு அந்தப் பழக்கமெல்லாம் இல்லையே..."

"அவன் போதை மருந்து போடுபவன் இல்லை... விற்பவன்."

"ஆனால் சார்.."

"லுக் மிஸ் சாந்தி.. இது உங்களுக்குத் தேவையில்லாத விஷயம்... வெரி கான்பிடென்ஷியல் வொர்க்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அதில் கவனம் செலுத்துங்கள். தேவையில்லாத விஷயங்களில் மூக்கை நுழைப்பதை நிறுத்துங்கள்."

சாந்தி மூக்குடைபட்டவளாய் வெளியே வந்தாள். இயந்திர கதியில் ஆர்டரை டைப் பண்ணி.. கம்ப்யூட்டரில் பிரிண்ட் எடுத்தவள்... கையெழுத்து வாங்க கலெக்டரிடம் போனாள்.

தீவிரமான முகபாவத்துடன் எதிரே அமர்ந்திருந்தவரிடம் பேசிக் கொண்டு இருந்த ஆதவன் அவள் கொடுத்த கடிதத்தை வாங்கி கையெழுத்துப் போடப் போனவன்.

"வாட்...?" என்று அலறினான்.

சாந்தி பயந்து போனாள்.

"என்ன சார்.. என்ன ஆச்சு?"

"என்ன ஆச்சா..? குடிமுழுகிப் போச்சு.. ஏம்மா.. நான் செலக்ட் பண்ணின டெண்டருக்கு ஆர்டர் டைப் பண்ணச் சொன்னால். வேறு ஒருவருக்கு ஆர்டரை டைப் பண்ணியிருக்கிறீர்களே."

"சார்... நீங்கள் கொடுத்த பைலில் இந்த டெண்டர்தான் இருந்தது..."



"நோ... இதோ பாருங்கள்.. நான் கொடுத்த டெண்டரின் இன்னொரு காபி இதோ இருக்கிறது- இதையா டைப் பண்ணியிருக்கிறீர்கள்?"

சாந்தி நடுங்கிய கைகளுடன் அதை வாங்கிப் பார்த்தாள்.

"சார்... இது எப்படி மாறியது?"

"மாறியதா... மாற்றி விட்டீர்கள்... எவ்வளவு லஞ்சம் வாங்கினீர்கள்?"

"சார்.. இது அபாண்டம்.. எனக்கு இது தெரியாது."

"உங்களுக்குத் தெரியாமல் எப்படி நடந்திருக்கும்?"

"உண்மையிலேயே இது எப்படி நடந்தது என்று எனக்குத் தெரியாது சார்..."

"இதை என்னை நம்பச் சொல்கிறீர்களா?"

ஆதவன் போனை எடுத்து இன்னொரு பி.ஏ.வை அழைத்தான். அவன் அறையினுள் வந்து நின்றதும்,

"சபாபதி... இந்த டெண்டர் கோட் பண்ணினவரைக் கூப்பிடுங்கள். இந்த அம்மா சொல்வது உண்மையா, பொய்யான்னு அப்போத் தெரிந்து விடும்."

சாந்தி ஆதவனின் அறையிலேயே அமர வைக்கப்பட்டாள். பெண் போலீஸ் அதிகாரிகள் இருவர் அவளது இரு பக்கமும் வந்து நின்று கொள்ள சாந்திக்கு அடி வயிறு கலங்கியது.

காத்தவராயன் வந்தார். அவர்தான் சாந்தி ஆர்டர் டைப் பண்ணிய டெண்டரை கோட் பண்ணியிருந்தவர். மடிப்புக் கலையாத வெள்ளை வேட்டி சட்டையை அணிந்திருந்தார். கைவிரல்கள் ஐந்திலும் மோதிரங்கள் மின்னின. தங்கச் செயின் போட்ட வாட்ச்சைக் கட்டியிருந்தார்.

சைக்கிள் செயின் போல் ஒரு தடிமனான செயின் ஒன்றைக் கழுத்தில் அணிந்திருந்தார்.

"வணக்கம் கலெக்டர் சார்."

"மிஸ்டர் காத்தவராயன் உங்களுடைய டெண்டர் கோட் செலக்ட் ஆகவில்லைங்கிறது உங்களுக்குத் தெரியுமா? தெரியாதா?"

"இது என்னங்க ஐயா இப்படிச் சொல்றீங்க. டெண்டர் ஓபன் பண்ணினப்போ நானும் அங்கேதானே இருந்தேன்."

"அப்புறம் எப்படி உங்களுக்கு ஆர்டர் டைப் செய்யப் பட்டது?"

"ஆர்டர் டைப் பண்ணினது நாவில்லைங்க ஐயா..."

"என் ஆபிஸில் எப்படி இந்தத் தவறு நிகழ்ந்தது?"

"லட்சக் கணக்கில் லஞ்சம் கொடுத்தால் நடக்காதா?"

"யாருக்குக் கொடுத்தீர்கள்?"

"இந்தம்மாவுக்குத்தான்."

சாந்தி விசாரணையில் சிக்கினாள். அவள் விசாரணையில் இருந்த போது சுகுமாரனின் அம்மா கதறிக் கொண்டு ஓடி வந்தாள்.

"சாந்தி... சாந்தி.."

விசாரணையில் இருந்த சாந்தி திரும்பிப் பார்த்தாள். சுகுமாரனின் அம்மாவைப் பார்த்ததும் அவள் கண்கள் கலங்கின.

"சாந்தி! என்னம்மா இப்படி நடந்திடுச்சு..."

"தெரியவில்லை அத்தை... எல்லாம் என் விதி."

"இப்படி நடக்குமுன்னு எதிர்பார்க்கவே இல்லையே... எப்படிம்மா இதிலிருந்து சமாளித்து வெளிவரப் போகிறாய்?"



"தெரியவில்லை அத்தை. நியாயம் என் பக்கம் இருக்கு. என் மனச்சாட்சிக்கும்.. தெய்வத்திற்கும் தெரியும். நான் நேர்மையானவள் என்று.. எனக்கு ஒன்றும் நேராது."

சுகுமாரனின் அம்மா விழித்தாள்.

"உனக்கு என்ன வரும்?"

"என் மேல் பொய் குற்றம் சாட்டி விசாரித்துக் கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் ஒன்றும் கவலைப்படாதீர்கள்."

"என்னது.. உன்னைப் பற்றி நான் கவலைப்படுகிறேனா? நீ என்னவானால் எனக்கென்ன? நானே சுகுமாரனை ஜாமீனில் எடுக்க வக்கீலை ஏற்பாடு பண்ணுவேன்னு வந்தால் நீயே இப்படி உட்கார்ந்துக்கிட்டு இருக்கே. சரிசரி.. ஏதாச்சும் பணம் இருந்தால் கொடு. நான் என் மாப்பிள்ளைகளை வைச்சுப் பார்த்துக்கிறேன்."

அந்த அறையில் சாந்தியை விசாரணை செய்து கொண்டிருந்த பெண் போலீஸ் அதிகாரி சுகுமாரனின் அம்மாவை ஒரு புழுவைப் பார்ப்பது போல் பார்த்து விட்டு சாந்தியைப் பார்த்தாள். சாந்தியின் உள்ளம் உடைந்திருப்பது அவளது விழிகளில் தெரிந்தது. விசாரணை அதிகாரியின் மனம் இளகியது. சுகுமாரனின் அம்மாவைப் பார்த்து,

"நீ யாரும்மா?" என்று கேட்டாள்.

"இந்த ஆபீஸில் வேலை பார்க்கிற சுகுமாரனின் அம்மா."

"வேலை பார்த்த சுகுமாரன்னு சொல்.. உன் மகன் ஒரு கிரிமினல்."

"ஏம்மா.. வயசானவங்கிற மரியாதை கொஞ்சம்கூட இல்லாமல் பேசறீங்களே. என் மகன் அப்பாவிம்மா."

"அவனா அப்பாவி? சரியான படுபாவி! ஆமாம். தெரியாமல் தான் கேட்கிறேன். நீ எதற்காக இந்தப் பெண்

ளிடம் வந்து பணம் கேட்கிறாய்? உன் பணம் எதுவும் கொடுத்து வைத்திருக்கிறாயா?"

"அப்படியெல்லாம் இல்லைம்மா."

"கடன் கேட்கிறாயா?"

"கடனா... சாந்தி என்ன அந்நியமா அசலா? எங்களுக்கு செலவு பண்றது அவள் கடமைம்மா."

"ஸிட்... நீயென்ன இந்தப் பெண்ணுக்கு சொந்தமா? பந்தமா?"

"அதெல்லாம் இல்லைம்மா..."

"இல்லையென்றால்... எதிர்காலச் சொந்தமா? ஐ மீன்... இந்தப் பெண்ணை உன் மகனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கப் போகிறாயா?"

"சேச்சே.. இந்தப் பொண்ணைப் போய் என் மகனுக்கு கட்டி வைக்கிறதா? அவன் முதலில் இப்படி உளருனான். நான் எடுத்துச் சொன்னதும் கேட்டுக்கிட்டான். இதுக்கு தம்பி, தங்கச்சிங்கன்னு ஆயிரம் குடும்பச் சுமை இருக்கு... இதுதான் மூத்த பொண்ணாம். இதைக் கட்டிக்கிட்டு நாங்க என்ன பண்ண? இது சம்பாதிக்கிற காசை அப்பன் வீட்டுக்கு அழுதுட்டு நிக்கும். நாங்க எங்க குடும்பத்தை என் மகன் ஒருத்தன் சம்பாத்தியத்தில் பார்த்துக்கணும். தேவையா எங்களுக்கு. அவன் இப்ப ஒரு பணக்காரப் பொண்ணை வளைச்சுப் போட திட்டம் போட்டிருக்கான். அது கிடைக்கலேன்னா.. அதை மாதிரி வேற ஒரு பொண்ணு மாட்டாமலா போயிரும்?"

இனி இவள் தயவு கிடைக்காது. இவளோ உதவ முடியாத நிலையில் இருக்கிறாள் என்று தெரிந்ததும் சுகுமாரின் அம்மா குரூரமாய் வார்த்தைகளைக் கொட்டி விட்டாள்.



சாந்தியைக் கத்தரித்து விட சமயம் பார்த்துக் கொண்டிருந்தவள் அவள். கறக்கும் வரை கறப்போம்... என்று கறந்தவள்.. இப்போ அவள் நெருக்கடியான நிலையில் இருக்கும்போது கழற்றி விட்டு விட்டாள்.

"ஓ... ஐ... ஸீ... இந்த சாந்தி உனக்கு சொந்தமுமில்லை. பந்தமுமில்லை. இவளை உன் மகனுக்கு கட்டி வைக்கணும்கிற எண்ணமும் இல்லை.. அப்புறம் எதற்கு இவளிடம் பணம் வாங்கினாய்?"

"இப்போ எங்கே இவள் பணம் கொடுத்தாள்?"

"இதற்கு முன்னால் வாங்கினது எல்லாம் பணமில்லையா?"

"என்ன கொடுத்தாள்?"

"இதோ பாரும்மா.. விசாரணையென்று வந்து விட்டால் நாங்கள் எல்லோரையும் விசாரிப்போம். எல்லாவற்றையும் விசாரிப்போம். உன் மூத்த பெண்களுடைய கல்யாணம் எப்படி நடந்ததுன்னு எங்களுக்கும் தெரியும். நீ போட்ட நகை செலவழித்த பணம் எல்லாமே சாந்தி கொடுத்தது. இப்போது உன் சின்னப் பெண் கல்யாணத்திற்கும் இவளை நம்பித்தானே மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருக்கிறாய்?"

"நாங்களா கேட்டோம்? என் மகளைக் கல்யாணம் பண்ணனும்னு கனாக் கண்டுக்கிட்டு இந்தப் பொண்ணு அள்ளிக் கொடுத்தா.. வேண்டாம்ன்னு சொல்ல நான் என்ன முட்டாளா?"

"அள்ளிக் கொடுத்தால் வாங்கிக்க உரிமையிருக்கு. இந்தப் பெண்ணை உன் மகன் கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைக்க இவளுக்கு உரிமையில்லை. அப்படி

நினைத்தால் அது கனா.. தெரியாமல் தான் கேட்கிறேன். உன் மகன் என்ன பெரிய ராஜகுமாரனா? அவனும் இந்தப் பெண்ணைப் போல் வேலை பார்ப்பவன் தானே.. கூடப் பிறந்த அக்கா, தங்கைகளுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுக்க வக்கில்லாமல்.. ஒரு பெண்ணின் தயவை எதிர்பார்க்கும் சுபோதிதானே எந்த வகையில் இந்தப் பெண்ணை விட உன் மகன் உயர்ந்தவன்? இந்தப் பெண்ணின் கால் தூசி பெறுவானா அவன்? படித்துப் பட்டம் பெற்ற கவர்ன்மெண்ட் சம்பளம் வாங்குகிற பெண்ணை ஆயிரம் நொட்டை சொல்கிறாயே.. உன் மகன் கிரிமினல் இல்லைம்மா. அவனைக் கொட்டிக் கொட்டி குளவியாக்கி வைத்திருக்கிறாயே.. நீதான் கிரிமினல்.''

''நீங்க யாரும்மா என்னைக் கேள்வி கேட்க? இவ பணம் எப்படி கொடுத்திருப்பாள்ன்னு எனக்கு இப்பல்ல விளங்குது. இவ வீட்டிலேயே தரித்திரம் தாண்டவ மாடுது. இவள் தம்பி தங்கச்சிகளுக்கே ஒரு வழி பண்ண முடியாதவள் என் பொண்ணுகளுக்கும் மகனுக்கும் எப்படி அள்ளி அள்ளி கொடுக்கிறாள்ன்னு அப்பவே எனக்கு சந்தேகம் தட்டுப் பட்டுச்சு. இப்பல்ல தெரியுது. இவ லட்சணம். இப்படி லஞ்சம் வாங்கித்தான் கொடுத்திருக்கா. இல்லாட்டி என் மகனால முடியாதது இவளால எப்படி முடிஞ்சது. நீங்க நல்லா விசாரிங்கம்மா.. இவளையெல்லாம்.''

''அப்படியே பேச்சை நிறுத்திவிட்டு ஓடிப்போயிடு... இல்லை.. உன்னைத் தூக்கி உள்ளே போட்டு விடுவேன்.. கெட் அவுட்.''

பெண் போலீஸ் அதிகாரி கத்திய கத்தலில் வெளியே ஓடிப்போய் விட்டாள் அந்தப் பெண்மணி. கோபம் முகத்தில் தெரிய சாந்தியைப் பார்த்து,



''அந்தம்மா கடைசியாய் என்ன சொன்னாங்ன்னு காதில் விழுந்ததா? அதற்கு என்ன பதில் இருக்கிறது உன்னிடம்...'' என்று கேட்டாள்.

சுகுமாரனின் அம்மா பேசிய பேச்சில் பாதி உயிர் போன நிலையில் இருந்த சாந்தி விம்மினாள். அவள் மனம்-அம்பு குத்திய பறவையாய் துடிதுடித்தது.

''கடன் வாங்கினேன் மேடம். என் சக்திக்கு மீறி கடன் வாங்கினேன். தெரிந்தவர். தெரியாதவர்ன்னு கணக்கே வைத்துக் கொள்ளாமல் கடன் வாங்கினேன். எப்படிக் கட்டுவேனென்று எனக்கேத் தெரியாத போதும் கடன் வாங்கினேன். என் கல்யாணத்திற்கும் என் தங்கையின் கல்யாணத்திற்கும் வைத்திருந்த எங்கள் குடும்ப நகைகளைத்தான் என் வீட்டாருக்குத் தெரியாமல் லாக்கரில் வைக்கிறேன்னு பொய் சொல்லி கொண்டு வந்து கொடுத்தேன். இவர் இப்படி ஒரு குணம் படைத்தவர்ன்னு எனக்குத் தெரியாமல் போய் விட்டதே. என் வீட்டாருக்கு பணம் கொடுத்து இரண்டு வருடமிருக்கும். என் சம்பளம் என் செலவுக்கே பத்தாதுன்னு கதை விட்டேன். என் வீட்டில் நம்பி விட்டார்கள். இதில் கொடுமை என்னவென்றால் 'உனக்கு செலவுக்கு பத்தவில்லையென்று சரியாய் சாப்பிடாமல் இருக்காதே. என்னிடம் கூச்சப்படாமல் கேட்டு வாங்கிக் கொள்'ன்னு என் அப்பா சொன்னார். குற்ற உணர்வை குழி தோண்டி புதைத்து விட்டு சுகுமாரன் மேலிருந்த காதலால் ஓடி ஓடி உதவி செய்தேன். என் பணத்தைப் பிடுங்கி.. என் நகைகளைப் பிடுங்கி.. என்னைக் கடன்காரியாகவும் ஆக்கியது போதாது என்று என் பிரண்ட் பவித்ராவிற்கும் துரோகம் செய்ய வைத்தார்கள். நான் பாவி மேடம்.. அந்தப் பாவிகள் சொன்னதை

யெல்லாம் கேட்டேன். என் பிரண்டை நானே டார்ச்சர் பண்ணினேன். அவள் கல்யாணத்தை நிறுத்தி அவள் மனம் உடைந்து மன அமைதியைத் தேடி ஊர் விட்டு ஊர் போகக் காரணமாகி விட்டேன். வள்ளுவர் வாய் மொழி பொய்க்காது மேடம். அவரே பொய்யா மொழிப் புலவர் அல்லவா. சொன்னாரே..

'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா பிற்பகல் தானே தேடி வரும்' என்று அன்றே சொன்னாரே. அது மெய்யாகி விட்டதே.. செய்யாத வாக்குறுதியை அவள் செய்தாள்ன்னு பொய் சொன்னேன். இன்று செய்யாத குற்றத்திற்கு விசாரணைக்கு உட்கார்ந்து இருக்கிறேன். எனக்கு இந்தத் தண்டனை தேவைதான் மேடம்..." சாந்தி குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

விசாரணை செய்த அந்தப் பெண் போலீஸ் அதிகாரி மேஜை மேலிருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து சாந்தியிடம் கொடுத்தாள். அவள் குடித்து முடிக்கும் வரை காத்திருந்தாள். சாந்தி குடித்து முடித்ததும் டேபிள் வெயிட்டை உருட்டியவாறு அவளை ஏறிட்டுப் பார்த்தாள்.

"இதுதான் உலகம் சாந்தி. உன்னை ஏமாற்றுகிறவர்களை குற்றம் சொல்லாதே.. ஏமாறியது உனது குற்றம். தவறு செய்து விட்டேனென்று வருந்தி என்ன பிரயோஜனம்? தவறை சரி செய்து கொள்ள ஓர் வாய்ப்புக் கிடைத்தால் நீ பயன்படுத்திக் கொள்வாயா?"

"நிச்சயமாய் மேடம்.. எனக்கு அப்படி ஒரு வாய்ப்புக் கிடைத்தால் நிச்சயம் பரிகாரம் செய்வேன்.."

"ஷ்யூர்?"



"ஷ்யூர்.."

சாந்தியின் முகத்தில் பெண்மையின் தீவிரம் தெரிந்தது. மாயையைத் தெரிந்து கொண்ட... அதிலிருந்து தெளிந்து விட்ட அறிவு, சுடர் விட்டது.

## 30



தேக்கடியிலிருந்து தஞ்சைக்குக் கொண்டு வரப்பட்டான் சுகுமாரன். ஒரு கட்டிடத்தில் அவனை வைத்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். மாற்றி மாற்றி அதிகாரிகள் கேட்ட கேள்விகளால் அவன் நொந்து நூலாகி விட்டிருந்தான்.

"உங்களுக்கு எங்கிருந்து போதை மருந்து சப்ளை ஆகிறது?"

"எங்கிருந்தும் இல்லை சார்."

"நீங்கள் யாரிடம் அதை கைமாற்றப் போனீர்கள்?"

"யாரிடமும் இல்லை சார்."

"தேக்கடியில் யாரைச் சந்திப்பதாக இருந்தீர்கள்?"

"யாரை நான் சந்திப்பேன்? அங்கே யாரையுமே தெரியாது சார்."

"எதற்காக தேக்கடிக்குப் போனீர்கள்?"

"பவித்ராவைத் தேடிப் போனேன்."

"பவித்ரா என்பது யார்?"

"என்னுடன் வேலை பார்ப்பவள்..."

"அவர்களை ஏன் நீங்கள் தேடிப் போனீர்கள்?"

"உடம்பு சரியில்லை என்று லீவில் போனாள்."

"அதனால் தேடிப் பிடித்து தொந்தரவு செய்யப் போனீர் களா?"

"தேடிப் பிடிக்கத்தான் போனேன் சார்."

"ஏன் தேட வேண்டும்? அவர்கள் எங்கிருந்தார்கள் என்றே தெரியாதா?"

"எனக்குத் தெரியாது சார்... அதனால் தேடப் போனேன்."

"மிஸ்டர் சுகுமாரன்... போதை மருந்து குற்றத்தோடு கொலை முயற்சி குற்றத்தையும் சேர்ந்து செய்திருக்கிறீர் களா?"

"கொலை முயற்சியா? யாரைக் கொல்ல முயற்சித்தேன்."

"பவித்ரா என்பவர்களை கொலை செய்யத் திட்டமிட் டீர்களா... இல்லையா?"

"ஐயையோ... இது என்ன புதுக்கதையாக இருக்கிறது."

"வேறு எதற்கு அவர்களைத் தேடிப் போனீர்கள்? அவங்க உங்க கூட வேலை பார்த்தவங்கதானே? அவங் களை ஏன் கொலை செய்யத் தேடினீர்கள்? நீங்கள் போதை மருந்து வியாபாரம் செய்வது அவங்களுக்கு தெரிந்து விட்டது என்றுதானே கொலை செய்யத் தேடிப் போனீர்கள்?"



"சார்... சார்.. நீங்களாக கதை சொல்லாதீர்கள்."

"நாங்களாகச் சொல்லவில்லை தம்பி. பவித்ராவின் அண்ணன் கம்ப்ளெயின்ட் பண்ணியிருக்கிறார். அது தெரியுமா?"

"என்னவென்று...?"

"உங்களுடைய நடவடிக்கைகளில் அவருக்கு சந் தேகம் இருக்கிறது. அவர் தங்கையை தேவையில்லாமல் டார்ச்சர் பண்ணுகிறீர்கள்... எங்கே போனாலும் தொடர் கிறீர்கள். அவரது தங்கையின் உயிருக்கு உங்களால் ஆபத்து ஏற்பட்டு விடும் என்று பயமாய் இருக்கிறது.. என்றெல் லாம் கம்ப்ளெயின்ட் பண்ணி இருக்கிறார். உங்கள் வாக்கு மூலத்தில் நீங்களும் அதை ஒத்துக் கொண்டு விட்டீர்கள். டெல் மீ. எதனால் அந்தப் பெண்ணை டார்ச்சர் பண்ணி னீர்கள். எதனால் தேடிப் போனீர்கள்?"

சுகுமாரன் நிலைமை உரலில் தலையைக் கொடுத்தவன் நிலைமையாக ஆகிப் போனது. என்ன பதிலைச் சொன் னாலும் அது அவனுக்கே எதிராய் திரும்பும் நிலைமை. கேள்விக் கணைகள் தொடர்ந்தன.

"பை தி வே சுகுமாரன். உங்கள் போதை மருந்து வியா பாரத்தில் வந்த பணத்தில்தான் உங்கள் அக்காக்களின் திருமணத்தை நடத்தினீர்களாமே.. உண்மைதானா?"

"சுத்தப் பொய் சார்."

"ஈஸிட்? நீங்கள் வேலையில் சேர்ந்து ஐந்து வருடங் கள் தான் ஆகிறது. உங்கள் குடும்பப் பொருளாதார நிலைமை சரியானதாக இல்லை. நீங்களும் உங்கள் மூன்று சகோதரிகளும் வயிறார சாப்பிடத்தான் உங்களது சம்பளம் சரியாக இருந்திருக்கும். இதில் வீட்டு வாடகை...

துணிமணி... லொட்டு லொசுக்கு செலவுகளை சாமளிக்கவே நீங்கள் திணறியிருக்க வேண்டும். ஆனால் கடந்த இரண்டு வருடங்களாகவே உங்கள் கையில் அதிகப் பணப்புழக்கம் இருந்திருக்கிறது. அது எப்படி வந்தது...?''

''அது... அது...''

''உங்கள் அக்காக்கள் இருவருக்கும் போன வருடத்தில் வெறும் ஆறு மாத இடைவெளியில் அடுத்தடுத்து திருமணம் பண்ணியிருக்கிறீர்கள். மாப்பிள்ளைகள் வசதியான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்... அவர்கள் கேட்ட நகைகளையும் சீர்வரிசைகளையும் தவணை சொல்லாமல் கொடுத்து இருக்கிறீர்கள். கடனும் வாங்கவில்லையென்று தெரிகின்றது. அட்லீஸ்ட் ஜி.பி.எப். லோன் கூட நீங்கள் போடவில்லை... இந்தப் பணத்திற்கு என்ன பண்ணினீர்கள்? சொல்லுங்கள்.. இதற்கு சரியான விளக்கம் கொடுக்கா விட்டால் உங்களை போதை மருந்து வியாபாரத்தில் ஈடுபட்டு அந்தப் பணத்தை சம்பாதித்ததாகவே நாங்கள் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும்.''

சுகுமாரன் பொறியில் மாட்டிய எலியாய் ஆனான். 'உண்மையைச் சொல்லா விட்டால் தப்பிக்க முடியாது போல இருக்கிறதே. பவித்ராவின் அண்ணன் நேரடியாய் அடிப்பான். இல்லாவிட்டால் ஆளை வைத்து அடிப்பான். அதை வைத்து பவித்ராவிடம் சிம்பதி கிரியேட் பண்ணி அவளது அனுதாபத்தைப் பெற்று விடலாம் என்று கணக்குப் போட்டால்... அவன் போலீஸில் புகார் கொடுத்து வைத்திருக்கிறானே... இதிலிருந்து எப்படி விடுபடுவது என்று சிந்தித்தவன். தலை தப்பினது தம்பிரான் புண்ணியம் என்ற முடிவிற்கு வந்தான்.



இனி பவித்ராவை நினைத்துக் கூட பார்க்க முடியாது. அவளுடைய அண்ணன் சுகுமாரனை சும்மா விட மாட்டான். பந்தாடி விடுவான். தேவையில்லாமல் அவளைத் தேடிப் போய் இழுத்துக் கொண்ட வினை போதும். இப்போதே இப்படிச் செய்கிறவன். பவித்ராவை மிரட்டித் திருமணம் செய்து கொண்டால் வாழ்நாள் முழுவதும் அவனை வதைப்பான். அவனது தங்கையை வரதட்சனை கொடுமை பண்ணினாய் என்று சொல்லி உள்ளே தூக்கிப் போடுவான். ஏன்? சாப்பிடும் சாப்பாட்டில் விஷத்தை வைக்கக் கூடத் தயங்க மாட்டான். வேண்டாம்... அவனுடைய சகவாசமே வேண்டாம்.

இப்போது பவித்ராவை சுத்தமாய் சுகுமாரனுக்கு பிடிக்காமல் போனது. அவளும்.. அவள் முகமும்.. பேசாமல் சாந்தியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு நிம்மதியாய் குடும்பம் நடத்தியிருக்கலாம். இந்த அம்மாதான் அவன் மனதைக் கலைத்து விட்டாள். அவளுக்கு என்ன.. வேண்டாத பிரச்னைகளில் அவனை மாட்டிவிட்டு அவள் மட்டும் நிம்மதியாக இருக்கிறாள்.

பாவம் சாந்தி... அவன் மேல் உண்மையான அன்பு கொண்டவள். சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தே 'நாம் ஆசைப்படறவங்களை கல்யாணம் பண்ணிக்கிறதை விட நம்மேல் ஆசைப்படறவங்களை கல்யாணம் பண்ணிக்கிட்டால் வாழ்க்கை நல்லா இருக்கும்ன்னு' சொல்லியிருக்கார்.

அவனுக்கு பவித்ரா மேல் ஆசை இருந்தது இல்லையே. அவனுடைய அம்மாவுக்குத்தான் ஆசை. பவித்ராவின் மேல் அல்ல. அவளுடைய வசதியின் மேல்.

''மிஸ்டர் சுகுமாரன்... எங்கள் கேள்விக்கு என்ன பதில்?''

நினைவுகளில் மூழ்கியிருந்த சுகுமாரனை அதிலிருந்து வெளியே கொண்டு வந்தது விசாரணை அதிகாரியின் குரல்.

''சார்.. அதையெல்லாம் என்னுடன் வேலை பார்க்கும் சாந்தி என்ற பெண்ணின் உதவியால்தான் நான் செய்தேன்.''

''நாங்கள் அந்தப் பெண்ணை வரவழைத்து விசாரிப்போம். அவள் 'யெஸ்' என்றால் நீங்கள் தப்பித்தீர்கள்.''

''நோ என்று சொல்ல மாட்டாள் சார். அவளுக்கு என் மேல் காதல் இருக்கிறது. அதனால்தான் உதவி செய்தாள்.''

''ஊஹூம்..? அப்படியானால் நீங்கள் அவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்களா?''

இல்லையென்றால் அவன் தொலைந்தானே.

''ஆமாம் சார். அவள் என் வருங்கால மனைவி. அதனால்தான் அவள் எனக்குப் பண உதவி செய்தாள்.''

மறுநாள் சாந்தி வரவழைக்கப்பட்டாள். விசாரணை ஆரம்பிக்கும் முன் விசாரணை அதிகாரிகளின் அனுமதி பெற்று சுகுமாரனை தனியே சந்திக்க வந்தாள் சாந்தி.

''சுகுமார்.. நிலைமை சிக்கலாக இருக்கிறது. நீங்கள் சரியாக மாட்டி இருக்கிறீர்கள். இதிலிருந்து தப்பிக்க என்ன செய்வதாக இருக்கிறீர்கள்?''

''நானா... நான் என்ன செய்ய முடியும்? நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும் சாந்தி. என் அக்காக்களின்



கல்யாணத்தை உன்னிடம் நகைகளையும், பணத்தையும் வாங்கித்தான் நான் நடத்தினேன் என்கிற உண்மையை நீ சொன்னால் போதும். எல்லாம் சரியாகிவிடும்.''

''நான் எப்படி அதைச் சொல்ல முடியும் சுகுமார்?''

''சாந்தி... என்ன சாந்தி இப்படிச் சொல்கிறாய்... உன்னை நம்பித்தானே நான் இருக்கிறேன்? நீயே என்னைக் கை விட்டால் எப்படி?''

''நீங்கள் என்னைக் கை விட்டீர்களே... இன்று பவித்ராவிற்காக என்னைக் கை கழுவியவர்... நாளை ஒரு சுபத்ரா வந்தால் மீண்டும் கை விட மாட்டீர்கள்ன்னு என்ன நிச்சயம் சுகுமார்? நீங்கள் ஒரு நம்பிக்கைத் துரோகி. நிறம் மாறும் பச்சோந்தி. உங்களை நம்பி விசாரணையில் நான் உண்மையை ஒத்துக் கொண்டால் நாளை எனக்கென்று ஓர் வாழ்வு அமைவது எப்படி?''

''உனக்கென்று ஓர் வாழ்வா? நானில்லையா உனக்கு?''

''எதற்கு என் பணத்தை அட்டை போல் உறிஞ்சி உயிர் வாழவா? நானும் மனுஷிதானே... எனக்கும் வாழ வேண்டுமென்று ஆசை இருக்காதா? உங்கள் மேல் எனக்கு நம்பிக்கையில்லை சுகுமார்.''

''சாந்தி.. சாந்தி.. அவசரப்பட்டு இல்லையென்று சொல்லி விடாதே. உனக்கு நம்பிக்கை வர நான் என்ன செய்ய வேண்டும்?''

''உடனே என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். முடியுமா உங்களால்? நீங்கள் அதற்குத் தயார் என்றால் உங்களுக்கு சாதகமாக சாட்சி சொல்ல நானும் தயார்.''

"உடனேவா... நானே விசாரணையில் இருக்கிறேனே..."

"அதைப் பற்றி உங்களுக்கென்ன கவலை? அது என் கவலை... என்ன சொல்லுகிறீர்கள்?"

அவன், என்ன சொல்லுவான்?

"சரி"யென்று சொன்னான்.

## 31



சாந்தி வேகமாகச் செயல்பட்டாள். சுகுமாரன் இருந்த அறையை விட்டு வெளியே வந்தவள் அங்கிருந்தவர்களிடம் கட்டை விரலைத் தூக்கிக் காண்பித்தாள்.

"ஐ டிட் இட்..."

"வெல்டன் சாந்தி. இனி நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்."

அடுத்த ஒரு மணி நேரத்தில் அவர்கள் சாந்தியையும், சுகுமாரனையும் பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார்கள். சுகுமாரனை பட்டு வேஷ்டி சட்டை அணியச் செய்திருந்தார்கள்.

"சார்.. இதெல்லாம் எதற்கு? நான் சாதாரணமாகவே வருகிறேனே."

"அடுத்தவர்கள் வாங்கிக் கொடுத்தால் வாங்கிக் கொள்ள மாட்டீர்கள் போல.. சாந்தியிடம் மட்டும் எப்படி அவ்வளவு 'ஓசி'களை வாங்கி அனுபவித்தீர்கள்..."



குறி பார்த்து அவர்கள் தாக்க வாயை மூடிக் கொண்டு வாங்கி உடுத்திக் கொண்டான். சாந்தி பட்டுப் புடவையில் இருந்தாள். மணப் பெண் அலங்காரத்தில் பார்க்க அழகாகவே இருந்தாள்.

"பெண் யாரு..." ரெஜிஸ்ட்ரார் வினவ சாந்தி வந்து நின்றாள்.

"மாப்பிள்ளை...?" சுகுமாரன் பலி ஆடு போல் வந்து நின்றான்.

"ரெண்டு பேரும் கையெழுத்துப் போடுங்க."

போட்டார்கள்.

"பெண் சார்பா யார் சாட்சி கையெழுத்துப் போடுவது?"

"நான் போடுகிறேன்" சாந்தியை விசாரித்த பெண் போலீஸ் அதிகாரி கையொப்பம் இட்டார். சாதாரணமாய் புடவையில் இருந்தார்.

"மாப்பிள்ளை சார்பாய் யார் சாட்சிக் கையெழுத்துப் போடுவது?"

"நான் போடுகிறேன்" என்று வந்த நபரைக் கண்டதும் ரெஜிஸ்ட்ரார் சீட்டை விட்டு எழுந்து வணக்கம் சொன்னார்.

ஆதவன்.. கலெக்டர் ஆதவன்... சுகுமாரன் சார்பாய் சாட்சிக் கையொப்பம் இட்டான்.

"பெண்ணும், மாப்பிள்ளையும் மாலையை மாத்திக்கங்க..."

மாற்றிக் கொண்டார்கள். எல்லோரும் வாசலுக்கு வர சாந்தியிடம் விடை பெற்றாள் அந்தப் பெண் போலீஸ் அதிகாரி.

''சாந்தி.. தைரியமாய் உங்கள் புகுந்த வீட்டிற்குப் போங்க. உங்கள் கல்யாணத்தை நானும் கலெக்டர் சாரும் நடத்தி வைத்திருக்கிறோம். உங்கள் மேல் துரும்பு போட்டாலும் நாங்கள் வந்து கேள்வி கேட்போம். உங்களை எதிர்ப்பது எங்களை எதிர்ப்பதுபோல... என்ன மிஸ்டர் சுகுமாரன்? நான் சொல்வது புரிகின்றதா?''

''புரிகிறது மேடம்...''

''புரிந்தால் சரி. உங்கள் மேல் எங்கள் சந்தேகக் கண் எப்போதும் இருக்கும். புத்திசாலித்தனமாய் நடந்து கொள்ளுங்கள்.''

''ஓ.கே. மேடம்.''

எல்லோரும் போய்விட சாந்தி சுகுமாரனை அழைத்தாள்.

''ஒரு ஆட்டோ பிடிங்க. நாம் வீட்டிற்குப் போகலாம்.''

''அவ்வளவுதானா... உன்னை அவர்கள் விசாரிக்கவில்லையா?''

''விசாரணைதான் முடிந்து விட்டதே.''

''எப்படி?''

''நாம்தான் கல்யாணம் பண்ணி நீங்கள் சொன்னது உண்மைதான் என்று புருவ் பண்ணி விட்டோமே...''

சாந்தியே ஒரு ஆட்டோவை கை தட்டி அழைத்தாள்.

''ஏறுங்க...'' ஏறி விலாசம் சொன்னார்கள்.

வாசல் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு சுகுமாரனின் அம்மா வந்து கதவைத் திறந்தாள். மாலையும் கழுத்துமாய் உள்ளே வந்த சுகுமாரனையும், சாந்தியையும் கண்டதும் அதிர்ச்சியில் வாய் பிளக்க அப்படியே நின்று விட்டாள்.



''அடப் பாவி என்ன காரியம் பண்ணி விட்டு வந்திருக்க?''

''ம்ம்.. கல்யாணம் பண்ணிக் கொண்டு வந்திருக்கிறார். நீங்கள் உள்ளே போங்க'' சாந்தி அலட்சியமாய் உத்தர விட சுகுமாரன் உள்ளே சென்றான்.

''எவ்வளவு தைரியம்டி உனக்கு?''

''அதைத்தான் இப்போது பார்த்தீங்கல்ல. இதுக்கு மேலேயும் உண்டு. போகப் போக அதைக் காட்டுகிறேன்.''

''எங்கேயிருந்து வந்தது இந்தத் தைரியம்?''

''ஏங்க இங்க வாங்க'' சாந்தி அறைப் பக்கம் திரும்பி சுகுமாரனை அழைத்தாள். அவன் உடனே வெளியே வந்தான்.

''எனக்கு எங்கேயிருந்து வந்தது இவ்வளவு தைரியம்ன்னு உங்க அம்மாவுக்குத் தெரியணுமாம். உங்களுக்குத் தெரியுமில்லையா. சொல்லுங்கள்.''

சுகுமாரன் பயந்து போனான். தாயை அதட்டினான்.

''அம்மா வாயை மூடிக் கொண்டு உள்ளே போ... சாந்தி நீ வா.''

''எங்கே...?''

''நம் பெட்ரூமிற்கு.''

''எதற்கு...?''

''உள்ளே வா சொல்கிறேன்.''

சுகுமாரன் அறைக் கதவைத் தாழிட்டு விட்டு அவளை நெருங்கினான். கொதிப்பிலிருக்கும் சாந்தியை குளிர்விக்க எண்ணி கட்டி அணைத்தான். நெருப்பை மூட்டி

யவன் அதிலேயே எரிந்து போன கதையாய் அவன் அந்த முதல் இரவில்... முதல் உறவில்... விழ்ந்து விட்டான்.

சாந்தி சுகுமாரனைக் காதலித்தவள். கணவனாக அவன் தொட்டபோது முழு மனதுடன் அவனுடன் கலந்தாள். அதனால் அவனை வென்றாள். அந்த இரவு முடிந்து விடிந்தபோது சுகுமாரன் முழுவதும் சாந்தியின் அடிமையாகி விட்டிருந்தான். அவள் 'நில்' என்றால் நின்று 'உட்கார்' என்றால் உட்காரும் பெண்டாட்டி தாசனாகி விட்டிருந்தான்.

மறுநாள் காலையிலேயே சாந்தி வீட்டுப் பொறுப்பை கைப்பற்றி விட்டாள். குளித்து விட்டு வந்து அடுப்பைப் பற்ற வைத்து காபி போட்டுக் கொண்டிருந்த போது சுகுமாரனின் தாய் அங்கே வர...

"இப்படி மசமசன்னு எழுந்து வந்தால் என்ன அர்த்தம்? அவரும் நானும் வேலைக்குப் போக வேண்டாமா? நாளையிலிருந்து எங்களுக்கு முன்னாலேயே எழுந்து காபி போட ஆரம்பித்து விட வேண்டும் ஜாக்கிரதை..." என்று அதட்டினாள்.

"யாரை அடுப்பு வேலை பார்க்கச் சொல்றே..."

"உங்களைத்தான். வெட்டியாய் சாப்பிட்டு விட்டு வீட்டில் இருப்பது நீங்கள் தானே... எங்கே உங்கள் செல்ல மகன்? சின்ன மகள்?"

ஆடி அசைந்து கொண்டு சுகுமாரனின் தங்கை அங்கே வந்தாள்.

"அம்மா... காபி..."

"முதலில் வாசல் தெளித்துக் கோலம் போட்டாயா. அதைச் செய்... அப்புறம் காபி குடிக்க வா..."



"நீ யார் அதைச் சொல்ல... நீ நேற்று வந்தவள்."

"நான் யாரா? இந்த வீட்டிற்குச் சம்பாதித்துக் கொட்டும் உன் அண்ணனின் பெண்டாட்டி. உன்னைப் போல் வெட்டியாய் பொழுதை ஓட்டாமல் உன் அண்ணனுக்கு சமமாய் வேலைக்குப் போய் சம்பாதிப்பவள். நேற்றுத் தான் நான் வந்தேன். நீயும் உன் அம்மாவும் ஒழுங்காய் மரியாதையாய் நடந்து கொள்ளவில்லை என்று வைத்துக் கொள். இன்றே உன் அண்ணனைக் கூட்டிக் கொண்டு தனிக் குடித்தனம் போய் விடுவேன். கல்யாணம் ஆக வேண்டிய பெண்ணாய் லட்சணமாய் நடந்து கொள்."

சுகுமாரனின் தங்கை மிரண்டு விட்டாள்.

"நீ கூப்பிட்டால் எங்க அண்ணன் வந்து விடுமா?"

"அதுதானே" சுகுமாரனின் அம்மா ஒத்து ஊதினாள்.

"ஏங்க..." சாந்தி உள்ளே திரும்பி அழைப்பு விட,

"என்ன சாந்தி" என்று ஓடி வந்தான் சுகுமாரன்.

"இங்கேயிருந்து நமக்கு ஆபீஸ் தூரமே... அங்கேயே பக்கத்தில் ஒரு வீடு பார்த்துப் போய் விடலாமா?"

"போகலாமே."

"நாம் மட்டும்தான் போகிறோம். உங்க அம்மாவும் தங்கையும் இங்கேதான் இருப்பாங்கள்..."

"நீ சொன்னால் சரிதான்..."

"மாதா மாதம் முடிந்தால்... முடிந்தால் தான்.. ஏதோ சாப்பாட்டுச் செலவிற்குன்னு கொடுக்க முடியும்.. பழைய படி உங்கள் அம்மா வீட்டு வேலை செய்தும்.. உங்கள் தங்கை தையல் வேலை செய்தும்.. குடும்பத்தை நடத் தட்டுமே... அதுதான் உங்கள் அக்காக்களுக்கு என்

நகைகளையும் பணத்தையும் போட்டு நான் திருமணம் நடத்தி முடித்து விட்டேனே... இன்னும் இவர்கள் சுமையை நான் ஏன் சுமக்க வேண்டும். நீங்கள் என் புருசன். நாளைக்கே நமக்கென்று குழந்தை பிறக்கும். நாமும் நாலு காசு சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டாமா?"

சுகுமாரன் 'சரி'யென்று தலையை ஆட்டினான்.

## 32



சாந்தி அமைதியான அன்பான பெண். அவளை தனது கொடூர குணத்தால் வெறி கொண்ட வேங்கையாய் மாற்றி விட்டாள் சுகுமாரனின் தாய். ஒரே நாளில் வீட்டின் அதிகாரத்தை தான் கைப்பற்றி அவளை மூலையில் தள்ளினாள் சாந்தி.

பெண்ணின் போதனையில் வளர்ந்த சுகுமாரன் தன் வழக்கப்படி சாந்தியின் போதனையை மட்டுமே இப்போது கேட்டான். சுய சிந்தனை என்றுமே அவனுக்கு இருந்தது இல்லையே. சாந்தியின் முந்தானை முடிச்சில் சிக்கிய வனை இறுக முடி போட்டு இடுப்பில் செருகிக் கொண் டாள் சாந்தி.

வேறு வழியின்றி சாந்தியின் கீழ் படிந்து நடக்க ஒப்புக் கொண்டு அவள் காலில் விழுந்தனர் தாயும் மகளும். சம்பளமில்லாத சமையல்காரியும், வேலைக்காரியும்



கிடைத்தார்கள் என்று மனதில் நினைத்துக் கொண்டு அவர்களுடன் அதே வீட்டில் இருக்கச் சம்மதித்தாள் சாந்தி.

நன்றி கெட்ட மனிதர்களை இவ்வாறுதான் நடத்த வேண்டும் என்று அவள் ஏற்கனவே தீர்மானித்து வைத் திருந்ததால் குற்ற உணர்ச்சிக்கு ஆட்படவே இல்லை.

சுகுமாரனை வார்த்தைக்கு வார்த்தை 'அத்தான், அத்தான்' என்று அழைத்து கைக்குள் போட்டுக் கொண் டாள். சுகுமாரனின் தாய் முன்னிலையிலேயே எதிர்காலத் திட்டத்தை தெளிவாகக் கூறினாள் அவள்.

"அத்தான்..." என்று தேனொழுக அவள் அழைக்க,

"என்ன சாந்தி..." என்று வாயெல்லாம் பல்லாக வந்து நின்றான் அவன்.

"என்ன அத்தான் வேர்த்திருக்கிறது..." என்று சேலைத் தலைப்பால் அவன் முகம் துடைக்க அவளது சேலை வாசனையில் மயங்கிப் போய் அவன் கிறக்கப் பார்வை பார்த்தான்.

"அத்தான்.. உங்களுக்கு மூன்று உடன் பிறப்பு.. எனக்கும் மூன்று உடன் பிறப்பு.. உங்கள் உடன் பிறப்பு களில் இரண்டு பேருக்கு நான் கல்யாணம் பண்ணி வைத்து விட்டேன். இனி.. என் உடன் பிறப்புகளில் இரண்டு பேருக்கு.. அதுதான் உங்கள் கொழுந்தியாள்கள் இரண்டு பேருக்கும் நீங்கள் தான் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும்.. என்ன அத்தான்... நான் சொல்வது தானே சரி."

"நீ என்ன சொன்னாலும் சரி. சம்பளத்தை வாங்கி அப் படியே உன் கையில் கொடுத்து விடுகிறேன். ஜி.பி.எப்.

லோன் இதுவரை எடுத்ததே இல்லை. எப்போது தேவையோ.. அப்போது சொல். எல்லாவற்றையும் எடுத்து விடுகிறேன்... நீ குடும்ப நிர்வாகத்தைப் பார்த்து சிக்கனமாய் செலவுக்குக் கொடுத்து சேமித்து வை. ஜமாய்த்து விடலாம்.''

''அத்தான்..'' சுகுமாரனின் சட்டைப் பட்டனைத் திருகிக் கொண்டே கொஞ்சினாள் சாந்தி.

''என்னடா...''

''எங்கள் அப்பாவுக்கு நீங்கள்தான் மூத்த மருமகன்.''

''மூத்த மகன்னு சொல்லுடா...''

சாந்தி ஜாடையாய் திரும்பி சுகுமாரனின் தாயைப் பார்த்தாள். அவளின் பார்வை உணர்த்திய வெற்றிச் செய்தி புரிபட சுகுமாரனின் தாய் அடங்கிப் போய் விட்டாள்.

'கெடுவான்.. கேடு நினைப்பான்' என்று இதைத்தான் பெரியவர்கள் சொன்னார்களோ என்னவோ.

ஆதவனின் பங்களாவிற்கு திருமண அழைப்பிதழ் கொடுக்க வந்திருந்த அஜய் ஆதவனின் குடும்பத்தினருடன் பேசிவிட்டு ஆதவனுடன் தனியாக மாடிக்குச் சென்று பேசினான்.

''நீ போனில் சொன்னதை நம்பவே முடியவில்லை ஆதவா. எப்படி இதைச் சாதித்தாய்?''

''சாதிக்கப் பிறந்தவர்கள் நாம்.. மக்களைக் காக்க வேண்டிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள்... ஒன்றும் அறியாத ஒரு பெண்ணின் வாழ்வைக் காக்க இதைக் கூட செய்ய மாட்டேனா?''



''இரண்டு நாள்களில் கல்யாணம் பண்ணி வைத்து விடுன்னு கேட்டுக் கொண்டேன். நான் கேட்டதைச் செய்து விட்டாயே.''

''உயிர் நண்பனுக்கு ஒரு கஷ்டம்ன்னால் நான் தீர்த்து வைக்க வேண்டாமா. சரி உள்ளே வா... முக்கியமானவர்கள் சிலரை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்.''

ஆதவன் மாடியிலிருந்த பெரிய அறை ஒன்றுக்கு அஜய்யை அழைத்துச் சென்றான். அங்கே சிலர் இருந்தனர்.

''அஜய் இதுதான் கரிகாலன். டிடெக்டிவ் ஏஜென்ஸி நடத்துகிறான். என் உதவிக்கு உடனே வந்தவன்... இவன்தான் தேக்கடிக்கு சுகுமாரனைப் பின் தொடர்ந்து சென்று அவனைத் தூக்கிக் கொண்டு வந்தான்.''

''தேங்க்ஸ் மிஸ்டர் கரிகாலன்...'' அஜய் கரிகாலனின் கரம் பற்றிக் குலுக்கினான்.

''அஜய்... இவர்கள் நால்வரும் டிராமா ஆர்ட்டிஸ்டுகள். நமக்காக போலீஸ் வேடம் போட்டு சுகுமாரனைக் கொண்டு வந்து தஞ்சையில் காவலில் வைத்தார்கள். விசாரணை அதிகாரிகள்ன்னு சொல்லி அவனை பயமுறுத்தினாங்க. ''குட் பெர்பாமென்ஸ்.''

''தேங்க்ஸ் சார்.'' அவர்கள் நால்வரிடமும் தனித்தனியாய் கைகுலுக்கி நன்றி சொன்னான் அஜய்.

''எப்படி சார் போதை மருந்தை உள்ளே வைத்தீர்கள்?''

''அது போதை மருந்து இல்லை சார்.. குளுக்கோஸ் பாக்கெட்.''

அஜய் வியந்து போய் பலமாகச் சிரித்தான்.

"இவரும் டிராமா ஆர்ட்டிஸ்ட்தான்... சாந்தியை மாட்டி விட்ட காண்ட்ராக்டராய் நடித்தவர். பிரமாதமாய் நடித்தார்."

"நன்றி சார்." அவருக்கும் நன்றி சொன்னான் அஜய்.

எல்லோரும் விடைபெற்று வெளியேற சாந்தியை விசாரணை செய்த பெண் அதிகாரி உள்ளே நுழைந்தார்.

"இவங்க தான் சரஸ்வதி. போலீஸ் இன்ஸ்பெக்டர்.. பவித்ராவைப் பற்றியும் சாந்தியைப் பற்றியும் இவர்களிடம் சொன்னேன். இரு பெண்களின் வாழ்வையும் காப்பாற்ற உடனடியாய் நடவடிக்கை எடுத்தார்."

"தேங்க் யூ மேடம்."

"இட்ஸ் ஓ.கே. சார்... இப்ப இது போல் நிறைய நடக்குது சார். வேலை பார்க்கும் பெண்கள் இந்த வகையான சிக்கல்களில் மாட்டிக் கொள்கிறார்கள். துணிந்து எங்கள் உதவி கேட்கப் பயப்படுகிறார்கள். அவர்கள் எங்களை அணுகினால் அவர்கள் பெயரை வெளியிடாமல் நாங்கள் அவர்களைக் காப்பாற்றுவோம்."

"யூ டிட் குட் ஜாப் மேடம்... தேங்க்ஸ் எகெய்ன்."

சரஸ்வதியும் சென்றுவிட ஆதவன் அஜய்யின் அருகே வந்து அவன் தோளில் கை போட்டுச் சொன்னான்.

"அஜய்... சுகுமாரனையும், சாந்தியையும் தண்டிக்காமல் இந்தப் பிரச்னையை சால்வ் பண்ண வேண்டும். அவர்கள் இருவருக்கும் நெருக்கடியான நிலையை உருவாக்கி விட வேண்டும். இந்தக் காரணங்களால் மட்டுமே நாடகமாடினேன். பொய்க் குற்றச் சாட்டுக்களை அவர்கள் மேல்... நான் நினைத்திருந்தால்... உண்மைக் குற்றச் சாட்டுகளாய் மாற்றி அவர்கள் மேல் சுமத்தியிருக்க முடியும். எனக்கு அதில் உடன்பாடில்லை. அது எனது பதவியை நான் தவறான முறையில் பயன்படுத்தியது ஆகிவிடும். அதனால் தான் குளுக்கோஸ் பவுடரை போதை மருந்து என்று நம்ப வைத்தோம். டிராமா ஆர்ட்டிஸ்டுகளை உதவிக்கு அழைத்துக் கொண்டோம். சாந்தி நேர்மையான பெண். அவள் மேல் குற்றம் சுமத்தியது அலுவலகத்தில் ஒருவருக்குமே தெரியாது. ரகசியமாய் செயல்பட்டோம். சாந்தியைக் காப்பாற்ற முனைந்த சரஸ்வதி 'முள்ளை முள்ளால்' எடுத்து அவளைக் காப்பாற்றினார். இப்படித்தான் என் பதவியை துஷ்பிரயோகம் செய்யாமல் உனக்கு உதவினேன்."



"இதற்காக இந்த ஜென்மம் முழுவதும் நான் உனக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்."

அஜய் ஆதவனைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

"கட்டாயம் குடும்பத்துடன் கல்யாணத்திற்கு வந்து விடு..."

"இன்றிலிருந்து ஐந்தாவது நாளில் உன் கல்யாணம் முடிந்து இருக்கும்... இல்லையாடா..."

"யெஸ்..." கை அசைத்து அஜய் விடை பெற்றான்.

அஜய்யின் கொடைக்கானல் வீட்டில் நள்ளிரவில் சன் டி.வி.யில் 'நினைத்தாலே இனிக்கும்' நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாள் பவித்ரா. ஜூலியட் எட்டு மணிக்கே தூங்கப் போய் விட்டாள். அருகே அமர்ந்து டி.வி. பார்க்கிற சாக்கில் சளசளவென்று பேசிக் கொண்டு இருந்த ராக்காயியை.. மாடசாமி ரகசியமாய்,

''ஸ்ஸ்ஸ்...'' என்று அழைக்கவும் திரும்பிப் பார்த்தாள்.

அவன் 'வா'வென்று கை அசைத்தான். ராக்காயி பவித்ராவைக் காட்டினாள். அவனோ காதைப் பிடித்து தோப்புக் கரணம் போட்டான்.

கொடைக்கானல் குளிரில் புருஷன்காரன் தோப்புக் கரணம் போட்டு அழைத்தால் எந்தப் பெண்டாட்டிதான் போகாமலிருப்பாள்?

ராக்காயி எழுந்து போய் விட்டாள்.

டி.வி. திரையில் நிகழ்ச்சித் தொகுப்பாளர் சூர்யா தோன்றினான். சிறு வயதுப் பையனாக இருந்தான். அழகாய் கவிதை சொன்னான்.

''பூ மலர்வது காற்றுக்கு எப்படித் தெரியும்?' என்று கவிதையாய் வினவி விட்டு பழைய பாடலை ஒளிபரப்பினான் சரோஜா தேவி கடற்கரையில் படகுகளின் ஓரமாய் பாடிக் கொண்டே வந்தாள்.

''என்னை அழைத்துத் தன்னை கொடுத்து

போனவன் போனாண்டி...

தன்னைக் கொடுத்து என்னை அடைய

வந்தாலும் வருவாண்டி... ஹோய்.''

வாசலில் அழைப்பு மணி அடித்தது. இரவு நேரம். பயந்து போய் திரைச்சீலையை லேசாய் விலக்கி ஜன்னலில் எட்டிப் பார்த்தாள்.

அஜய் நின்று கொண்டிருந்தான்.

அதுவரை பாட்டில் தன்னைக் கரைத்து அழுது கொண்டிருந்தவள் கண்ணீரைக் கூடத் துடைக்க மறந்து பாய்ந்து



போய் கதவைத் திறந்தாள். ஆனந்தத்துடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''வந்து விட்டீர்களா...''

அவன் பதில் சொல்லாமல் அவளையே பார்த்தான். உள்ளே வந்து கதவை அடைத்துத் தாழ் போட்டவன்... பார்வையால் அவளை வருடி மகிழ்ந்து கொண்டிருந்தவளின் பக்கம் திரும்பி இரு கைகளையும் விரித்து அழைத்தான்.

''வா...''

ஓடி வந்து அவனது அணைப்பில் அடங்கிக் கொண்டவளின் மனதில் அப்போது எந்த எண்ணமும்.. வாக்குறுதியும் குறுக்கிடவில்லை. மடை திறந்த வெள்ளமாய் அவன் முகத்தினில் முத்த மழை பொழிந்து அவனைத் தன்னுள் அடக்கிக் கொண்டாள். விட்டால் ஓடி விடுவானோ என்ற தவிப்பில் இறுகத் தழுவிக் கொண்டாள். இனி அவனைப் பிரியவே கூடாது என்ற தாபத்துடன் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

தன்னில் புதைந்திருந்த அவளின் முதுகை வளைத்து தடவின அவனது கரங்கள். குனிந்து அவள் உச்சந்தலையில் முத்தமிட்டான் அவன்.

அவன் மனமோ.. 'இதை... இதை.. இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்' என்று கூத்தாடியது.

'எல்லாம் நீயே' என்று சரணடைகிறாளே... இப்போது அவள் மனம் ஊஞ்சலாட்டத்தை நிறுத்தி விட்டது அல்லவா?

''எப்போது வந்தீர்கள் அண்ணா...'' ஜூலியட்டின் குரல் கேட்டு அவசரமாய் விலகி நின்றனர் இருவரும்.

ஒன்றுமே நடக்காதது போல் ஜூலியட் வந்து நின்றாள்.

"காலிங் பெல் சத்தம் கேட்டதும் விழித்து விட்டேன். சத்தமில்லையென்றதும் பவித்ரா தனியாய் இருக்கிறாளே... பயந்து விடப் போகிறாள் என்று எழுந்து வந்தேன்" விளக்கம் கொடுத்தாள் ஜூலியட்.

"இப்போது தான் வந்தேன்ம்மா.. இந்தா ஸ்வீட் பாக்ஸ்."

"ஓ... தேங்க்ஸ்" என்று பிரித்துச் சாப்பிட ஆரம்பித்தாள் ஜூலியட்.

"ஏண்டி நடு ராத்திரியில் தீனியா...?"

"கொடைக்கானலில் நடு ராத்திரியில்தான் பசிக்கும்."

"ஆமாம்... ராக்காயி, மாடசாமி எங்கே?" அஜய் சுற்றும் முற்றும் பார்த்தான்.

"முக்கியமான வேலையில் இருப்பார்கள்."

"இப்போது என்ன முக்கியமான வேலை?"

"இது என்ன அண்ணா கேள்வி.. உங்கள் அருமைக் காதலி அவசரப்பட்டுக் கல்யாணத்தை நிறுத்தாமல் இருந்திருந்தால்... கணவன், மனைவி ஆன பிறகு இரவில் நீங்கள் என்ன முக்கியமான வேலையில் இருப்பீர்களோ... அந்த முக்கியமான வேலையில் இருப்பார்கள்."

"ஏய்..." ரத்தமாய் முகம் சிவந்து விட்டது பவித்ராவிற்கு. அஜய் விழுங்கி விடுவது போல் அவளையே பார்த்துக் கொண்டிருக்க பவித்ரா உதடு கடித்து முகம் திருப்பிக் கொண்டாள்.

"ஆ.. ஆ.. வெட்கமாக்கும். இப்ப கொஞ்சம் நேரம் முன்னால் இங்கே லவ் சீன் நடந்ததே. அப்ப எங்கே போச்சு உன் வெட்கம்?"



"உனக்கு எப்படித் தெரியும்."

"தெரியாமல் எப்படிப் போகும். நீ தினசரி விடியும் வரைக் காத்திருன்னு என்னைப் பாடாய் படுத்திக் கொண்டு பழைய பாட்டாய் கேட்டுக் கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பாய். உன்னை டிஸ்டர்ப் பண்ணாமல் நான் விழித்துக் கொண்டு இருப்பேன். மகராசி என்னை நிம்மதியாய் தூங்க விட்டாயாடி..."

ஜூலியட்டுடன் மற்ற இருவரும் சேர்ந்து சிரித்தனர். அந்த வீட்டில் மகிழ்ச்சி துளிர்விட ஆரம்பித்தது.

## 33



அஜய் அங்கிருந்த சோபாவில் அமர்ந்து கொண்டான். ஜூலியட்டும் பவித்ராவும் எதிரே அமர்ந்தனர்... ஜூலியட் அறியாமல் பவித்ராவிடம் தன்னருகே வருமாறு கண்களால் அழைத்தான் அஜய். பவித்ரா வெட்கத்துடன் ஜூலியட்டை கடைக்கண்ணால் சுட்டிக் காட்டினாள்.

"கூப்பிட்டால் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொள்வது தானே.... ராக்காயி உன்னைக் காட்டி மாடசாமியிடம் ஜாடை செய்தது போல என்னைக் காட்டி அண்ணனிடம் ஜாடை செய்கிறாயே..." ஜூலியட் ஸ்வீட்டைக் கவனமாய் சாப்பிட்டபடி சொன்னாள்.

"அடிப்பாவி... இதை எப்போது கவனித்தாய்..." பவித்ராவிற்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

"இதைன்னா... எதைக் கேட்கிறாய்? மாடசாமி.. ஸ்ஸ்ன்னு கூப்பிட்டதும் ராக்காயி ஜாடை காட்டி விட்டு எழுந்து போனதையும் பார்த்தேன்... இப்போது அண்ணன் உன்னைக் கண்ணால் அழைத்ததையும்.. நீ உடனே..

'அழைக்காதே... நினைக்காதே...

ஜூலியட் இருக்கிறாள் ஓ ராஜா'ன்னு ஜாடை காட்டியதையும் பார்த்தேன். இப்ப என்னங்கிறே...?"

"ஒன்றுமே சொல்லவில்லை. வா போய் தூங்கலாம்."

"என்னைக் கூப்பிடுகிறாயா... அண்ணனைக் கூப்பிடுகிறாயா?"

"ஏய்... உன்னை.. வாடி அரட்டை! போய் தூங்கலாம்."

ஜூலியட்டை இழுத்துக் கொண்டு தங்கள் அறைக்குள் போகும் போது பவித்ரா மட்டும் திரும்பி அஜய்க்கு கண்களால் 'குட் நைட்' சொன்னாள்.

அஜய் தன் அறைக்குப் போய் உடை மாற்றி படுத்தான். மூடிய அவன் விழிகளில் பவித்ரா ஓடி வந்து அவன் அணைப்பில் அடங்கிய காட்சி தோன்றியது.

'மனம் தெளிந்து விட்டாள்' என்ற நிம்மதி தோன்ற கண்களை மூடி உறக்கத்தில் ஆழ்ந்தான் அஜய்.

விடிந்ததும் வாயெல்லாம் பல்லாக ராக்காயி வந்து அவனை எழுப்பி விட்டாள்.

"ஐயா... எப்ப வந்தீங்க..."



"அதெல்லாம் நேற்று ராத்திரியே வந்து விட்டார்" ஜூலியட் குரல் கொடுத்தாள்.

"நான் ரொம்ப நேரமா முழிச்சுக்கிட்டு இருந்தேனே..."

"கப்ஸா விடாதே... உன் மாமன் கண்ணடித்துக் கூப்பிட்டதும் நீ அவர் பின்னாடியே போய் விட்டாய்." ஜூலியட்டின் குரல் மீண்டும் வந்தது.

"அதுங்க ஐயா... சும்மா... எதையாவது கேட்கணும்னு..."

"அண்ணனும் அதை அவர் வொய்ப் கிட்ட இனிமேல் கேட்டுக்குவார்... இப்ப அவரை வரச் சொல்லு..." ஜூலியட்டின் குரல் வந்தது.

"குட்மார்னிங்..." அஜய் சிரித்துக் கொண்டே வெளியே வந்தான்.

காபி குடித்துக் கொண்டு இருக்கும்போது பவித்ராவைப் பார்த்து.

"இளைத்து விட்டாய்..." என்றான் அஜய்.

"தோடா.. மூன்று நாள்களில் இளைத்து விட்டாளா? எப்போது பார்த்தாலும் சோகப்பாட்டைக் கேட்டுக் கொண்டும் பாடிக் கொண்டும் இருந்தால் இளைக்காமல் என்ன செய்வாள்?" ஜூலியட் சிரித்தாள்.

காலை உணவு முடிந்தவுடன் அஜய் பவித்ராவை அழைத்துக் கொண்டு வெளியே கிளம்பினான்.

மறுப்பே சொல்லாமல் அவன் அழைத்ததும் கூடக் கிளம்பி வந்து விட்டாள் பவித்ரா. போட் கிளப் அருகே காரை நிறுத்திவிட்டு அவளை அழைத்துக் கொண்டு படகில் ஏறி ஏரியில் சுற்றி வந்தான் அஜய்.

''என்னை நினைத்துக் கொண்டே இருந்தாயா?''

''ஆமாம்.''

''ஏன்?''

''இது என்ன கேள்வி...?''

''விட்டு விடு என்றவள் ஏன் நினைத்தாய்?''

''விட்டு விட முடியாததால்...''

''இதற்கு என்ன அர்த்தம்?''

''எந்தப் பொய் வாக்குறுதியும் என்னைக் கட்டுப் படுத்த முடியாது என்று அர்த்தம். வாழ்ந்தால் உங்களுடன் வாழ்வேன். இல்லாவிட்டால்.''

அவள் வாய் பொத்திப் பேச்சை நிறுத்தினான் அஜய்.

கரையில் ஏறிப் பூங்காவில் நடந்தார்கள். ஒலி பெருக்கி யில் பாடல் ஒலிக்க அதற்கேற்றவாறு செயற்கை நீர் ஊற்று நடனமாடியதை ரசித்து விட்டு ஓரிடத்தில் அமர்ந்தார்கள்.

''உனக்கு ஒன்று தெரியுமா?''

''என்ன?''

''சுகுமாரனுக்கும் சாந்திக்கும் திருமணம் நடந்து விட்டது.''

''ஈஸிட்? எப்படி? எப்போது?''

பவித்ரா பரபரப்பாய் வினவினாள். அஜய் ஆரம்பம் முதல் நேற்று வரை நடந்தவற்றை விவரித்தான்.

''அப்போ... நாங்கள் தங்கியிருப்பது உங்கள் வீட்டில் தானா?''

''அடி வாங்கப் போகிறாய்.. இது உன் வீடு.''



''ஆமாமாம்.'' பவித்ரா அஜய்யின் அருகே நெருங்கி அவன் தோளில் தலை சாய்த்துக் கொண்டாள்.

''அண்ணாவுக்கும் தெரியுமா?''

''தெரியும். அவரும் ஒத்துழைத்தார்.''

''ஜூலி எனக்குப் பிரண்டாக கிடைக்க நான் வரம் வாங்கி வந்திருக்க வேண்டும்.''

''சாந்தியும் நல்லவள்தான் பவி.''

''இப்போதாவது என்னைப் 'பவி'ன்னு கூப்பிட உங்களுக்கு மனம் வந்ததே.. பட்.. என்னால் சாந்தியை மன்னிக்க முடியாது.''

''ஸோ வட்... இனி நீ வேலை பார்க்க வேண்டிய தில்லையே... அதனால் அவளைப் பார்க்க வேண்டிய அவசியம் வராது.''

''ஏன்?''

''இது என்ன கேள்வி பவி. நான் எங்கே இருக்கி றேனோ... அங்கே தான் நீயும் இருக்க வேண்டும். என்னை ஊர் ஊராய் மாற்றுவார்கள். நேர்மையான கலெக்டர் ஒரு இடத்தில் நிலைத்து வேலை பார்க்க முடியாது. நீ பெட் டியைக் கட்டிக் கொண்டு என் பின்னாலேயே அலைய வேண்டும்.''

''வேறு எனக்கு என்ன வேலை... நிழலாய் தொடர்ந்து வருவேன்.'

இருவரும் காரில் ஏறிக் கொண்டதும் முதன் முறை மழையில் கார் நின்ற அதே இடத்தில் இன்றும் காரை நிறுத்தினான் அஜய்.

அவன் நெருங்கும் முன் இம்முறை அவள் அவனை நெருங்கினாள். அவன் அணைப்பில் விருப்பத்துடன் சிக்குண்டாள். தாபத்துடன் இதழ் பதித்தவளின் இதழோடு இதழ் இணைத்தான்.

அன்று அடைந்த எரிச்சலும் ஏமாற்றமும் இன்று தீர்ந்து விட அஜய் திருப்தியுடன் அவள் முடி கோதி அவள் நெற்றியில் முத்தம் இட்டான்.

பவித்ரா அவன் கைவிரல்களைப் பற்றி தன் கரங்களில் பொத்திக் கொண்டு கூறினாள்.

"அவசரப்பட்டு என் மனதை நானே புரிந்து கொள்ளாமல் கல்யாணத்தை நிறுத்தி விட்டேனே."

அஜய் சிரித்தபடி காரின் பின் சீட்டிலிருந்த அழைப்பிதழை எடுத்து அவள் கையில் கொடுத்தான். பிரித்துப் பார்த்தவளின் முகம் ஆயிரமாயிரம் உணர்ச்சிகளைக் காட்டியது.

"அஜய்! மைலவ்! சொன்ன தேதியிலேயே நமக்குக் கல்யாணமா... ஐ காண்ட் பிலிவ் திஸ்... மைகாட்... தேங்க் யூ... தேங்க் யூ வெரிமச்... என் மேல் இவ்வளவு நம்பிக்கையா?"

அஜய்யை கட்டிக் கொண்டு அவன் தோளில் முகம் புதைத்து ஆனந்தத்துடன் அழுதாள் பவித்ரா.

வீட்டிற்கு அவர்கள் சென்றபோது ராம்குமார் வந்திருந்தான். அண்ணனின் பாதங்களில் ஓடி வீழ்ந்து வணங்கினாள் பவித்ரா.

"அண்ணா என்னைத் தவறாய் நம் வீட்டில் நினைத்து விடக் கூடாது என்று தான் சொல்லாமல் இருந்தேன்..."



"எனக்குத் தெரியாதாம்மா.. நீ அழுகாதே."

அன்றே பவித்ராவையும், ஜூலியட்டையும் அழைத்துக் கொண்டு ராம்குமார் சேலத்திற்குக் கிளம்பி விட்டான்.

ராக்காயி கண்ணில் நீர் வழியப் புலம்பினாள்.

"எம்மா... ஜூலியம்மா... புயல் மாதிரி வந்தீக. என் புருசனையும் என்னையும் ஒண்ணாச் சேத்து வைச்சிட்டு இப்ப எங்கேம்மா போறீக."

"பவித்ராவையும்.. அஜய் அண்ணாவையும் சேர்த்து வைக்க... என் நிலைமையைப் பார்த்தாயா ராக்காயி. ஊர் ஊராகப் போய் ஜோடி சேர்த்து வைக்கிறேன். எனக்கென்று ஒரு ஜோடி சேர்கிறதா பார்..."

சொல்லி வைத்தாற் போல் வாசல் புறமிருந்து.

"மிஸ்டர் அஜய் இருக்கிறாரா..." என்று ஒரு குரல் வந்தது. எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். நேர்த்தியாய் உடையணிந்திருந்த ஒரு ஆண் உள்ளே வந்தான்.

"ஐ ஆம் ஜார்ஜ். கனரா பேங்க் மேனேஜர்... சார் எங்க பேங்கில் அக்கவுண்ட் வச்சிருக்கார்.. அது விசயமாய்.." என்று பேசிக் கொண்டிருந்தவன் ஜூலியட்டை வைத்த கண் வாங்காமல் பார்க்க ஆரம்பித்தான்.

அஜய் சுவாரஸ்யமாய் ஜார்ஜின் கைபிடித்துக் குலுக்கினான். ராம்குமார் சிநேகித பாவத்துடன் ஜார்ஜின் அருகே அமர்ந்து கொண்டான்.

"ஹலோ... மிஸ்டர் ஜார்ஜ்... நீங்கள்தான் புதிதாய் மாற்றலாகி வந்த மேனேஜரா... மேரேஜ் ஆகி விட்டதா?" அஜய் இயல்பாய் வினவினான்.

''இல்லை சார்.. நல்ல பெண்ணாய் தேடிக் கொண் டிருக்கிறேன்'' அவன் ஜூலியட்டின் கழுத்தில் தொங்கிய சிலுவை டாலரில் விழி பதித்தான்.

''ஈஸிட்... பை தி வே.. ஷி இஸ் ஜூலியட், என் உடன் பிறவாத தங்கை. தஞ்சாவூரில் பேங்கில் வொர்க் பண்ணுகிறாள்'' அஜய் முடி போட்டான்.

''ஓ.. நீங்களும் பேங்க் எம்ப்ளாயிதானா...'' என்று ஜார்ஜ் ஆரம்பிக்க,

''நீங்கள் எந்த ஊர்?'' என்று ஜூலியட் பதிலுக்குக் கேட்க ஒரு மணி நேரமாய் இருவரும் ஒதுங்கி நின்று பேசினார்கள்.

கடைசியில் முகவரி பரிமாறுவதில் ஆரம்பித்து செல் போன் நம்பர்களை இருவரும் பரிமாறிக் கொண்டார்கள்.

முகத்தில் வெளிச்சம் பரவ ஜார்ஜ் விடைபெற ஜூலியட் ரகசியமாய் கையசைத்து அனுப்பி வைத்தாள்.

ராக்காயி தொண்டையைக் கனைத்துக் கொண்டாள்.

''இதுக்குத்தான் சொல்வாங்க ஜூலியம்மா. 'ஊரான் குழந்தையை ஊட்டி வளத்தா, தன் குழந்தை தானே வளரும்'ன்னு.''

''ராக்காயி... இதன் மூலம் நீ சொல்ல விரும்புவது ஏதுவோ?''

''எனக்கும், பவித்ராவுக்கும் நீங்க ஜோடி சேர்த்த புண்ணியம் தான் உங்க ஜோடியை தானாய் இழுத்துக் கொண்டு வந்திருக்கிறது.''

''என்னவோ போ ராக்காயி. ஆள் பார்க்க ஜம்முன்னு தான் இருக்கான்.''

''அவனோ... அவர்ன்னு சொல்லுங்கம்மா.''



''கல்யாணம் முடியற வரைக்கும் அவன்தான்.''

''நீ கல்யாணம் முடிஞ்சாலும் அப்படியே சொல்கிற ஆள்தாண்டி.''

''சரி ராக்காயி.. நாங்கள் கிளம்புகிறோம். நாளைக்கே நீயும் மாடசாமியும் கிளம்பி வந்துவிட வேண்டும். கல்யாணத்திற்கு இரண்டு நாள்கள்தான் ஊடே இருக்கு'' ராம்குமார் விடைபெற்றான்.

''ராக்காயி... போய் வரவா...'' ஜூலி கிசுகிசுத்தாள்.

அவர்கள் சேலத்தை அடைந்தபோது வீட்டில் கல்யாணக் களை கட்டியிருந்தது. உறவினர்கள் வீட்டை நிறைத் திருக்க திருமணத்திற்கு முதல் நாள் பெண் அழைக்க கார்கள் வந்து விட்டன.

பவித்ரா நாராயணசாமியையும், மரகத வள்ளியையும் வணங்கி எழுந்து விட்டு ராம்குமார், சுதாகரியின் கால் களில் பணிந்து எழுந்தாள்.

''நான் தான் கல்யாணப் பெண்ணுக்கு தோழி...'' ஜூலியட் சுஜிதாவிடம் வம்பு வளர்க்க சுஜிதா கண்ணைக் கசக்க ஆரம்பித்தாள்.

''அடடா... ஜூலியத்தை நம்ம அத்தைக்கு இந்தப் பக்கமாம்... நீ அந்தப் பக்கமாம்...'' சுதாகரி தீர்ப்புச் சொன்னாள்.

சுபயோக சுப தினத்தில் குறித்த நேரத்தில் பவித் ராவின் கழுத்தில் தாலி கட்டினான் அஜய்.

வைரவ மூர்த்தியும், பத்மாவதியும் இளைய மருமகளை தங்கள் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

மாப்பிள்ளைத் தோழனாக லாவண்யாவின் கணவன் கருணாகரன் அருகே நிற்க விஜய்யும், லாவண்யாவும் வந்தவர்களை வரவேற்று உபசரித்துக் கொண்டிருந்தனர்.

கொழுந்தனின் மனைவியின் கை பற்றி பூஜையறைக்கு அழைத்துச் சென்ற சாரதா விளக்கேற்ற வைத்தாள்.

இரவு வந்தது... நிலவு போல் நடந்து பவித்ராவும் வந்தாள். அஜய் தன் கைகளை விரித்து 'வா' என்று அழைக்க அவன் கரம் புகுந்து கொண்டாள். இரவு முழுவதும் தூங்காமல் புதிய கதை பேசினார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் கலெக்டர் பங்களாவில் காலடி எடுத்து வைத்தாள் பவித்ரா. வாசலில் தோட்டத்துப் பக்கமாய் ஒரு ஊஞ்சல் தொங்கியது. ஆசையுடன் அருகே சென்று அதில் ஏறி அமர்ந்து ஆடிப் பார்த்தாள். தற்செயலாய் திரும்பிப் பார்த்த அஜய் பதறிப் போனான்.

வேகமாய் வந்து ஊஞ்சலைப் பிடித்து நிறுத்தினான். என்னவோ ஏதோவென்று பதறிப் போன பவித்ரா.

"என்னங்க... எனக்கு ஊஞ்சலாடப் பிடிக்கும்" என்றாள்.

"அதுதான் எனக்குத் தெரியுமே.." என்றான் அஜய்.

"என்ன சொல்கிறீர்கள்?"

"எனக்கு உன் ஊஞ்சலாட்டத்தை நிறுத்தப் பிடிக்கும்."

"வேறு என்னவெல்லாம் பிடிக்கும்?"

"இன்று இரவில் சொல்கிறேன்."

இரவில் அவன் அவளைக் கட்டியணைத்துக் காதோரம் சொன்னான். அவள் சிணுங்கியபடியே அவன் மார்பில் கரம் குவித்துத் தள்ளி விட்டாள். அவன் பலமாய்ச் சிரித்து அவளை அணைத்துக் கொண்டான். அவள் மறுப்பே சொல்லாமல் அணைப்பில் அடங்கினாள்.

அவனும் அவளும் மட்டும் இருந்த அந்த உலகில் அவள் உள்ளம் ஊஞ்சலாடவே இல்லை.